தமிழர் உரிமை நூற்றொடர்

தமிழ் இலக்கியம்

சங்க காலம்

இஃது

வாலிபாஜக்கிய திறிஸ்தவ சங்கத்தைச்சேர்ந்த

திருநெல்வேலி

ஞா. சா. துரைசாமி பிள்ளையால்

இயற்றப்பட்டது.

19056

இரண்டாம் பதிப்பு

ASSOCIATION PRESS

(Y.M.C.A.)

5 RUSSELL STREET, CALCUTTA

1931

The Right of Translation is Reserved

EDITORIAL PREFACE

The purpose of this Series is to bring within the reach of educated Tamil people their cultural and religious heritage. There are more than twenty millions whose mother tongue is Tamil. In the early centuries of the Christian era a high level of culture and civilisation was reached, the influences of which are still living and active. Tamil is the only vernacular whose early output can in any way compare with that of Sanskrit; and it has had a noble and continuous history down to our own times. There is, therefore, in the Tamil language a rich heritage of very great variety, which should be the possession of every man and woman in the Tamil country.

Although many scholars, both Indian and European, have been working at it during the last three centuries, and a large number of volumes with commentaries have been edited and published, especially during the last fifty years, this heritage cannot be said to have been brought within the reach of educated men and women in any adequate way.

This Series has therefore been planned by a group of Christian men with the object of producing, at moderate prices, books on the richest portions of the heritage, which may bring the best within the reach of all.

The Editors aim at being thoroughly scholarly and accurate in all their work, and genuinely sympathetic in the presentation of the material.

Joint Editors { J. LAZARUS, B.A., D.D.
G. S. DURAISAMY.

பதிப்பாசிரியர்களின் முன்னுரை

தமிழ் மக்கள் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே சிறப்புற்றோங்கி, கடவுள் வழிபாடு, அறிவு முதிர்ச்சி முதலியவற்றில் தேர்ந்து விளங்கினர். அந்நாள் அவர் அடைந்திருந்த தேர்ச்சி, இக்காலத் தமிழ் மக்களையும் முன்னிலைக்குத் தூண்டுவதற்கோர் எதுவாயிராநின்றது. பண்டை நாளில் வடமொழி நூல்களோடு ஒப்பிடத்தக்க பரப்புடைத் தாய்ப் பெருமை வாய்ந்து விளங்கியனவும் தமிழ்மொழி நூல்களேயாம். அன்றுதொட் டின்றுகாறும் தமிழ்மொழி தொடர்ச்சிபெற்று மேனிலையடைவதாயிற்று. பண்டைத் தமிழ் நூல்களோ பல்வேறு வகையினவாய் அரும்பெரும் பொருட்கள் நிறைந்து விளங்குவன. தமிழ்மொழியே தாய் மொழியாய் வழங்குவோர் இன்றும் இருகோடியினும் மிக்காராவார். இவரெலாம் அவ்வரும்பொருட்களைத் தம் உரிமைப் பழஞ் செல்வமாய்ப் பெற்றுப் பொன்னேபோற் போற்றிப் பயனடைய வேண்டுமென்பதே இந்நூல்களை வெளியிடுவோரின் பெருநோக்காயிராநின்றது. இந்நூல்கள், 'தமிழர் உரிமை' எனும் தலைப்பினையுடைய நூல் வரிசையின் வெளிவருவன. கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாய் இந்தியரும் ஐரோப்பியருமாகிய பற்பலர் பழந் தமிழ் நூல்களை ஆராய்ச்சிசெய்து தமது ஆராய்ச்சியால் விளங்கினவற்றைத் தக்க உரைகளுடன் வெளியிட்டுள்ளனர். இவற்றுட் பெரும்பாலன கடந்த ஐம்பது வருடங்கட்கிடையே வெளிவந்தன. எனினும் இவையெலாம் கல்வியறிவு வாய்ந்த சாதாரண தமிழ்மக்கள் கைக்கு வந்தெட்டியுள்ளனவெனக் கூறுதற்கிடமின்று. எனவே, கிறிஸ்து மதானுசாரிகளாகிய தமிழ் அபிமானிகள் சிலர் ஒருங்குகூடியாலோசித்து இந்நூல்களை வெளியிடத் தீர்மானித்தனர். தமிழ்ப் பழநிதிச் சீரிய செல்வங்களை ஏழைகளும் அறிந்தனுபவிக்குமாறு எளிதான விலையில் நூல்களை வெளியிடவேண்டுமென்பதும் இன்னோர் கொண்ட நோக்கமாகும். நூல்கள் பலவும் தக்க நூலாராய்ச்சியோடு கூடித் திட்டவட்டமாய் உண்மைகளை அறிவிப்பனவாயும், நூற்பொருட்களை முரணிய முறையானன்றி அனுதாப மேரையாய் விரிப்பனவாயுமிருக்கவேண்டுமென்பதும் இந்நூல்களை வெளியிடுவோர் கொண்ட கோட்பாடாகும்.

ஆக்கியோன் முகவுரை

பரதகண்டப் பெருவாழ்வின்பொருட் டழைத்துவரும் பரோப காரு சங்கங்களுள் வாலிப ஐக்கிய கிறிஸ்தவ சங்கமும் ஒன்று. இச் சங்கத்தாரால் நடத்தப்பெறும் முயற்சிகள் பல. அவற்றுள் தமிழ பாஷாபிவிர்த்தியும் ஒன்றாகும். இதிற் சித்தியடைதற்பொருட்டுத் தமிழ் நூல்கள் பல எழுதப் பெறவேண்டுவ தவசியமாதலின் அறையிற் கிடந்த வென்னை அம்பலத்திலிழுத்துவிட்டு அதனைச் சாதிக்குமாறு கட்டளையிட்டனர். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு 'தமிழர் உரிமை' எனும் தலைப்பின்கீழ்ப் பல நூல்களை வெளியிடத் துணிந்து முதற்கண் 'தமிழ் இலக்கியம்' எனும் நூலின் முதற்பாகத்தை வெளி யிடுகின்றேன்.

இந்நூலின்கண் அடங்கிய அரும்பொருட்கள் பல. அவற்றை யெலாம் யானுகவே ஆராய்ந்து கண்டு எழுதிவிட்டேன் என உல கினர் கருதாதிருக்க வேண்டுகின்றேன். முதல் மூன்று அத்தியா யங்களினும் பிற விடங்களினும் விரிக்கப்பட்டுள சரித்திர ஆராய்ச்சிக் குறிப்புகளுள் எனதெனக் காட்டுதற்கு யாதுமின்றெனக் கூறினும் பொய்யாகாது. ஆராய்ச்சி வல்லார் பலர் எழுதிப் பேர்ந்தவற்றை ஒருசேரத் திரட்டி வைத்ததே யான்செய்த ஊழியமாகும். அப்பெரி யார் திருநாமங்களை ஆங்காங்கே வெளியிட்டிருக்கின்றேன். விடப் பட்டனவிருக்குமேல் மன்னிக்க வேண்டுகின்றேன்.

உங்க நூல்களின் நயத்தைத் தமிழ் மக்கள் அறியுமாறு பலவற்றை எழுதியுள்ளேன். அவ்வந்நூல்களிற் காணப்படும் சிறந்த பாக்களையே எடுத்தெழுத வேண்டுவது கிரமமாயினும் ஏதோ என் சிற்றறிவிற் றோன்றியவாறு இங்குமங்குமாகச் சிலவற்றை எடுத்துக் காட்டியுள் ளேன். இவற்றுட் காணப்படும் குற்றம் குறைகளைத் தமிழ்வாணர் பொறுப்பது கடனும். என் ஆசை கொண்டமட்டும் பாக்களை எடுத் தெழுதின் நூல் விரிவுறுமெனற்கஞ்சிச் சிற்சிலவற்றை மாத்திரம் குறித்துளேன்.

பண்டைத் தமிழ் மக்களின் பெருமையைத் தற்காலத்தவர் நன் குணர்தற்பொருட்டு இதுபோல்வன நூல்கள் பல காலக்கிரமத்தில் வெளிவருமாதலின் இவற்றைப்பற்றிய தத்தம் அபிப்பிராயங்களைப்

பெரியோர் உபகரிக்க வேண்டுகின்றேன். சங்கத்தார் கொண்டுள்ள பெருநோக்கம் சித்தியடைதற்கான பிற சாதனங்களைப் பெரியோருரைப்பரேல் அதுவும் பெரு நன்றியாகும். இம்முயற்சியை வாலிப ஐக்கிய கிறிஸ்தவ சங்கத்தார் மேற்கொண்டுவிட்டபடியினால் இதனை நிறைவேற்றுதல் அவர் கடமையே எனப் பிறர் இதன்கண் ஊக்கமின்றி வாளா விருந்துவிடாமே தமிழ் நாட்டுப் பெருந்தகையாளர் பலரும் அச்சங்கத்தார்க்குத் தம்மாலான உதவிகளைச் செய்துவருமாறு வேண்டுகின்றேன்.

இச்சிறுநூல் இவ்வளவில் எழுதப் பெறுதற்கு ஆதாரமாயிருந்தன சங்கநூல்களாம். இவையோ ஏட்டில் எழுதப்பெற்று மறைந்து கிடந்தன. அழிவுறும் தருவாயிலிருந்தனவும் பல. அவற்றை உலகுக்கு வெளிப்படுத்திய பதிப்பாசிரியர் ராவ் பகதூர் ஸ்ரீ. சி. வை. தாமோதரம்பிள்ளை; மகாமகோபாத்தியாய ஸ்ரீ. உ. வே. சாமிநாதையர், ராவ் பகதூர் எஸ். பவானந்தம்பிள்ளை முதலிய பற்பலர். இவர்கள் தம் பிரயாசையையும் தேக சிரமத்தையும் கருதாது தமிழுலகுக் குழைத்தலையே கருமமாய்க் கொண்டு இந்நூல்களை யச்சேற்றி உலகுக்களித்தனர். அப்பெருந்தகையாளர்க்கு யாஞ்ஞருவனேயன்றித் தமிழ் மக்கள் யாவரும் இன்றும் என்றும் கடமைப்பட்டுளாரென் பதைக் கூறவும் வேண்டுமோ?

அன்றியும், புலவர் ஆராய்ச்சிகளை அப்போதைக்கப்போதே வெளியிட் டுலகுக்களித்துவரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரின் மாதாந்தரப் பத்திரிகையாகிய 'செந்தமிழ்' இந்நூல் எழுதற்கண் பல விடங்களில் பயன்பட்டதாதலின் தமிழ்ச் சங்கத்தாருக்கும் என் வந்தனம் உரிமையாகின்றது.

இச்சிறுநூல் தமிழுலகுக்குப் பயன்படற்பொருட்டும் என்னினும் கற்றோரும் வலியாரும் பெரியாருமாய பலரை இத்தகைய முயற்சியில் தூண்டுதற்பொருட்டும் எல்லாம்வல்ல இறைவனை எப்போதும் இறைஞ்சாநின்றேன்.

பொன்னகரம்,
மதுரை
16-11-1922.

ஞா. சா. து.

பொருளடக்கம்

1. அத்தியாயம்:—தமிழ்மக்கள், தமிழ்நாடு, தமிழ்மொழி.

தமிழ்மொழி உயர்வு, தமிழ்மக்கள் யாவர், தமிழ்மக்கள் பூர்வ ஸ்தானம், தற்காலத் தமிழ்மக்கள், நாகரீகம், பண்டைத்தமிழர் வியாபாரம், தமிழ்நாடு, பண்டைநாள் தமிழ்நாட்டெல்லை, பிற்காலத் தமிழ் நாடு, தமிழ்மொழி, தெய்வபாஷை, பாஷைவளர்ச்சி, தமிழ்மொழி இனம், தமிழ்க் குழுப்பாஷைகள், தமிழ்மொழி வழக்கின் உயர்வு, தமிழ் எழுத்துக்கள், ஒலிவடிவு, வடிவெழுத்து, பெயரெழுத்து, தன்மை எழுத்து, பிறாமி எழுத்துக்கள், வட்டெழுத்து, நெடுங்கணக்கு, தமிழ்மக்கள் எழுத்துடையவர், தமிழ் எழுத்துத் தமிழரது ... 1.

2. அத்தியாயம்:—தொல்காப்பிய காலம்வரை

முச்சங்கங்கள், இறையனாரகப்பொருளுரை, முதலிருசங்க வரலாறுகளால் தெரிவன, வால்மீகரும் இராமாயணமும், இடைச்சங்ககாலம், பனம்பாரனார், முரஞ்சியூர் முடிநாகராயர், நெட்டிமையார், நெடும் பல்லியத்தனார், காரிகிழார், தொல்காப்பியம், தொல்காப்பியர், தொல் காப்பியப் பகுதிகள், மக்கட்பிரிவு, அந்தணர், அரசர், வாணிகர், வேளாளர், ஆயர், அகப்பொருள், எண்வகை மணங்கள், மணங் களின் பாகுபாடு, களவியல், கற்பியல், இல்லறம், துறவறம், புறப் பொருள், புறப்பொருட்பகுதிகள், போர்முறை, வீரர்க்குச் சிறப்புச் செய்தல், தெய்வங்கள், முன் இலக்கியம் ... ... 23.

3. அத்தியாயம்:—கடைச்சங்கம்

கடைச்சங்க வரலாறு, இறையனாரகப் பொருளுரைகாலம், பாடலி புர அழிவு, நந்தர்காலம், சிலப்பதிகாரகாலம், அக்காலப்பாண்டியன், இலங்கைச்சரித மேற்கோள், உக்கிரப்பெருவழுதி, கடைச்சங்ககாலப் புலவர், புலவர்தொகை, வகுப்பு, கடைச்சங்க நூல்கள், கபிலர், ஔவையார், நக்கீரர், மாமூலனார் சரிதங்கள், தமிழ்நாட்டுப்பிரிவு, சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, குறுநில மன்னரும் நாடுகளும், அரசியல், ஐம்பெருங் குழுவினர், கைத்தொழில், வியாபாரம், நாகரீகம், பல்வேறு தொழிலினர், சமய வேறுபாடுகள் 54

4. அத்தியாயம்:—கடைச்சங்க நூல்கள்

இறையனாரகப்பொருள், நூலாசிரியர், எழுதப்பட்டகாலம், உரை கண்டவர், அவர்காலம், திருக்குறள், குறள் எழுதப்பட்டகாலம், திருவள்ளுவமாலை, குறளின் பாகுபாடுகள், அறத்துப்பால், இல்லறவியல், துறவறவியல், பொருட்பால், அரசியல், அங்கவியல், அமைச்சர் தன்மை, வீரர்தன்மை, காமத்துப்பால், காதலர்நிலைமை, திருவள்ளுவர் சரிதம், ஜாதி, மதம் முதலியன... ... ... 84.

5. அத்தியாயம்:—பத்துப்பாட்டு

பத்துப்பாட்டுப் பாடினவர், பாடப்பட்டோர், பாடின காலம், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ... 105.

6. அத்தியாயம்:—எட்டுத்தொகை

புறப்பொருள் தொகைகள், புறநானூறு, காலம், அக்கால வழக்க பழக்கங்கள், நாகரீகம், பெருமை, கொள்கை முதலியன, பதிற்றுப்பத்து, இரண்டுமுதல் ஒன்பது பத்துக்கள், இந்நூலில் அறியக்கிடந்த காரியங்கள், அகப்பொருள் தொகைகள், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், ஐங்குறுநூறு, கலித்தொகை ... ... 127.

7. அத்தியாயம்:—சிலப்பதிகாரம், மணிமேகலை

சிலப்பதிகாரம், பிரிவுகள், சரித்திரவிவரம், இளங்கோவடிகள், மணிமேகலை, கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனர், மணிமேகலைக் கதைச்சுருக்கம், சரித்திரவிவரங்கள் ... ... 148.

8. அத்தியாயம்:—பதினேண் கீழ்க்கணக்கு

கீழ்க்கணக்கு மேற்கணக்கு விவரம், கீழ்க்கணக்கு நூல்கள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியது நாற்பது, இன்னாநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை யெழுபது, திணைமாலை நூற்றைம்பது, முப்பால், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம்; இன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி 163

1. அத்தியாயம்

தமிழ் மக்கள், தமிழ் நாடு, தமிழ் மொழி

'பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருண்முன் னிருந்தபடி யிருப்பதுபோற்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வீழ்த்துதுமே.'

மனோன்மணீயம்.

நிலவுலகின்கண் நின்றுலவுவனவாய் இன்றளவில் கணக்கிடத்தக்க பாஷைகள் எண்ணிறந்தன. ஆயிரம் பாஷைகள் எனக் கூறினும் தவருகாது. இவற்றுள் மேன்மையும் நாகரீகமும் பொருள்வலியும் சுவை நயமும் பொருந்தியன மிகச்சிலவே. இவற்றுள்ளும் தொன்றுதொட்டே இப்பெருமைகளே வகித்திருந்தன ஐந்து பாஷைகளெனலாம். அவையாவன: தமிழ், சமஸ்கிருதம், ஹீப்ரு, லத்தீன், கிரேக்கு. இவ்வைந்தனுள்ளும் தமிழ் பாஷையொன்றே இன்றளவும் பேச்சு வழக்கிலும் நிற்பதாயது. ஏனைய நான்கு பாஷைகளும் உலக வழக் கொழிந்து பெரும்பாலும் ஏட்டுப்பாடமாய் நின்று ஒதுங்கின. எனவே, தமிழ்மொழி தனக்கிணையிலாத தோர் உயர்மொழியென்பது கூறுதேயமையும்.

அங்ஙனமாகவும், அரசன் மெச்சியவள் அரம்பை யென்றுற்போலப் பொருள்வலியும் புஜபலமும் மிக்கு டையார் பாஷையையே தமிழ் மக்களும் பெரிதும் போற் றிப் பயில்வாராயினர். அம்மட்டோ, தமிழ் மொழியா லுரையாடலும் தம் தரத்துக்குத் தாழ்வெனக் கருதித் தம் தீந்தமிழை மறந்து ஆங்கிலத் தமிழாம் மணிப்பிர வாளப் புதுநடையொன்றை மேற்கொள்வாராயினர். இதுகண்ட பிறரும் 'தமிழ் மொழி கி. பி. 900 வருடங்க ளின்முன் இலக்கியம் என்பதே யாதெனவறியாதிருந் தது' [1] என ஏளனம் செய்வாராயினர். கொண்டவன்

[1] Caldwell Com. Gram., p. 88.

தூற்றினால் கோடிப்புறமும் தூற்றும் என்ற நம் ஆன்றோர் மொழி பொய்யாகாதன்றே. கால வேறுபாட்டானும் கடைக்கணிப்பாரின்மையானும் தமிழ் தன் அழகழிந்ததுபோலும். தண்கடல் கொண்டொழிந்த தமிழ் ஏடுகள் பல. அக்கினியால் அழிபட்ட அருந்தமிழ்ப் பெருஞ்சுவடிகள் பல. எஞ்சியன கொஞ்சம். இவற்றுள்ளும் இருந்தவிடத்தே செல்லரித்து மாய்ந்தன கணக்கிலாதன. இப்பேரிடர்களால் சிறிது தடுமாற்றமுறினும் தமிழ் பின்னரும் தழைத்துச் செழித்து வளர்கின்றது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த தம் தாய் மொழியாகிய தமிழ் மொழியின் இலக்கிய வரம்பு இன்னதுதானென்பதைத் தமிழ் மக்கள் யாவரும் அறிதல் இன்றியமையாதது.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சி செய்யுமுதற்கண், தமிழ் மக்கள் யாவர்? தமிழ் வழங்கியதும் வழங்குவதுமாய எல்லைகள் யாவை? தமிழ் மொழியின் வரலாறென்னை? தமிழ் எழுத்துக்களின் உற்பத்தியாது? எனும் வினாக்கள் இயல்பாகவே எழுகின்றன.

இவையெல்லாம் இன்னின்னவாறெனத் திட்டவட்டமாய் வரையறுத்துக் கூறுதற்கியலாவண்ணம் மறைந்து கிடக்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட நிகழ்ச்சிகளைத் தெரிந்து இன்னபடி தாம் என்றெழுதுவது எவர்க்கும் எளிதன்று. இவ்வாராய்ச்சிக்கு உதவுவனவாய சாதனங்களும் பலவல சிலவே. மேலும், இவற்றைப்பற்றிய ஆராய்ச்சியிற் புகுந்தோர் பலர் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டுப் போந்தனரேயன்றி இதுதான் உண்மையெனச் சாதித்து விட்டாரெனக் கூறுதற்குமிடனின்று. ஆதலின், மேற்கூறிய நான்கு வினாக்களும் இங்கு சுருக்கமாய் ஆராயப்படும்.

1. தமிழ் மக்கள் யாவர்? பற்பல நூலாசிரியர் தமிழரைத் திராவிடர் எனும் பெயரான் வழங்குவர். தமிழ் மக்களுக்குத் திராவிடப் பட்டம் சூட்டியவர் வட நாட்டாரியர்.[1] தமிழ் நாட்டில் தற்காலம் வதிபவர் தமிழ்

[1] வீரசோழிய கலித்தொகைப் பதிப்புரைகள்.

நாட்டுப் பூர்வ குடிகள் அல்லரென்பது மாத்திரம் துணிபு. கால்ட்வெல் ஆசிரியர்[1] முதலிய மேனாட்டுத் தமிழ்ச் சரித நூலாசிரியர் தமிழரின் முன்னோர் ஆசியாவின் மத்திய பிரதேசங்களினின்று இவண் போந்தவரேயோவென ஐயுறுவர். 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்'[2] எனும் அரியநூல் எழுதிய கனகசபைப் பிள்ளை தமிழ் மக்கள் மங்கோலிய வகுப்பினரென்றும், அவர்கள் வங்காள மார்க்கமாய் இந்தியாவினுட் பிரவேசித்துத் தரை, கடல் இரு மார்க்கங்களினும் தென்னிந்தியா வந்தவர் என்றும் கூறுகின்றார். 'பரதகண்டம் அல்லது திராவிட இந்தியா'[3] எனும் வியாச கர்த்தாவாகிய பண்டித சவரிராயர், தமிழ் மக்கள் தென்னிந்திய மேல்பாகத் தீவுகளின் வழியாய்த் தமிழ் நாட்டில் வந்திறங்கிய ஆசிய மேனாட்டவரே யென்பார். மற்றொரு சாரார் கன்னியாகுமரிக்குத் தெற்கே வெகுதூரம்வரை வியாபித்திருந்த லெமூரியாவெனும் கண்டத்தினின்றும் இங்கு வந்தவரே தமிழ் மக்கள் என்பார். 'இந்து சமுத்திரம் முன்னொரு காலத்தில் ஒரு பெருங்கண்டமாக இருந்தது. அது சந்தாத் தீவுகளில் துவக்கி ஆசியாவின் கரைவழியாகச் சென்று ஆப்பிரிக்காவின் கீழ்கரை வரையில் எட்டியிருந்தது. இப்பெரிய கண்டம் மிகவும் முக்கியமானது. எனெனில் மனித ஜாதியின் உற்பத்தி ஸ்தானம் அதுவேயாயிருந்திருக்கலாம்' என ஹேக்கல் பண்டிதர்[4] கூறுகின்றார். லெமூரியா கண்டத்தினின்று தமிழர் தென்னிந்தியாவில் வந்தார் என்பவருக்கு இவ்வாதாரம் சாலவும் உறுதி பயப்பது. 'தமிழ் ஆராய்ச்சி'[5] எனும் நூலாசிரியராகிய ஸ்ரீநிவாஸையங்காரென்பவர் 'தமிழர் பூர்வகாலத்தில் நாகரிகம் பெற்றிருந்த சின்ன ஆசியா, அசிரியா பிரதேசங்களினின்று கடல் மார்க்கமாய்த் தென்னிந்தியாவினுட் பிரவேசித்து விந்திய பர்வதம் வரையும் பரவியிருந்தனர்' என்பார். திராவிடர்கள் ஆசிய மத்தியப் பிரதேசங்களிலிருந்து

[1] Caldwell Com. Gram., p. 106.
[2] Tamils 1800 Years Ago, p. 45.
[3] Tamilian Antiquary No. I, p. 2.
[4] Quoted in Tamilian Antiquary No. I.
[5] Tamil Studies, p. 45.

இமயமலையின் வடமேற்கு வடகிழக்குக் கணவாய்களின் வழியாய் இந்தியாவிற் பிரவேசித்துக் குடியேறினவர்கள் என்பது விளக்கமாகின்றது'[1]. 'கங்கைக் கரையிலிருந்து ஈழமண்டலம் வரையிலுள்ள அநார்யரான திராவிடருள் பல மரபினர் இன்றளவும் வேறு கலப்பின்றி ஒரே வகையான குணம் குறிகள் உள்ளவர்களாகத் தோற்றுதலால் இவர்கள் ஆதியில் இந்தியா முழுவதும் பரவியிருந்தனர் என்பது உறுதியான கொள்கையே' என்பர் செல்வக்கேசவராய முதலியார்.[2] 'பூர்வீக இந்தியர் எனும் நூல் எழுதிய ராப்ஸன் என்பவர்[3] பெலுச்கிஸ்தான பாகங்களில் இப்போதும் வழங்கும் பராஹி பாஷைக்கும் திராவிட பாஷைகளுக்குமுள்ள ஒற்றுமைகளை நோக்குமிடத்துத் திராவிடர் இந்தியாவினுட் பிரவேசியாமுன் பெலுச்கிஸ்தானத்தில் தங்கியிருந்திருக்கலாம் எனத் தீர்மானிக்க இடமுண்டு' என்கின்றனர்.

மற்றுமொரு பிரிவினர் தமிழரும் ஆரியரும் ஒரே வகுப்பினரே என்று சாதிப்பார். இக்கொள்கையோடு க. சுந்தர ராமய்யர் தாம் இந்துப் பத்திரிகையில் வெளிபிட்ட வியாசத்தில் விவேகானந்த சுவாமிகள் வாக்காகத் தென்னிந்தியாவிலிருக்கும் தமிழ் மக்கள் 'அனேவருங்கூட வடக்கே இருந்துவந்த ஆரியர்களே. இந்தியா முழுதுமே ஆர்ய ஜனமேயன்றி வேறன்று' எனக்காட்டுவார்.[4] 'திராவிடர் என்பார் புண்ணிய கர்மங்களைச் செய்யாது விட்டதனாலும் பிராமணர்களைப் பராமையினாலும் சூத்திரரின் நிலைமைக்கு இவ்வுலகில் தாழ்ந்து விட்ட பதினொரு க்ஷத்திரிய வம்சங்களில் ஒரு வம்சத்தார்'[5] எனும் விவரணம் இவர்கள் கூற்றுக்கு ஆதாரம். 'தமிழர் இந்திய வடமேற்குக் கணவாய் வழியாக வந்து சிந்து நதிச் சமவெளிகளிற் றங்கியிருந்து இடம் போதாமையினல் பிறகு கங்கை நதிச் சமவெளியிலும் குடியேறினர்கள். துரானியர் தமிழரை வென்று துரத்திவிட்டனர்' என்பது வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள்[6] அபிப்பிராயம்.

[1] Essay on Tamil, p. 17.
[2] Saiva Conference Lectures., p. 10.
[3] Ancient History by Rapson, p. 29.
[4] செந்தமிழ், 8: 12.
[5] Code of Manu, X. 43, 44.
[6] History of Tamil Language, p. 4.

இவ்வாறுய பல்வேறு அபிப்பிராயங்கள் தம்முள் மாறுபட்டும் ஒருதலை பொருந்தியும் பொருந்தாதும் மயங்கிக் கிடக்கின்றன. இவற்றையெலாம் ஆராய்ந்து இதுவே ஒப்பு அதுவோ தப்பு எனக் கொள்ளுவதும் தள்ளுவதும் எளிதன்று. எனினும் தமிழ் மக்கள் எனப் படும் திராவிடர் தென்னிந்திய பூர்வகுடிகள் அல்லரென் பதும் இவர்கள் ஆசியாவின் மேல்பாகத்தினின்று தரை, கடல் இரு மார்க்கங்களினலும் தென்னிந்தியாவினுட் பிரவேசித்தனர் என்பதும் இவர்கள் இங்கு வந்து குடி யேறிய காலம் இப்போதைக்குப் பல்லாயிரம் வருடங்க ளுக்கு முற்பட்டதென்பதும் இவர்களுக்கும் பூர்வீக ஆரி யருக்கும் சம்பந்த மிருந்ததில்லையென்பதும் இவர்கள் வெகு காலத்தின் முன்னரே நாகரீகம் அடைந்திருந் தனர் என்பதும் பல காரணங்களால் ஊகிக்கத்தக்க உண்மைகளாய்க் காணப்படுகின்றன.

தற்காலத் தமிழ்மக்கள் ஆதியில் வந்த திராவிடர், இந்தியாவின் பூர்வ குடிகள், திராவிடர் முன்வந்த நாகர், பின்வந்த தூரானியர், ஆரியர் முதலிய பலர் கலந்த ஓர் கலப்புக் குழுவினராவார். இவருட் பெரும் பாலார் திராவிடர்.

தமிழ்மக்கள் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே நாகரீகம் அடைந்திருந்தனர் என்பதைக்காட்டப் பல ஆதாரங்கள் உள்ளன. இற்றைக்கு மூவாயிரம் வருடங்க ளுக்குமுன் சாலோமோன் அரசனின் காலத்தில் பாபி லோன் இராஜ்யத்தில் இறக்குமதியான குரங்கு, மயில் முதலியன எபிரேய பாஷையில் தமிழ் மொழிகளால் குறிக்கப்பட்டிருப்பதிலிருந்து[1] அக்காலத்தில் இவ்விரு நாடுகளுக்குமிருந்த சம்பந்தம் நிதானிக்கப்படுகிறது. வடமொழி இராமாயணம் எழுதிய வால்மீகர் காலத்தே தமிழ்நாடுகளும் அவற்றின் நாகரீகமும் அவரால் அறியப் பட்டிருந்தன. கி. பி. நாலாவது நூற்றாண்டில் எழுதி யிருக்கக்கூடிய இலங்கை மகவன்சோ எனும் நூலில் தமிழ் மக்கள் பிரஸ்தாபம் அதிகமாய்க் காணப்படுவதன் றியும் விஜயோ எனும் முதல் இலங்கை அரசன் கி. மு.

[1] Caldwell Com. Gram., p. 88; II காளாகமம் 7: 3.

ஆறாவது நூற்றாண்டில் ஓர் பாண்டிய அரசன் மகளை மண முடித்திருந்தான் என்பதும் அறியப்படுகிறது. கி. மு. நாலாவது நூற்றாண்டில் மகத இராஜ்யத்தில் பாடலி புரத்திலிருந்த மகஸ்தனீஸ் என்ற யவன ஆசிரியர், பாண்டிய இராஜ்யத்தைக் குறித்தெழுதியிருக்கின்றார்.[1] கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து கிரேக்கு, சிரிய முதலிய தேசங்களுக்கு ஸ்தானாபதிகள் சென்றனரென்பர். கி. மு. 26, 20 ஆண்டுகளில் ஆண்டிருந்த பாண்டிய அரசன் அக்காலத்து ரோம சக்கரவர்த்தியாகிய அகுஸ்து இராயரிடம் ஸ்தானாபதிகளை அனுப்பிச் சிநேக சம்பந்தமான உடன்படிக்கை செய்தனர். இந்த ஸ்தானாபதிகள் அகுஸ்து இராயனை தொர்ரகோனா வெனுமிடத்தில் கண்டார்கள்.[2] 'குமரிக்கு அப்பால் கொற்கை வரையும் உள்ள கடலில் எராளமாய் முத்துக் குளிக்கிறார்கள். முத்துக்குளிப்பவர் தண்டனைப்பட்ட கைதிகளே. இத்தென்பாகம் முழுவதும் பாண்டியன் ராஜ்யத்தைச் சேர்ந்தது' என முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட பெரிப்பிளஸில் காட்டப்படுகிறது.[3] இந்தியாவிலிருந்து ரோம ராஜ்யத்துக்கு அக்காலத்து ஏற்றப்பட்ட சரக்குகளின் விலை 55,000,000 செஸ்டர்ஸ் (ரூ. 75,00,000) எனப் பிளினி என்பவர் கி. பி. 77 வருஷத்தில் எழுதியிருக்கிறார். ரோம ராஜ்யத்திற்கும் தமிழ் நாட்டுக்கும் அக்காலத்தில் நெருங்கிய சம்பந்தமும் வியாபாரப் போக்குவரத்தும் உண்டென்பதைத் தமிழ் நாட்டில் இப்போதும் ஆங்காங்கே காணப்படும் ரோம நாணயங்கள் நிலை நாட்டும். அகுஸ்து இராயன் முதல் (கி. மு. 27) ஜீனோ ராயன் (கி. பி. 491) வரை ரோம ராஜ்யத்தில் அரசாண்ட அரசர்களின் முத்திரையிடப்பட்ட ரோம நாணயங்கள் காணப்படுகின்றன.[4] தமிழ்மக்கள் பெரிய வியாபாரிகளாயிருந்தார்கள் என்பதைக் காட்டுவதற்குச் சோழ நாட்டுக் கப்பல்கள் கி. பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் இந்திய கரையில் மாத்திரமல்ல வங்காளக் குடாவைக் கடந்து மலாயத்தீவுகள் வரையும் செல்வ

[1] Quoted in Tamilian Antiquary, 5 : 5.
[2] Tamils 1800 Years Ago, p. 37.
[3] *Ibid.* p. 35.
[4] *Ibid.* p. 38.

தண்டு எனக் கூறும் வின்ஸென்ற் ஸ்மித் எனும் சரித்திர ஆசிரியர் கூற்றும்[1] ஆதாரமாகின்றது.

தமிழ் இலக்கியங்களிலும் இதனைக் காட்டும் ஆதாரங்கள் பல உள. மதுரைக் கோட்டை வாசலில் யவனர் காவலிருந்தனர். 'கடிமதில் வாயில் காவலிற் சிறந்த அடல்வாள் யவனர்'[2] என்பதும் 'யவனர் நன்கலம் தந்த தண்கமழ்தேறல்,'[3] யவனர் கொண்டுவந்த மதுவகைகள், என்பதும் கவனிக்கத்தக்கன. இதற்குச் சான்றுகள் பல பின்னர் காட்டப்படும். கிரேக்கர் அக்காலத்தில் ஐயோனியர் என அழைக்கப்பட்டமையின் தமிழ்மக்கள் அவர்களை 'யவனர்' என்று கூறினர். இங்ஙனமாகத் தமிழ் மக்களின் பூர்வ நாகரீகம், செல்வச்சிறப்பு, அரசியல், மேன்மை முதலியவற்றைக் காட்டுவதற்கான ஏதுக்கள் பலவுள. இனித் தமிழ்மொழி அக்காலம் வழங்கியதும் இப்போதும் வழங்குவதுமான நாட்டின் எல்லையாதென ஆராய்வாம்.

2. தமிழ் நாடு. தமிழ் மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட தமிழ் நாடு முற்காலத்திலின்றேபோற் கன்னியா குமரியோடு முடிவுறுததாய்த் தெற்கண் பின்னும் நெடுந்தூரம்வரை எட்டியிருந்ததாகத் தெரிகின்றது. அக்காலத்தில் குமரி முனைக்குத் தெற்கே பனைநாடு முதலிய நாடுகளும், குமரிக்கோடு, மணிமலை முதலிய மலைகளும், முத்தூர், கபாடபுரம் முதலிய ஊர்களும், பஃறுளியாறு, குமரியாறு முதலிய ஆறுகளும் இருந்தனவெனத் தமிழ் நூல்கள் கூறும். பிறுண்டும் இதனை வலியுறுத்தும் ஆதாரங்கள் உள்ளன.

பனம்பாரனார் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் உரைப்பான் தொடங்கற்கண்[4] 'வடவேங்கடந் தென் குமரி—யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து' என்றார். அதாவது 'வடக்கண் வேங்கடமும் தெற்கண் குமரியாறும் எல்லையாகவுடைய தமிழ்மொழி கூறும் நல்ல உலகம்' என்றவாறு. இப்பொருள்படவே இளம்பூரணர்

[1] Quoted in Tamil Studies, p. 50.
[2] சிலப்பதிகாரம், p. 322.
[3] புறநானூறு, 56.
[4] தொல்காப்பியப் பாயிரம்.

'குமரியாறு கெடுவதற்கு முன்னையது' என உரையெழுதிப் போந்தார்.

'செங்கோன்றரைச் செலவு' என்றதோர் சிறுநூல் சிலகாலத்தின் முன் அச்சேறியது. அது முதலூழியில் தலைச் சங்கத்தார் காலத்திற் குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும் இடையேயுள்ள பெருவள நாட்டை சனை முதலூழித் தனியூர்ச் சேந்தன் பாடினதாகக் கூறுவது. இதனை வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் ஆதாரமாய்க்கொண்டனர்.[1] இவை நிற்க,

குமரியாறு கடல் கொள்ளப்படுதற்கு முன்னரே எழுதப்பட்ட பாடல்களும் சில தமிழ்ப் பண்டைநூல்களிற் காணப்படுகின்றன. அவற்றுட் சில வருமாறு:—

'எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முன்னீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.' (புறம். 9)

இதன் பொருள்:—'எம்முடைய வேந்தனாகிய குடுமி வாழ்வானாக. தம்முடைய சிவந்த நீர்மையையுடைய போக்கற்ற பசிய பொன்னைக் கூத்தர்க்கு வழங்கிய முந்நீர்க் கடற்றெய்வத்திற்கெடுத்த விழாவினையுடைய நெடியோனது ஊழாற்கப்பட்ட எல்ல நீரையுடைய பஃறுளியாற்றின் மணலினும் பலகாலம்' (ஈண்டு நெடியோனென்பவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன்). (நச்சினார்க்கினியர்.)

இச்செய்யுளில் 'குடுமி' என்பதனைக் குறிக்கப்பட்ட பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியென்பவன் வெகு காலத்திற்கு முற்பட்டவன் என்பது,

'பல்சாலை முதுகுடுமியி
னல்வேள்வித் துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்'

எனும் பத்துப் பாட்டு மதுரைக்காஞ்சி 759-762 அடிகளாலும் நன்கு விளங்கும்.

[1] Hist. of Tamil Language, p. 61.

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்கும்' (புறம். 6)

எனுமிடத்து நச்சினார்க்கினியர் 'தெற்கின் கண்ணது உட்குப் பொருந்திய கன்னியாற்றின் தெற்கும்' என்ற தனால் தெற்கு குமரியாறு இருந்தமை வெளிப்படை.

இங்ஙனமாகத் தெற்கே தமிழ்நாடு வெகுதூரம் வியாபித்திருந்தமை தெளிவாகின்றது. இந்நாட்டைக் கடல் கொண்டொழிந்தது என்பதற்கும் தமிழ்ப் பழநூல்களிற் பல ஆதாரங்கள் உண்டு. அவை, வருமாறு:—

'தலைச் சங்கத்தார் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரையென்ப.' 'இடைச்சங்கத்தார் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாட புரத்தென்பது. அக்காலத்துப் போலும் பாண்டி நாட்டைக் கடல் கொண்டது' என்று இறையனாரகப் பொருள் உரை (பக். 4, 5) கூறும். சிலப்பதிகாரமெழுதிய இளங்கோவடிகள்,

'வடிவே லெறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள' (சிலப். XI: 18-20)

எனக் கடல் கொள்ளப்பட்டமையும்

'நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன லுட்டு' (சிலப். VIII: 1-2)

எனக் கடல்கொள்ளப்பட்டபின் குமரிக்கடல் தெற்கு எல்லை கூறினர்.

இதற்கு உரை யெழுதிய அடியார்க்குநல்லார், 'அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னு மாற்றிற்கும் குமரி யென்னு மாற்றிற்கு மிடையே எழுநூற்றுக்காவதவாறும் . . . . நாற்பத்தொன்பது நாடும் . . . . வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண் டொழிதலால் குமரியாகிய பௌவ மென்றார் என்க, "வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்றிந் நான்கெல்லை தமிழது வழக்கே" என்றார் சிகண்டியாருமாதலின்' என எழுதிப் போந்தார்.

இங்ஙனம் 'எழுநூற்றுக்காவதத்தூரம் கொடுங்கடல் கொண்டது' எனக் கூறினரேனும் அத்தூரம் அக்கணக்கால் நாமிப்போது நிதானிக்கக்கூடிய அத்துணை விஸ்தீரணமுடையதன்று. எனெனில் பஃறுளியாறும் குமரியாறும் சமீபத்திலிருந்தன. (சிலப். அரும்பதவுரை, பக். 39) மேலும்,

'மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியிஞன் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்'

(கலித்தொகை, முல்லைக்கவி: 4)

இதன் பொருள்:—'தன் நாட்டைக் கடலினுடைய மிக்க திரையேறிக் கைக்கொண்டு விடுகையினாலே, தனக்கு நாடு இடமுண்டாம்படியாக மனத்தின் இளைப் பின்றியப் பகைவரைத் தன் வலியினாலே தாழ்க்க வேண்டி, அவர்மேலே சென்று அவருடைய புலிப்பொறி யையும் விற்பொறியையும் அவர் நாட்டினின்றும் போக்கி விளங்குகின்ற கயலை அவ்விடத்தே பொறித்த புகழையுடைய கெடாத்தலைமையினையுடைய பாண்டி யன்' என்பதாம். இங்கு கூறப்படுவதினின்று கடல் கொள்ளப்பட்ட தன் நாட்டினுக்கு ஈடாகப் பாண்டி யன் சேர சோழர் நாடுகளிலிருந்து சில பாகங்களைப் பிடித்துத் தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டான் எனத்தெரிகிறது. இங்ஙனம் சேர்த்துக்கொண்ட நாடு 'எழுநூற்றுக் காவதம்' அன்று ஏதோ சில சிறிய பாகங் களே என்பது 'அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழ நாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னுமிவற்றை இழந்த நாட்டிற் காகவாண்ட தென்னவன்' (சிலப். XI: 21 உரை) என்று அடி யார்க்கு நல்லார் கூறிய உரையால் விளக்கமாகின்றது.

இதுவரையும் கூறிவந்தவற்றால் தமிழ் நாடு தெற்கே குமரியாறுவரை வியாபித்திருந்ததென்பதும் குமரியாறு நாமறிந்த குமரியினின்று உத்தேசம் இருநூறு மைல் விஸ்தீரணத்திற்குட்பட்ட தூரத்திற்குள் இருந்திருக்க

லாமென்பதும் அந்நாட்டைக் கடல்கொண்டொழிந்த தென்பதும் நிலைவரப்பட்ட உண்மைகளாகின்றன. (இவற்றின் விவரங்களை 'இடைச்சங்கம்' செந்தமிழ். 3: 8. ஸ்ரீமத். ஐயன் ஆரிதன்; 'குமரியாறு' செந்தமிழ். 5: 4. ஸ்ரீ ஆ. முத்துத்தம்பிபிள்ளை; எனும் வியாசங்களால் தெரியலாம்.) இவ்வுண்மைகளைப் பிறரும் பிறவிடங்களில் கூறியுள்ளார். கடல் கொள்ளப்பட்டதன் பின்னர்த் தமிழ் நாட்டின் எல்லை:—

'நெடியோன் குன்றமுங் தொடியோள் பௌவமுங்
தமிழ் வரம்பறுத்த தண்புனலொட்டு' (சிலப். VIII: 1–2)

என்றமையானும்;

'வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்கம் . . . . . '

(தொல். பாயிர. விருத்தி. பக். 3)

என்ற சிறு காக்கைப் பாடினியார் பாட்டாலும்; ஔவையார் பாடல்களெனத் தற்காலம் வழங்கும்,

'வெள்ளாற்றின் தெற்கு மேற்குப் பெருவெளியாம்
தெள்ளாம் புனற்கன்னி தெற்காகும்—உள்ளான்
ஆய்ந்த கடற்கிழக் கன்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி'

இதன் பொருள்:—வெள்ளாற்றுக்குத் தெற்கே கன்னியாகுமரிக்கு வடக்கே உள்ளான் மேயுங் கடற்கரை கிழக்கு பெருவெளி மேற்குடைய 56 காதமுடையது பாண்டிய நாடு.

'கடல்கிழக்கு தெற்கு கரைபுரளும் வெள்ளாறு
குடதிசைக்குக் கோட்டைக் கரையாம்—வடதிசைக்கு
ஈழ முதலா யிருபத்து நாற்காதஞ்
சோழநாட் டெல்லையெனச் சொல்'

இதன் பொருள்:—கிழக்கே கடல் தெற்கே வெள்ளாறு மேற்கே கோட்டைக்கரை வடக்கே ஈழம் இவற்

றுட்பட்ட இருபத்துநான்கு காவதமுள்ளது சோழ நாடு.

'வடக்குத் தலம்பழனி வான்கிழக்குச் செங்கோடு
குடதிசைக்குக் கோழிக்கூ டாகும்—கடற்கரையி
லேரமது தெற்காகு மோரெண் பதின்காதம்
சேரநாட் டெல்கையெனச் செப்பு'

இதன் பொருள்:—வடக்கே பழனிமலை, கிழக்கே செங்கோட்டை, மேற்கே கள்ளிக்கோட்டை, தெற்கு கடற்கரை, இதற்குட்பட்ட எண்பது காவததூரம் சேர நாடு.

'மேற்குப் பவழமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு மூவரி யணிகிழக்குச்—சீர்களுயர்
தெற்குப் பிணுகை திகழிருப தின்காதம்
நற்றெண்டை நாட்டெல்லை நாடு'

இதன் பொருள்:—மேற்கே கீழ்மலை, வடக்கு வேங்கடம், கிழக்கே கடற்கரை, தெற்கே செய்யாறு, இதற்குட்பட்ட இருபது காவதம் தொண்டை நாடு.
என்ற செய்யுட்களானும்,

'மேற்கடல் கீழ்க்கடல் வேங்கடங் குமரி
யாகிய வெல்லையு ளருந்தமிட் பௌவம்'
(இலக். விளக்கம் சிற. பாயிரம், பக். 6)

என்றதனாலும்,

'குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்'
(நன்னூல் சிற. பாயிரம்)

என்றதனாலும், பிந்தியகாலத்துத் தமிழ் நாட்டெல்லை வடக்கே பழவேற்காடு தொடங்கித் திருவேங்கடம் அல்லது திருப்பதிவரை எட்டி மேல்பக்கம் மலையடுத்து வந்து தெற்கும் கிழக்கும் கடலடுத்து வந்ததென்பது விளங்கும்.

தமிழ் மக்கள் சுயநாடு இதுவேயாயினும் பண்டை நாளில் தமிழ் மக்கள் சாவகம், (Java) சீனம் முதலிய பிறவிடங்களினும் வசித்துவந்ததுண்டு. இக்காலத்தி

லும் தமிழ் நாட்டுக்கு வெளியே இலங்கை, மோரீஸ், பர்மா, பினாங்கு, தென் ஆப்பிரிக்கா, கீழ் ஆப்பிரிக்கா முதலிய பல இடங்களிலும் சென்று குடியேறியும் வசித்தும் வருகின்றனர். தமிழ் மொழியையே தாய் மொழியாகவுடைய தமிழ் மக்கள் தொகை இப்போது இரண்டரைக்கோடி இருக்கலாமெனக் கணக்கிடப்படுகிறது.

3. தமிழ் மொழி.

'இருமொழிக்குங் கண்ணுதலார் முதற் குரவர்.'

'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்தக்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பரகரெனிற்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்.'

எனும் செய்யுட்களையும் ஞானசம்பந்த மூர்த்திகள் திருநாவுக்கரசர் முதலியவர் தம் பாடலுள் இடையிடையே கூறியிருக்கும் சிற்சில தொடர்களையும் ஆதாரமாகக் கொண்டு தமிழ்ப் பாஷை சிவபிரானால் உண்டாக்கப் பட்டதோர் தெய்வ பாஷையென இப்போதும் கூறுவாருமுண்டு!

அன்றியும்,

'செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு . . . . . '

எனும் தொல்காப்பியப் பாயிரச்சூத்திரப் பகுதிக்குச் செந்தமிழ் நிலத்து மொழி தோன்றுங் காலத்து உடன் றோன்றிய நூல் அகத்தியமொன்றே யாகலான்' எனப் பொருளாதலின் தமிழுலகில் மொழியும் அம்மொழிக்குரிய இலக்கணமும் ஏக காலத்திற்றானே உண்டாயின வெனக் கூறுவாறுமுண்டு.

இக்கோட்பாடுகளெல்லாம் பாஷை வளர்ச்சியின் தன்மையை நன்குணர்வார்க் குடன்பாடாகா. மேலும் கடவுளாகவே ஒரு பாஷையைச் சிருஷ்டித்தலும் அதை ஒருவருக்குப் போதித்தலும் அவ்வொருவர் மூலமாய்ப் பாஷை உலக வழக்கில் வருதலுமாகிய காரியங்கள்

உலகின்கண் வேறெவ்விடத்திலும் காணப்படாத காரியங்களாம். பாஷை யுண்டாம்போதே அதற்கு இலக்கணமும் ஏற்பட்டதென்பதும் நம்பத்தக்கதன்று, இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலே மரபாதலின்.

பாஷையென்பது மானிட வர்க்கத்தின் கூட்டுறவின் பயனுய்க் காலக்கிரமத்தில் உற்பத்தியாகிப் பலநூற்றாண்டுகளாக வளர்ந்து மனிதர் நாகரீகம் அறிவு முதலியவற்றில் தேருந்தோறும் பாஷையும் உடன் விர்த்தியாகிக்கொண்டே போவது. அன்றியும், பாஷை எப்போதும் ஒன்றுபோலிருப்பதுமன்று. புதியன புகுதலும் பழையன கழிதலும் பாஷைகளியற்கை. இங்ஙனமாகவும் பாஷையும் அதன் இலக்கணமும் ஒரே காலத்திற்றானே உண்டாயினவெனக் கூறல் எத்துணை விபரீதம்!

பாஷைகள் நாளடைவில் வளர்ந்துகொண்டே போவதும் ஒரு காலத்திருப்பதுபோல் அதற்குப்பின் நானூறு ஐந்நூறு வருஷங்களுக்கப்பால் இருப்பதில்லையென்பதும் இயற்கையே யெனினும், தமிழ்ப் பாஷையொன்றும் கடந்த இரண்டாயிரம் வருடங்களுக்கிடையில் அத்துணைப் பேதம் அடைந்துவிட்டதெனக் கூறுதற்கிடமில்லை. பேதமில்லையென்பதன்று, பிறபாஷைகளிற்போற் பேதம் பெரிதில்லையென்பதே. இதற்குக் காரணம், தமிழ் இலக்கணமுண்டான காலத்தின்பின் தமிழ் மக்கள் தாராளமாகப் பழையன கழித்துப் புதியன ஏற்றுக்கொள்ள மனமில்லாமற் போனதே எனக் கூறிற் பொருந்தும். இது காரணத்தினாலேயே பாஷையும் இலக்கணமும் ஒரே காலத்திலுண்டாயினவெனக் கூறுதல் தவறும். பூர்வத்தில் தமிழ்ப் பாஷை யுண்டான பல நூற்றாண்டுகட்குப் பின்னரே தமிழ் இலக்கணம் எழுதப்பட்டதெனக் கருதுதற்கு வேண்டிய ஆதாரங்கள் உள்ளன.

உலகிலுள்ள பாஷைகளையெல்லாம் ஆரியம், ஸெமிட்டிக், துரானியம் எனும் மூன்று வர்க்கத்தினுள் ஒன்றில் அடக்கிக் கூறுவர் பாஷா தத்துவமுணர்ந்த ஞானிகள். இம்மூப்பிரிவுகளுள் தமிழ்ப்பாஷை எப்பிரிவைச் சார்ந்த

தென ஆராய்ந்த அறிஞரும் பலர். இவருள் கால்ட்வெல் ஆசிரியர்[1] தமிழ் மொழி ஸீத்திய[2] அதாவது துரானிய வர்க்கத்தைச் சார்ந்ததெனக் கொண்டனர். எனினும் தமிழ்மொழிக்கும் இந்து-ஐரோப்பிய[1] அதாவது ஆரிய பாஷைகளுக்கும் பல ஒற்றுமைகளும் தொடர்பும் உண்டென்பதையும் அவர் ஒப்புக்கொள்வார். செல்வக்கேசவராயர் முதலிய சிலர் கால்ட்வெல் ஆசிரியர் கூற்றையே ஒப்புவாராயினர். வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரிகள் 'தமிழர்கள் துரானியரால் வென்றடக்கப்பட்டபோது அத்துரானிய பாஷைச் சொற்களிற் சில தமிழ்ப் பாஷையின்கண்ணே புகுந்திருத்தலு மியல்பே. இனித் துரானியரை வடக்கிருந்து போந்த ஆரியர் வென்று துரத்தலும், அவர்கள் தெற்கே வந்து தமிழருடன் கலப்பாராயினர். அப்பொழுதும் சில துரானிய பாஷைச் சொற்கள் தமிழ்மொழியின் கண்ணே இடம்பெற்றிருத்தல் வேண்டும். எனவே தமிழ்ப் பாஷையின்கண் முதன்முதல் கலக்கப் புகுந்தது துரானிய பாஷையே. சரித்திர உண்மை இவ்வாறிருத்தலின் தமிழ்ப் பாஷையைத் துரானிய பாஷையோடு சேர்த்து ஓரினமாக்கிப் பாகுபாடு செய்தல் அசம்பாவிதமாம்'[3] எனக் கூறி முன்னோர் கூற்றைக் கண்டித்தனர். வின்ஸன் பண்டிதர் 'தமிழ்மொழி ஸீத்தியவர்க்கத்தைச் சார்ந்ததெனக் கால்ட்வெல் ஆசிரியர் கூறியது ஒருவகையானும் ஒவ்வாத காரியமாயிருக்கிறது' என்றனர். 'திராவிடர் (தமிழர்) ஒரு தனிக்கூட்டத்தினர். அவர்கள் துரானியஸீத்திய வகுப்பைச் சார்ந்தவர்களென்பது இப்போது ஒப்புக்கொள்ளப்படுவதின்று' என என்சைக்கிளோபீடியா பிரிட்டனிக்கா கூறுகிறது.[4]

'தமிழ்மொழியே திராவிட பாஷைகளுள் அதிபூர்வமானது. தனிமொழியாயிருப்பது. தெலுங்கு கன்னடம் மலையாள முதலிய பாஷைகளுக்கு ஆதிபாஷையாய்

[1] Cald. Com. Gram., pp. 49 &c.

[2] பின்னியம், தருக்கியம், மங்கோலியம் முதலியன ஸீத்தியவர்க்கத்தைச் சார்ந்தன. சமஸ்கிருதம், ஸண்டி, பழம்பார்சீகம். கிரேக்கு, லத்தீன் முதலியன இந்து-ஐரோப்பிய வர்க்கத்தைச் சார்ந்தன.

[3] History of Tamil Language, p. 7.

[4] Tamilian Antiquary, I, p. 12.

நிற்பது.'[1] உலகில் வழங்கும் இந்து-ஐரோப்பிய, செமிட்டிய, துரானிய பாஷைவர்க்கங்கள் எதனுள்ளும் சேராதது. திராவிட பாஷைகளுள் அதிபூர்வகாலத்திலே பாஷைத் தேர்ச்சியடைந்தது. 'திராவிட பாஷையைச் சேர்ந்த பிறபாஷைகள் இலக்கிய காலத்திற்குட்படா முன்னரே இலக்கியத் தேர்ச்சியடைந்ததும் தமிழே.'[2] 'தெலுங்கு கன்னடம் மலையாள முதலியன ஆரிய பாஷையின் உதவியின்றி இனி இயங்க முடியாதிருக்கவும் தமிழ்மொழி யொன்றும் சமஸ்கிருத பாஷைச் சொற்களே முழுவதும் அகற்றிவிடுவது மாத்திரமேயன்றி சமஸ்கிருதத்தின் உதவியை நாடாமே செழித்து வளரவும் கூடும்.'[3] ஆதலின் தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாள முதலிய திராவிட பாஷைகளெல்லாம் பிறவற்றோடு சேராத ஓர் தனிவர்க்கப் பாஷைகளேயாம். இவற்றை இவற்றுட் சிறந்ததும் எல்லாவற்றிலும் முற்பட்டதுமாகிய தமிழின் பெயரால் தமிழ் வர்க்கமெனக் கூறுவதே பொருந்தும். பண்டித சவரிராயரும் இவ்வபிப்பிராயத்தையே மேற்கொண்டார்.[4] இவ்விஷயத்தைப் பற்றி எழுதுவோர் இனியேனும் துரானிய மெனும் இழி பெயரை மறந்தும் மறுத்தும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பாஷைகளேயெல்லாம், ஒரு தனிப் பெருங்குழுவினுள்ளடக்கி அக்குழுவைத் தமிழ்க்குழு பாஷைகள் என அழைப்பாராக.

திணைபாலிடங்களைத் தெளிவாயும் சுருக்கமாயும் விளங்கக் கூறும் வழக்கில் திராவிட பாஷைகளுக்கொப்பில்லை. இவ்விஷயத்தில் சமஸ்கிருத பாஷை தமிழ்மொழிக்கு இணையாகாது. வடமொழி தமிழிலிருந்து கற்றுக்கொண்டன வனந்தம் எனக் கூறினும் பொருந்தும் எனக் கால்ட்வெல் ஆசிரியரும், சொற்பொருள் நயத்திலும் பரப்பிலும் தமிழ்மொழி கிரேக்கு லத்தீன் பாஷைகளிலும் சிறந்ததென வின்ஸ்லோ பண்டிதரும், கிரேக்கு லத்தீன் பாஷைக் கவிகளே உலகிலுள்ள கவிகளுள் எல்

[1] Cald. Com. Gram., p. 78.
[2] *Ibid.* p. 82.
[3] *Ibid.* p. 45.
[4] Tamilian Antiquary, I.

லாம் சிறந்தனவெனக் கருதிக்கொள்ளும் ஐரோப்பிய பாஷாவிற்பன்னர் தமிழ், தெலுங்கு பாஷைகளுள் காணப்படும் கவிகளைக் கற்பரேல் தாம் கொண்டிருக்கும் கருத்தை மாற்றவேண்டி நேரும் என டெயிலர் பண்டித ரும், உலகிலுள்ள மிகச் சிறந்த பாஷைகளுள் ஒன்றே தமிழ் எனச் சாரலஸ்கோவர் பண்டிதரும் தத்தம் அபிப் பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர்.[1]

உண்மை இங்ஙனமிருப்பவும் சிலர் தமிழ் மொழி வடமொழியிலிருந் துற்பவித்ததேயெனக் கூறுவர். திரு வாவடுதுறையாதீனத்து ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் தம துள் ளெழுந்த வடமொழி அபிமானத்தால்,

> 'அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்றுள்,
> ஒன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ
> வன்றியு மைந்தெழுத் தாலொரு பாடையென்
> றறையவே நாணுவ ரறிவடை யோரே'
>
> (இலக். கொத். பக். 9)

எனக் கூறினர். இதற்கென் சொல்வது!

> 'அதிமதி நுட்பமோ டதிகலை கற்பினும்
> விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பார்'
>
> (இலக். கொத். பக். 4)

என அவர் கூறிய சூத்திரத்திற்கு அவரே உதாரண மாயினரென்று கூறுவதல்லது வேறன்று. சுவாமிநாத தேசிகர் கூறியது அறவும் அசம்பாவிதமான தென் பதைத் தாமோதரம்பிள்ளை தாம் எழுதிய கலித் தொகைப் பதிப்புரையில் காரணம் பல காட்டிக் கண்டித் தொதுக்கினர்.

தமிழ் இலக்கியங்கள் ஏற்பட்ட காலத்திற்றானே வட மொழிப் பதங்கள் தமிழுடன் கலந்ததுண்மையே. அக் கால நூல்களிலும் நூற்றுக்கு இரண்டு மூன்று வீதம் வடமொழிப் பதங்கள் வழங்குவன. இதுகாரணமாய்த் தமிழ் மொழி வடமொழியினின்றுதித்ததெனக் கூறுதல் அணுவும் பொருந்தாது. இக்காலம் ஆங்கிலமொழி தமி ழுடன் கலந்து பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலு

[1] *Ibid.*

மிருக்கும் காரணத்தால் தமிழ் ஆங்கிலத்தினின்றும் உதித்ததெனவும் கூறலாமோ?

4. தமிழ் எழுத்துக்கள்.

ஒலிவடிவைக் குறிப்பதற்கென வரைந்துகொள்ளப் பட்ட வரிவடிவுகளே தற்காலம் எழுத்துக்களென வழங்கப்படுவன. இவை,

'தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி'

என நன்னூலாரும் (எழுத். 43) இலக்கண விளக்கமுடையாரும் (எழுத். 23) கூறுவனபோல் தொல்லை வடிவின வல்ல.

பெரும்பாலான பாஷைகளுள் ஆதியில் உண்டான எழுத்துக்கள் ஒலிவடிவை மாத்திரம் குறித்தனவல்ல. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே எழுத்துடையதான எகிப்து தேசத்து எழுத்துக்கள் பல உருவங்களைக் காட்டுவனவாய்ச் சித்திரங்கள்போல் வரையப்பட்டிருப்பதையறியாதார் யாவர். சீனபாஷையில் ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வோர் கருத்தைக் குறிப்பதாய் இன்றளவும் பல்லாயிரம் எழுத்துக்களையுடைய பாஷையாயிருக்கிறது. தமிழ்மொழி எழுத்துக்களின் ஆதிசரிதமும் அவ்வாறே. அவ்வாறெனக் காட்டும் உரைகள் பல தமிழ்ப் பூர்வ இலக்கணங்களுட் காணலாம். யாப்பருங்கல விருத்தியில் 'தேர்பதமுதலிய நால்வகையெழுத்து, உக்கிர வெழுத்து, முத்திறவெழுத்து, சுதியெழுத்து, யோனியெழுத்து, சங்கேதவெழுத்து'[1] முதலியனவாய பலவித எழுத்துக்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

திவாகரம் பிங்கலந்தை முதலிய நூல்களில்:—

'பெயரெழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
எழுத்தென வெழுத்தின் பெயரியம் பினரே' (திவாகரம்[2])

'வடிவு பெயர் தன்மையுண் முடிவு நான்கா
நடைபெறு நாவலர் நாடிய வெழுத்தே' (இலக். கொத். பக். 12.)

[1] Quoted in செந்தமிழ் 5: 5.
[2] *Ibid.*

'உருவே யுணர்வே யொலியே தன்மை
எனவீரெழுத்து மீரிரு பகுதிய.....' (இலக். சொத். பக். 11.)

இவற்றுள் 'வடிவெழுத்தென்றது சித்திரக் குறிகளை யாம். மனிதனை மனிதனின் உருவத்தையேனும் அவனின் பாகமாகிய தலையையேனும் சித்திரித்துக்காட்டல். பெயரெழுத்தென்றது சங்கேதக்குறி. போரைக்குறிக்க மனிதனின் புயங்களைக் காட்டுவது. தன்மை யெழுத்தென்றது குணம், சக்தி முதலியவற்றைக் காட்ட வரையும் அடையாளங்கள். விவேகத்துக்குக் கண், வெற்றிக்குக் கருடன் முதலியன வரைதல். மூடிவெழுத்தென்றது வீண நிகழ்ச்சியை உணர்த்தும் வாக்கியங்களைக் குறிக்க வழங்கிய அறிகுறிகள்' என்னூர் சென்தமிழ்ப் பத்திராசிரியராகிய ஸ்ரீ மு. இராகவய்யங்காரவர்கள். தமிழில் ஆராய்ச்சி மிக்குடையராய்த் 'திராவிட விவகாரத்தில் தெளிந்த சில விஷயங்கள்' எனும் வியாசமெழுதிய எப். ஜே. ரிச்சர்ட்ஸ் பண்டிதர் 'ஆதித்தமிழ் எழுத்து சித்திரவுருவமாகவே உண்டாயிருக்கவேண்டும்' எனக்கூறி அதற்குச் சார்பாகப் பல்லாரியில் மயில் மலையில் பொரித்திருக்கும் சில சித்திரங்களையும் படம் பிடித்து அச்சேற்றி வெளியிட்டனர்.[1]

தற்சமயம் வட இந்தியாவில் வழங்கும் வடமொழிக்கும் வடமொழியின் வழிமொழிகளுக்கும் ஆதிமூலமாயிருந்தது பிராமி என்றழைக்கப்படும் அசோக எழுத்துக்கள். சமஸ்கிருத கிரந்த எழுத்துக்களெல்லாம் இந்த பிராமி எழுத்துக்களிலிருந்து உண்டாயினவே. இந்த எழுத்துக்களிலிருந்தே தெலுங்கு, கன்னடம், மலையாள முதலிய எழுத்துக்கள் உண்டாயின. வரி வடிவிலும் ஒலியிலும் இவையெலாம் ஒத்திருக்கின்றன. வரிசை முறையிலும் அப்படியே.

இப்பொழுது வழங்கும் தமிழ் எழுத்துக்களிலும் பெரும்பாலானவை இந்த கிரந்தாக்ஷரங்களின் திரிபே. ஆனால் ழ, ள, ற, ன எனும் நான்கு எழுத்துக்களும் கிரந்தத்தைச் சார்ந்தனவல்ல. இவை ஆதி வட்டெழுத்தைச் சார்ந்தன.

[1] Mythic Society Journal, Vol VI, No. 3.

மேற்கூறிய பிற பாஷைகளிலெல்லாம் ஆதி முதலே வழங்கி வந்தனவும் வழங்கி வந்தவற்றின் சிதைவுகளுமே இப்பொழுதும் வழங்குவனவாயிருப்பவும் தமிழ் மொழியில் மாத்திரம் இப்பொழுது வழங்குவன ஆதியில் வழங்கிய தமிழ் எழுத்துக்களல்ல. தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து கி. பி. 900 வரை தமிழ் நாட்டில் வழங்கி வந்த எழுத்துக்கள் வேறே. ஒன்பதாவது நூற்றாண்டின்பின் வழங்கிவரும் எழுத்துக்கள் வேறே. ஆதித் தமிழ் எழுத்துக்கள் வட்டெழுத்தென வழைக்கப்படுபவும். தமிழ் மொழியில் வட்டெழுத்துக்களை யகற்றி இந்த கிரந்தாக்ஷரங்களைப் புகுத்தினவர் பௌத்தரும் பிராமணரும் என நிதானிக்கப்படுகிறது. ஆதித் தமிழ் வட்டெழுத்துப் பயிற்சி வடநாட்டார் கூட்டுறவின் முன்னரே தமிழ் மக்கள் எழுத்துப் பழக்கம் உடையராயிருந்தனர் என்பதையும் வடநாட்டார் கூட்டுறவின் பின்னரே தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலியவற்றுக்கு எழுத்துக்கள ஏற்பட்டனவென்பதையும் நிலையுறுத்தும். ஏனெனில் தெலுங்கு முதலியனவற்றின் நெடுங்கணக்குகள் முழுவதும் வடமொழி நெடுங்கணக்கையே பின்பற்றுவனவாயின. தமிழ் மொழியிலோ அங்ஙனமில்லை. தமிழ் மொழி எழுத்துக்கள் மிகவும் குறையுடையன. தமிழில் ஒரே எழுத்து பல தொனிகளைக் குறிக்க வழங்குகின்றது. எனினும் தமிழ் எழுத்துக்கள் சுயமாய் வழங்குகின்றன.

ஆரியர் இந்தியாவிற்கு வந்த காலத்தில் அக்ஷராப்பியாசமுடையராயிருந்ததில்லை. இந்தியாவில் அவர்கள் வந்து தங்கிய பன்னெடு நாட்களுக்குப் பின்னுண்டான அவர்கள் வேதமும் 'எழுதாக்கிளவி'யாகவேயிருந்தது. ஆரியர் தென்னாட்டுத் தமிழரிடமிருந்து தான் எழுதக்கற்றுக்கொண்டனரேயோ வெனும் சந்தேகமும் பற்பலருக்குண்டு. இச்சந்தேகம் கொண்டவருள் தமிழ் ஆராய்ச்சி எழுதிய ஸ்ரீனிவாசய்யங்காரு மொருவர்.[1] இது காரியம் எங்ஙனமாயினும் இந்தியாவில் கி. மு. எட்டாம் நூற்றாண்டளவிலேயே எழுத்தும் சுவடியுமுடையராயிருந்தவர் தமிழ்மக்களே என்பர்.

[1] Tamil Studies, p. 121.

ரைஸ்டேவிட்ஸ் பண்டிதர் 'இந்திய எழுத்துக்கள் ஆரியரால் ஆக்கப்பட்டனவல்ல. இந்தியாவிற்கு எழுத்தறிவித்தவர்கள் திராவிடரே. கி. மு. ஏழாம் நூற்றாண்டளவில் திராவிட வியாபாரிகள் மூலமாய் இந்தியாவில் எழுத்துண்டாயிற்று. அதன்பின் இந்தியாவின் பாஷைகளுக்கேற்றபடி அவ்வெழுத்துக்களைப் புதுக்கியும் திருத்தியும் சிதைத்தும் வழங்கிக்கொண்டனர்' என்பர்.[1] பர்னல் பண்டிதர், இ. தாமஸ் பண்டிதர் முதலியவர்களுக்கும் இதுவே யுடன்பாடு.

இதனால் அறியக்கிடந்தது கி. மு. ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழ் மக்கள் எழுத்துடையவர்களாயிருந்திருக்கலாம் என்பதே. ஆனால் தமிழ் வியாபாரிகள் மேல் ஆசியா பிரதேசங்களிலிருந்து எழுத்தைத் தென்னிந்தியாவினுட் கொணர்ந்தனர் எனக்கூறுவது ஒப்புக்கொள்ளத்தக்கதன்று.

ஏனெனில் இப்பாகத்தின் துவக்கத்தில் காட்டியபடி தமிழ் மக்கள் வடிவெழுத்து, பெயரெழுத்து, தன்மையெழுத்து, முடிவெழுத்து முதலிய எழுத்துக்களை ஆதியிலேயே கண்டுபிடித்து வழங்கிவந்தனர். இவற்றுள் எல்லாம் சித்திரங்களாற் காட்டப்படும் எழுத்துக்களுமல்ல. ஏனெனில்

'தானமுயற்சி தரக்கொளச் செவிப்புல
னுயவொலி தன்மை யெழுத்தாகுமே'

என ஒலிவடிவுக்கும் வரிவடிவு வரைந்து எழுத்தென வழங்கி வந்தவராவார். ஆதியில் சித்திர எழுத்தில் ஆரம்பித்து வரவரத்தேர்ந்து கி. மு. ஏழாம் நூற்றாண்டின் முன்னரே ஒலிவடிவுக்கும் வரிவடிவு கண்டெழுதிய ஆதித் தமிழ்மக்கள் அங்ஙனம் தாம் வித்திபண்ணியாக்கிக்கொண்ட தம் சொந்த எழுத்துக்களை அழித்துக்கலைத்துப் புறத்தெறிந்து பிறநாட்டார் எழுத்துக்களையே தாமும் மேற்கொண்டு அதுவரையும் தமது நாட்டார் பழகியிருந்த எழுத்துக்களை மறக்கும்படி செய்து பிறநாட்டார் எழுத்துக்களையே எழுதவும்

[1] *Ibid.*, p. 119.

படிக்கவும் கற்றுக்கொள்ளுமாறு செய்தனர் எனக்கூறுவது ஒரு சிறிதும் ஒப்பத்தக்கதன்று. ஆதிமுதல் கி.பி. எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுவரையும் தமிழ் நாட்டில் வழங்கியதும் இப்போதும் தென்னிந்திய மேற்குப் பக்கத்தில் ஒரோவிடங்களில்[1] வழங்குவதுமாய வட்டெழுத்துக்கள் தமிழ் மக்கள் தாமே தமக்கென்று பிறருதவியின்றி ஆக்கிக்கொண்டதோர் தனியெழுத்தேயாதல் வேண்டும் என்பதற்குச் சந்தேகமில்லை.

இங்ஙனம் துணிந்து கூறுமிடத்துப் பிறிதோர் ஆக்ஷேபணையுண்டாகலாம். என்ன? தமிழ் மக்கள் தமக்கென்று தாமே ஆக்கிக்கொண்ட எழுத்தில் பிறநாட்டெழுத்துக்கள்போன்ற குறிகளும் காணப்படுகின்றனவே, இக்குறிகள் இங்கு வருவதற்குக் காரணமென்னவென்பதே. இவ்வாறு காணப்படும் எழுத்துக் குறிகள் இரண்டொன்றே. இவற்றுள் காணப்படும் ஒற்றுமை வெகு அற்பமாயிருக்கவும் வேற்றுமையோ அதிகம். தமிழ் முன்னோர் தாம் எழுத்தை வரிசை முறைப்படுத்தித் தீர்த்த காலத்தில் தம்முள் அதுகாறும் ஆக்கப்பட்டிருந்த எழுத்துக்களை ஒருசேரத் திரட்டி முறைப்படுத்தினர். தம்முட் குறைந்ததும் அதுவரை ஆக்கியிராததுமான இரண்டொரு ஒலிகளுக்குப் பின்னும் புதிதான வரிவடிவுகளை வரைந்துகொள்ளாமே தாம் பிறவிடத்துள்ளனவாக அறிந்திருந்த வரிவடிவுகளையே எடுத்துக்கொண்டனரென்பதே காரணமாகும். ர, ற, ழ, ள, ன, ந முதலிய ஈரெழுத்துக்கள் இவ்வாறுக உண்டாயிருக்கலாம் எனக் கொள்ளுதலே தகுதி. கிரந்த எழுத்துக்களைத் தமிழில் புகுத்தியவர்கள் கிரந்தத்திலில்லாதனவாய ற, ன, ழ, ள எழுத்துக்களை கிரந்த எழுத்துக்களோடு ஒட்டிக்கொண்டதும் இவ்வொழுங்குபற்றியதேயாகும்.

இதற்கு மாறுகத் தமிழ் மக்கள் தமக்கென எழுத்தில்லாதிருந்து முழுவதும் பிறநாட்டாரிடமிருந்தே எழுதக் கற்றுக்கொண்டனரென்பது உண்மைக்கு மாறுபட்டதாகவே காணப்படுகிறது. தமிழ் எழுத்துத் தமிழரதே.

[1] Tamil Studies, p. 126.

2. அத்தியாயம்

தொல்காப்பிய காலம்வரை

தமிழ் நாட்டில் தமிழ்க்கலை வளர்த்தற் பொருட்டுப் பூர்வகாலத்தில் மூன்று சங்கங்களிருந்தனவென்பது தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே கூறப்பட்டுளது. இச்சங்கங்கள் முறையே 4440 யாண்டும் 3700 யாண்டும் 1850 யாண்டும் கடல் கொள்ளப்பட்ட, மதுரை, கபாட புரம், வடமதுரை ஆகிய இடங்களிலிருந்தனவென்பதும் இறையனாரகப்பொருள் உரையிலிருந்து விளங்குகின்றது. இவ்வுரையிற் கூறியிருப்பது உண்மையாயிருப்பின் முச் சங்கங்களும் இருந்த யாண்டுகள் 9990 ஆதல்வேண்டும். இத்துணை நீண்ட காலம் சங்கங்களிருந்தனவென்பது தற்கால சரித்திர ஆராய்ச்சிக்கு ஒப்பமுடிந்ததாயில்லை. கடைச்சங்கம் இறுதியுற்றகாலம் கி. பி. முதல் நூற்றாண் டெனக் கொள்ளினும் அதன் முன்னர் கிட்டத்தட்ட பதினாயிரம் யாண்டுகட்கு முன்னரே தமிழ்மொழிவளர்ப் புச் சங்கங்கள் ஏற்பட்டுச் சிறந்தோங்கியிருந்தனவென் பது நம்பத்தக்கதன்று. முன் அதிகாரத்தில் கூறியபடி தமிழ் எழுத்துக்கள் உண்டான காலம் கி. மு. 1000 யாண்டுகட்குப் பின்னரேயாம். கி. மு. 1000 யாண்டு களுக்குள் எழுத்து வகுத்துக்கொண்ட தமிழ்மொழிக்கு எழுத்துக்கள் ஏற்படுதற்கு 9000 யாண்டுகளுக்கு முன் னரே தமிழ்மொழிப் பரிபாலன சங்கங்கள் ஏற்பட்டன வெனக் கூறுதல் ஒரு சிறிதும் பொருந்தாததாகும். எனவே இறையனாரகப்பொரு ளுரைகாரர் கூறிய கால வரை விலக்கப்படுவதாம்.

இதனையே காரணமாகக்கொண்டு சிற்சிலர் முச்சங் கங்களிருந்தனவென்பதே பொய்யெனவும் வாதிப்பர். மற்றும் சிலர் கடைச்சங்கமொன்றுமாத்திர மிருந்த துண்மையெனவும் கூறுவர். கர்ண பரம்பரையாய் வந்த தும் பண்டை இலக்கியங்களில் கண்டுள்ளதுமான இக் காரியமோ மறுக்கத்தக்கதன்று. காலவரையறையைப் பற்றிய சரித்திர ஆராய்ச்சியின்மையின், காலத்தைத்

தாம் கேட்டவாறே நிதானித்தவாறே கூறிவிட்டன ரெனக்கொள்வதே சாலவும் பொருந்தும். அவ்வாறன்றி முச்சங்கங்களிருந்தன வெனவும், அவ்வச்சங்கங்களில இன்னின்ன புலவர் இன்னின்ன அரசர் இருந்தனரென வும், அவர் இன்னின்ன நூல்களை ஆக்கித்தந்தனர் என வும், மனோபாவனையாகவே இடைநாட்போந்தார் கற்பித் துக் கூறிவிட்டார் என அவற்றைத் தள்ளுவதும் தவறே யாகும். அவர் அங்ஙனம் கற்பித்துக்கூறுதற்கான கார ணங்களுமில. ஒருவரைப்போல் பலரும் கற்பிதமாகவே கூறினர் எனக்கூறுவதும் பொருந்தாது. பாஷைகளின் ஏற்றத்தாழ்வுகளையும் தொன்மை இன்மைகளையும்பற் றிய தர்க்கங்கள் பிற்றை நாளுண்டானவையே. அக் காலத் தமிழ்மக்கள் அறிந்தது தமிழ்மொழியே. வட மொழிப் பயிற்சியும் சிறிதிருந்ததுண்டு. எனினும் வட மொழி பெரிதும் போற்றப்பட்டதுமன்று.

முதலிரு சங்கங்களைப்பற்றிய வரலாறுகளிலிருந்து அறியக்கிடந்த காரியங்களாவன:—

1. அகத்தியர், தொல்காப்பியர், முரஞ்சியூர் முடிநாக ராயர் முதலிய புலவர்கள்.
2. காய்சினவழுதி, கடுங்கோன், வெண்டேர்ச்செழியன் முதலிய பாண்டிய மன்னர்.
3. அகத்தியம், தொல்காப்பியம் முதலிய நூல்கள்.
4. கடல்கொள்ளப்பட்ட மதுரை, கடல்கொள்ளப் பட்ட கபாடபுரம் முதலிய நகரங்கள்.

இவற்றின் வழியாக அறியக்கிடந்த விஷயங்களாவன:—

1. தொல்காப்பியத்துப் பாயிரம் கூறிய பனம்பார னார், நெட்டிமையார், காரிகிழார், நெடுஞ்பல்லியத் தனார் முதலிய புலவர்கள்.
2. தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட காலத்தி ருந்த நிலந்தரு திருவிற் பாண்டிய னென அழைக்கப்பட்ட பாண்டியன் மாகீர்த்தி மன்னன்.
3. வடமொழி ஐந்திரவியாகரணம்.

4. தென்பாலி நாட்டிற்கு வடவெல்லையாகிய குமரி யாறு, பஃறுளியாறு முதலிய ஆறுகள்.

5. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, ஆழிவடிம் பலம்ப நின்ற பாண்டியன், சேரமான் பெருஞ்சோற் றுதியன் சேரலாதன் முதலிய மன்னர்.

முன் அத்தியாயத்தில் பாண்டி நாட்டின் தென்பா கம் கடல் கொள்ளப்பட்டதென்பது நன்கு விளக்கப் பட்டது. அவ்வாறு கடல் கொள்ளப்பட்ட காலம் கி. மு. 300 யாண்டுகட்கு முற்பட்டதென்பது இலங் கைச் சரித நூல்களில் கண்டிருத்தலின் அதனையே ஆதார மாகக்கொண்டு முற்கூறிய புலவர்கள், அரசர்கள் காலம் கி. மு. 300 யாண்டுகட்கு முற்பட்டதெனத் துணியப் பட்டது. வேறு புறச்சான்றுகளும் இல்லாமற் போக வில்லை.

வான்மீக முனிவர் தமது வடமொழி இராமாயணத் தில் கபாடபுரத்தின் பெருமையை விரித்துச் சொல் கின்றார். கபாடபுரமென ஒன்றிருந்ததின்றேல் அவர் அங்ஙனம் கூறியிரார்தானே. மேலும் அவர் கபாடபுரத் தைச் சிறப்பிக்குங்காலத்துக் கபாடம் மணிமுத்து முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டதெனவும் கூறுகின்ற னர். தொன்றுதொட்டே தமிழ் நாட்டுக் கீழ்கடலில் முத்துக்குளித்து வந்தனர். தமிழ்நாட்டு முத்துக்களே அந்நாள் நாகரீகமெய்திய சகல நாடுகளிலும் ஒப்புயர் வற்றனவாக மதிக்கப்பட்டனவென்பதும் சரித்திர முணர்ந்தோர் யாவரும் அறிந்த காரியமாகும். எனவே வான்மீகர் கூறிய உண்மை புலப்படும். இவ்வாறாக வான்மீக இராமாயணங் கபாடபுரமிருந்ததென்னு முண்மையைப் புறச்சான்றாய் வலியுறுத்துகின்றது.

இடைச்சங்க காலம் கி. மு. 300 யாண்டுகட்கு முற் பட்டதென்பதற்குப் பிறிதோர் புறச்சான்றுங் காட்ட லாகும். என்னை? பனம்பாரனார் தொல்காப்பியப் பாயி ரங் கூறுமிடத்து ஆந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என அடைமொழி கொடுத்துக் கூறுகின்றனர். வட மொழி ஐந்திர வியாகரணம் தற்காலம் வடமொழிப் பேரிலக்கணமாக வழங்கும் பாணினி வியாகரணத்திற்கு

வெகுநாள் முற்பட்டதென வடமொழி வியாகரண முணர்ந்தோர் யாவரும் ஒப்புக்கொள்ளுவர். ஐந்திரத்தினும் பாணினீயம் சிறந்ததென்பதும் அவர் கொள்கை. தொல்காப்பியர் காலத்திற்றானே பாணினி தமது வியாகரணத்தை எழுதிப்பிருப்பரேல் தொல்காப்பியர் அதனையே விரும்பிக் கற்றிருத்தல்வேண்டும். ஆனால் தொல்காப்பியர் காலத்தில் பாணினியின் பேர்தானும் கேட்கப்பட்டதில்லை யாதலின் அவர் ஐந்திர வியாகரணத்தையே கற்றுத் தேர்ந்தனர் என்பதும், தொல்காப்பியர் பாணினிக்கு முற்பட்டவர் என்பதும் போதரும். பாணினியின் காலம் கி. மு. 350 யாண்டுகட்கு முற்பட்டதென்று [1] தெரிகின்றபடியால் தொல்காப்பியர் காலமும் அவரிருந்த இடைச்சங்க காலமும் கி. மு. 300 க்குப் பிற்பட்டதாகாது என்பதும் துணிபாம்.

இக்காலத்திலிருந்தவராக நிதானிக்கக்கூடிய புலவர்களானியற்றப்பட்டவற்றுள் நமக்கெட்டியுள்ளன தொல்காப்பியம் நீங்கலாக மிகச் சிலவேயாம். அவையாவன:—

I. பனம்பாரனார் இயற்றியன இரண்டு:

1. தொல்காப்பியப் பாயிரச் சூத்திரம்.

'வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்
தமிழ்கூறு நல்லுல கத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவ
னிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவி னான்மறை முற்றிய
வதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பலபுகழ் நிறுத்த படிமையோனே.'

[1] Tamil Studies, p. 117. வின்ஸென்ற் ஸ்மித் ஆசிரியர் பாணினியின் காலம் கி. மு. ஏழாம் நூற்றாண்டாயிருக்கலாமென்பர். Vide Hist. of Ind., p. 57.

இதன் பொருள்:—'வடக்கே வேங்கடமுந் தெற்கே குமரியுமெல்லையாகவுடைய தமிழ் உலகத்தின்கண் வழங்கும் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும், பொருளிலக்கணமுமாராய்ந்து, செந்தமிழினுண்மையை யுணரும்பொருட்டு, அச்செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்று நூலினை நோக்கி, அந்நூலிற் கிடந்த விலக்கணம் பிற்காலத்தாருணரும்படி நூலைத் தொகுத்துச் செய்தான். அங்ஙனம் செய்த குற்றமற்ற நூலினை, மாற்றூரது நிலத்தைத் தனக்கு உரிமையாக்கும் போர்வலியுடைய பாண்டியன் மாகீர்த்தியவைக் களத்தின், அறமேகூறும் நான்மறையும் முற்றப்பயின்ற அதங்கோடென்னு மூரினுசிரியனுக்குக் குற்றமறத் தெரிவித்து, இயல் இசை நாடகம் எனும் முத்தமிழுள் இயற்றமிழை வேறுபிரித்து, உலகிற் கறிவித்தான். கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் ஐந்திர வியாகரண நிறைய உணர்ந்து பல புகழையுமிவ்வுலகத்தில் நிலைநிறுத்தின தொல்காப்பிய னென்பான்' என்றவாறு.

2. குறுந்தொகை 52.

ஆங்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
கூரசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
நரந்த நாறுங் குவையிருங் கூந்தல்
விரிந்திலங்கு வெண்பன் மடந்தை
பரந்தென னல்லனே விறையிறை யானே.

இதன்பொருள்:—' தலைவியைப் பிறனொருவனுக்கு மணமுடித்துக் கொடுத்துவிடுவாரோவெனக் கருதி, நீயும் கலங்கினுய், தலைவியும் அவ்வாறே நடுங்கினுள். தமர் அவள் மணவினையைப்பற்றிப் பேசும்போதெல்லாம் அவள் உனக்கு உடன்பட்டதை நான் ஒருவாறு வெளிப்படுத்தி வந்ததினுல் அவள் தமர் அவளை உனக்கே கொடுக்க உடன்பட்டார்' என்றவாறு.

II. முரஞ்சியூர் முடிநாகராயர். புறம். 2.

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயுந்

தீமுரணிய நீரும், என்றூங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றூர்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடையோய்
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பி னன் னுட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
வலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
பாஅல்புளிப்பினும் பகலிருளினு
நாஅல்வேத நெறிதிரியினுந்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தி யந்தண ரருங்கட னிறுக்கு
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே.

இதன் பொருள்:—'நிலனும், ஆகாயமும், காற்றும், தீயும், நீருமென ஐவகைப்பட்ட பெரிய பூதத்தினது தன்மைபோலப் பகைவர் பிழைசெய்தால் அப்பிழையைப் பொறுத்தலும், அவரை அழித்தற்கு உசாவும் உசாவினது அகலமும், அவரை அழித்தற்கேற்ற மன வலியும் சதுரங்கவலியும், அவ்வாற்றூல் அவரை அழித்தலும், அவர் வழிபட்டால் அவர்க்குச் செய்யும் அருளு முடையோய்! நினது கடற்கட்டோன்றிய ஞாயிறு பின்னும் நினது வெளியதலை பொருந்திய திரையையுடைய மேல் கடற்கண்ணே மூழ்கும் புதுவருவாய் இடையறுதல் ஊர்களையுடைய நல்ல நாட்டிற்கு வேந்தே! வானவரம்ப! பெரும! பாண்டவரைவருடனே துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்தின் கட்படுந் துணையும் பெருஞ்சோறுகிய மிக்க உணவை இருபடைக்கும் வரையாது வழங்கினையே! பால் தன் இனிமை யொழிந்து புளிப்பினும், ஞாயிறு தன் விளக்கமொழிந்து இருளினும், நான்கு வேதத்தினது ஒழுக்கம் வேறுபடி

னும் வேறுபாடில்லாத சூழ்ச்சியையுடைய மந்திரிச் சுற்றத்தோடு ஒழியாது நெடுங்காலம் விளங்கிப் பொற்சிகரங்களையுடைய இமயமலையும் பொதியின் மலையும் போன்று துளக்கமின்றி நிற்பாயாக' என்றவாறு.

இம்மூரஞ்சியூர் முடிநாகராயர் பாட்டே தற்காலம் நமக்குக் கிடைத்துள்ளவற்றில் மிகப் பழமையானதெனக் கருதப்படுகின்றது. இவர் தலைச் சங்கத்துப் புலவராக இறையனாரகப்பொருள் உரைகூறும். இவராற் பாடப்பட்டோன் உதியன் சேரலாதன். இவன் பாரதப்போரில் இரு கக்ஷியாருக்கும் பெருஞ்சோறு அளித்ததாகப் புகழப்படுகின்றான். அங்ஙனமாயின் பாரதப்போர் நடந்த காலத்திலேயே இப்புலவரும் இவ்வரசனும் இருந்திருக்கவேண்டும். பாரதப்போர் நடந்தது கி. மு. 1194 வருடமென வேலாந்தை கோபாலய்யரவர்கள் பலகாரணங்களைக்கொண்டு நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்.[1] இஃதுண்மையாயின் இப்புலவர் காலமும் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் காலமும் அதுவேயாதல்வேண்டும். சரித்திர ஆராய்ச்சியிற் புக்க எவரும் இதனை வற்புறுத்திக்கூற வழியில்லாதே நிற்கின்றனராதலின் இதைத் திட்டமாகக்கூற வழியில்லையாகின்றது.

III. நெட்டிமையார். புறம். 9, 12, 15.

புறம். 9. ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறுஅ நீரு
மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
வறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
மெங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கீத்த
மூந்நீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலிலும் பலவே.

இதன் பொருள்:—'ஆவும், ஆனினதியல்பை யுடைய அந்தணரும், மகளிரும், நோயுடை யீரும், பிள்ளைகளைப்

[1] The Chronology of Ancient India, pp. 51–104.

பெறுதீரும், எம்முடைய அம்பை விரையச் செலுத்தக் கடவேம், நீர் நுமக்கரணுகிய இடத்தை அடையு மென்று அறநெறியைச் சொல்லும் மேற்கோளினையும் அதற்கேற்ற மறத்தினையுமுடைய எம்முடைய வேந்த ஞகிய குடுமி வாழ்வானுக; நெடியோனுலுளதாக்கப் பட்ட நல்ல நீரையுடைய பஃறுளியென்னு மாற்றின் மணலிலும் பலகாலம்' என்றவாறு.

ஈண்டு நெடியோன் என்றது ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன். இப்புலவரும் இவரால் பாடப்பட்ட பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் பஃறுளியாறு கடல் கொள்ளப்பட்டதற்கு முன்னரே யிருந்தவராவார்.

IV. நெடும்பல்லியத்தனார். புறம். 64.

நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
கலிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
விசும்பா டெருவை பசுந்தடி தடுப்பப்
பகைப்புல மரீஇய தகைப்பெருஞ் சிறப்பிற்
குடுமிக் கோமாற் கண்டு
நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே.

இதன் பொருள்:—'நல்ல யாழையும் சிறு பறையை யும் ஒருதலை மரக்கினையுடனே கட்டிப் போவேமல் லேமோ? சொல்லுவாயாக, சில வளையையுடைய விறலி! யானையணி பொருத இடமகன்ற பாசறைக்கண் ஆகா யத்தின் கண்ணே பறக்கும் எருவையைப் பசிய ஊன் றடி தகைப்ப மாற்றூர் தேயத்தின்கண்ணே மருவிய அழகிய பெரிய செல்வத்தினையுடைய முதுகுடுமியாகிய கோமானைக்கண்டு மிக்க நீரான் அடப்பட்ட புற்கை யைக் கைவிட்டு வருதற்கு' என்றவாறு.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெடும் பல்லியத்தனார் பாடியது.

V. காரிகிழார். புறம். 6.

வடா அது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனுஅ துருகெழு குமரியின் றெற்குங்
குணஅது கரைபொரு தொடுகடற் குணக்குங்

குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்குங்
கீழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டி
னீர்நிலை நிவப்பின் கீழே மேல
தானிலை யுலகத் தானு மாஞ
துருவும் புகழு மாகி விரிசீர்த்
தெரிகோன் ஞமன் போல வொருதிறம்
பற்ற லிலியரோ நிற்றிறஞ் சிறக்க
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி யடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதி னேவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்
பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
மூக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
யிறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்து கையெதிரே
வாடுக விறைவநின் கண்ணி யொன்னூர்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே
செலிய ரத்தைநின் வெகுளி வாவிழை
மங்கையர் துளித்த வாண்முகத் தெதிரே
ஆங்க, வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுட
ரொண்கதிர் ஞாயிறு போலவு
மன்னுக பெருமநீ நிலமிசை யானே.

இதன் பொருள்:—'நெடிய இமயமலையின் வடக்கும், கன்னியாற்றின் தெற்கும், சாகரத்தின் கிழக்கும், கடலின் மேற்கும், நிலத்தின்கீழும், மேலோகத்தின்கண்ணும் அமையாது உன் புகழ்பெருக; பரந்த அளவையுடைய பொருள்களை ஆராயும் துலாக்கோலின்கட் சமன்வாய்போல ஒரு பக்கம் கோடாதொழிக; நினது படை குடிமுதலாகிய கூறுபாடுகள் சிறக்க, பகைவர் தேயத்தின்கண்ணே நினது படை மிக்குச்சென்று அரிய மதிலரண் பலவற்றையுங்கொண்டு அவ்வரணின்கட் கவர்ந்த நல்ல அணிகலங்களைப் பரிசிலர்க்கு வழங்கி நினது கொற்றக்குடை முனிவராற் பரவப்படும் மூன்று

திருநயனத்தையுடைய செல்வரது கோயிலே வலம் வருவ தற்குத் தாழ்க; பெரும! நினதுமுடி, மிக்க நான்கு வேதத்தினையுடைய அந்தணர் நின்னை நீடுவாழ்கவென் றெடுத்த கையின்முன்னே வணங்குக; இறைவ! நினது கண்ணி, நின் பகைவரது நாட்டைச் சுடும் பல மண நாறும் புகையுறைத்தலான் வாடுக; நினது சினம், வெளிய முத்தாரத்தையுடைய நின்தேவியருடைய துளித்த ஒளியையுடைய முகத்தின் முன்னர்த் தணிக; வென்று வென்றி முழுதையும் வியவாது நின்மனத்தே உட்கொண்ட தணியாத வண்மையையுடைய தகுதி மாட்சிமைப்பட்ட குடிமி! குளிர்ந்த சுடரையுடைய திங் களையொப்பவும் சுடுகின்ற ஒளிபொருந்திய ஒள்ளிய கதி ரையுடைய ஞாயிற்றையொப்பவும் நிலைபெறுவாயாக, நீ உலகத்தின்மேல்' என்றவாறு.

காரிகிழார் பல்பாகசாலே முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடினது. இதன்கண் கன்னியாறு குறிக்கப்பட்டுளது.

நெட்டிமையார் பாடிய பிறபாடல்கள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன. இவரெல்லாம் கி. மு. 300-க்கு நெடுநாள் முன்னிருந்தவர் என்பது போதரும். எனினும் இன்ன நூற்றாண்டு என அறிதற்கிடமில்லை. இவர் செய்யுட் களில் காணப்படும் பொருள், சொற்சுவைகள் மிகவும் பாராட்டத்தக்கன.

தொல்காப்பியம்

தொல்காப்பியம் எனும் இலக்கணநூல் அதனை இயற் றிய தொல்காப்பியரின் பெயராலே வழங்கியதென்பது போதரும். சிலர் தொல்காப்பியம் என்பது பழமை யான காப்பியம் எனப்பொருள்பட்டு மிகப் பழமை யான இந்நூலுக்குப் பெயராயிற்றெனக் கூறுவர். அது பொருந்தாது, தொல்காப்பியம் எழுதப்பட்ட காலத்தே செய்யப்பட்ட பாயிரத்துள்ளும் இந்நூல் தொல்காப்பியம் எனவழைக்கப்படுவதே அக்கொள் கையை மறுக்கும். தொல்காப்பியர் எனும் பெயருடைய ரான் ஆக்கப்பட்டமை காரணமாகவே தொல்காப்பிய மென இந்நூல் வழங்கலாயிற்று.

பண்டை நாட்டமிழ் ஆசிரியர் வரைந்த நூல்களின் முகத்தில் தம்மைப்பற்றிய சரிதங்களை எழுதிவைத்தா ரில்லர். அவர் உலகுக்குப் பயன்படுமாறு நூல்களியற் றினரேயன்றித் தமது புகழை நிலைநாட்டுமாறு நூல்கள் செய்தவரல்லர். எனவே அவரின் சரிதங்களை அறிதற் கான ஏதுக்களில்லையாயின.

தொல்காப்பியர், அகத்தியரிடம் கல்விகற்ற பன்னிரு வருள் ஒருவரெனவும், இவர் ஆரிய குலத்தவரெனவும், அகத்தியம் கற்று அகத்தியத்தின் வழியே தமது இலக் கணத்தை எழுதினரென்றும், ஏதோ சில காரணங்களால் அகத்தியருக்கும் தொல்காப்பியருக்கும் வாத முண் டாகவே, தொல்காப்பியராகிய சீடன் தமது குருவாகிய அகத்தியனுரைச் சபித்ததன்மூலமாய் அகத்தியரால் எழுதப்பட்டிருந்த அகத்தியம் எனும் இலக்கணம் உலக வழக்கற்றுப் போயிற்றென்றும் பற்பலகதைகளைக் கூறு வார். இவற்றின் உண்மையிருந்தவாறு விளங்கவில்லை.

தொல்காப்பியர் இற்றைக்கு 2300 வருடங்களுக்கு முற்பட்டவர் என்பதை ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். இவர் அக்காலத்திருந்த காப்பியக் குடியிற் பிறந்தவர். காப்பியக்குடி என்பது மரபின் பெயரோ ஊரின் பெயரோ என்பது விளங்கவில்லை. காப்பியக்குடியென ஒரூர் தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கிறதாகச் சொல்கின் றனர். காப்பியக்குடி என்பது அம்மரபினர் வதிந்த காரணமாக ஊருக்கு வந்த பெயரோ அன்றேல் அவ் வூரில் வதிந்தமையால் அம்மரபினர்க்கு வந்த பெயரோ வென்பதும் விளங்கிற்றிலது. தொல்காப்பியர் தம் நூலில் அங்கும் இங்கும் கூறியிருப்பனவற்றை ஆதார மாகக் கொண்டு இவர் ஓர் சைவ சித்தாந்தி எனவும் கூறுவார்.

தொல்காப்பியமே இப்பொழுது நமக்குக் கிடைத் துள்ளவற்றில் மிகவும் பழமையான தமிழ் நூல். இஃ தோர் இலக்கணமே எனினும் இதனினின்றும் பண்டைத் தமிழ் மக்களின் அறிவு, ஒழுக்கம், நாகரீகம் முதலியவற் றைத் தெள்ளிதினுணர்தற்கிடமுண்டு.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், என மூன்று அதிகாரங்களை யுடையது. ஒவ்வோர் அதிகார

மும் ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் எழுத்தும் சொல்லும் பாஷையின் தன்மையை விளக்குவன. அவை பிறபாஷை யிலக்கணங்களே போலத் தமிழ் மொழிக்கும் அமைந்தனவாம். இவை நீங்கிய பொருளதிகாரமோ பாஷையின் தன்மையை மாத்திரமல்ல, பண்டைத்தமிழ் மக்களின் வழக்க பழக்க சரித இலக்கணத்தை விரிப்பதாம். பொருளதிகாரத்தில் விரிக்கப்படும் இயல்கள் முறையே அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல், என ஒன்பதாம். இவற்றுள் செய்யுளியல் என்பது யாப்பு இலக்கணமாகும். உவமவியல் என்பது அணி யிலக்கணமாம், சகல அணிகளையும் ஒருவாறு உவமை யுள் அடக்கி உவமவணியெனக்கொண்டே தொல்காப்பி யர் இலக்கணஞ் செய்தாராகலின். மற்று மரபியல் முந்திய எட்டு இயல்களிலும் கூறுமே விடுபட்டனவற்றை விரிப்பது. இவை நீங்கிய ஏனைய ஆறு இயல்களும் பொருளிலக்கணமாம். பிற்காலத்தவர் பஞ்சலக்ஷண மெனக்கொண்ட எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆய ஐந்திலக்கணங்களும் இங்ஙனமாகத் தொல் காப்பிய மூன்று அதிகாரங்களுள் அமைக்கப்பட்டன வெளியாம்.

இவ்வாறாய ஐவகைப் பிரிவுகளினுட் சிறந்தது பொருளதிகாரமேயாகும். ஏனெனில் ஏனைய எழுத்து, சொல், யாப்பு, அணி முதலியவற்றை யாராய்தல் பொருளின் தன்மையை யுய்த்துணரற்பொருட்டே யாதலின். பண்டைத் தமிழ் மக்களின் வரலாறுகளே யறிய விரும்புவோர்க்கு இப்பொருளதிகார வாராய்ச்சி இன்றியமையாததாகும்.

பொருளதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ள விவரங்களாவன:

மக்கட்பிரிவு. இக்காலத்தேபோல் அக்காலத்தில் ஜாதி பேதம் என்பது அத்துணை உயர்வு தாழ்வுகளைக் குறித்ததெனக் கருதற்கிடமின்று. நாற்சாதி இந்நாட்டில் நாட்டிய ஆரியர் தென்னாட்டிற் குடிபுகுதா முன்னர் வருணமென்

னும்பெயர்தானும் தமிழ்நாட்டில்யாங்ஙனும்காணப்பட்டதன் றென்பதே துணியக்கிடந்தது. அவரவர் வதிந்த இடம் பற்றியும் மேற்கொண்ட தொழில்பற்றியும் மக்கள் வெவ்வேறு வகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இக்காலத்தேபோல் அந்நாளில் எண்ணிறந்த ஜாதிபேதங்கள் இருந்தில. அக்காலத்தவருள்ளும் உயர்ந்தோர் தாழ்ந்தோரென்னும் பேதமிருந்ததுண்மையே யெனினும் அவ்வுயர்வு தாழ்வு தற்காலத்தேபோல் அத்துணைக் கடுமையாயிருந்ததுமன்று. குற்றேவல் மாக்களும் அடிமைத்தொழில் புரிவோரும் தாழ்ந்தோரெனக் கருதப்பட்டதுண்மையே யெனினும் அதற்குக் காரணம் அவர் பிறர் ஏவியன செய்தொழுகினமையே என்பதற்கையமின்று. அன்றியும், ஆரியரெனத் தற்காலம் மதிக்கப்படும் பிராமணர் பிராமணரல்லாத பிறர்க்குச் சூட்டியுள்ள சூத்திரப்பட்டமும் இடைநாட்போந்ததேயாகும். பல பிரிவினர் தம்முள் சம்பந்தம் செய்தும் பெண்கொண்டும் கொடுத்தும் கலந்திருந்தனர் என்பதும் வெளிப்படையாய் விளங்குகின்றது.

அக்காலம் உயர்ந்தோர் எனக் கருதப்பட்டவர் நால்வர். அவராவார் அந்தணர், அரசர், வாணிகர், வேளாளர்; இவருள்:—

1. அந்தணர். முந்நூலும் குண்டிகையும் முக்கோலும் யாமை மணையும் குடை செருப்பு முதலியனவும் உடையவர். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், கோடல் முதலிய அறுதொழிலே யுடையராயிருந்தனர். இவற்றுள் ஓதுவித்தலும், வேட்பித்தலும் அந்தணர்க்கேயுரிய தொழில்களாம். மக்களின்றி அரசர் இறந்தக்கால் ஓரோவழி அந்தணரே அரசு வகித்தலும் தாயத்தாரில்வழி பிறர் சொத்துக்களே அந்தணர் கைக்கோடலும் சிறுபான்மை வழக்கமிருந்தது. இல்லறம் நடத்தும் ஒருவன் வீழ்ந்த ஒழுக்கத்தினை வழி அவனை இடித்துரைத்து நல்வழிப்படுத்தலும் அந்தணர் கடமையாகக் கருதப்பட்டது. அந்தணர் நான்கு மனைவியர்வரை விவாகம்செய்துகொள்ளலாம் எனும் நியதியிருந்தது. அந்தணர் தமது மரபினுள்ளேயே யன்றி மற்ற மூன்று வருணங்களினும் பெண்கொள்ளும் வழக்கமிருந்தது. எனி

னும் ஒத்த குடிப்பிறப்பினையுடைய மனையாளையே தாம் செய்யும் வேள்விக்கண் உரிமைவகையான் உயர்த்தல் செய்யும் வழக்கமிருந்தது. ஒத்த குடிப்பிறந்த மனையாளிடம் பிறந்த மக்களே மேற்கூறிய அறுதொழிலுக்கும் உரியராயிருந்தனர். எக்குலத்தினும் மனைவி தன் கணவனினும் வயதில் மிக்காளாயிருத்தல் கழிவெனக் கடியப்பட்டது. அந்தணர் ஓதலும் ஓதுவிப்பதும் ஈதலும் ஏற்றலும் ஆகிய ஆறு தொழிலையும் தமக்குரிய தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர் தம் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் சம்பாதித்தார். பார்ப்பார்க்குப் பார்ப்பனக் கன்னியிடத்து விவாகத்தின் முன் பிறந்தவனும், பிறர்க்குரிய பார்ப்பனத்தியிடத்துப் பிறந்தவனும், விதவையானவளிடத்துப் பிறந்தவனும், இவ்வாறே பார்ப்பானுக்கு ஏனை மூன்று வருணத்துப் பெண்பாற் கண்ணும் பிறந்தவரும் எனப் பற்பல பிரிவினரிருந்தனர். இவரெல்லாம் முந்நூலும் குண்டிகையுமுடைய அந்தணரே யெனக் கருதப்பட்டபோதிலும் இவர் அந்தணர்க்குரிய அறுதொழிற்கு மூரியரல்லராய் ஒன்றும் பலவும் குறைந்த தொழிலுடையராயிருந்தனர். இங்ஙனமே ஏனை மூன்று வருணத்தவருக்கும் கொள்க. இவ்வாறே உயர்ந்த மரபுப் பெண்களிடத்தில் தாழ்ந்த மரபினருக்குப் பிறந்த பல்வேறு பிரிவினர் பல்வேறு நிலைமையுடையராயிருந்தனர். இவை காரணமாகவே நம் தமிழ் நாட்டில் ஜாதிகள் பல்கிவிட்டனவேயோவென ஐயுறுதற்கிடமுண்டு.

2. அரசர். ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ் செய்தல் ஆய ஐவகைத் தொழிலுக்கு மூரியர் அரசர். களவு செய்தோர் கையில் பொருள் கொள்ளுதல், ஆறலைன்று கொள்ளுதல், சுங்கங்கொள்ளுதல், அந்தணர்க்குத் தீர்வையின்றி நிலங்கொடுக்குங்கால் இத்துணைப் பொருள் நும்மிடத்து நான் கொள்வலெனக் கூறிக் கொண்டு அது கொள்ளுதல், பகைவர் நாடுகோடல் முதலியனவும் அவர் தர்மமாம். கொடிப்படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், தார், முடி முதலியன அரசர்க்குரிய சின்னங்களாகும். அரசர் தம்மொத்த மரபினன்றிப் பிறமரபுகளில் கொண்ட பெண்கள்பால் பிறந்தோர்க்கும் ஒழுக்கமீறிப் பிறந்தவர்களுக்கும் இவற்றுள் ஒன்றும் பலவும் குறைய உள்ளனபோலும்.

3. வாணிகர். இவர் ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் முதலிய அறுதொழிலுடையார். கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது பல பண்டம் பகர்ந்து பொருள் சம்பாதித்தல் இவர் தர்மமாகும். வாணிக வாழ்க்கையே இவர்க்குப் பெரும்பான்மை யுடையதாயினும் எண்வகை யுணவாகிய பயறு, உழுந்து, கடுகு, கடலை, கொள், எள், அவரை, துவரை முதலியன வித்தியும் விளைத்தும் பொருள்செய்தலும் இவர்க்குரித்தென்பர். சூடும் பூவும், அணியும் தாரும் இவர்க்குரியன உள. ஒழுக்கங் குன்றியமையால் பிறந்தோர்க்குத் தொழில்கள் குறைந்தனவே போலும்.

4. வேளாளர். இவர் உழுதுண்பார், உழுவித்துண்பார் என இருபிரிவினராயிருந்தனர். ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் ஆகிய அறுதொழிலுடையார். இவருள் உழுதுண்பார் உழுவித்துண்பாரினும் தாழ்ந்தோரெனக் கருதப்பட்டனர்போலும். உழுதுண்பார் வேள்வி செய்தற்குரியரல்லராய்ப் பிறர்க்கு வழிபாடு செய்தலும் அவர் தர்மமாயிருந்தது. ஓதல் வேளாளர்க் குரித்தெனக் குறிக்கப்பட்டதேனும் உழுதுண்ணும் வேளாளர் ஓதற்குரியன தருக்கமும் கணிதமுமேயாம். மற்று உழுவித்துண்ணும் வேளாளரோ முன்னிய அந்தணர் முதலிய மூவரையும்போல் வடமொழி, தென்மொழியாலாகிய சகல நூல்களையும் கற்றற்குரியராயிருந்தனர். வேளாளரிற் சிலர் வணிகரிற் சிலரேபோல நிரைகாவலுமுடையராயிருந்தனர். வாணிக வாழ்க்கையே பொருள் வருவாய்க் கேதுவாய்க் கொண்டிருந்த வேளாளரும் சிற்சிலராதல் வேண்டும். இவருள் பெரும்பாலார் உழுதுண்ணும் வேளாளர். உழுவித்துண்ணும் வேளாளர் பிறரை ஏவி வேலைகொள்ளும் தன்மையர். இவருட் பலர் அரசரால் தண்டத்தலைவராக நியமனம்பெற்று அரசரால் படைக்கலமும், கண்ணியும் கொடுக்கப்பெற்றுப் பகைவர்மேலும், நாடு காத்தல், சந்து செய்வித்தல் முதலிய தொழில்கள்மேலும் சேனைத்தலைவராய்ச் சென்று பொருள் சம்பாதித்தனர். அரசராற் கொடுக்கப்படும் ஏஞ்சி, காவிதி முதலிய சிறப்

புப்பட்டங்கள் பெறுதற்குரியாரும் இவரே. அன்றியும் உழுவித்துண்ணும் வேளாளர் மண்டிலமக்களும் தண்டத் தலைவருமாய் வேளெனவும் அரசெனவும் உரிமையெய் தியும் குறுமுடி குடிப்பிறந்தோர் முதலியோராய் முடி யுடை வேந்தர்க்குப் பெண்கொடுத்துச் சம்பந்தம் செய் தும் வாழ்ந்து வந்தனர்.

மேற்கூறிய நான்கு வருணத்தவரே தவிர ஆயர் முதலிய குலத்தவர்களுடைய இயல்புகளும் சிற்சில அறி யப்படும். ஆயர் முற்கூறிய உயர்மக்கள் நால்வருடன் ஒத்த பெருமை வகித்திலரேனும் தாழ்ந்தவரெனக் கரு தப்பட்டுவந்த பிறரினும் உயர் நிலையிலிருந்தவரேயா வார். இவர் நாடு சார்ந்த விடங்களில் வதிந்து நிரை மேய்த்தும், பால், தயிர் விற்றும் ஜீவித்தவராவார். பாணர் விறலியோர் முதலியோரும் இந்நிலைமை யுடைய ரேபோலும்.

அன்றியும் திணை விளைத்தும், தேன் அழித்தும், கிழங்கு அகழ்ந்தும் மலைச்சார்புகளில் வதிந்த கானவர், வேட்டுவர், குறவர் முதலியவரும்; மீன்படுத்தும், உப்பு விளைத்தும், விற்றும் கடற்கரைகளில் வசித்த பரதவர் முதலியவரும்; பயிர் நட்டல், களைகட்டல் முதலிய தொழில் செய்து மருதநிலங்களில் வசித்த களமர், உழ வர் முதலியவரும்; வழிப்பறிசெய்தும், சூறையாடியும், பாலை நிலங்களில் வசித்துவந்த மறவர், எயினர் முதலிய வரும் தமிழ்நாட்டிலிருந்தவரெனக் கூறப்படுகின்றனர். கூத்தர், பரத்தையர் முதலியவரும் ஏராளமானவர் இருந்தனர்போலும்.

பல்வேறு பிரிவினராகக் கூறப்படும் இவரையெல்லாம் குழூஉப்படுத்தி இன்னின்னர் இன்னின்ன குழுவினைச் சார்ந்தவரெனத் துணிந்து கூறுதற்கிடமில்லையெனினும் இவருள் அந்தணரும், அரசர் வைசியர் முதலியவருள் சிறுபான்மையாரும் ஆரியக்குழுவினரென்றும், அரசரும் வைசியருட் பெரும்பாலாரும் இருவகை வேளாளரும் ஆயர் முதலியவரும் திராவிடராகிய தமிழ் மக்கள் என வும்; எயினர், வேடர் முதலிய பிறர் இந்நாட்டில் பூர் வத்திலிருந்தே வசித்து வந்த குடிகள் எனவும் ஒருவாறு ஊகிக்கலாம். இவை நிற்க;

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற் கூறப்பட்டுள்ள பொருள் யாவென ஆராய்வாம். பொருள் அகம், புறம் எனும் இருபிரிவினது. அவற்றுள்:—

அகப்பொருள். ஒத்த அன்பினால் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உண்டான பேரின்பம் அவ்விருவரும் ஒருவர்க் கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் இது அகமெனப் பட்டது. இதனுட் கூறப்படும் இன்பப் பொருள் யாண்டும் ஒரு பெற்றியதாய் உலகிடை நிகழ்வதன்று. உலகியல் வழக்கினுள்ளதனையே யமைத்துக் கூறுதல் இலக்கணத்தின் தன்மையெனினும் தொல்காப்பியர் ஓரோ பெற்றி உலகியலுள் ஆங்காங்கே காணப்பட்ட வழக்கினைத் தழுவி ஆசிரியர் பலர் செய்துள்ள செய்யுட்களில் காணப்படும் வழக்கினையே இலக்கியமாகக்கொண்டு அதற்கியைய இவ்வகப் பொருளிலக்கணத்தை யமைத்தனர்.

எனவே அகத்தினை யியல் என்பது எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல்போலாது யாதானுமொரேர்வழி ஒரு சாரார்மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லோர்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யப்பட்டுள்ள செய்யுட்களின் இலக்கியங் கண்டதற்கு இயற்றப்பட்டதோர் இலக்கணமாகும். இவற்றுட் காட்டப்பட்ட வழக்குகள் யாவும் கடைச்சங்கத்தார் காலத்துக்கு வெகு நாள் முற்பட்டனவே யாகும். கடைச்சங்கத்தார் காலத்திற்றானும் வழக்காறற்றுப்போன வழக்கங்களும் சில. இன்றளவிற் காணப்படும் வழக்குகளோ மிகச்சிலவே.

ஆதலின் தற்கால வழக்குப்பற்றி இலக்கணம் கற்போர்க்கு இப்பொருளதிகாரம் பெரிதும் பயன்படாதெனினும் இற்றைக்கு இரண்டாயிரம் யாண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மக்கள் வழக்க ஒழுக்கங்களையறிய அவாவுவார்க்கும் சங்கதூல்களை யாராய்வாருக்கும் இப் பொருளதிகார ஆராய்ச்சி இன்றியமையாததாகும்.

அகத்தினை இலக்கணம் எழுதப் புகுந்தார் நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என

ஐவேறு வகையினவாகப் பிரித்து, அவ்வவற்றுக்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள் இன்னின்னவென வகுத்து, நிலமில்லாக் கைக்கிளை பெருந்திணையாகிய இருதிணைகளையுமொட்டி எழுதிணையாக்கி, இலக்கணம் விரித்தனர். அவற்றின் விவரம் இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாததன்றென விலக்கப்பட்டது.

அகத்திணை யிலக்கணத்திற் கண்ட பிண்டப்பொருள் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடை நிகழ்வதாய காதல், தூது, கூட்டம், பிரிவு, இல்லறம் முதலியவற்றைக் கூறுவதேயாம்.

பெற்றோர் கொடுப்பதற்குமுன் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் கண்ணும் மனமும் இயைவதையும் மன்றல் அல்லது மணம் எனக்கொண்டிருந்தனர். மணம் எட்டுவகையானதெனப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன:—

1. பிரமம் அல்லது அறநிலை. ஒத்த கோத்திரத்தனும் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங்காத்தானுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளை இரண்டாம் பூப்பு எய்தாமுன் அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது.
2. பிரசாபத்தியம் அல்லது ஒப்பு. மைத்துன கோத்திரத்தான் மகள் வேண்டிச் செல்லுழி, வேண்டிச் சென்றவர் கொடுத்த பரிசத்துக்கு இரட்டித் தம்மகட்கு ஈந்து கொடுப்பது.
3. ஆரிடம் அல்லது பொருள்கோள். தக்கான் ஒருவனுக்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறுத்திப் பொன் அணிந்து நீரும் இவைபோல் கலந்து வாழ்வீரென நீரிற் கொடுப்பது.
4. தெய்வம். பெருவேள்வி வேட்பிக்கின்றருள் ஒருவனுக்கு அவ்வேள்வித்தீமுன் தக்கணையாகக் கொடுப்பது.
5. காந்தர்வம் அல்லது யாழோர் கூட்டம். இருவர் ஒத்தார் தாமே அடுப்பாரும் கொடுப்பாருமின்றிக் கூடுவது.

6. அசுரம் அல்லது அநம்போருள் வினைநிலை. கொல்லேறு கோடல், திரிபன்றியெய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து பெண்கொள்ளுதல்.

7. இராக்கதம். அவள் தன்னினும் தமரினும் பெரூது வலிந்து கொள்வது.

8. பைசாசம் அல்லது பேய்நிலை. மூத்தாண்மாட்டும், கள்ளுண்டாண்மாட்டும், துயின்முண்மாட்டும் சார்வது.

இவ்வெட்டும் மன்றலெனப்பட்டன.

இவற்றுள் காந்தர்வம் அல்லது யாழோர் கூட்டம் ஏன்றது அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் முதலிய நான்கு வருணத்தாருக்கும் உரியதாயிருந்தது.

வில்லேற்றுதல், திரிபன்றி யெய்தல் மூலமாய்ப் பெண்கோடல் பெரும்பாலும் அரச மரபினர்க்குரித்தாயிருந்தது.

கொல்லேறு தழுவிப் பெண்கோடல் ஆயர்க்குரிய வழக்கமாயிருந்தது.

இராக்கதம் பைசாசம் முதலியன மிகத்தாழ்ந்தவருக்குரியன.

ஸ்திரீ புருஷர் மனமும் கண்ணும் இயைவதே மணம் எனக்கொண்ட நம் தமிழ் மூதாதையர் கோட்பாடு மிகச் சிறந்ததேயாகும். பூப்பெய்தியவளையே மணஞ்செய்து கொடுத்தவழக்கமே நம்மூன்னோர் கையாடியதென்பது இற்றைநாள் பாலிய விவாகம் நடத்தும் பெரியோர் கவனிக்கத்தக்கது. எனினும் பைசாசம் இராக்கதம் முதலியனவும் மணமெனக் கருதப்பட்டு இங்குமங்கும் சிற்சில கீழ்மக்களால் அனுசரிக்கப்பட்டு வந்தனபோலும். மனம் இயைந்ததைக் கருதாராய்ப் பொருள் வருவாயையே பெருநோக்காகக்கொண்டு மணவினை முடிக்கும் தற்கால நவீனப்போலி நாகரீகர் சிலரினும் மனமியைந்ததனையே மணமெனக்கொண்டு ஸ்திரீ புருஷரை இல்லறத்துக்குட்படுத்திய பண்டைத் தமிழ் மக்கள் நாகரீகம் பெரிதெனவே உலகம் பாராட்டும்.

மேற்காட்டிய மணங்கள் எட்டினுள் தமிழ் மக்களின் அதிபூர்வ வழக்கின யாவையென உய்த்துணர வழி

யில்லை. இவ்வெட்டு மணங்களும் 'அந்தணர் அருமறை மன்றல்' எனவும் 'மறையோர் தேவத்து மன்றல்' எனவும் இலக்கண ஆசிரியரால் கூறப்படுகின்றமையின இவையெல்லாம் ஆரியர் நாட்டில் பெருவழக்காயிருந்தனவென்றும், இப்டாகுபாடுகள் ஆரியராலேயே செய்யப்பட்டனவென்றும் கொள்ளத்தக்கன. எனினும் நாற்பத்தெட்டியாண்டு பிரமச்சரியம் காத்தாற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை மணம் சூட்டும் பிரமம் எனும் மணமும், வேள்வியாசிரியனுக்கு வேள்வித் தீமுன் கொடுக்கும் தெய்வம் எனும் மணமும் ஆரிய நாட்டினின்றே தமிழ் நாட்டில் வழக்காறுற்றனவெனவும், மைத்துன கோத்திரத்தான் மகளை வேண்டிச்சென்று பெறும் ஒப்பு எனும் மணமும், கொல்லேறுகொண்டு பெண் கொள்ளும் ஆயர்மண ஒழுக்கமும் தமிழ் நாட்டினுக்கே உரியனவெனவும், காந்தர்வம், அசுரம் ஆரிடமாயவை இருநாடுகளினும் உயர்ந்தோரான் அனுஷ்டிக்கப்பட்டு வந்தனவெனவும், இராக்கதம், பைசாசம் முதலியன இருநாடுகளினும் இழிந்தோர் சிலர் வழக்கிலிருந்தனவெனவும் ஒருவாறு அனுமானித்துக்கொள்ளுதல் தவறாகாது.

அகப்பொருள் களவியல் கற்பியல் என இரு பிரிவினதாய்க் கூறப்படும். காந்தர்வமென வழங்கிய யாழோர் கூட்டமே களவியலெனப்படும். தலைவன் ஒருவன் தனியாகவோ பாங்களோடோ சென்ற வழித் தன் தோழிமாருடன் நின்றொளிருத்தியை எதிர்ப்பட்டுக் காதல் வயத்தனாகித் தன் உரையானும் பிறவொழுக்கங்களானும் தன் காதலையவளுக்கு வெளிப்படுத்த அவளும் இவனைக் காதலித்தவளாகக் கண்டவழி அவளைத் தனியிடங்கொண்டேகிக் கூடிக்களித்தும், பிரிந்தும், தத்தம் இருப்பிடம் எகியும்; பின்னர் பற்பலநாள் இவ்வாறே எதிர்ப்பட்டுக் காட்டினிடத்தும், பொழிலினிடத்தும் பகற்குறிகள் நியமித்துக் கண்டுரையாடியும், பின்னர் தலைவியின் இருப்பிடத்துக் கருகிலேயே இரவுக்குறி நியமித்து, ஆண்டு இரவு தனிவழி சென்று அவளைக்கண்டு களித்தும்; சின்னாட்சென்றவளவில் இம்மர்மங்களை நன்குணர்ந்த தோழி முதலியோர் தலைவியின் தாயர்க்கு இங்கிகழ்ச்சிகளை

யுணர்த்தியவழித் தாயர் முதலியோர் தலைவிக்குக் காவல் நியமித்து அவள் பகற்குறி இரவுக் குறிகளுக் கேகாமல் தடுக்க, இதற்கிடையில் தோழி தலைவனைக் கண்டு அவன் முறைப்படி அவளை மணம்பேசி வந்து மணமுடித்துக்கொள்ளுமாறு வற்புறுத்த, அவனும் அவ் வாறே இணங்கித் தன் காதலியைத் தனக்குக் கொடுத் தற்குரியாரிடம் சென்று தன் குறையிரந்து, அவர் மக ளைப் பெண் வேண்ட, அவரும் உடன்பட்டு இருவருக் கும் மணமுடித்து வைப்பார். மணமுடிக்கும் வரையுள்ள பாகம் களவியலெனப்படும். மணமுடித்த பின்னுள்ள விவரம் கற்பியலெனப்படும். களவின்றியும் கற்பு நிகழ் வதும் களவில் கூடலின்றியே களவு நீடித்தலும் உண்டு. இவ்வொழுக்கம் சிறிதும் பெரிதும் வேற்றுமையுடன் இன்றளவும் மேனாட்டாருக்குள் பெருவழக்காயிருக் கின்றது.

கற்பியலாவது. ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தா ளுமாகிய ஒருத்தியைக் குரவர் முதலியோர் கொடுப்பக் கொண்டு இல்லறம் நடத்துதலாம். முற்கூறியாங்கு முத லில் களவினிற் சம்பந்தப்பட்டவரையே மணமுடிப்ப தென்பதன்று. களவின்றியும் கற்பின் வழியே மணமு டித்தலும் பெருவழக்காயிருந்தது. மேலும் பெண்ணைக் கொடுப்பாரின்றித் தலைவனும் தலைவியும் தாமே மன மொப்பியவழித் தாமாகவே வேள்வியாசிரியரிடம் சென்று தம்மிருவரையும் மணமுடித்துவைக்குமாறு வேண்டி மணமுடித்துக்கொண்டு இல்லறம் நடத்துதலு முண்டு. இது தற்கால ரிஜிஸ்தர் கலியாணத்தோடு ஒரு சார் ஒற்றுமையுடையதுபோலும்.

கொண்டானிற் சிறந்த தெய்வமின்றெனவும், அவனை இவ்வாறு வழிபடுகவெனவும் குரவன் கற்பித்தலானும், பிறவற்றைக் கணவன் கற்பித்தலானும் இவ்வொழுக்கம் கற்பியல எனப்பட்ட தென்பர். மணமுடிக்கும் காலத் துப் பெண்ணைக் கைப்பிடித்து அவள் கணவனுக்கு அளிக்கும் உரிமையுடையவர் பெண்ணின் தந்தை; தந் தையில்வழி தந்தையின் உடன்பிறந்தோர் அல்லது தாய் மாமன், ஆசான் முதலியவராவார். கொடுக்கும் காலத்

தும் வதுவரர் மனநிலையைத் திட்டமாயறிந்த பின்னரே கொடுப்பார். மணம்செய்யும்போது மணமகனை நோக்கி 'இவளைக் கொள்ள இயைதியோ நீ' எனவும் மணமகளை நோக்கி, 'இவனுக்குக் கொடுக்க இயைதியோ நீ' எனவும் கேட்டு அவர் ஒப்புக்கொண்ட வழியே மணமுடித்து வைப்பார். இவையெல்லாம் அக்கால மணமக்களுக்கிருந்த சுயாதீனத்தை நன்குவெளிப்படுத்துமன்றே.

தொல்காப்பியத்தின் முற்பட்ட காலத்தில் நான்கு வருணத்தாருக்கும் வேள்விச் சடங்குகள் ஒன்றாகவே யிருந்தனவென்றும் பிற்காலத்தில் அச்சடங்குகள் அந்தணர், அரசர், வாணிகரளவில் நின்றுவிட வேளாளர் வேறு வேள்விச் சடங்குகளை மேற்கொண்டனரெனவும் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் கூறுகின்றனர்.

ஏகபத்னிவிரதம் என்பது அக்காலப் பெருவழக்க மன்று. அந்தணர் நான்கு மனைவியரையும், அரசர் மூவர் மனைவியரையும் வாணிகர் இருவரையும் வேளாளரும் ஒன்றின்மேற்பட்ட மனைவியரையும் மணமுடித்துக் கொள்ளுதல் அக்காலவழக்கமாயிருந்தது.

மணமகன் மனையாளை உடன்கொண்டு தன் வீட்டுக்குச் செல்லுங்காலத்து அவள் தோழியர் முதலியவரும் சுற்றத்தாரும் அவளை அவன் உள்ளநாளுள்ளமட்டும் கைவிடாது பாதுகாக்கவேண்டுமெனவும், அவளை அன்புடன் ஆதரித்து வரவேண்டுமெனவும் பலவாறு கூறி வழிவிட்டனுப்புவதும், சென்ற மகளைக் கணவன் அன்புடன் பராமரித்து வருமாறு அவள் பெற்ற தாய் தெய்வம் தொழுதுவருவதும் அக்காலத்து வழக்கமாயிருந்தது.

ஒருவற்குப் பல மனைவியரிருந்தபோதிலும் அவரெலாம் ஒரு தாய் மக்களேபோல் ஒத்து வாழ்ந்து ஒருத்தி வயிற்றிற் பிறந்த புதல்வரை மற்றவரும் தத்தம் வயிற்றிலுதித்த புதல்வர்போற் பாராட்டிச் சீராட்டி அன்புடன் பாதுகாத்து இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திவந்தனர் எனக் காட்டுதற்கான ஆதாரங்கள் பல ஆங்காங்கே காணப்படுகின்றன.

பல மனைவியரை யுடையவனாயிருந்தும் தலைவன் அவ்வளவிலும் அமையாமே பின்னும் பல பரத்தையரை

நாடி அவருடன் கலந்துறவாடிக் காலங்கழித்த வழக்கமும் அக்காலத்திலிருந்ததுண்டு. அவ்வொழுக்கத்தைக் கண்டியாமைக்குக் காரணம் பல காணப்படினும் அது நம்மவரால் இழிந்த ஒழுக்கமெனவே கருதப்பட்டதக் கதாயிராநின்றது.

இல்லறம் நடத்தும் தலைவன் இல்லறம் இனிது நடைபெறுதற்கின்றியமையாததாகிய பொருள் தேடற்பொருட்டு இடையிடையே பிறவிடங்களுக் கேகுவதுமுண்டு. அந்தணர், ஓதல், தூது முதலியவற்றின் பொருட்டும், அரசர், பகைவர் நாடு படையெடுத்தல் முதலியவற்றின் பொருட்டும், வைசியர், வியாபாரத்தின் பொருட்டும், வேளாளர், படை செலுத்துதல் முதலிய அரசர் ஏவிய காரியங்களின் பொருட்டும் செல்லுவார். இங்ஙனம் செல்லுபவர் பெரும்பாலும் ஓராண்டளவினுள் திரும்புவார். ஓதல் காரணமாய்ச் சென்றவர் மூன்று வருடம் வரை தாமதித்தலுமுண்டு. பொருளீட்டத்தின் பொருட்டும் பிறகாரணங்களினாலும் வெளிச்செல்லும் ஆடவர், தம் மனைவியரை உடன்கொண்டு செல்லும் வழக்கம் இருந்ததில்லை. ஆடவர் தனித்தே எகுவர். ஆடவருள்ளும் அந்தணர் முதலிய மூவரும் கடல் மார்க்கமாய்ப் பிறதேசங்களுக் கேகலாகாதென்னும் விலக்கிருந்தது. கலத்திற் செல்லும் தன்மையுடையராயிருந்தவர் வேளாளர் ஒருவரே எனத் தோற்றுகிறது.

இல்லறத்திற்குரிய நான்கு வருணத்தார்க்கும் அடக்கம், ஒழுக்கம், நடுவுநிலைமை, பிறர் மனை நயவாமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை முதலிய நற்குணங்கள் வற்புறுத்தப்பட்டிருந்தன. ஈகையும் பொறுமையும் சிறந்த தர்மங்களாகக் கருதப்பட்டன. அன்றியும் விருந்தோம்பலே இல்லற தர்மங்களுள் சிரேஷ்டமானதெனக் கருதப்பட்டிருந்தமையால் இல்லறம் நடத்தும் மனைவியர் கற்புச் சிறந்து ஒருகுடம் நீராற் சோறுசமைத்து உண்ணுமாறு மிடிப்பட்ட காலத்தும் கடல் நீரை வற்ற உண்ணும் சுற்றத்தார் வரினும் அவ்விருந்தினரை முகந்திரிந்து நோக்காமே அன்புடன் ஏற்று உபசரித்து வந்தனர்.

மேலும் இளமையும் யாக்கையும் மற்றும் உலகின்பங் கள் பலவும் அநித்தியமானவையென்றும், நிலையான உறு திப்பொருள் எய்தவேண்டுவதே மானிட வாழ்க்கையின் மேலான நோக்கம் என்றும் பண்டைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்தவராய்த் தம் வயதேற ஏற இல்லறச் சிற் றின்பங்களைச் சிறிது சிறிதாய் நீக்கித் துறவறத்துக் கான நூல்களைக் கற்றும் தத்துவங்களையுணர்ந்தும் பக் குவ நிலையையடைந்துவந்து இறுதியில் யாவற்றினும் சிறந்ததான வீட்டின்ப வேட்கையால் தாமே எல்லாவற் றையும் பற்றறத் துறந்து துறவறத்திற் புகுவதும் ஒரு சார் வழக்காயிருந்தது. துறவறம் அருளுடைமையோடு பொருந்தியது. ஒருயிர்க்கு இடர் உற்றுழித் தன் உயி ரைக் கொடுத்தல், அதன் வருத்தம் தன் வருத்தமாகக் கோடல், பொய்யாமை, கள்ளாமை முதலியன துறவி னிடத்துச் சிறந்தனவாம்.

புறப்பொருள். அகம்போல் ஒத்த அன்புடையார் தா மேயன்றி எல்லாராலும் துய்த்து உணரப்படுதலானும் இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் இது புறமாயிற்று.

இதனை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணை ஆய ஏழு திணைகளாக வகுத்துக் கூறுவார். பிற்காலத்தவர் கரந்தை, நொச்சி முதலிய பல திணைகளையும் கூட்டி இதனையே பன்னிரண்டு திணை களாக விரித்திருக்கின்றனர். இவ்வேழனுள் காஞ்சி, பா டாண்டிணை பிரண்டினும் உலகின் நிலையின்மையையும் தலைவனைப் புகழ்தல் காரியத்தையும் பற்றிக் கூறுவர். ஏனைய ஐந்திணைகளும் அக்காலப் போர்த்திறனை விளக்கு வனவாம். பண்டைத் தமிழ்மாக்கள் போர் செய்தற்கு எதுங்கால் செய்யும் சமர் சம்பந்தமான வெவ்வேறு பூக் களைச் சூடிப் பொருதல் வழக்கமாயிருந்தமையின் அவ் வப்பூக்களின் பெயரானே ஒழுக்கத்தையும் கூறினர் தொல்காப்பியர்.

இரு பெருவேந்தர் தம்முள் பொருவது கருதியக்கால் ஒருவர் மற்றவர் நாட்டிலுள்ள தீங்கு செய்யத்தகாத அந்தணர் ஆநிரை முதலியவற்றை ஆண்டு நின்றும்

அகற்றிய பின்னரே போர் செய்தல் அறநெ
கருதப்பட்டது. இவற்றுள் அந்தணர் அறிவு
ராதலின் போர்நிகழ்ச்சி யறிந்தவுடன் அவர்
வேறிடம் அகன்றிடுவர். ஆநிரையோ அங்ஙனம் அ
வதன்ருதலின் போர்குறித்த அரசன் மாற்ருன் தேசத்து
ஆநிரைகளைத் தானே களவிற் கொண்டுவந்து காப்பான்.
இதன் பொருட்டுத் தண்டத்தலைவர், மூன்புலங்காப்
போர், ஏனை மறவர், குறுநிலமன்னர் முதலியவர் அரசன்
ஏவலும் ஏவாமலும் படைகளைக்கூட்டி நல்வாய்ப்புள்
முதலிய நற்சகுன மொழிகளைக்கேட்டு ஒற்றறிய வல்
லாரை முன்னர் ஏவி, அவர் கூறியவாறே துப்பறிந்து
பின்சென்று நிரை நிற்கும் புலங்களுக்கருகே மறைந்
தொழுகிப் பின் ஒய்யெனக் கிளம்பி நிறைகாத்தோரைக்
கொன்று வீழ்த்தி ஆநிரையை மெத்தனவாய் உடன்
கொண்டு தம் நாடு செல்லுவார். செல்லுங்கால் தம்மைத்
தொடர்ந்து பொருதவந்தாரைப் பின் அணியத்தார்
தாமே நின்று பொருது வீழ்த்த முன் சென்ருர் ஆநி
ரையை இன்புடன் நடத்திச் செல்வார். இங்ஙனம்
எதிர்த்தவரையெல்லாம் மாய்த்த வழி ஆநிரையைத் தம்
ஊர்ப்புறத்தே கொடுவந்து நிறுத்தி, ஊரிலுள்ளோர்க்
கும் இரவலர்க்கும் அவற்றைப் பகுத்துக்கொடுத்துத்
தாம்கொண்ட வெற்றிக்கறிகுறியாக உண்டாட்டயர்ந்து
களிப்பார். நிரைபறிகொடுத்தோரும் இங்ஙனமே
பொருது நிறை மீட்டுப்போதலுமுண்டு. இவ்விரண்டும்
வெட்சியென்ருர் தொல்காப்பியர். பிற்றை நாட்போந்
தோர் நிரைமீட்டலைக் காந்தையெனப் பிறிதோர் பெய
ராற் கூறுவார்.

இங்ஙனம் பசுத்திரளைக் கவர்ந்தபின் பெருவேந்தன்
நாடுகொள்ளும் உள்ளத்தனாய் நிமித்திகன் நல்ல
நாளென்று கூறிய நாளிலேயே தன் குடை, வாள் முத
லியவற்றைப் புறப்படச்செய்து எள்ளுண்டை, தினைமா,
பொரி, அவரை, துவரை, நிணம், குடர், உதிரம் முதலி
யன நிறைந்த தாளியைத் துர்க்கை தேவியின்பொருட்டு
முன் எடுத்துச் செல்லப் பின்னர்த் தன் சேனையோடு
புறப்பட்டு மாற்ருன் தேசத்தின்மீது படையெடுப்பான்.
அப்போது வீரமுரசம் அதிரும்; யானைகள் வீரிடும்;

ர் ஊரவாரஞ்செய்யும். அரசனும் தன் சேனை வேண்டிய ஆயுதங்களைக் கொடுப்பான். மேலும் படை முழுவதுக்கும் ஒருவனைத் தலைவனுக்கித் படைவீரர் யாவரும் அவன் சொற்படியே கேட்டு நடக்குமாறு பணிப்பான். போர் முடிவில் போரில் சிறந்து விளங்கிய வீரர்க்கு ஏனாதி, காவிதி முதலிய சிறப்புப்பட்டங்களைச் சூட்டலுமுண்டு. அரசன் தன் படைவீரரோடு அமர்ந்து உண்டு களித்தலும் வழக்கமாயிருந்தது. அந்நிய நாட்டு அரசன் திரை கொடுக்கச் சம்மதிப்பானுயின் அத்திரையை வாங்கிக்கொண்டு மீண்டுவிடுதலுமுண்டு. அன்றேல் தாபதப்பள்ளிகள், அந்தணர் இல்லங்கள், கோவில்கள் நீங்கலாகப் பகைவர் நாட்டுர்களைச் சுட்டெரித்தழித்தலுமுண்டு. தமக்குப் பயந்து புறங்காட்டி ஓடுவோரைப் போர்வீரர் வெட்டாமல் விடுவார். போரில் புண்பட்ட வீரரை அரசனும் உடன் வீரரும் புகழ்ந்து கொண்டாடுவார். முடிவில் அரசன் தன் வீரருட் சிறந்தார்க்கு முத்தார முதலியன கொடுப்பான். சிலருக்கு ஊர்களைப் பரிசளிப்பான். சிலருக்குப் பரம்பரை வாழ்க்கையாக மருதநில ஊர்கள் கொடுப்பதுமுண்டு.

அக்காலத்தில் நன்ருய் அரண்செய்யப்பட்ட கோட்டைகளுமிருந்தன. பகையரசர் இக்கோட்டைகளை எதிர்த்துப் பொருதலுமுண்டு. கோட்டைகள், மலை, காடு, நீர் முதலியன இலலாத உள் நாட்டில் கல், செங்கல் முதலியவற்ருல் அமைக்கப்பட்ட மதில்களாலாக்கப் பட்டிருந்தன. கோட்டைக்கு வெளியே வெகுதூரம் வரை காவற்காடு பரந்திருக்கும். இக்காவற்காடானது வஞ்சனை பல வாய்த்துத் தோட்டி, முள் முதலியன பதிக்கப் பெற்றது. இக்காவற்காட்டை யகன்று சென்ருல் மதிலையடுத்து அகன்று ஆழ்ந்த அகழ் உண்டு. இதில் கராக்களும் சுருக்களும் மிகுந்திருக்கும். இதனையடுத்து அமைக்கப்பட்டதே புறமதில். புறமதிலின் மேற்புறம் பல பொறிகள், பதணம், மெய்ப்புழைஞாயில் முதலியன அமைந்து எழுவும் சீப்புமுடைய வாயிற் கோபுரமுடைத்து. கோட்டை மதிலில் வேறும் பல யந்திரங்கள் உண்டு. இதற்கு உட்புறத்துள்ளதே உள்

மதில். சில கோட்டைகள் மலை அரண், நில அரண் முதலியன சூழ்ந்திருந்தன. மேலிருந்து அம்பு எய்யும் பதுக்கிடங்கள் மதிலகத்தே அமைந்திருக்கும். இவற்றினுள்ள யந்திரம் பொறி முதலியன யவனரால் அமைக்கப்பட்டவையெனக் கருதுதற்கிடமுண்டு.

இவ்வாறு காவல் செய்யப்பட்ட கோட்டையைப் பிடிப்பதற்கு எதிர் அரசன் சேனைகளோடு வருவான். சேனைகளுக்கு முன் அரசனின் கொடி செல்லும். கோட்டையை யணுகா முன்னரே கோட்டைமேலிருக்கும் கோட்டைக் காவலர் அம்புமாரி பொழிவார். அவ்வம்பு மாரியைக் கிடுகுப்படையாரும், கேடகப்படையாரும் தடுத்தும், தாக்கியும் எதிர்நோக்கிச் சென்று கோட்டையைக் கிட்டுவார். மதில் சூழ்ந்த கிடங்கின் இருகரையிலும் நின்று பெரும்போர் புரிவார். பெரும் பலகைகளை நீரில் மிதக்கவிட்டு அவற்றின்மீது ஏணிகளைச் சார்த்திக் கோட்டைமீதேறிப் பொருதலுமுண்டு. கோட்டைக் காவலர் கோட்டையின் புறம்போந்து போர் செய்தலுமுண்டு. புறமதிலைக் கைப்பற்றிய பகையரசன் உள் மதிலையும் வளைத்து அவ்வாறே பொருது காவலாளரைக் கோட்டைக்குள் துரத்துவான். உள் மதிலும் பகையரசன் கைப்படவே போர் ஊரின்கண் நிகழும். அப்பொழுது ஊரிலுள்ள கோயிற் பூரிசைகளிலும், மதில்களிலும் வீடுகள் மீதும், ஏறி நின்று போர் செய்வார். போர்செய்யுங்காலத்து மடிந்த உள்ளத்தானையும், மகப்பெறுதோனையும், மயிர் சூலந்தோனையும், பின்வாங்கி ஓடியவனையும், பெண் பெயரனையும், தன் ஆயுதத்தை இழந்தவனையும், தனக்கொத்த ஆயுதங்கொண்டு எதிர்த்துச் சண்டைக்கு வராதோனையும் கொல்லாது விடுவார். எதிர்த்துவந்த அரசன் வெற்றி பெறுவனேல் தோற்றவேந்தன் பெயரால் தான் முடி சூடி, மங்கல நீராடித் தன் வாளுக்கும் நீராட்டுச் சடங்கு செய்து, பரந்து நின்ற தன் படையாரை யெல்லாம் ஒருங்கு கூட்டி, அவரவர்க்குத்தக்க சிறப்புச் செய்தலுமுண்டு. பகைவன் கோட்டையை முழுவதும் அழித்துக் கழுதை எரிட்டுழுது, உண்ணுவரகும் வேலும் விதைத்துத் திரும்புவதும், திறைவாங்கித் திரும்புவதும், அன்றேல் தன் ஆணையை அவ்விடத்தும்

நிலைநிறுத்துமாறு சில மாதந் தங்கி நாட்டைப பண்படுத்திச் சீர் செய்துவிட்டுத் திரும்புவதும் வழக்கமாயிருந்தது.

போர்க் கெழுமன்னன் தான் எவனுக்கு விரோதமாய்ப் போர்க் கெழுந்தானே அவனுடைய துணையரசர் முதலியவர் நாடுகளுக்கும் ஏதகாலத்திற்ருனே தன் சேனைகளை அனுப்பி அவரவரை அங்கங்கே தாக்கி அவர்கள் இவன் பகைவனுக்குத் துணையாய் வராதபடி தடுத்துக்கொள்வதும் வழக்கமாயிருந்தது.

மதிலகத்தன்றிச் சமவெளியொன்றில் இடங்குறித்து அங்கே இருபெருவேந்தர் சேனையும் எதிரூன்றி நின்று போர்செய்யும் வழக்கமுமிருந்தது. தானை, யானை, குதிரை, தேர் முதலிய நால்வகைப்படையும் அணிவகுத்து நின்று சண்டை செய்யும். அரசனும் சேனையுடன் சென்று சேனையுடன் நின்றே போர் செய்வது வழக்கமாயிருந்தது. இப்போரில் சேனைத்தலைவர் காட்டும் வீரம் மிகவும் வியக்கத்தக்கது. தன் சேனை மூரிந்தோடும் சமயமாயிருப்பின் சேனைத்தலைவன்தானே சேனைக்குமுன் நின்று எதிரிபடை முழுவதையும் தானே தாங்கித் தடுத்து நின்று தன் படையாளரை உற்சாகப்படுத்திச் சண்டைக்குத் தூண்டுவான். தன் அரசனை மாற்ருன் படை சூழக் காணின் யாண்டிருந்தும் படைத்தலைவர் ஓடோடியும் வந்து அவனை விடுவிப்பார். இருபுறமும் வாட்போரும் மற்போரும் வீரத்துடன் நடைபெறும். இவ்வாருய சண்டைகளில் இருதிறத்தாரும் ஒக்க மடிதலுமுண்டு. சண்டை செய்யும் இருவேந்தரும் மடிவரேல் அவர் மனைவியர் தீப்புகுவதும் வழக்கமாயிருந்தது.

போர் நடந்துகொண்டிருக்குங் காலத்தினடுவில் கூதிர்காலம் வந்து விட்டதெனில் இருவர் சேனைகளும் பாசறை வகுத்து ஆங்கேயே தங்கியிருப்பார். அக்காலங்களில் அரசன் தன் படைவீரரைக் கண்டும் பேசியும், அவர் வீரச்செயல்களைப் புகழ்ந்தும், அவரவர்க்கு வேண்டிய சிறப்புகளைச் செய்தும், உடன்உண்டும், உடன்களித்தும் அவரை மகிழ்விப்பான்.

மேற்கூறிய போர்வகைகளுள் "பகைவர் நாட்டுப் பார்ப்பார் முதலியோரை ஆண்டு நின்றும் அகற்றிப் பொருதல் தலையாய அறம். அதுவன்றிப் பொருள் கருதாது பாதுகாவாதான் நிரையைத் தான் கொண்டு பாதுகாத்தல் அதனினிழிந்த இடையாய அறம். அதுவு மன்றிப் பிறர்க்கு அளித்தற்கு நிரைகோடல் நிகழினும் அது அதனினுமிழிந்த கடையாய அறமெனப்படும். இனிப் பகைவன் போற்றுத நாட்டைக் கைக்கொண்டு தான் போற்றச் செல்லுதலும், பொருள் வருவாய் பற்றிச்செல்லுதலும் வஞ்சித்துச் செல்லுதலும் போல்வன ஒன்றினின் ஒன்றிழிந்த ஞ்லத்து நடக்கைக் குறிப்பு. மாற்றரசன் முற்றியவழி ஆற்றுதோன் அடைத்திருத்தலும் அரசியலாயினும் அவன் வென்றியுள்ளமொடு வீற்றிருத்தலும் தனக்கு உதவிவரவேண்டியிருத்தலும் ஆற்றலின்றி ஆக்கங் கருதாதுகாத்தேயிருத்தலும் ஒன்றனினொன்றிழிந்த நடக்கைக்குறிப்பு."[1]

போரில் எவரானும் மதிக்கப்படும் வீரனுய் விளங்கியுயிர்விட்டவனை எக்காலமும் ஞாபகப்படுத்துமாறு அக்காலத்தவர் செய்திருந்த ஏற்பாடுகளும் உள்ளன. வீரர் அக்காலத்து அதிகமாய் மதிக்கப்பட்டு வந்தனர். தம் கணவரேனும் தாம் ஈன்ற புதல்வரேனும் போரிற் புறங்காட்டியோடி வரக்காணின் அவர் மனைவியர், தாயர் முதலியோர் தாமே நாணுல் உயிர் விடுவர். தன் மகன் போரில் எதிர்த்து நின்று போர்செய்து மடிந்தனன் எனக்கேட்ட தாய் மகிழ்ச்சியெய்துவாள். இங்ஙனம் வீரச் செயல்களில் விளங்கிய வீரரை எக்காலமும் ஞாபகப்படுத்தும் சாதனங்களை ஏற்படுத்துவதும் வழக்கமாயிருந்தது. இறந்த வீரனின் ஞாபகார்த்தமாய் கல்தூணை நிறுத்தி அதில் அவ்வீரனின் பெயரையும் அவன் செய்த வீரச்செயல்களையும் வெட்டி அக்கல்லுக்கு நீராட்டி, எண்ணெயைப் பூசி, அதில் அம்மறவனையே தெய்வமாக நாட்டிச் சிறப்புச் செய்து அவனைத் தெய்வமாக வணங்கியதோடும் அமையாமல் அக்கல்லுக்குக் கோயிலமைத்து மதில், வாயில் முதலியன கட்டி ஆலயங்

[1] தொல். பொரு. புற. பக். 347 (பவானந்தம் பின்னை)

களாக்கி அவ்வீரரைப் போற்றியும் வந்தனர். இரண்டாயிரம் யாண்டுகட்கு முன்னரே தம் வீரரை ஞாபகப்படுத்துமாறு இங்ஙனம் கல் நட்டுப் பேர் பொறித்து வைத்த நம்முன்னோர் தன்மை எக்காலத்தும் அதிசயிக்கத்தக்கதாகவே யிருக்கின்றது.

அக்காலம் வணங்கப்பட்ட தெய்வங்களாவன:—

மூல்லை நிலக்கோவலர் தமது பசுக்கள் பயன்தரு மாறு மாயோனை வணங்கிவந்தனர். மாயோன் மகளாகிய காமனையும் வணங்கினர் உண்டு. குறிஞ்சி நிலத்துக் கடுத்தவர் ஒருங்குகூடி வெறியாட்டயர்ந்து முருகனைத் தொழுதுவந்தனர். மருத நில மாக்கள் இன்பவிளையாட்டு இனிதினுகரும் இமையோருக்கும் எழிலிக்கும் இறைவனுகிய இந்திரனுக்கு விழவு கொண்டாடி அவனை வணங்கி வந்தனர். நெய்தனிலத்தோர் தம் வலை வளம் பெருகுதற்பொருட்டுச் சுறவுக்கோடு நட்டு வருணனை வணங்கினர்.

சூரிய சந்திராதிகளை வணங்கினரும் பலர். ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகித்தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருளாகிய கந்தழியையும் வணங்கிவந்தனர். துர்க்கை, கொற்றவை என வழங்கிய துஷ்டதேவதைகளையும் போர்முகத்தில் வீரர் வணங்கியும் அவற்றுக்கு நரபலியும் வேறு பலிகளும் கொடுத்தும் வந்தனர்.

இவ்வத்தியாயத்தில் இலக்கிய வரம்பு கி. மு. 300 வரை என மாத்திரம் வரைந்திருப்பது கண்டு தமிழ் இலக்கியம் அதற்கு முற்பட்டதன்றெனக் கொள்வது தவறும். தொல்காப்பிய காலமே கி. மு. 300 யாண்டுகட்கு முற்பட்டதாயிருக்கலாம். இத்தொல்காப்பியமும் ஒரு இலக்கணமே என்பதனை மறக்கலாகாது. இலக்கணம் எனப்பட்டதனால் அது இலக்கியம் கண்டதற்கே எழுதப்பட்டதென்பது போதரும். தொல்காப்பியத்திற்கண்ட இலக்கண விதிகட்கெல்லாம் அக்காலமே மிகப்பல இலக்கிய உதாரணங்களிருந்திருக்கவேண்டும். தொல்காப்பியம் எழுதப்படுதற்கு முன்னும் பல இலக்கணங்கள் இருந்திருக்கவேண்டும். 'என்ப', 'என்மனார்

புலவர்' எனத் தொல்காப்பியச் சூத்திரங்களில் காணப் படும் தொடர்களே இதனை வலியுறுத்தும். வடமொழி இலக்கணத்தைத் தழுவி இது எழுதப்பட்டதென்பதற் குப் போந்த ஆதாரமில்லை. வடமொழி இலக்கணத்திற் காணப்படாதனவும் தமிழ் மொழிக்கேயுரியனவுமான பல விதிகள் தொல்காப்பியத்திலுண்டு. அகத்தியம், ஆந்திரம் முதலிய தமிழ்மொழி வடமொழி இலக்கணங் களைப் பார்த்துத் தாம் தொல்காப்பியம் எழுதியதாகத் தொல்காப்பியர் யாண்டும் கூறவுமில்லை. 'ஆந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனக்கூறியவர் பனம்பார னரே யன்றித் தொல்காப்பியரல்ல. இவற்றை நோக்கு மிடத்துத் தொல்காப்பியத்தின் முற்பட்ட காலத்தில் தமிழ்மொழி இலக்கிய இலக்கணப் பரப்புடைத்தாயிருந் திருக்கவேண்டுமென நிதானிக்க இடமுண்டு. மேலும் தொல்காப்பியம் மூன்றதிகாரங்களையும் விசேடமாகப் பொருளதிகாரத்தையும் வாசிக்குங் காலத்து அங்கங்கே உதாரணமாகக் காட்டப்படும் உதாரணச் செய்யுட்கள் மிகப் பலவாய் விரிந்து கிடக்கின்றன. அவற்றுள் இன்ன நூல்களிலிருந்து எடுக்கப்பட்டனவெனக் கண்டறிதற் கிடமின்றி யிருக்கும் செய்யுட்கள் பல. தொல்காப்பிய காலத்திற்கு முற்பட்ட இலக்கியம் பரந்து கிடந்தா லன்றி அவற்றுக்கான இலக்கணத்தை இத்தனை விரி வாக ஆசிரியர் கூறியிரார். அவ்விலக்கியங்கள் யாவை, எக்காலத் துற்பத்தியாயினவை என அறிதற்கேது வில்லை. அவ்விலக்கியங்களும் நம் கைக்கெட்டுவனவல்ல. இவற்றை யுற்று நோக்குமிடத்து கி. மு. 500, 600 யாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழி இலக்கியப் பரப்புடையதாயிருந்திருக்கலாமென நிதானித்தற்கும் இடமுண்டு.

---

3. அத்தியாயம்

கடைச்சங்கம்

இறையனாரகப்பொருள் உரையிற் கண்ட கடைச் சங்க வரலாறு பின்வருமாறு:—

'கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவி யாரும் சேந்தம்பூதனாரும் அறிவுடையாரனாரும் பெருங் குன்றூர்க்கிழாரும் இளந்திருமாறனும் மதுரையாசிரிய னல்லந்துவனாரும் மருதனிளநாகனாரும் கணக்காயனார் மகனார் நக்கீரருமென இத்தொடக்கத்தார் நாற்பத் தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற் பத்தொன்பதின்மர் பாடினரென்ப. அவர்களாற் பாடப் பட்டன நெடுந்தொகை நானூறுங் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் ஐங்குறுநூறும் பதிற் றுப்பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாட லும் கூத்தும் வரியும் பேரிசையும் சிற்றிசையும் என்றித் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல் காப்பியமுமென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப. அவர்க ளைச் சங்கமிரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந் திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி யீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை யென்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியரென்ப' என்பது.

இவ்வாசகத்தினிடையே 'என்ப' எனும் பதம் எழு முறை மாறிமாறி வருகின்றது. இவ்வுரையெழுதினார் உரை ஏற்பட்ட பல்லாண்டுகட்குப் பின்னர் தம் கர்ண பரம்பரையில் கேள்விப்பட்டனவற்றையே எழுதிப் போந்தாரென்பது இதனால் வெளியாகின்றது. பல் லாண்டுகளென்பது பல் நூற்றாண்டுகளெனக் கொள்ள வும் பல ஆதாரங்கள் அவர் எழுதிய உரையிலேயே

காணக்கிடக்கின்றன. என்ன? இச்சங்கம் ஏற்பட்ட காலமுதல் அது இறுதியடைந்த காலம் வரையில் இச் சங்கத்தைப் பரிபாலித்தவர் நாற்பத்தொன்பது பாண்டியரெனக்கூறி அதனையும் 'என்ப' எனும் சொல்லானே முடித்துள்ளார். ஒவ்வோர் பாண்டியனுக்கும் சராசரி இருபது யாண்டுகள் அரசாட்சிகாலம் என வரையறுத்துக்கொள்ளினும் சங்கமிருந்தது ஒருவாறு ஆயிரம் வருடமென முடியும்.

அன்றியும், இச்சங்கத்தின் துவக்கத்திலேயே இதில் புலவராயிருந்தவரும், சங்கத்தின் தலைமைப் புலமை நடாத்தியவரும் நக்கீரரெனப்படுவார். இறையனாரகப் பொருளுரை நக்கீரரால் கூறப்பட்டதென இவ்வுரையிலே காணக்கிடக்கின்றது. எனினும் இவ்வுரையை ஏடேற்றி உலகுக்கு அளித்தவர் நக்கீரரல்ல. 'நக்கீரர் இவ்வுரையைத் தமது மகன் கீரவிகொற்றனுருக் குரைக்கக் கீரவிகொற்றனர் தேனூர்க்கீழாருக்குரைக்க' வெனக் கூறிப்போய் இறுதியில் நீலகண்டனர்க் குரைக்கப்பட்டதெனக் கூறி 'இங்ஙனம் வருகின்றது உரை' என உரையில் கூறப்பட்டிருக்கிறது. இதன்படி பார்த்தால் குறைந்த அளவு பத்துத் தலைமுறையாயினும் ஆசிரிய பரம்பரையில் இவ்வுரை வழங்கிவந்ததென்பதற்கு இது ஆதாரமாகின்றது. அதன் பின்னரும் எத்தனைகாலத்திற்கப்பால் உரை ஏடேறியதெனக் கூற வகையில்லை. நீலகண்டனர்க்கும் பன்னெட்பின்னரே இவ்வுரை ஏடேறியிருக்கவேண்டுமெனக் கொள்ளுதற்குமிடமுண்டு.

இவற்றை நோக்குமிடத்து இவ்வத்தியாயத் துவக்கத்துக் கண்ட வாசகம் பல்நூற்றாண்டுகட்குமுன் நிகழ்ந்த காரியங்களைப் பின்வந்தவர் தாம் கேளவிப்பட்ட அளவில் எழுதிவைத்ததே எனத் தெளிவாகின்றது. ஏதேனும் ஓர் காரியத்தை அது நிகழ்ந்த பல நூற்றாண்டுகளுக்கப்பால் நாம் கர்ணபரம்பரையாய்க் கேள்விப்படும்போது அது பல வழுக்களுடனேயே நமக்கு வந்தெட்டுகிறதென்பது யாவர்க்கும் தெரிந்த காரியமாதலின் இறையனாரகப்பொருளுரையில் கண்ட கடைச்சங்கத்தைப்பற்றிய வாசகம் முழுவதுமே ஏற்றுக்கொள்ளத்தக்கதன்றென்பது கூறவேண்டியதில்லை.

இவ்வுரையிற் கூறப்பட்டதினின்று கடைச்சங்க காலம் இதுவேயெனத் துணிதல் பார்த்த அளவில் அசாத்தியமாகவே காணப்படுகின்றது. எனினும் அக் காலத்தைத் திட்டவட்டமாய்க் கணித்தற்கான பிற வேதுக்கள் பலவுள.

இறையனாரகப்பொருளுரையில் உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கும் கோவைச் செய்யுட்கள் மாறவர்மனைப் பற்றிக் கூறுகின்றன. இம்மாறவர்மன் கி. பி. 750 யாண்டிலிருந்தவன் என்பது சாஸனங்களால் தெரிய வருகின்றது.[1] ஆதலின் இவ்வுரை அவன் காலத்தில் அல்லது அவன் காலத்தின் பின்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும். இவ்வுரையோ நக்கீரர் காலத்தின்பின் பத்துத் தலைமுறை ஆசிரிய பரம்பரையில் வழங்கிவந்தபின் ஏடேறியதென அவ்வுரையகத்து வழங்கும் வாசகத் தைக்கொண்டு தலைமுறை யொன்றுக்கு முப்பது யாண்டு கள்வீதம் வைத்துக்கொள்ளினும் பத்துத் தலைமுறைக்கு முந்நூறு யாண்டுகளேயாகுமாதலின் நக்கீரர் காலமும் அவரிருந்த கடைச்சங்க காலமும் மாறவர்மன் காலத் துக்கு அதாவது கி. பி. 760-க்கு முந்நூறுயாண்டுகட்கு முற்பட்டதேயாம் என T. A. கோபிநாதராயவர்கள் கூறுவார்கள்.[2] மேற்கூறிய ராயரவர்களே மற்றுமோரிடத்தில் 'இறையனாரகப் பொருளுரை கி. பி. எட்டாம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டதாகவேண்டும்' எனக் கூறுகின்றனர்.[3] இங்ஙனம் இராயரவர்கள் கடைச்சங்க காலத்தைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயங்கள் ஒப்பத் தக்கனவல்ல என்பது பற்பலரால் தகுந்த காரணங்களின் மூலமாய் ரூபகாரப்படுத்தப்பட்டனவாதலின் அவர்கள் அபிப்பிராயத்தை நீக்கிப் பிறிதொருவர் அபிப்பிராயத்தை நோக்குவாம்.

ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள் தாமெழுதிய 'சேரன் செங்குட்டுவன்' எனும் அரியநூலில் சேரன் செங்குட்டுவன் காலம் இற்றைக்கு 1450 யாண்டுகட்கு முன்னர் எனக்கூறியுள்ளார்கள். சேரன் செங்குட்டுவன்

1 செந்தமிழ் 6: 2.
2 மேற்படி
3 செந்தமிழ் 4: 7.

கடைச்சங்க காலத்தவனேயாதலின் கடைச்சங்ககால மும் அவர்கள் கூற்றுப்படி கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாகும். ஐயங்காரவர்கள் இம்முடிவுக்கு வருதற்கு ஆதாரமாய்க்கொண்ட செய்யுட்கள் இரண்டு. அவை வருமாறு:—

'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ' அகநானூறு 265

'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்
தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
வறையிறக் கவரோ சென்றனர்.' அகநானூறு 281.

இவற்றுள் முதற் செய்யுளாலறியக்கிடந்தது பாடலி புரத்தில் அரசாண்ட நந்தருடைய பெருநிதியம் கங்கை யில் ஒழிந்தது என்பதே. இதனை யாதாரமாகக் கொண்டு ஐயங்காரவர்கள் அடியில் வருமாறு தீர்மானித் திருக்கின்றனர்: என்ன? சீனயாத்திரிகனை பாஹியான் கி. பி. 400 யாண்டில் பாடலிபுரத்தைப் பார்க்குங்கால் அது சிறப்பாயிருந்தது. அவனுக்கு மூன்று நூற்றாண்டு கட்குப் பின் வந்த சீனயாத்திரிகனை ஹையூன்தலங் காலத்தில் பாடலிபுரம் க்ஷீணதசையிலிருந்தது. எனவே பாடலி இவ்விருகாலங்களுக்கு மிடைப்பட்ட காலத்தில் கங்கை வெள்ளத்தால் அழிபட்டிருக்கவேண்டும். ஆத லின் அச்சம்பவத்தைக் குறிக்கிற செய்யுளைப் பாடிய மாமூலனாரும் அவர் சம்பந்தமாயறியக்கூடிய கடைச் சங்கமும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாம் என்பதே.

மற்று இரண்டாவது செய்யுளால் அறியக்கிடந்தது, வடுகரைத் துணைக்கொண்டு மோரியர் தென்னாட்டிற் படையெடுத்தனர் என்பது. ஐயங்காரவர்கள் இது சமுத்திரகுப்தனின் படையெழுச்சியைக் குறிப்பதா கக் கொண்டு சமுத்திரகுப்தனின் காலமாகிய ஐந்தாம் நூற்றாண்டே சேரன் செங்குட்டுவனினதாகிய கடைச் சங்க காலம் எனத் தீர்மானித்தனர்.

இவர்கள் கூறிய இரு நியாயங்களும் கொள்ளத் தக்கனவல்ல. பாடலிபுரம் நந்தர்காலத்தில் கங்கை வெள்ளத்தில் அழியவில்லை. நந்தர்கள் தம் நிதியத்தைக் கங்கையாற்றில் ஒளித்துவைத்தனர் என்பதே பொருள். இப்பொழுது குமாரஹர் எனும் கிராமமிருக்குமிடமே பழைய பாடலியிருந்த ஸ்தலமாகும். மேலும் நந்தர்கள் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுமல்ல. நந்தர் மோரியருக்குமுன் பாடலியிலிருந்தவர்கள். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டெனச் கொள்ளினும் பொருந்தும்.[1] இவை காரணங்களால் ஐயங்காரவர்கள் காட்டிய முதல் ஆதாரம் தவறுகின்றது.

இரண்டாவது செய்யுளில் மோரியர் படையெடுப்பைக் கூறியிருப்பவும் ஐயங்காரவர்கள் குப்தர் படையெடுப்பெனக் கொண்டார்கள். குப்தர் காலம் மோரியர் காலத்துக்கு வெகுநாட் பிற்பட்டது. இங்ஙனம் மோரியரெனக் கூறியிருப்பதைக் குப்தரெனப் பொருள் கொண்டு முடித்த தீர்மானம் ஒப்பத்தக்கதன்று. எனவே அவர்கள் காட்டிய இரு நியாயங்களும் தவறாய் அவர்கள் கடைச்சங்க காலத்துக்குக் குறித்த கி. பி. ஐந்தாம் நூற்றாண்டும் தவறாய் முடிந்தன. இவ்விரு காரணங்களையும் ஆக்ஷேபித்து ஸ்ரீ எச். எஸ். சீனிவாச பிள்ளையவர்களும்[2] ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்களும்[3] மேற்காட்டிய விவரங்களை விரிவாய் எழுதியிருக்கின்றனர். சில தினங்களின் முன் 'இந்து' பத்திரிகை[4] வாயிலாய் வெளிவந்த ஸ்ரீ எஸ். இராமசாமி ஐயங்காரவர்கள் வித்வான் இராகவய்யங்காரவர்கள் அபிப்பிராயத்தையே வலியுறுத்துகின்றனர். அவர்கள் காட்டியுள்ள ஆதாரங்கள் எல்லாம் ஒப்புக்கொள்ளத்தக்கனவல்ல.

மற்றுமோர் சாரார் கடைச்சங்க காலம் கி. பி. 8-ம் நூற்றாண்டென்பார். இவர்களுள் முக்கியமானவர் ஸ்ரீ எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள். கடைச்சங்க காலத்தெழுதப்பட்ட நூல்களில் சிலப்பதிகாரமும்

[1] Vincent Smith Hist. of India, p. 58.
[2] செந்தமிழ் 15: 1.
Beginning of S. Ind. Hist., pp. 185. sq.
[3] The Hindu', 14, 15, & 17th April, 1922.

ஒன்று. பிள்ளையவர்கள் தமது தீர்மானத்துக்கு ஆதாரமாய்ச் சிலப்பதிகாரத்தில் இருபகுதிகளைக் காட்டுகின்றனர். அவை வருமாறு:—

'வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்குல்'.....சிலப். x. 1–3.

'ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்
தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வீரத் தொள்ளெரி யுண்ண
வுரைசான் மதுரையோ டரசுகே டுறுமென்
முரையு முண்டே நிறைதொடி யோயே'.....

சிலப். XXIII. 133–137.

இவற்றின் உரைவருமாறு:—'அந்தச் சித்திரைத் திங்கட் புகுதிநாள்—சோதி, திதி, மூன்றும்பக்கம்; வாரம்—ஞாயிறு இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூரணையுங்கூடிய சனிவாரத்திற் கொடியேற்றி, நாலேழ் நாளினும் என்பதனுன் இருபத்தெட்டு நாளும் விழா நடந்து கொடி யிறங்கி, வைகாசி இருபத்தெட்டினிற் பூருவ பக்கத்தின் பதின்மூன்றும் பக்கமும் சோமவாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத்திருளிலே யென்றவாறு. அது பூருவபக்கமென்பது தோன்றக் காரிருணின்ற கடைநாட் கங்குலென்றார்.'

ஆடிமாதம் கிருஷ்ணபக்ஷத்துக் கார்த்திகை பரணியட்டமியில் பொருந்திய வெள்ளிக்கிழமையன்று புகழ் பெற்ற மதுரையும் அதன் அரசனும் நெருப்பினுல் அழிவுறுவார் எனும் சோதிடவார்த்தையு முண்டு.

இவற்றினுள்ள ஜோதிஷக் குறிப்புகளை வைத்துக் கணித்துப் பார்த்ததில் மதுரை அக்கினியால் எரியுண்ட நாள் கி. பி. 756 சூலை 23 என்று பிள்ளையவர்கள் துணிகிறார்கள். மேற்கண்ட குறிப்புகளையே வைத்துக் கொண்டு தாம் கணித்ததில் கி. பி. 1 முதல் 1400 வரையொருவருடமாவது முழுவதும் பொருந்தவில்லையென

ஹைக்கோர்ட்டு வைக்கில் ஸ்ரீ. கே. ஜி. சங்கரையரவர்கள் கூறுகின்றனர். மேலும் பிள்ளையவர்களே அடியார்க்கு நல்லார் கூறியுள்ள உரையிற் காணப்படும் ஜோதிஷக் குறிப்புகள் சிறிது தவறுடைய தெனவும் சொல்கின்றனர். மேலும் அடியார்க்கு நல்லார் எழுதும் உரை ஜோதிஷ விஷயத்தில் ஒப்பத்தக்கதன்றென்பதை ஐயரவர்கள் விவரமாய்க் காட்டிப் பிள்ளையவர்கள் கணித்துள்ள கி. பி. 756 யாண்டு பொருந்துவதன்றென மிகத் தெளிவாய் விரித்தெழுதியிருக்கின்றனர்.[1]

அன்றியும், அப்பர் சுவாமிகள் தமது தேவாரத்தில் 'நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதரு மிக்கருளினேன்காண்,[2] எனப் பாடியதில் நக்கீரர் வரலாற்றைக் குறித்திருக்கின்றனர். எனவே நக்கீரர் காலமும் அவர் சங்கத்தமர்ந்திருந்தபோது சிவபிரான் நக்கீரரோடு வாதாடிப் பொற்கிழியைத் தருமியென்னும் பிராமணனுக்களித்த காலமும் அப்பருக்கு வெகுநாள் முற்பட்டிருக்கவேண்டும். அப்பர் சுவாமி சம்பந்த மூர்த்திகளின் நண்பர். சம்பந்தமூர்த்தி நாயனுர் சிறுத்தொண்ட நாயனுர் காலத்தவர்.[3] சிறுத்தொண்டர் வாதாபி எனுமிடத்தில் போர் செய்தவர்.[4] அப்போர் நடந்த காலம் கி. பி. 642.[5] எனவே அப்பர் காலமும் கிட்டத்தட்ட கி. பி. 642 ஆகவேண்டும். அப்பர் மேற் கூறிய தேவாரத்தைப் பாடியது மாத்திரமல்ல சங்க மிருந்ததெனவும் கூறுகின்றனர். இவற்றுல் சங்கம் கி. பி. 642-க்கு வெகுநாள் முன்னிருந்திருக்கவேண்டு மென்பதே துணிபாதலின் பிள்ளையவர்கள் காட்டுகிற 8-ம் நூற்றுண்டு தவறேயாம்.

அன்றியும் பிள்ளையவர்கள் இது சம்பந்தமாய் 'கண்ணகி அல்லது பத்தினிதேவியின் வணக்கம் இலங்

1 செந்தமிழ் 5. 11.
2 திருஞா. திருப்பத்தூர் திருத்தாண். 3.
3 பெரிய புராணம். திருஞானசம்பந்த. புராணம்.
,, சிறுத்தொண்டநாயனுர் புராணம்.
தேவாரம். திருச்செங்காட்டங்குடி பழந்தக்காகம் 10. பஞ்சமம் 1–10.
4 பெரியபுராணம்: சிறுத்தொண்டநாயனுர் புராணம்.
5 Tamilian Antiquary, No. 5, p. 54. (S. Krishnaswami Aiyangar) and History of India by Vincent Smith, p. 207.

கையில் கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்கு வெகு நாள் முன்னரே உண்டாயிருக்க வேண்டுமென இப்போது எனக்குத் தெரியவருகிறது. (இலங்கையில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் அரசாண்ட கஜபாகுவின் காலத்திலேயே உண்டாயிருக்கலாம்.) பத்தினிதேவி வணக்கம் இந்தியாவில் கி. பி. எட்டாம் நூற்றாண்டில்தான் வந்திருக்கவேண்டும். கண்ணகிதேவி வணக்கத்துக்குச் சார்பாய்ச் சிலப்பதிகாரம் எனும் ஸ்தலபுராணம் எழுதப்பட்டதுபோலும்'[1] எனவும் எழுதுகின்றனர். இதிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே இலங்கையில் கண்ணகிதேவி வணக்கம் இருந்ததென ஒப்புக்கொள்ளுகின்றனர், இது சிலப்பதிகாரக் கூற்றுக்கு மிகவும் இசைந்தே இருக்கிறது. சிலப்பதிகாரம் புனைந்துரையானதோர் கற்பித கதையல்லவென்பது அதை ஒரு முறை வாசிப்போர்க்கும் தெரியவரும். ஏதோ சாதாரண காரியத்தையும் இயற்கைக்கு விரோதமாயிருப்பது போன்றும் தெய்வத்தால் நிகழ்த்தப்பட்டதுபோன்றும் எழுதுவது புத்தமதாநுசாரிகள் கொள்கையும் ஜைன பௌத்த நூலாசிரியர் இயற்கையுமாகும். ஆதலின் முழு நூலும் கற்பித கதையெனக் கொள்ளுவது தவறும். இலங்கையிலிருந்து கண்ணகி வணக்கம் இந்தியாவிற்கு வந்ததென்பதற்கு யாதொரு ஆதாரத்தையும் காணவில்லை.

இவை காரணங்களால் சிலப்பதிகார காலமும் அது எழுதப்பட்ட காலமாகிய கடைச்சங்க காலமும் கி. பி. 756 அல்லவென்பது தெளிவாகிறது. சடைச்சங்க காலத்தனவாய சிலப்பதிகாரம், புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து முதலிய நூல்களிலிருந்து கடைச்சங்க காலம் இதுவே யெனத் திட்டமாயறிதற்கான ஏதுக்களுள. இவற்றையாராய்ந்து கனகசபைப் பிள்ளையவர்களும், எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்களும் முறையே எழுதிய '1800 யாண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' 'தமிழ் இலக்கியம் செழித்தோங்கிய காலம்' எனும் நூல்களில் விவரித்தெழுதியிருக்கின்றனர். அவர்கள் கூறிய காரியங்களாவன:

[1] Social Reform Advocate, 12th May, 1917.

மேற்கூறிய நூல்களிலிருந்து கனகசபைப் பிள்ளை யவர்கள் காட்டியுள்ள அரசபரம்பரை அடியில் வரு மாறு:—

சோழமன்னர்

கரிகாற்சோழன்

|

சேட்சென்னிநலங்கிள்ளி

|

கிள்ளிவள்வன்

|

ராஜசூயம்வேட்டபெருநற்கிள்ளி.

சேரமன்னர்

ஆதன்

|

வானவரம்பன் ஆதன்

|

இமயவரம்பன் செங்குட்டுவன்

|

யானைக்கட்சேய்

|

பெரும்சேரலிரும்பொறை.

பாண்டிய மன்னர்

ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்

|

வெற்றிவேற்செழியன்

|

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்
நெடுஞ்செழியன்

|

உக்கிரப் பெருவழுதி

|

நன்மாறன்.

கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் காட்டியுள்ள அரச பரம்பரையும் பெரும்பாலும் இதனோடு ஒற்றுமை யுடைத்து.

சிலப்பதிகாரத்தில் கோவலனைக் கொல்வித்தவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எனக் காட்டியிருக்கிறது. இந்நெடுஞ்செழியன் கோவலன் இறந்த தினத்திலேயே கண்ணகியால் குற்றஞ்சாட்டப்பட்டுத் தன் சிம்மாதனத்தினின்றும் கீழ்வீழ்ந்துயிர்விட்டனன். இவன் இறந்த சமயத்தில் கொற்கையில் ராஜப்பிரதிநிதியாயிருந்த இவன் மகன் வெற்றிவேற்செழியன் பின்னர் பட்டத்துக்கு வந்தான். இவன் அரசாட்சி நெடுநாளிருக்கவுமில்லை. இவன் ஏதேனும் அரும்பெருங் காரியங்களைச் சாதித்ததாகவுமில்லை. இவன் இறந்தபின்னர் இவன் மகன் நெடுஞ்செழியன் சிறுபருவமாயிருக்கும்போதே பட்டத்துக்கு வந்தான். இவனே தலையாலங்கானத்துத் தனியாய் நின்று குறுநில மன்னரைவரையும் சேரசோழரையும் வெற்றிகொண்டவன்.

கோவலன் புகாரை (காவிரிப்பூம்பட்டினத்தை) விட்டுப் புறப்பட்டபோது அங்கு அரசாட்சி செய்திருந்தவன் கரிகாலன் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. கோவலன் புகாரில் நீங்கிய சில வருஷங்களுக்குள் கரிகாலன் இறக்கவே அவன் பேரனாகிய கிள்ளிவளவன் பட்டமெய்தினன். [1]அவன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டது. இதற்கிடையில் கோவலன் கொலையுண்டு மதுரை எரிவாய்ப்படக் கண்ணகியும் உயிர் துறந்து தன் கணவனோடு சேர்ந்தனள். கண்ணகி தன் கணவனோடு சேர்வதைக் கண்டிருந்த சேரநாட்டு மலைவேடர் மலைச்சாரலில் வேட்டைக்கு வந்த சேர மன்னனாகிய செங்குட்டுவனிடம் தாங்கள் கண்ட அற்புதக் காட்சியை யுரைக்கின்றனர். பிற விவரங்களும் அவன் அவ்விடத்திலே கேள்விப்படுகிறான்.[1] சிலப்பதிகாரக் கதை முழுவதும் நிகழ்ந்த காலமெல்லாம் சேரநாட்டையாண்டவன் செங்குட்டுவன். சிலப்பதிகாரத்தை எழுதியவராகிய இளங்கோவடிகளும் சேரன் செங்குட்டுவன் உடன் பிறந்தவரே.

கண்ணகியின் அற்புத விவரங்களைக் கேள்வியுற்ற செங்குட்டுவன் கண்ணகியைப் பத்தினி தெய்வமாக பிரதிஷ்டிப்பித்துச் சில ஆண்டுகளுக்குள் அத்தெய்வத்துக்

[1] சிலப்பதிகாரம் காட்சிக் காதை.

குக் கோவில் முதலியன அமைத்துப் பெருவிழாக்கொண் டாடினன்.[1] அவ்விழாவிற்கு வந்திருந்தாருள் இலங்கைக் கயவாகு மன்னனு மொருவன்.[2] எனவே சேரன் செங் குட்டுவனின் காலமும் இலங்கையில் அரசாண்ட கயவா குவின் காலமும் ஒன்றேயாம்.

இலங்கைச் சரித்திரத்தில் அரசர் வரிசையில் கய வாகுவெனும் பெயர் இருமுறை வருகின்றது. இவருள் முதல் கயவாகுமன்னன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டி னும் இரண்டாவது கயவாகு கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினும் அரசாட்சி புரிந்தவர்கள். இவ்விரு வருள் முதல் கயவாகுவே சேரன் செங்குட்டுவன் காலத் தவனுவான். இரண்டாவது கயவாகுவின் காலத்திற் கும் கடைச்சங்க காலத்திற்கும் எள்ளளவும் சம்பந்த மில்லை, ஒற்றுமையுமில்லை. மேலும் இவ்வத்தியாயத்தில் முன்னொரு இடத்தில் கடைச்சங்க காலம் கி. பி. 642-க்கு முற்பட்ட காலமெனக் காட்டப்பட்டது. ஆதலின் சேரன் செங்குட்டுவன் காலமும் முதற் கயவாகுவின் காலமாகிய கி. பி. 113–135[3] வரையுள்ள காலத்திற்குச் சிறிது முன்பின்னுள்ளது. கயவாகுவின் காலம் கி. பி. 175–200 என்பர் வின்ஸென்ற் ஸ்மித் இதிகாசர்.[4] இச் சேரன் செங்குட்டுவன் கடைச்சங்க காலத்தவன் என் பது கடைச்சங்கப் புலவருள் ஒருவராகிய பரணர் அவனை நேரிற்பாடி உம்பர்க்காட்டு வரியைப் பரிசி லாய்ப் பெற்றனரென கடைச்சங்கநூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தினுள் கூறியிருக்கிறபடியினால் தெரியவரு கிறது. அன்றியும் மேற்காட்டியுள்ள சேரசோழ பாண் டியருடைய வம்சாவளியில் காட்டப்பட்டிருக்கும் பல அரசரையும்பற்றி மிகப் பல புலவர்கள் செய்துள்ள பல பாடல்கள் கடைச்சங்க நூல்களில் காணப்படுகின்றன. ஆதலின் இவரெல்லாம் கடைச்சங்க காலத்தவரேயா வார். கடைச்சங்க காலமும் இவர் காலத்ததே. அவரெல் லாம் கி. பி. 50 முதல் 150 வரை அரசாண்டவர் என்று கனகசபைப் பிள்ளையவர்கள் குறித்திருக்கிறார்கள்.

[1] சிலப். வரந்தருகாதை [2] சிலப். வரந்தருகாதை. 169 வரி.

[3] The Augustan Age of Tamil Literature by S. Krishnaswami Aiyangar; Tam. Antiquary, No. v, p. 50.

[4] Hist. of India, Vincent Smith, p. 145.

கடைச்சங்கம் கி. பி. முதல் நூற்றாண்டினும் இரண்டாம் நூற்றாண்டினும் இருந்ததென்பது உண்மையேயாயினும் அது எக்காலம் தொடங்கி எக்காலம் முடிவுபெற்றது என்பதனை நிதானித்தற்கு ஏதுக்களில. உக்கிரப் பெருவழுதியின் காலத்தில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதெனக்கூறுவர். திருவள்ளுவமாலை[1] யிலும் உக்கிரப்பெருவழுதியினால் இயற்றப்பட்டதாக ஓர் பாடல் காணப்படுகிறது. இவ்வரசன் காலத்திலேயே அகநானூறு தொகுக்கப்பட்டதென அகநானூற்றின் இறுதியில் எழுதப்பட்டிருக்கும் உரையினால் விளங்குகிறது. இவ்வுக்கிரப் பெருவழுதியே கோவலனைக் கொன்ற ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் எனக் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் கருதுகின்றனர்.[2] இங்குமங்குமாய்க் காணப்படும் வரலாறுகளையொட்டி நோக்குமிடத்தும் ஐயங்காரவர்கள் கருதுவது சரியேயெனக் கொள்ளுதற்கிடமிருக்கிறது. இவ்வுக்கிரப்பெருவழுதியின் காலம் கி. பி. 50 எனவே திருக்குறள் அரங்கேறிய காலம் கி. பி. 50 எனக்கொள்ளலாம். இதற்குச் சமீபமான காலத்தில் இறையனாரகப்பொருள் எழுதப்பட்டிருக்கலாம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கெனக் குறிக்கப்பட்டவற்றுள் பெரும்பாலன இரண்டாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டனபோலும்.

சங்க நூல்களைப் பாடிய புலவர் பல்வேறு தரப்பட்ட பற்பலராவார். அவர் பல்வேறு தொழிலினர், மரபினர், சமயத்தினர், நாட்டினர், காலத்தவர். அவர் பாடியுள்ளவற்றைப் பிற்காலத்தவர் ஒருசேரத் திரட்டித் தொகைநூல்களாக்கினர். உக்கிரப்பெருவழுதியின் காலத்தில் அதாவது முதல் நூற்றாண்டிலேயே கடைச்சங்கம் இறுதியுற்றதெனில் இந்நூல்களில் வழங்கும் புலவருள் பெரும்பாலார் கி. மு. இரண்டாம் நூற்றாண்டுமுதலிருந்தவராவார். சிற்சில புலவர் கி. பி. மூன்றும் நூற்றாண்டுவரையும் இருந்திருக்கலாம் எனக்கொள்ளலாம். அதற்குப் பிற்பட்ட புலவரும் சிலரேயோவென ஐயங்கொள்ளுதற்குமிடமுண்டு.

[1] திருவள்ளுவமாலை, 4.
[2] The Augustan Age of Tamil Literature (Tam. Ant. No. 5, p. 41).

இறையனாரகப்பொருளுரையில் கடைச்சங்கத்தாங் கேறிய புலவர் நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எனக் கணக்கிட்டிருக்கிறது. எட்டுத்தொகை முதலிய நூல் களில் பெயர் குறிக்கப்பட்ட புலவர்களைக் கணக்கிட்டு 514 என்றனர் கனகசபைப் பிள்ளையவர்கள். யான் கணக் கிட்டுப்பார்த்ததில் 486 புலவர் பெயர் அகப்படுகிறது. இத்தொகைகளின் ஏற்றக்குறைவு புலவர்களின் பெயர் கள் தலைதடுமாறிக் கிடப்பதினாலும், கடைச்சங்கம் முடிந்ததன்பின்னும் பாடிய சிற்சில புலவரின் பாடல் கள் தொகைகளில் ஏறியிருப்பதினாலும் ஏற்பட்டதாகும் எனக்கொள்ளலாம். ஒருவாறு ஐந்நூறு புலவர்களே எனக்கொள்ளினும் ஒரு நூற்றாண்டுக்கு நூறு புலவரா கக்கொண்டாலும், இவர்கள் இருந்த கடைச்சங்கம் ஐந்து நூற்றாண்டளவுக்கு நிலைநின்றிருக்கவேண்டும். எனவே கடைச்சங்க காலம் கி. மு. 300 முதல் கி. பி. 200 வரை அல்லது கி. மு. 200 முதல் கி. பி. 300 வரை என நிதானிக்கலாம்.

கடைச்சங்க நூல்களில் பெயர் வழங்கும் புலவர் கிட்டத்தட்ட ஐந்நூற்றுவர் எனக் கூறப்பட்டது. இவருள் பெரும்பாலார் இன்னாரென அறிதற்கிடமில்லை. ஒருவாறு இன்னாரென அறியக்கிடந்தவர் இருநூறு புலவரே. இவருள் வேளாளர் ஐம்பத்தொருவர். பெண் பாலார் முப்பத்தாறுவர். அந்தணர் இருபத்தொன்பதின் மர். நாகர் பதினெழுவர். எயினர் பதின்மூவர். கம்மா ளர் எழுவர். வணிகர் எழுவர். மள்ளர் ஐவர். ஆயர் மூவர். குயவர் ஒருவர். பரதவர் ஒருவர். வள்ளுவர் ஒருவர். பாண்டிய மன்னர் பதின்மூவர். சேரமன்னர் எழுவர். சோழமன்னர் ஒருவர். தொண்டைமான் ஒருவர்.

இக்கணக்கை யுற்றுநோக்குமிடத்து அக்காலக் கல் வித் தேர்ச்சியின் பெருமை இனிது விளங்கும். ஆடவ ரேயன்றி அரிவையரும் கலைபயின்று புலமை வாய்ந் திருந்தனர். அன்றியும் அவர் ஆடவர் குழுமிய அவைக் களத்தும் அரசசபைகளிலும் அஞ்சாமற் சென்றும் அறிவுறுத்தியும் வந்தனர். அரசராற் சன்மானிக்கப்

பட்ட பெண்பாலரும் பலர். மேலும் பற்பல தரப்பட்ட பல மரபினரும் கலைபயின்றுங்கிய காலமிது. குறமகள் எயினி முதல் கணக்காயர்குல அந்தணர் வரை ஒக்கக் கலைபயின்றிருந்ததாகத் தெரிகிறது. கல்விப்பயிற்சி அரசாங்கத்தாரால் வலியுறுத்தப்பட்டதெனக் கோடற்கு இடமில்லையெனினும், கற்றோர் மற்றோரினுமதிகமாய் மரியாதை செய்யப்பட்டமையானும், கற்றவர்க்கு அரசர் முதலிய பெரியோரால் சன்மானம் முதலியன ஏற்பட்டிருந்தமையாலும், ஜாதிபேதமின்றிக் கற்றவரையெல்லாம் ஒருங்கு பாராட்டும் வழக்கமிருந்தமையானும், அக்காலத்தில் கல்வியறிவு அதிகமாயிருந்ததுபோலும். வேறெந்நாட்டினும் தமிழ் நாட்டில் புலவரைப் பெரிதும் போற்றிவந்தனரென்பது சேரமன்னர் தம்மைப் பாடிய புலவர்க்கு நாட்டுவரிகளையும் எண்ணிறந்த ஊர்களையும் கொடுத்தமையின் விளங்கும். நார்முடிச்சேரலைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனர் நாற்பது நூறுயிரம் பொன் பெற்றனரெனவும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடிய நச்செள்ளையார் ஒன்பது காப்பொன்னும் நூறுயிரம் காணமும்; செல்வக்கடுங்கோவாழியாதனைப்பாடிய கபிலர் நூறுயிரம் காணமும் நன்றுவென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடு முழுவதும்; பெருஞ்சேரலிரும்பொறையைப் பாடிய அரசிலகிழார் ஒன்பது நூறுயிரம் காணமும் அரசு கட்டிலும்; இளஞ்சேரலிரும் பொறையைப் பாடிய பெருங்குன்றூர் கிழார் மூப்பத் தீராயிரம் காணமும் பிறவும் பெற்றனர் எனப் பதிற்றுப்பத்தில் கூறப்பட்டனவற்றை நோக்குமிடத்து அக்காலப்புலவர் பெருந்தகையார் எங்ஙனம் பரிபாலிக்கப் பட்டனரென்பது தெரியவரும்.

மேற்காட்டிய நானூற்றெண்பத்தாறு புலவர் கடைச் சங்க நூல்களென நமக்கெட்டியுள்ள எட்டுத் தொகைகளாகிய புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகிய எட்டு நூல்களினுமுள்ள செய்யுட்களைப் பாடியவராவார். இவருள்,

கபிலர் பரிபாடல் தவிர்ந்த ஏனைய ஏழு தொகைகளினும் பாடியவர். பத்துப்பாட்டுள் ஒன்றுகிய குறிஞ்சிப்

பாட்டுப்பாடியவரும், இன்னு நாற்பது பாடியவரும் இவரே.

ஓரம்போகியார் செய்யுட்கள் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு ஆய ஐந்து தொகைகளில் காணப்படுகின்றன.

பாலைபாடிய பெருங்கடுங்கோ. அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, புறநானூறு ஆய ஐந்து தொகைகளில் இவர் பாடல்கள் காணப்படுகின்றன.

பரணர். இவர் பாடல்கள் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய ஐந்து தொகைகளில் வழங்குகின்றன.

பெருங்குன்றூர் கிழார். இவர் பாடல்கள் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய ஐந்து தொகைகளில் காணப்படுகின்றன.

மதுரை மருதனிளநாகனார். இவர் பாடல்கள் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, புறநானூறு ஆகிய ஐந்து தொகைகளில் காணப்படுகின்றன.

பாரதம் பாடிய பெருந்தேவனார். இவர் பிற்காலத்தவர். கடைச்சங்கப் புலவரல்லர். இவர் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு ஆகிய ஐந்து தொகைகளுக்குக் காப்புச் செய்யுள் இயற்றியுள்ளார்.

அம்மூவனார், ஆலங்குடி வங்கனார், இடைக்காடனார், உலோச்சனார், உறையூர் முதுகூத்தனார், ஐயூர் முடவனார், ஔவையார், கயமனார், கருவூர் கதப்பிள்ளைசாத்தனார், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரை யாசிரியன் நல்லந்துவனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர், மதுரைக்காஞ்சிப் புலவர் மாங்குடி மருதனார், மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார், மோசிகீரனார், வடமவண்ணக்கன் பேரிசாத்தன் எனும் பதினெண்மர் நாலு தொகைகளில் பாடியவராவார்.

மும்மூன்று தொகைகளுக்குச் செய்யுள் வழங்கினோர் முப்பத்தொருவர். அறுபத்தெண்மர் இவ்விரண்டு தொகைகளில் பாடியவர். மீந்தவர் செய்யுட்கள் ஒவ்வோர் தொகையில்மாத்திரங் காணப்படுகின்றன.

இவர்கள் பாடியுள்ள செய்யுட்களின் தொகைகள் வருமாறு:—

1. கபிலர்..... 236	8. பாலைபாடிய பெருங் கடுங்கோ..... 68
2. அம்மூவனார்..... 127	9. ஔவையார்..... 58
3. பரணர்..... 126	10. நல்லந்துவனார்..... 39
4. ஓரம்போகியார்..... 109	11. உலோச்சனார்..... 35
5. பேயனார்..... 105	12. நக்கீரனார்..... 35
6. ஓதலாந்தையார்.... 103	13. மாமூலனார்..... 30
7. மருதனிளநாகனார். 80	

மீந்தவருள் 10 முதல் 29 செய்யுட்கள் வரை பாடியவர் இருபத்து நால்வர். 5 முதல் 9 செய்யுட்கள் வரை பாடியவர் முப்பத்திருவர். 4 முதல் 2 செய்யுட்கள் வரை பாடிய புலவர் நூற்றுப்பதினொருவர். மீந்தவர் செய்யுட்கள் ஒவ்வொன்று மாத்திரம் காணப்படுகின்றது.

எட்டுத் தொகையும் பூர்வகாலச் சரிதவாராய்ச்சி செய்வார்க்கு இன்றியமையாதனவாதலின் அவற்றைப் பாடியுள்ள புலவர் சரிதமும் அறிதற்பாலன வென்பது ஒருதலை. அவர் அனைவருடைய சரிதங்களையும் விரிக்கிற் பெருகுமாதலின் அவருள் நால்வருடைய சரிதங்கள் மாத்திரம் இங்கு ஒருவாறு சுருக்கமாய் வரைவோம். பிறபுலவர்கள் சரிதங்களை இங்ஙனமே தொகுத்துக் கொள்க.

கபிலர். இவர் 'யானே பரிசிலன் மன்னுமந்தணன்' (புறம். 200) எனவும், 'அந்தணன் புலவன் கொண்டுவந்தனனே' (புறம். 201) எனவும், தாமே தம்மைப்பற்றிக் கூறுவதினாலும், 'பொய்யா நாவிற் கபிலன்' (புறம். 174) எனவும், 'புலனழுக்கற்ற அந்தணாளன்' எனவும் பிறரால் கூறப்படுகின்றமையானும் அந்தண மரபினரென்றும், நல்லொழுக்கம், வாய்மை முதலியன பொருந்தியவரென்

றும் தெரிகின்றது. இவர் காலத்திருந்த சேரவரசன் செல்வக்கடுங்கோ வாழியாதன் (புறம். 8, 14). இவ்வாதனுடைய கொடைச் சிறப்பையும் போர் வன்மையையும் கபிலர் பலபடப் புகழ்ந்து கூறியுள்ளார். மலையமான் திருமுடிக்காரியைப் பாடிப் பரிசுபெற்றவர். காரியின் நாடு பெண்ணையை யடுத்ததெனவும், அவன் முள்ளூர் மலைக்கு வேந்தனெனவும் அப்பாடல்களில் கூறுகின்றனர். வையாவிக்கோ பெரும்பேகன் தன் மனைவியாகிய கண்ணகியைத் துறந்த சமயத்தில் அவளை அவன் மறுபடியும் ஏற்றுக்கொள்ளும்படியாக இவர் அவனிடம் சென்று பரிந்து பேசிப் பாடினர் (புறம். 143). வேள் பாரியினுடைய நெருங்கிய நண்பர். பன்னாள் அவனுடனுறைந்தவர் எனக் கூறுதற்கிடமுண்டு. பாரியின் ஈகையின் பெருமையைப் பலவாறு புகழ்ந்து பாடுகின்றனர். தமிழ் நாட்டு மூவேந்தரும் பாரியின் பறம்பு நாட்டைக் கவர்ந்துகொள்ள வந்து முற்றிக்கையிட்ட சமயம் கபிலர் பாரியின் வள்ளன்மையைப் புகழ்ந்து கூறி அம்மூவரும் பரிசிலர்போற் பாடிச்செல்வின் பாரி தன் நாட்டை அவர்க்கு ஈவான் எனப் பரிகசித்துரைத்தனர். முற்றிக்கை காலத்து முழுவதும் பாரியுடனேயேயிருந்தவர். பின்னர் பாரி மூவேந்தரால் வஞ்சனையால் கொல்லப்பட்டபோது, பாரியின் பறம்பை விட்டுப் பிரிவார், கல்லும் கசிந்துருகுமாறு பாடியுள்ள பாடல்கள் எவர் மனதையும் கரைக்க வல்லன. அச்சமயம் அவர் பாரியின் பெண்மக்கள் இருவரைத் தம்முடன் கொண்டுபோய் அவர்களை (புறம். 200) இருங்கோவேள் (புறம். 201) முதலியவர் மணந்துகொள்ள வேண்டியும் அவர்கள் மறுத்தமையின் அவர்களைப் பார்ப்பாரிடம் ஒப்புவித்துத் தாமும் பாரியின் பிரிவாற்றாமே வடதிசையில் பட்டினி கிடந் துயிர்நீத்தனர் (புறம். 236). புலையன் யானை மீதிவர்ந்து துடிமுழக்கும் அக்கால வழக்கத்தைக் கூறுகின்றனர் (நற். 77). குறிஞ்சித்திணையைப் பாடுதலில் வல்லார். அகத்திணைப் பொருளனவாய் இவர் பாடிய செய்யுட்கள் பல நற்றிணையிலும், குறுந்தொகையில் இரண்டொன்றும் கிடைக்கின்றன. பத்துப் பாட்டின் பகுதியாய குறிஞ்சிப் பாட்டைப் பாடியவரும் இவரே

ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணை நூறு பாடல்களும் இவர் பாடினவையே. கலித்தொகையில் குறிஞ்சிக் கலி பாடியவரும் இவரேயாவார். இன்னாநாற்பதும் இவர் பாடியன. அக்கால அந்தணர் மதுவருந்துவோரும் ஊனுண்போரும் புற்று ஈசலையாக்கிப் புசிப்போருமாயிருந்தனரென்பது கபிலர் சரித்திரத்தினின்று தெரிகிறது (புறம். 113, 119). இவர் ஔவையார், வள்ளுவர், இடைக்காடர் முதலியவரின் உடன் பிறந்தோரெனக் கூறும் பல கதைகள் தமிழுலகில் லுலவுகின்றன. அவை நம்பத்தக்கனவல்ல.

ஔவையார். இவரைப்பற்றிய கதைகளும் பல. ஔவையாரெனும் பெயருடன் பிற்காலத்திருந்தவரும் உளர். எனினும் இவர் அவரினும் வேறுளர். இந்த ஔவையார் பாணர் சாதியிற் பிறந்த விரலிபோலும் (புறம். 89). அரசரேயாயினும் தம்மை ஒரு சிறிது அலக்ஷியம் செய்வதாகக் கண்டால் அவரை வெகுண்டுரைக்கும் இயல்பினர் (புறம். 206). அதியமானுற் கொடுக்கப்பட்ட அருநெல்லிக்கனியைப் பெற்று அவனைப் புகழ்ந்தனர் (புறம். 91). அதியமானஞ்சியிடம் நெருங்கிய பழக்கமுடையவர். பெண்பாலரேயாயினும் வீரரையும் வீரத்தன்மையையும் பலபடப் புகழ்ந்து பாடியுள்ளார் (புறம். 87).• அதியமானஞ்சியின் எவலால் தொண்டைமானிடம் ஔவையார் தூதுசென்ற சமயத்தில் தொண்டைமான் ஆயுதசாலையைத் திறந்து இவருக்குக் காட்ட உடனே ஔவையார் தொண்டமானைப் பரிகசிக்கும் முகத்தால் 'நீர் உமது ஆயுதங்களுக்கு எண்ணெய் தடவி அவற்றையறையினுள் பூட்டி வைத்திருக்கின்றீர். எமது இறைவனுகிய அதியமானஞ்சியோ வீரமே புகழாக்கொண்டு தம் பகைவரைத் தேடிச் சென்று அவரோடு பொருதலால் அவன் ஆயுதங்கள் எக்காலமும் கொல்லுலையே கிடப்பன' எனத் தொண்டைமான் நாணக்கூறிய விவரம் வியக்கத்தக்கது (புறம். 95). அதியமானெடுமானஞ்சி யிறந்தகாலத்து இவர் புலம்பிய பாடல்கள் நெஞ்சை யுருக்குவன (புறம். 231, 32, 35). ஒரு சமயம் தமிழ் நாட்டு மூவேந்தரும் ஒருங்குகூடியிருக்கக்கண்ட இவர் அம்மூவரையும் ஒரே செய்யுளி

ஞல் வாழ்த்தியிருக்கின்றனர் (புறம். 367). அக்காலம் இவர் வயோதிக தசையுற்றனர்போலும். இவர் பாடிய நற்றிணையில் 7, குறுந்தொகையில் 15, அகத்தில் 4, புறத்தில் 33 ஆக 59 செய்யுட்கள் கிடைத்திருக்கின்றன.

நக்கீரர். இவர் வாளரத்தால் வளைதுமித்த வேளாப் பார்ப்பார் மரபினைச் சேர்ந்தவர். வளையல்கள் செய்வதே இவர் தொழில்போலும். எனினும் இவர் இலக்கிய இலக்கணங்களில் மிகவும் கற்றுத்தேர்ந்து கடைச்சங்கப் புலவருள் தலைமை வகித்திருந்தார். 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி' எனும் பாசுரத்தின் (குறு. 2) சம்பந்தமாய்ச் சிவபிரான்மீதும் குற்றஞ்சாட்டிச் சாபமெய்தியிருந்தவர். தம்மைக் கொல்ல வெண்ணிய இராசூதனினின்று விடுபடுமாறு திருமுறுகாற்றுப்படை பாடினர். பாண்டியன் நெடுஞ்செழியன் மீது நெடுநல்வாடை பாடினர். இவர் பாடியுள்ளவற்றிற் சில பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. புறநானூற்றில் இவர் பாடியுள்ளன இரண்டு செய்யுட்களே. மதுரை நக்கீரர் வேறு, இவர் வேறு என்று கூறுவாருமுளர். பாண்டியன் இலவந்திகைப் பள்ளிதுஞ்சிய நன்மாறனைச் சிவன், முருகன், சூரியன் முதலிய தேவர்களுக்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளார் (புறம். 56). அச்செய்யுளிலேயே அக்காலத்து யவனர் தமிழ் நாட்டுக்குக் குப்பிகளில் மதுபானம் கொண்டு வரும் வியாபாரத்தைக் கூறுகின்றனர். திணைப்புனத்தில் முதல் கதிர்களிற் சிலவற்றைத் தெய்வத்திற்கென ஒதுக்கி வைப்பது அக்கால வழக்கம் என்பது இவர் பாடிய (குறு. 105) செய்யுளிலிருந்து தெரியவருகிறது. அக. 36-ல் பாண்டியன் நெடுஞ்செழியன் தமிழ்நாட்டிருபெருவேந்தரையும் குறுநிலமன்னரைவரையும் வென்ற விவரத்தை விரித்திருக்கின்றனர். கொடித்தேரையுடைய பாண்டியன், சேரன் துறைமுகமாகிய முசிறியை முற்றிக்கையிட்ட ஞான்று புண்பட்டவரைப்பற்றிக் கூறியிருக்கின்றனர் (அகம். 57). பாரியின் பறம்பைத் தமிழ் மூவேந்தரும் முற்றியிருந்த நாளில் பாரியும் உடனிருந்த கபிலர் முதலியோரும் புறக்கள் கொய்துவந்த

நெற்கதிரால் ஜீவித்த விவரத்தைக் கூறியிருக்கின்றனர் (அகம். 78). இங்ஙனமாக இங்குமங்கும் பல பாடல் களிற் சரித்தக்குறிப்புகளுடன் பாடியுதவியிருக்கின்றனர். இவர், ஒருவன் சாவவும் உயிர் பெறவும் பாடவல்ல தெய்வப் புலவர் எனவும் கூறுவார்.

மாமூலனார். இவர் அந்தண குலத்திலுதித்தவர். யோகி போலும். மாமூலர் எனும் பெயருடன் பிற்காலத்திருந்தவர் வேறு. புறத்திணைத் தொகைகளாகிய புறநானூறு, பதிற்றுப்பத்து இரண்டினும் இவர் பாடியனவாகயாதும் காணப்படவில்லை. இவர் பாடியன யாவும் அகச்சுவை பற்றியனவே. இவரை நினைந்த மாத்திரையே அகச் சுவை மலிந்த சீவகசிந்தாமணியைப் பாடிய மூற்றத் துறந்த திருத்தக்கத் தேவர் ஞாபகம் வரும். இவர் சரிதமெனக் காணத்தக்க விவரங்கள் அகப்படவில்லை. எனினும் இவர் பாடிய பாடல்களோ அக்கால சரித்திர ஆராய்ச்சிக்கு மிகவும் பயன்படுவன. இவர் பாடல்களில் பெரும்பாலும் அரசர், அவர் படையெழுச்சி, நாட்டு வளம், போர் முதலியன விவரிக்கப்பட்டுள்ளன.

கள்வர் தலைவனாகிய புல்லியென்பானுடைய வேங்கட மலையைப்பற்றிப் பலவிடங்களில் கூறியிருக்கின்றனர் (அகம். 61, 311, 359, 393, நற். 14). சேரலனுடைய கழுமலத்தை சோழன் கிள்ளிவளவன் அழித்துத் தீ மடுத்த விவரம் நற். 14-ல் கூறுகிறார். அக்காலம் தமிழ் வழங்கிய எல்லையைத் திட்டமாய்க் குறித்து அது வேங்கடம் வரையும் பழவேற்காடுவரையும் எனக் கூறியிருக்கின்றனர் (குறு. 11, அகம். 211, 295). குறுநில மன்னன் ஆவியையும் அவன் மலையாகிய பொதினி (பழனி) யையும் கூறியிருக்கின்றனர் (அகம். 1, 61). நன்னன், அவனது பாழியூர், கோசர், துளுவ நாடு முதலியவற்றின் விவரங்களை அகம். 15, 97, 349 முதலிய செய்யுட்களில் கூறியிருக்கின்றனர். சேரலாதன் கரிகாற் சோழனோடு வெண்ணில் என்னுமிடத்தில் பொருது புண்பட்டு நாணி வடக்கிருந்தான் என்பது அகம். 55-ஆல் தெரிகிறது. பாரதப் போரில் பெருஞ்சோறு கொடுத்து முதியர்ப்பேணிய உதியன் சேரல் விவரத்தைக் (அகம். 65, 233) கூறுகிறார்.

சேரலாதன் கடலிற்சென்று கடம்பெறிந்து இமையத்தில் வில்பொறித்த பெருமையுடையவன், மாந்தையில் பகையரசர் திறைகொணர வீற்றிருந்தவன் என்பர் (அகம். 127, 347). இவர் பாடிய ஒன்று (அகம். 201) பாண்டியனின் துறைமுகமாகிய கொற்கை முத்தும் வலம்புரிச்சங்கு முடையதெனக் கூறும். நந்தருடைய செல்வம், கோசர் பொதியமலைப் படையெடுப்பு, மோகூர் பணியாமை, மோரியர் புனைதேர் நேமியுருளும் படி குறைத்த மலை முதலியவற்றின் விவரங்களைத் தெற்றென விளக்கி யுரைக்கின்றனர் (அகம். 265). எழினியின் பல்லைப் பிடுங்கித் தன் வாசலிலழுத்திய மத்தியின் விவரம் ஒன்றில் (அகம். 211) குறிக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனமாக இவர் கூறும் சரித்திர விஷயங்கள் பல.

இன்னும் பல புலவர் இவ்வாறான சரித்திர விஷயங்கள் பலவற்றைத் தம் செய்யுட்களுக்கிடையே பொதிந்து வைத்து உலகுக்குபகரித்திருக்கின்றனர். தமிழ்மக்களிவற்றை யாராய்ந்து தம் முன்னோர் செயல்களை யறிந்து கொள்ளாதிருத்தல் விசனிக்கத்தக்கதே.

இனிக் கடைச்சங்க காலத்தில் தமிழ் நாட்டின் நிலையாதென ஆராய்வாம்.

நாட்டுப் பிரிவு. கடைச்சங்ககாலத் தமிழ்நாடு தெற்கே கன்னியாகுமரிவரை எட்டியிருந்தது. தற்காலம் பிராஞ்சியர் வசமிருக்கிற மாஹி என்னுமிடத்திலிருந்து கிழக்கே மைசூர் இராச்சியத்துட்பட்ட கோலார் வழியாய்த் திருப்பதிக்கப்பால் பழவேற்காடு வரையும் ஒரு கோடிட்டால் அதுவே தமிழ் நாட்டின் வடவெல்லையாயிருந்தது. எனினும் பழவேற்காட்டுக்கப்பால் நெல்லூர்க்கு அப்பக்கம்வரை காலாகாலங்களில் தமிழரசர் அரசாட்சி எட்டியிருந்ததெனக் கூறுதற்குமிடமுண்டு.

இவ்விரு எல்லைகளுக்குட்பட்ட நாடு தமிழ்நாடென வழங்கித் தமிழ் மூவேந்தரெனவழைக்கப்பட்ட சேர, சோழ, பாண்டியருடைய ஆதீனத்திலிருந்தது. இவற்றுள்:—

சேர நாடு. சேரர் பனந்தாரும் வில்கொடியுமுடையார். தற்காலக் கொச்சி, கோயம்புத்தூர், நீலகிரி, கோலார்

வரையுள்ள மைசூர் நாடு, சேலம், சேர மன்னர் ஆதீனத்திலிருந்தன. பொருணை யாற்றங்கரையிலிருந்த கருவூர் (வஞ்சி யெனவுமழைக்கப்படும்) இதன் முக்கிய தலைநகரி. தொண்டி, முசிறி முதலியன துறைமுகப்பட்டணங்களாக விருந்தன.

சோழ நாடு. சோழர் ஆத்தி மாலையும் புலிக்கொடியுமுடையார். தற்காலத் திருச்சினுப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, நெல்லூர் முதலிய ஜில்லாக்கள் இவராதீனத்திலிருந்தன. காவிரியாற்றின் சங்கமுகத்திலிருந்த காவிரிப்பூம்பட்டினமும் உறையூரும் இந்நாட்டின் தலைநகரிகளாய் வெவ்வேறு சமையங்களிலிருந்தன. காஞ்சிபுரம் சிறிய ராஜதானியாயிருந்தது.

பாண்டிய நாடு. பாண்டியர் வேம்பு மாலையும் மீனக்கொடியுமுடையவர். தற்காலத் திருநெல்வேலி, தென் திருவாங்கூர், இராமநாதபுரம், மதுரை ஜில்லாக்கள் இவர் ஆதீனத்திலிருந்தன. வைகை யாற்றின் கரையடுத்த மதுரை இவர் தலைநகரியாயிருந்தது. கொற்கை இவர்க்கு முக்கிய துறைமுகம்.

இம்மூவேந்தர் நாடுகளும் ஒருவாறு குறிக்கப்பட்டனவேனும் அவை அவற்றையாளும் அரசருடைய வலி, வலியின்மைக்குத் தக்கவாறு கூடியும் குறைந்தும் காலாகாலங்களில் இருந்ததுண்டு.

இவரேயன்றி இவருக்குக் கீழ்ப்பட்டவராயும் சுயாதீனராயுமிருந்த பற்பல சிற்றரசர் மேல்காத் மலைத்தொடர் அடிவார மார்க்கமாய் மைசூர் இராஜ்யம்வரையிருந்தனர். இவருட் பெரும்பாலார் மலைநாட்டரசர். சேர, சோழ, பாண்டியர் போர் செய்யப்போகும் காலங்களில் இம்மலைநாட்டுச் சிற்றரசர் துணைவேண்டிச் செல்வதும், துணை செய்யுமாறு அக்குறுநில மன்னருக்குப் பொருள்கொடுப்பதும் வழக்கமாயிருந்தது. சங்க நூல்களில் பேர்வழங்கும் சிற்றரசராவார்:—

பொதியமலைத் தலைவனாகிய ஆய். பொதியில்மலை பாண்டியரைச் சேர்ந்தது. இந்த ஆய் என்பான் ஒரு

சமயத்தில் கொங்கணரை ஓட்டி ஜெயங்கொண்டான். சுர புன்னைமாலை இவனுக்குரியது.

குறவர் தலைவனுகிய ஏறைக்கோன். இவன் காந்தட் பூக்கண்ணியன்.

பெண்ணையாற்றங்கரை முள்ளூர் மலைக்குத் தலைவ னுகிய காரி. கோவலூர் இவன் தலைநகர்.

குதிரைமலைத் தலைவனுகிய பிட்டன்.

ஏறுமானுட்டி மாவிலங்கைத் தலைவன் நல்லியக் கோடன். வேலூர் ஆமூர் முதலியன இவனுடைய நக ரங்கள்.

கோடைமலை, கடியநெடுவேட்டுவனுடையது.

கொல்லிமலை, இது சேரற்குரியது. இதன் தலைவன் ஓரி.

பறம்பு நாடு, இதற்குரியான் வேள்பாரி.

நல்லூர், வேள்பேகனுடையது.

முதிரமலை, குமணனது.

வேங்கடமலை, ஆதனுங்கனைச் சேர்ந்தது.

மிழலைக்கூற்றம் முத்தூற்றுக்கூற்ற முதலியன வேள் எவ்வியைச் சார்ந்தன.

நாஞ்சில்மலை, நாஞ்சில் வள்ளுவனைச் சேர்ந்தது.

பல்குன்றக்கோட்டம் பெண்கொலை புரிந்த நன்னனைச் சேர்ந்தது.

கொங்கணமலைநாடு. இங்ஙனமாய மலைநாடுகள் இன் னும் சிற்சில உள.

அரசாட்சி. அரசர் குடிகளிடத்து இடையறுத அன் புடையராய் அரசாட்சி முறையை நன்குணர்ந்து நாட் டின் வளம் பெருகுதற்கான சாதனங்களைக் கையாடி வந் தனர். பிறநாட்டரசர் படையெடுத்து வருவாரெனும் பய மின்றிக் குடிகள் உயிர்வாழுமாறு தக்க புஜபலமும்

ராணுவபலமுமுடையராயிருந்தனர். செல்வ வளர்ச்சிக் கேதுவான பயிர்த்தொழில், கைத்தொழில், உள்நாட்டுப் புறநாட்டு வியாபாரம் முதலியன செழித்தோங்குதற் கேதுவாய்த் தேசத்தில் சமாதானம் நிலைத்திருக்குமாறு செய்யுங் கருத்துடையரா யிருந்தனர். ஆதிலொரு கடமை வாங்குவது வழக்கமாயிருந்தது.

அரசனுடைய ஆலோசனைச் சங்கம் ஐம்பெருங் குழுவினராலாயது. ஐம்பெருங்குழுவினராவார்:

1. புரோகிதர். இவர் வேதமோதி, யாகங்கள் செய்து, பிரமந் தாங்களேயாய், இம்மை நின்றே தேவ ருலகஞ் சேரும் தருமநெறி தப்பாத சிலர்.

2. அமைச்சர். இவர் பொய்யுரையாத நாவினர். அரசன் மனக்கிடக்கையை யறிந்து அவன் தன் உறவினர் மாட்டும், நண்பரிடத்தும், குடிகளிடத்தும் நடந்துகொள்ளவேண்டிய வழிகளைக்கூறி, அவன் தீநெறி செல்லாவாறு தடுத்து அவனை யடக்கியாளும் வலிமையும் ஆழ்ந்த அறிவும் பரந்த ஞானமும் உடையவர். இவர்களுக்கு அரசன் 'காவிதிப்' பட்டம் சூட்டலுமுண்டு.

3. சேனாபதியர். இவர் மிகுந்த வீரமுடையவர். வீரக் கழலணிந்தோர். இவர்களுக்கு அரசன் 'ஏனாதிப்' பட்டம் சூட்டலுமுண்டு.

4. தூதர். இவர் பிறநாட்டரசரோடு சந்து செய்யுங் காலங்களில் அவ்வந்நாடுகளுக்கேகி அரசரைக் கண்டு பேசி வருபவர்.

5. ஒற்றர். இவர் பிறநாட்டில் நடக்கும் காரியங்களை யுடனுக்குடனே தம்மரசருக்கு அறிவித்து வருபவர்.

இவ்வைம்பெருங்குழுவினரும் கூடிய சபையில் அரசன் வீற்றிருந்து தேசகாரியங்களை நடத்திவருவது வழக்கமாயிருந்தது. பொது விஷயங்களை அரசன் ஐம்

பெருங்குழுவினருடன் இருந்து ஆலோசிப்பதேயன்றி அக்குழுவினருள் ஒவ்வொருவருடனும் தனித்தனியே ஆலோசிப்பதுமுண்டு.

நீதி நடத்துதற்கு நீதிச்சாலைகளிருந்தன. அவற்றை நடுநிலை பிழையா அறங்கூறவையங்கள் என அழைத்து வந்தனர். இவ்வவையங்களில் செல்வரெனவும் வறியரெனவும் பாராமே எத்தரத்தவர்க்கும் ஒன்றுபோல் நீதி செய்யப்பட்டுவந்தது.

இரவு பகலாய் நகரைக் காவல்செய்யும் நகர்க் காவலாளர் (போலீசார்) வெகு பெயரிருந்தனர். இவர் புலி போலுநர். துயில்கொள்ளாக் கண்ணர். அஞ்சா நெஞ்சர். களவு தொழில் தந்திரங்களைக் கண்டறியும் திண்ணிய அறிவினர். குறிதப்பா அம்பினர். தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்தோடும் காரிருள் கவிந்த யாமங்களினும் இவர் இளைப்பின்றி ஊர் சுற்றி வருவார். கருத்த உடலினராய்க் கருஞ்சேலையுடுத்து வாள் கைக்கொண்டு மென்னூலேணி அரையிற் சுற்றி விழித்த கண் இமைக்குமுன் மறைந்தோடும் வலியுடைய கள்வரையும் கடிதிற் பிடித்துக்கொணரும் ஆற்றலுடையவர்.

கைத்தொழில். பயிர்த்தொழிலும் நெசவுத் தொழிலும் முக்கிய கைத்தொழில்களா யிருந்தன. ஆறுகளில் செல்லும் நீரைக் குளங்களில் கொண்டுவந்து நிரப்பிக் கழனிகளிற் பாய்ச்சி வந்தனர். நீர் குறைந்த காலங்களில் குளங்களினீரை இடாவால் முகந்தும் ஏற்றமிட்டிறைத்தும் கழனிகளிற் பாய்ச்சி வந்தார். மூங்கில், தோரை நெல், அகில், வெண்சிறுகடுகு, ஐவனநெல், இஞ்சி, மஞ்சள், தினை முதலியன மலைநாட்டு முக்கிய விளைவுகள். முத்து, சங்கு, வெள்ளுப்பு முதலியன கடலில் உண்டாவன. விளைத்த கருமபுகளை ஆலையிலிட்டு ஆட்டிச் சர்க்கரை செய்துவந்தனர். பருத்தி நூல் நூற்பது பெரும்பாலும் பெண்டிர் வேலையேபோலும். வஸ்திரம் நெய்தல் சிறந்த தொழிலாயிருந்தது. கடல்நீரைப் பாத்திகளிற் பாய்ச்சி உப்பு விளைத்தனர். கடல் மீன்களைத் துண்டம் கண்டு கருவாடிட்டனர்.

வியாபாரம். உள்நாட்டு வர்த்தகம் ஏராளமாய் நடந்து வந்ததுண்டு. அங்கங்கே சுங்கங்கள் ஏற்பட்டு வர்த்தகச் சரக்குகளுக்குத் தீர்வை வசூலித்தனர். மேருமலைப் பொன், குடகுமலை மிளகு, பொதியின்மலைச் சந்தனம், கீழ்கடல் முத்து, சங்கு, கங்கைக் கரையிலுள்ள பிறவிளைவுகள் முதலியன முக்கிய உள்நாட்டு வர்த்தகச் சரக்குகளாயிருந்தனபோலும். அன்றியும் உமணர் தாம் கடற்கரைகளில் விளைத்த உப்பை மூட்டைகளிலிட்டு வண்டிகளிலேற்றி ஊரூராய்க் கொண்டு சென்று வியாபாரம் செய்தனர். நெல்லும் மற்றுணைப்பொருள்களும் அவ்வாறே வியாபாரம் செய்யப்பட்டன. கடைத்தெருக்களில் உள்நாட்டுப் புறநாட்டு வியாபாரச் சரக்குகள் நெருங்கிக் கிடப்பன.

வெளிநாட்டு வர்த்தகத்திற்கோ குறைவில்லை. குடநாட்டார் தாம் விளைத்த மிளகைக் கப்பல்களிலேற்றிப் பிறவிடங்களுக்கனுப்பி வந்தனர். மேலுலகிலிருந்து ஏராளமான குதிரைகள் தமிழ் நாட்டுத் துறைமுகங்களில் வந்திறங்கின. ஈழத்திலிருந்தும், கடாரத்திலிருந்தும் (பர்மா) நாகரும் பண்டங்கள் வந்திறங்கின. சீனம் முதலிய கீழ் தேசங்களிலிருந்து கர்ப்பூரம், பனிநீர், குங்குமம் முதலியவைகளும் மேல் தேசங்களிலிருந்து மதுபானவகைகளும் இறக்குமதியாயின. தமிழ்நாட்டிலிருந்தோ பலவகையான வாசனைச் சரக்குகள், மிளகு, மெல்லிய வஸ்திரங்கள், பட்டுகள், முத்து, பவளம் முதலிய பல அரிய பண்டங்கள் அக்காலம் நாகரீகமடைந்துள்ள சகல நாடுகளுக்கும் ஏற்றுமதியாகி வந்தன.

தமிழ்நாட்டு முக்கிய துறைமுகங்களாகிய காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, முசிறி, கொற்கை முதலிய துறைகளில் தமிழர் மரக்கலங்களும் புறநாட்டு மரக்கலங்களும் பாய் மரங்களையுயர்த்தி நிற்பன காடுகள் போற் றோன்றுவன. அன்றியும் கப்பல்களில் ஏற்றுவதற்குக் காத்திருக்கும் சரக்கு மூட்டைகளும் இறக்குமதியான சரக்கு மூட்டைகளும் துறைமுகங்களில் வெகு உயரம் அடுக்கப்பட்டுக் குவிந்து கிடக்கும். இப்பொதிகளிலெல்லாம் அவ்வந்நாட்டு அரசர் முத்திரை பொறிக்

கப்பட்டிருக்கும். ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகள் யாவும் சுங்கங்கொள்வோரால் பரிசோதிக்கப்பட்டுத் தீர்வை கொடுத்த பின்னரே வெளியிலனுப்பப்படும்.

கடலில் செல்லும் மரக்கலங்களுக்கு வழி காட்டுதற்கும், துறைமுகங்களைக் காட்டுதற்கும், கடற்கரைகளில் ஆங்காங்கே தீபஸ்தம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன. இவற்றைக் 'கலங்கரை விளக்கம்' என்றழைத்து வந்தனர். இவ்விளக்கங்கள் இரவெலாம் இடைவிடாதெரிந்து வந்தனபோலும். இத்துறைமுகப் பட்டணங்களிலும் அரசர் தலைநகரிகளிலும் பிறநாட்டு வர்த்தகரும் தொழிலினருமாகிய பல ஜாதியார் வசித்து வந்தனர். யவனர் (கிரேக்கர், ரோமர் முதலியவர்) சோனகர் (அராபியர்), முதலியவரும் பிறநாட்டாரும் வெவ்வேறு தெருக்களில் வசித்து வந்தனர்.

தமிழ்நாட்டு வியாபாரப் பிரசித்தியைப்பற்றி அக்கால மேனாட்டுச் சரித்தாசிரியர் பல விடங்களில் கூறியிருக்கின்றனர். அவற்றின்படி கி. பி 18-ம் யாண்டிலிருந்த ஸ்ட்ராபோ என்பவர் பாரமேற்றி இந்தியாவிற்குச் செல்லும் நூற்றிருபது கப்பல்களைத் தாம் கண்டதாகக் கூறுகின்றார். ப்ளினியென்பவர் (கி. பி. 78) இந்தியாவிலிருந்து ரோமராஜ்யத்திற்கு வருடந்தோறும் ஏற்றுமதி யாகும் சரக்குகளின் விலை ஐந்து கோடியே ஐம்பது லக்ஷம் ஸெஸ்டர்கள் (9,86,979 பவுண்) என எழுதுகிறார். பெரிப்ளஸ் எனும் நூலில் 'தொண்டி, முசிறி எனும் துறைமுகங்களில் இந்திய வியாபாரக் கப்பல்கள் நிறைந்திருக்கும், இங்கு மிளகு வியாபாரம் அதிகம். பாண்டிய ராஜ்யத்தைச் சேர்ந்த கொற்கையில் முத்துக் குளிக்கிறார்கள். அடிமைகளும் கைதிகளுமே முத்துக்குளிக்க அனுப்பப்படுகின்றனர். அங்கே முத்துக்களைப் பணிக்கிட்டுத் துவாரமிட்டு ஏற்றுமதி செய்கின்றனர். இதற்குச் சமீபத்தில் நேர்த்தியான மஸ்லீன் நெசவு செய்யப்பட்டு ஏற்றுமதியாகிறது' என்கின்றனர். 'கி. மு. முதல் நூற்றாண்டிலேயே பாண்டிய ராஜனும் அக்கால ரோமராயனுயிருந்த அகஸ்து இராயனும் உடன்படிக்கை செய்து சிநேகிதராயிருந்தனர். ரோம

போர்ச்சேவகர் தமிழரசரிடம் ராணுவ வீரராயிருந்தனர்;' என்றின்னோன்ய பலவிவரங்கள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டிருக்கின்றன.[1] முன் கொற்கையிருந்த இடத்திலும் மதுரைக்குச் சமீபத்திலும் இப்பொழுதும் இடையிடையே கண்டுபிடிக்கப்படும் அக்காலத்திய ரோம நாணயங்கள் மேற்கூறியனவற்றையே வற்புறுத்தும்.

நாகரீகத்தைக் காட்டும் பற்பல ஜாதியார். தாம் பிறந்த நாட்டை விட்டுப் போந்திருந்த யவனர்; தொய்யிற் குழம்பு, விடபூ, தொடபூ, கட்டுப்பூ, வாசனைச்சுண்ணம் முதலியன விற்போர்; பட்டுநூல், எலிமயிர், பருத்தி நூல் முதலியன நெசவுசெய்யும் பட்டுசாலியர்; சந்தனம், அகில், பட்டு, பவளம், முத்து, மணி, பொன் இவற்றை விற்போர்; நெல், புல் முதலியன விற்போர்; அப்பவாணிகர்; கள் விற்கும் வலைச்சியர்; மீன் விற்கும் பரதவர்; உப்பு விற்கும் உமணர்; கயிறுதிரிப்போர்; கீரைகள் விற்போர்; பச்சிறைச்சி, சூட்டிறைச்சி விற்போர்; பஞ்சவாசம் விற்போர்; ஆட்டுவாணிகர்; பரவர்; வெண்கலக்கன்னர்; செம்புவேலை செய்வோர்; மரவேலை செய்யும் தச்சர்; இருப்பு வேலை செய்யும் கொல்லர்; சித்திரகாரிகள்; சிற்பாசாரிகள்; உருக்குத் தட்டார்; இரத்தினப்பணித்தட்டார்; தையற்காரர், உறைகாரர்; கிழிகிடையென்பவற்றுல் புட்பம், வாடாமாலை, பொய்க் கொண்டை முதலியவற்றைச் செய்யும் தொழிலினர்; தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவிகளில் பாணி சைக்கும் பாணர்; வலையலறுப்பார்; கூத்தர்; பரிசங் கொள்வார்; முத்துக்கோப்பார்; சந்தர்; மாகதர்; வேதாளிகர்; மறையோர்; மருத்துவர்; சோதிடவல்லார்; மடைப்பள்ளித்தொழிலினர்; தேர்ப்பாகர்; யானைப் பாகர் முதலிய எண்ணிறந்த தொழிலினர், பிரிவினர் பேர்கள் கடைச்சங்க நூல்களிற் பலவிடங்களில் காணப்படுகின்றன.

சமயவேறுபாடுகள். கடைச்சங்க காலத்திற்கு வெகு நாள் முன்னரே வடநாட்டாரியர் தமிழ்நாட்டிற் குடி-

[1] Tamils 1800 Years Ago, Ch. III.

புகுந்திருந்தனர். அவர்கள் புரோகிதராகவும் வேத முதலியவற்றைப் பிறர்க்கு ஓதுவிப்பவராகவும் நாளடைவில் சொற் சக்தியதிகரித்து வந்தனர். எனினும் அவர்கள் தங்கள் ஆரியமதத்தை முழுவதுமே தமிழ்நாட்டில் நிலைநாட்ட வலியில்லாதே போயினர். தமிழ்மக்கள் ஆரியர் வருகைக்கு பன்னெடு நாட்களுக்கு முன்னரே கடவுள் எனவும் கோவில் எனவும் வணக்கமுடையராயிருந்தனர். முருகனே அவர்களுடைய முக்கிய கடவுள் போலும். காளிவணக்கமும், போரில் மடிந்த வீரர்க்கு நடுகல் நாட்டிக் கோவிலமைத்து வணங்குவதும் இடையிடையே வழக்கமாயிருந்தது. அன்றியும் தமிழ்மக்களில் அறிவு முதிர்ந்தவர் 'ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருளாகிய கந்தழியையும்' வணங்கி வந்தனர். ஆரியர் தமிழ் நாட்டுக்கு வந்தவர் தமிழ்நாட்டார் வணங்கிய தெய்வங்களையும் தங்கள் தெய்வங்களுடன் ஒட்டி ஓர் நூதன மதத்தை ஏற்படுத்தினர். இதற்கிடையில் கி. மு. மூன்றும் நூற்றாண்டளவில் மகதநாட்டு அசோக சக்கரவர்த்தியினால் இலங்கைவரையும் பரவின பௌத்தமார்க்கமும்,[1] சமணமார்க்கமும் காலக்கிரமத்தில் வேரூன்றியிருந்தன. ஆகவே கடைச்சங்க காலத்தில் சுத்த ஆரிய மதம், சுத்த தமிழ்மதம், ஆரியத் தமிழ்மதம், பௌத்த மதம், சமணமதம் முதலிய பல மதங்கள் தமிழ்நாட்டில் அநுஷ்டிக்கப்பட்டு வந்தன.

யாக்கையிற் பிறவாதவனாகிய அரூபியின் கோயில்; முருகன் கோயில்; பலதேவர் கோயில்; திருமால் கோயில்; வாசுதேவன் கோயில்; காமன்கோட்டம்; அருகப்பள்ளி; பௌத்தப்பள்ளி; ஸ்ரீ கோயில் முதலிய பல சமயக் கோவில்கள் தமிழ்நாட்டுப் பெரும் பட்டண வீதிகளில் கலந்திருந்தன. அக்காலத் தமிழ்மக்கள் மார்க்க சுயாதீனத்தையுடையராய்த் தத்தமக்கு இஷ்டமான தேவதைகளை வணங்கி வந்தனர்.

மேற்காட்டியுள்ளனவற்றை யுற்றுநோக்கும்போது அக்காலமே தமிழ்மக்கள் நனிநாகரீகம் பெற்றுத்

[1] Hist. of India, Vincent Smith, p. 98.

தொழில், வியாபாரம், அரசாட்சிமுறை, கல்விப்பயிற்சி முதலியவற்றில் உச்சநிலையடைந்த காலமேயோவெனக் கருதுதற்கிடமுண்டு. எண்ணிறந்த தமிழ்ப்புலவர் பாடல்களைப் பாடித்திரிந்த காலம் அதுவே. தமிழரசர் இமயம்வரை சென்று இடைநின்ற அரசரை மோதியடித்த காலமும் அதுவே.[1] தமிழ் வியாபாரிகளும் தமிழ்நாட்டுச் சரக்குகளும் நாகரீகம் அடைந்திருந்த நாடுகளெங்கும் சென்றதும் அக்காலமே. பயிர்த்தொழில், வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றில் விர்த்தியடைந்து தமிழ்மக்கள் செல்வராய் வாழ்ந்தகாலமும் அதுவே. அக்காலப் பேரரசனுகிய ரோமராஜ்ய ராயனுடன் சிநேகபந்தம்செய்த காலமும் அதுவே. உலகின் நானுதிசையிலுள்ளோரும் தாம் விரும்பிய பொருட்களைப் பெறவேண்டித் தமிழ்நாட்டுக்கு வந்தகாலமும் அதுவே. ஜாதிபேதமென்பதின்றி அவரவர் கல்வியறிவிற்கும் குணங்களுக்கும் தக்கவாறு தமிழ்நாட்டில் தமிழ்மக்கள் மதிக்கப்பட்ட காலமும் அதுவேயாகும்.

---

[1] சிலப். கால்கோட் காதை.

4. அத்தியாயம்

கடைச்சங்க நூல்கள்

இறையனாரகப்பொருளும் திருக்குறளும்

க. இறையனாரகப்பொருள்

இஃது அகப்பொருளிலக்கணத்தை விளக்குமோர் அரியநூல். இந்நூலியாக்கியோர் யாவரென அறிதற்கிடமில்லை. கடவுளே இந்நூலை யாக்கியதாக இந்நூலினுரை கூறும். அதன் விவரம் வருமாறு:—பாண்டியனாடு பன்னிருயாண்டு பஞ்சத்தால் மெலிவுற்றகாலையில் ஆண்டிருந்த புலவரெல்லாம் வேற்றுத் தேயங்கட்குச் சென்று காலங்கழித்தனர். பின்னர் நாடு செழிக்க மழை பெய்தது. பெய்யவே அக்காலம் அரசாண்டிருந்த பாண்டியன் 'நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் போக்க, எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும், யாப்பதிகாரமும், வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று 'என்னை? எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச்சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயின் அழனிறக் கடவுள் சிந்திப்பான் 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாகலான் யாம் அதனைத் தீர்க்கற் பாலம்' என்று இவ்வறுபது சூத்திரத்தையுஞ்செய்து, மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்' என்பது.

இதனுட் கூறப்பட்டவாறு கடவுளே இவ்வகப் பொருட் சூத்திரங்களை எழுதி யரசன் காணுமாறு தந்தனன் எனும் காரியம் தற்கால மனிதரால் நம்பத்தக்க

தன்று. நக்கீரரே இந்நூலை எழுதி இது தெய்வத்திரு வாலால் உலகுக்குக் கிடைத்ததோர் பெரும் பேறேயா மென உலகினர் கருதிக்கொள்ளுமாறு இச்சூழ்ச்சி செய் தனரேயோவெனும் ஐயங்கொள்ளுதற்கிடமாகின்றது.

இந்நூல் கடைச்சங்க காலத்திலேதான் எழுதப்பட்ட தென்பதற்குப் போந்த ஆதாரம் இவ்வுரையினகத்தே எழுதப்பட்டிருக்கின்றது. என்ன? இந்நூற்குறை கண்ட புலவர் தாம் தாம் எழுதிய உரையே சிறந்ததென வாதாடி நிற்ப் அவர் உரைகண்டாரோவென அறியச் சென்ற பாண்டியன், அவர் உரைகண்டாரோவென உசாவ அவரெல்லாம் அரசரை நோக்கி 'அது காணுதற் கெமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்' என்றவிடத் துக் கூறுவான், 'போமின் நுமக்கோர் காரணிகனை எங் நனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று. நுமக்கு நிகராவார் ஒருவர் இன்மையினன்றே' எனக் கூறினன். பாண்டியன் நாற்பத்தொன்பதின்மர் என அவரைச் சுட்டியதும் கனமாப் பலகையைப்பற்றி அடித்துக் கூறுவதும் இந்நாற்பத்தொன்பதின்மரும் கடைச்சங்கப் புலவரே என்பதனை வற்புறுத்தும். எனவே இந்நூல் கடைச்சங்க காலத்திலேற்பட்ட நூலாகவே யிருத்தல்வேண்டுமெனக் கொள்ளப்படுதற் கிடமாகின்றது. 'நூல் வல்லாரைக்கொணர்க' வெனத் தன் ஆட்களை விடுத்துப் புலவரை அழைத்த பாண்டிய னும் உக்கிரப்பெருவழுதியாகவே யிருக்கலாமெனக் கொள்ளுதற்கு மிடமுண்டு. பாண்டிய நாட்டில் வற் கடம் தீர்ந்த பிற்றைநாள் தான் கூட்டிய புலவர்தம் உதவியினாலே இவன் பிறதொகை நூல்களைத் தொகுத் திருத்தல் வேண்டும் எனக்கொள்ளினும் தவருகாது.

இந்நூலானது அறுபது சூத்திரங்களானுக்கப்பட் டது. அகப்பொருளைச் சுருக்கியுரைப்பது, களவு கற் பென இருபிரிவுகளையுடையது. இது தொல்காப்பிய அகப்பொருளதிகாரத்தையே தழுவிச் செல்வது.

இதற்கு உரைகண்டவரும் எழுதினவரும் யாவரென் பதைப்பற்றிப் பற்பல அபிப்பிராயங்கள் உள்ளன. உரை கண்டவர் நக்கீரராகவே இருக்கலாமென்பது

பெரும்பாலார் கொள்கை. இதற்குச் சான்றுகள் இவ் வகப்பொருள் முதல் சூத்திர உரையிலே காணக்கிடக் கின்றன. எனினும் இந்நக்கீரர் கண்ட உரை ஆசிரிய பரம்பரையில் வழங்கிவர, அதனை ஏடேற்றி உலகினர்க்கு உபகரித்தவர் யாவர்? அவர் உபகரித்த காலம் யாது? எனும் வினாக்களே இக்கால ஆராய்ச்சிக்காரர் சந்தேகங் களுக்கிடமாய் நிற்பன. சிற்சிலர் இவ்வுரை நீலகண்ட னால் ஏடேறியது என்பர். இறையனாரகப்பொருளு ரையில் காணப்படும் அடியில்வரும் வாசகம் அவர்க்கு ஆதாரமாய் நிற்பது. அவ்வாசகம் வருமாறு:—'இனி உரை நடந்தவாறு சொல்லுதும்: மதுரைக் கணக்காய னார் மகனார் நக்கீரர் தம் மகனார் கீரவிக்கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர்க்கிழார்க்குரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க்குரைத்தார்; அவர் செல்வத்தாசிரி யர் பெருஞ்சுவனார்க்குரைத்தார்; அவர் மணலூராசிரி யர் புலியங்காய்ப் பெருஞ்சேர்ந்தனார்க்குரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப்பெருங்குமாரனார்க் குரைத்தார்; இவர் திருக்குன்றத்தாசிரியர்க்குரைத்தார்; இவர் மாதவனார் இளநாகனார்க்குரைத்தார்; இவர் மூசிறியாசிரியர் நீலகண்டனார்க்குரைத்தார்; இங்ஙனம் வருகின்றது உரை' என்பதே. இதனைப் கிடைத்தது நக்கீரர்முதல் பத்துத் தலைமுறை ஆசிரிய பரம்பரையே யன்றி நீலகண்டனரே இவ்வுரையை எழுதிவிட்டார் எனக் கொள்ளுதற்கு அத்துணையிடமில்லை. 'இவர் மூசிறியாசிரியர் நீலகண்டனார்க்குரைத்தார்' என வரும் தொடரொன்றே இதனை எழுதியவர் நீலகண்டனர் அல்லவென்பதை ஒருவாறு வெளிப்படுத்தும். நீலகண்ட னரே எழுதியிருப்பின் அவர் 'இளநாகனார்க்குரைத்தார்' எனும் தொடருடன் ஆசிரிய பரம்பரையை நிறுத்திப் பின் வேறுவிதமாகக் கூறியிருக்கலாம். 'மூசிறியூர் ஆசி ரியர் நீலகண்டனர்' எனத் தம்மைத்தாமே சுட்டி எழு தியிரார். அன்றியும் 'இங்ஙனம் வருகின்றது உரை' எனக் கூறியிருக்கின்றது. இதிலிருந்து உரை இங்ஙன மாகவே வந்துகொண்டிருக்கிறது எனக்கொள்ளவுமிட முண்டு. உரையெழுதப் போந்தவர் ஆசிரிய பரம்பரை யில் முதல் பதின்மரைக் கூறி இங்ஙனமாகவே இதுவரை

யும் வந்துகொண்டிருக்கின்றது என்று பிறரைக் கூறுமல் விட்டனர் எனக்கொள்வதே சாலும்.

மேலும் 'உரையாசிரியர்' எனச் சிறப்புப்பெயர் பெற்ற இளம்பூரணவடிகள் அதுகாறும் உரையில்லாதன வாய்க் கிடந்த தொல்காப்பிய முதலிய பிறநூல்களுக்கு உரையெழுதியவர் தாமே இந்நூலுக்கும் உரையெழுதி யிருக்கலாம் எனவும் அங்ஙனம் இளம்பூரணரே உரை யெழுதினர் எனக்கொள்ளுதற்கு ஆதாரங்கள் உள்ளன வெனவும் செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ. மு. இராக வய்யங்கா ரவர்கள் எழுதி வெளியிட்டிருப்பதும் ஒப்பத் தக்கதா யிருக்கின்றது.[1] அங்ஙனமாயின் நூல் எழுதிய பன்னூறாண்டுகட்குப் பின்னர், நூலெழுதிய காலத்தே அந்நூலுக்கு நக்கீரராற் சொல்லப்பட்ட உரையைத் தழுவி, இளம்பூரணர் தற்காலம் வழங்கும் இறையனாரகப் பொருளுரையை உலகுக்குதவினர் எனக்கொள்ளலாம்.

உ. திருக்குறள்: அறத்துப்பால், பொருட்பால்

கி. பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூலாகக் கொள்ளக்கூடிய பிறிதோர் நூல் திருக்குறளாம். இந் நூல் அரங்கேற்றப்பட்டது மதுரையில் உக்கிரப்பெரு வழுதி அரசாண்டிருந்த காலமாகும். அவ்வரசன் காலம் கி. பி. 50 யாண்டாக இருக்கலாம என்பது முன்னரே கூறப்பட்டது.[2] பிறவழியானும் இவ்வுண்மையை வற் புறுத்தலாம். என்னை? சிலப்பதிகாரம் பாடினவர் சேரன் செங்குட்டுவனின் சகோதரராகிய இளங்கோவடி கள். இவர் சேரன் செங்குட்டுவன் காலத்திருந்தவர். இவர் காலமும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகவே யிருக்கலாம் என நிதானிக்கப்பட்டது. சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளும், மணிமேகலை பாடிய சித் தலைச் சாத்தனரும் ஏக காலத்தவர் என்பது சிலப்பதி காரப் பதிகச் செய்யுளானும் சிலப்பதிகாரப் பிறபகுதி களாலும் வெளியாகின்றது. அன்றியும் இளங்கோவடி கள் பாடிய சிலப்பதிகாரம் சாத்தனர் மூன்னிலையினும்,

[1] செந்தமிழ், 4, 7 & 6. 306-311. [2] 63-55 பக்கங்கள்.

சாத்தனார் பாடிய மணிமேகலை இளங்கோவடிகள் முன்னிலையினும் அரங்கேறியனவென்பது,

'உரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்.' (சிலப். பதி. 88, 89)

எனும் சிலப்பதிகாரப் பதிகச்செய்யுளடிகளானும்;

'இளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற
வாறைம் பாட்டினு ளறியவைத் தனனென்.'
(மணிமே. பதி. 95–98)

எனும் மணிமேகலைப் பதிகச்செய்யுளடிகளானும் தெரிய வரும்.

இவ்விரு நூல்களில் மணிமேகலையே சிலப்பதிகாரத்தின் முன்னர் எழுதப்பட்டது. இதனை அடியார்க்கு நல்லாரே கூறினர். என்ன? 'மணிமேகலை துறந்தாளென்ப துணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனோடு நாற் பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையை யுரைத்துழி அவர் மணிமேகலைபெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஓர் காப்பியஞ் செய்தமைத்தனனெனக் கேட்டு அவ்வடிகள் விரும்பி இவ்விரண்டினையும் ஒரு காப்பியமாக்கி உலகின்கண் நடாத்துவான் வேண்டவும், இருவர் செய்தலின் இரண்டாக நடந்தனவென்க' என்றாராகலின்.

மணிமேகலை எழுதப்பட்ட காலத்திலேயே திருக்குறள் உலகில் பலராலும் ஒப்பப்படத்தக்கதோர் உறுதி நூலாய் விளங்கியதென்பதும், அதனைப்பாடிய திருவள்ளுவனார் தெய்வப் புலவராகப் பாராட்டப்பட்டனரென்பதும் மணிமேகலையில்,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்' (மணி. 22: 59-61)



திருவள்ளுவ நாயனார் கோயில், மைலாப்பூர்.



அம்மன் கோயில்

வாசுகி, திருவள்ளுவ நாயனார் பாரியை.

எனக் கூறப்படும் அடிகளிலிருந்து விளங்குகின்றது. ஏனெனில் இவ்வடிகள் திருவள்ளுவர் இல்லறவியலில் 'வாழ்க்கைத்துணை நலம்' எனும் பகுதியில் உரைத்த குறளேயாதலினலும் 'பொய்யில் புலவன்' என்பதனுற் குறிக்கப்பட்டவர் திருவள்ளுவரேயாதலினலும் என்க.

இங்ஙனமாகக் குறளும் அதனைப்பாடிய திருவள்ளுவரும் உலகினராற் பாராட்டப்படுதற்கு குறள்பாடிக் குறைந்தது அரை நூற்றாண்டளவேனும் சென்றிருக்க வேண்டும். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து திருக்குறள் பாடப்பட்ட காலம் கி. பி. முதல் நூற்றாண்டெனக் கொள்வது தவருகாது.

இந்நூல் எழுதப்பட்டுக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் யாண்டுகள் கழிந்தன. இதற்கிடையே உண்டாகியழிந்த ராஜ்யங்களும் ஜாதிகளும் பல. தோன்றி மறைந்த நூல்களும் பல. எனினும் இக்குறள் அன்றே போல் இன்றும் சிறப்புடன் விளங்குகின்ற நூலாயிருக்கின்றது. உலகில் தற்கால நாகரீக பாஷைகளென வழங்கும் ஒவ்வோர் பாஷையிலும் [1] இதனை மொழி திருப்பிப் படிக்கின்றனரென்பதும் இந்நூலின் பெருமையை விளக்கும். 'ஆலும்வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' எனும் சாமானியப் பழமொழியும் குறள் தற்காலத் தமிழ்மக்களால் எத்துணையளவு மேலான நூலாகக் கருதப்படுகின்றதென்பதைக் காட்டும். திருக்குறள் அரங்கேறிய காலத்தில் அதையும் அதன் ஆக்கியோனையும் புகழ்ந்து பல புலவர் பலவாறு புகழ்ந்து பாடினர். அவராற்பாடப்பட்டனவே 'திருவள்ளுவமாலை' என வழங்குகின்றது. திருவள்ளுவமாலையில் வழங்கும் செய்யுட்களைப் பாடியோர் பலரும் ஏக காலத்தவரல்லராதலால் பற்பல புலவர் பல காலங்களிற் பாடிய செய்யுட்களையே பிற்காலத்தவர் 'திருவள்ளுவமாலை' யெனத் தொகுத்தனர் எனக்கொள்வதே சாலவும் பொருந்தும்.

[1] திருக்குறள். இங்கிலீஷ், பிரெஞ்சு, ஜர்மன், லத்தீன், தெலுங்கு மலையாளம் முதலிய பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

இந்நூல் அரங்கேற்றப்பட்ட காலம் ஆண்டிருந்த பாண்டியன் உக்கிரப்பெருவழுதி கூற்றுக அடியில் வரும் வெண்பா திருவள்ளுவமாலையில் காணப்படுகின்றது.

'நான்மறையின் மெய்ப்பொருளே முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனுய்த் தந்துரைத்த—தூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.' (திரு. மாலை. 4)

இதன் பொருள்: 'பிரமதேவன் தன் சுயவுருவை மறைத்து வள்ளுவனுர் உருத்தாங்கி உலகிலுதித்து நான்கு வேதங்களினும் கூறப்பட்ட உண்மைப் பொருட்களையெல்லாம் அறம் பொருள் இன்பமெனும் மூன்று பொருட்பகுதிகளாக்கிக் குறள் எனும் நூலினுல் உரைத்தாராதலின் அந்நூலினை எனது தலை வாய் நெஞ்சம் செவி முதலியன கேட்டுச் சிந்தித்துப் புகழ்ந்து வணங்கக்கடவன்' என்பது.

வையகத்தார் நினைப்பன எல்லாவற்றையும் வள்ளுவர் தம் குறளினுல் அளந்துரைத்தார் எனவும்; திருக்குறள் தமிழ் மூவேந்தர் முடிகள்மேலும் சூட்டத்தக்க மாலையெனவும்; திருக்குறளைப் படித்தவர் வேறு நூல் படித்தற்கவசிய மின்றெனவும்; ஆரியபாஷையும் தமிழும் முறையே வேதங்களையும் குறளையுமுடைமையின் சமமாயினவெனவும்; திருக்குறளை நினைக்குந்தோறும் மனத்தை உருக்கும் எனவும்; எல்லாப்பொருளும் இதன்பாலுண்டு, இதன்பாலில்லாத பொருட்களில்லையெனவும்; பூமேற் புலவர் திருவள்ளுவர் ஒருவரேயெனவும்; பாவில் வள்ளுவர் வெண்பாவே சிறந்ததெனவும்; வள்ளுவர் பாட்டின் சுவைக்குத் தெள்ளமுதின் தீஞ்சுவையு மொவ்வாதெனவும் புலவர் பலபடப் பாராட்டித் திருவள்ளுவமாலையில் புகழ்ந்துளார்.

திருவள்ளுவரைப் பொய்யில்புலவர், செந்நாப்போதார், தெய்வப் புலவர், நாயனுர் முதலிய பல்வேறு பெருமைதரு நாமங்களானும், அவர் பாடிய திருக்குறளைப் பொய்யாமொழி, தமிழ்மறை, முப்பால், உத்தரவேதம் முதலிய பல பெயர்களானும் கூறுவார்.

திருக்குறள் என்பது நாற்சீரும் முச்சீரும் கொண்ட நாலடிகளாலான குறள் வெண்பாக்களாலாயது. திருக்குறள் முழுவதும் ஒவ்வொன்று பப்பத்துக் குறள் வெண்பாக்களாலாகிய ஒரு நூற்று முப்பத்துமூன்று அதிகாரங்களை யுடையது. மொத்தம் குறள் ஆயிரத்து முந்நூற்று முப்பதாகும். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூப்பிரிவுகளை யுடையது. புருஷார்த்தம் நான்கனுள் வீடு முற்கூறப்பட்ட மூன்றின் வழியே சுட்டிக்காட்டப்பட்டு நிற்கின்றது. அதிகாரங்களின் பாகுபாடுகளைத் திருவள்ளுவமாலையில் சிறுமேதாவியார், எறிச்சலூர் மலாடனார், போக்கியார், மோசிகீரனார் என்பவராற் பாடப்பட்டனவாகக் காணப்படும் அடியில் வரும் வெண்பாக்களால் அறியலாம்.

'வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய மூப்பத்து மூன்றென்றாழ்—கூடுபொரு
ளின்பள்ளி யெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.' (திரு. மாலை 20)

'பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய திறவறமொன் றாழாக—வாய
வறத்துப்பா லெல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.' (திரு. மாலை 25)

'அரசிய லமையந் தமைச்சிய லீரைந்
தருவல் லரணிரண்டொன் றெண்கூ—ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை.' (திரு. மாலை 26)

'ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறுக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றுக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.' (திரு. மாலை 27)

இவற்றின்படி பாயிரம் நான்கத்தியாயங்களை யுடையது. அவை முறையே கடவுள் வாழ்த்தும், உலகினுக்கின்றியமையா மழைச்சிறப்பும், இம்மை மறுமைக்கின்றியமையா நால்வகைப் புருஷார்த்தங்களுள்ளும்

சிறந்த அறத்தையே பூண்ட நீத்தார் தம் பெருமையும், அவரால் போற்றப்படும் அறத்தின் சிறப்பும் உரைப் பன.

அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல் என இரு பிரிவுகளையுடையது.

இல்லறவியல் ஐந்தாவது அதிகாரமாகிய இல் வாழ்க்கை முதலாப் புகழ் ஈறு இருபது அதிகாரங்களை யுடையது. இவ்வதிகாரங்களிடையே வள்ளுவர் கூறும் அமிர்த வசனங்கள் அவரது உலக அனுபவத்தை யுரைப் பன மாத்திரமேயன்றி எவரும் எக்காலத்தும் அதி சயித்து ஆனந்தித்துத் தமதாக்கிப் பயனடையத்தக்க உறுதி மொழிகளேயாம்.

'அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.' (5 : 5)

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.' (6 : 6)

'குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.' (7 : 6)

'அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.' (8 : 6)

'இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.' (10 : 9)

'பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.' (11 : 3)

'யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.' (13: 7)

'நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.' (12 : 3)

'ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.' (16 : 6)

'அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்'. (17 : 8)

'சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.' (20 : 10)

'தீயவை செய்தார் கெடுத னிழறன்னே
வீயா தடியுறைந் தற்று.' (21: 8)

'அற்ரு ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்ரூன் பொருள்வைப் புழி.' (23 : 6)

இக்குறட்பாக்களிற் பொதிந்துள நீதி சாரங்களின் பெருமையிருந்தவாறென்னே! சொல்லற்கரியனவாம்.

துறவறவியல் 'அருளுடைமை' யெனும் 25-ம் அதிகார முதல் 'அவாவறுத்தல்' எனும் 37-ம் அதிகாரம் ஈறுயுள்ள பதின்மூன்றதிகாரங்களையுடையது.

தன்னின் மெலியாரை வருத்தும்படி யெண்ணுமொருவன் தன்னினும் வலியாரொருவன் தன்னை வருத்தும் போது தானிருக்கும் நிலைமையை நினைக்கக்கடவன், (25 : 10)

உயர்ந்தவர்களால் குற்றமுடையனவென விலக்கப்பட்டவைகளை ஒருவன் செய்யாமல் நல்வழியில் நடப்பனேல் அவன் மறுமைப்பயன் பெறுதற்பொருட்டுத் தலை மயிரை மழித்தலும் சடையாக்கலுமாகிய தவவேடம் தரிக்கவேண்டியதில்லை. (29 : 10)

உடலுக்குத் தூய்மை தருவது நீர். மனதுக்குத் தூய்மை தருவது மெய்யுரைத்தலாம். (30 : 8)

தனது கோபம் செல்லமாட்டாத வலியார் மீது சினங்கொள்ளுதல் தீது. தம்மின் எளியார்மீது சினங் கொள்வதோ அதனினும் தீதேயாம். (31 : 2)

முற்பகலில் பிறர்க்குத் தீமை செய்தால் தனக்குத் தீமை பிற்பகலே வந்துவிடும். (32 : 9)

உலகின் பெருமை யென்ன? நேற்றிருந்தான் இன்றிறந்தானென்பதே. (34 : 6)

இக்கருத்துக்கள் அடங்கிய குறட்பாக்களே கற்றுணர் வரேல் உலகின் ஒழுக்கநிலே உயர்ந்துவிடுமெனற் கைய முண்டோ!

முப்பத்தெட்டாம் அதிகாரம் 'ஊழ்' என்பதைக் குறிப்பது. காரியங்கள் தெய்வத்தானும் தெய்வத்தின் நியமனப்படியும் நிகழும் என்பதை இவ்வதிகாரம் கூறும்.

பொருட்பால். பொருள் இம்மைக்கும் மறுமைக்கும் சாதனமாயிருப்பது. பொருட்பால் பகுதிகளே ஐந்து இயல்களாக எழுபது அதிகாரங்களான் வகுப்பார். அவற்றுள்:—

அரசியல் என்பது 'இறைமாட்சி' யாகிய முப்பத் தொன்பதாம் அதிகாரம் முதல் 'இடுக்கணழியாமை' எனும் அறுபத்துமூன்றும் அத்தியாயம் வரையுள்ள இருபத்தைந்ததிகாரங்களான் உரைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் அரசன் சிறப்பு; அரசனுக்கு இன்றியமையாதனவாகிய கல்வி, கேள்வி, அறிவுடைமை; அவனுக்கிருக்கவேண்டிய ஒழுக்கம், கூட்டுறவு; அவன் அரசகாரியங்களேத் தெள்ளிதின் உணர்ந்து காலம், இடம், செயல்களின்மூலம், அவற்றின் விளேவு முதலியவற்றை ஆராய்தல்; பிற அரசர்மாட்டொழுகும் விதம்; தன் குடிகளிடத்தும் தன்னே யடுத்தாரிடத்தும் நடந்து கொள்ளும் முறை; நல்லாரைப் பாதுகாத்தல்; குற்றஞ் செய்வாரைக் கண்டித்தல்; அவனுக்கு இருக்கவேண்டிய பிறலக்ஷணங்கள் ஆய இக்காரியங்கள் அதிவிவரமாய் உரைக்கப்பட்டுள்ளன. ராஜ்ய தந்திர காரியங்களே நடத்தும் தற்கால மந்திரி தந்திரிகளும் திருக்குறளில் இவ்வத்தியாயங்களேக் கற்றுப் பெரிதும் பயனடையலாம்.

அங்கவியல். அரசு புரிதற்கு அங்கமாவன ஆறு: அவை முறையே அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி எனப்படும். இவை முறையே பத்து, இரண்டு, ஒன்று, இரண்டு, பதினேழு, பதின்மூன்று அதிகாரங்களான் விரிக்கப்பட்டுள்ளன.

அறுபத்துநாலு முதல் எழுபத்துமூன்று முடிய அமைச்சனின் விவரம் உரைக்கப்பட்டுள்ளது.

'பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும வல்ல தமைச்சு.' (64 : 3)

போர் முதலிய காரணங்கள் நேர்ந்த வழித் தம் பகைவர்க்குத் துணையாயினரை அவரிடத்திலிருந்து பிரித்துவிடுதலும், தம்பக்கத்தைச் சார்ந்தவரைக் கொடை, இன்சொல் முதலியவற்றுல் பேணிக்கொள்ளுதலும், தம்மைவிட்டுப் பிரிந்திருப்பவரை மீண்டும் தம்மோடு பொருந்தும்படி செய்தலும் வல்லவனே அமைச்சனுவான். எனினும் அமைச்சன்,

'ஈன்ருள் பசிகாண்பா னுயினுஞ் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை.' (66 : 6)

தன் தாயானவள் பசித்திருத்தல் காணச்சகியாது அப் பசியை நிவர்த்தித்தற்பொருட்டும் அறிவுடையார் பழிக்கும் வினைகளைச் செய்யலாகாது. மேலும்,

'கலங்காது கண்ட வினைக்கட் டெளங்காது
தூக்கங் கடிந்து செயல்.' (67 : 8)

மனந்தெளிந்து செய்வதாகத் தீர்மானித்த எக்காரியத்தையும் பின்னிடுதலும் தாமதமுமின்றிச் செய்யவேண்டும். இம்மட்டோ, பிறநாடுகளுக்குத் தூதுவராகவோ வேறெப்பொருட்டோ மாற்றரசரிடம் செல்வோர்,

'அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.' (69 : 4)

இயற்கையாகிய அறிவும் கண்டார் விரும்பும் தேக அழகும் தோற்றமும் நிரம்ந்த கல்வியுமுடையராயிருத்தல் வேண்டும்.

'அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.' (70 : 1)

'செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து.' (70 : 4)

அரசரைவிட்டுத் தூரமாய் நீங்காமலும் அவரிடம் மிகவும் நெருங்கிப் பழகாமலும் நெருப்பினில் குளிர்காய்ப

வர் போன்றிருக்க. அரசன் முன்னிலையில் மந்திரி நகையாடாமலும் கூடவிருப்பவரிடம் காதுக்குள் பேசாமலுமிருக்கக்கடவன் என்பதும் விதியாம்.

'பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.' (70 : 10)

அரசன் நம்மோடு வெகுநாட் பழகியவன், ஆதலின் ஏதோ குற்றம் செய்யினும் பொறுத்துக்கொளவான், என நினைத்து நடக்கும் அமைச்சன் கேடடைவதும் நிச்சயம்.

'பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.' (73 : 8)

நல்லவர் சபையில் குற்றமறச் சொல்லாதவர் கற்றும் கற்றிலரே யாவார்.

அடுத்த மூன்றதிகாரங்கள் நாடு, அரண், அரசிறை முதலியவற்றைக் குறிப்பன.

'உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.' (74: 4)

நாடாவதென்ன? குடிகள் பசியின்றி உண்ணுதற்கேற்ற வளமுடையதாயும் தீராத நோய்க்கிடமாவதன்றியும் பகைவர் படையெடுப்புக்கிடமின்றி காக்கப்பட்டதாயுமிருப்பதே நாடாகும். இத்தகைய நாட்டில்

'கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.' (75 : 5)

பகைவர் கொள்ளுதற்கரிதாய்ப் பலவகை யுணவுகளையுள்ளேயே யுடையதாய்த் தன்னுள்ளிருப்பவர் போர்செய்வதற்கெளிதாயிருக்கும் அரண்பலவிருக்கும். நாடாளும் வேந்தன்,

'உறுபொருளு முல்கு பொருளுந்தன் னென்னுஞ்
செறுபொருளும் வேந்தன் பொருள்.' (76 : 6)

உடையாரின்மையிற் ருனே வந்து சேர்ந்த பொருளையும், சுங்கமாகிய வரியையும், தன் பகைவரைத் திறையாகக்

கொள்ளும் பொருளையும் தன்பொருளாக்கொள்வான். அவன் படையாளரோ,

'மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.' (77 : 6)

வீரமும், மானமுமுடையராய் வீரர் மரபினுள்ளவருடைய வீரவழியில் நடக்க முயலுநராய் அரசனுல் நம்பப் படத்தக்கவருமா யிருப்பார். மேலும் படையாளரில் ஒவ்வொருவனும்,

'கைவேல் களிற்றெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.' (78 : 4)

தன் கையிலிருந்த வேலைத் தன்னை எதிர்த்துவந்த யானையின்மீது எறிந்து குத்தியபின் பிறிதோர் யானையின்மீது எறியக் கையில் வேலில்லாமல் வருந்துபவன் தன் மார்பிலேயே பகைவீரனுல் எறியப்பட்ட வேல் குத்துண்டிருப்பதைக்கண்டு தனக்கு வேலகப்பட்டதெனக் களிக்கும் தன்மையனும்.

பொருட்பாலில் மிஞ்சிய எழுபத்தொன்பது முதல் நூற்றெட்டீருகவுள்ள முப்பது அதிகாரங்களுள் நட்பு, குடியெனும் இருவிஷயங்கள் முறையே பதினேழு, பதின்மூன்றதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. விரிவஞ்சி அவற்றின் நயத்தை ஈண்டு எழுதாது விடுகின்றேம்.

ஈ. திருக்குறள் : காமத்துப்பால்

மூன்றுவது காமத்துப் பால். இதனுள் களவியலே ஏழு அதிகாரங்களானும் கற்பியலைப் பதினெட்டதிகாரங்களானும் கூறுவார். இவற்றுள் முதல் ஏழு அத்தியாயங்கள் பெரும்பாலும் ஆண்பாற் கூற்றும், இடைப்பட்ட பன்னிரு அதிகாரங்கள் பெண்பாற் கூற்றும், இறுதியான ஆறு அதிகாரங்கள் அன்பினுற் பிறக்கும் இருபாற் கூற்றுக்களுமெனலாம்.

எத்தனையோ காரியங்களை உலகின் பயன் கருதியெழுதிய வள்ளுவர் கேவலம் இக்காமத்துப் பாலையும் எழுதித் தம்நூலைக் கறைப்படுத்தினரேயெனச் சிற்சிலர்

கூறக்கேட்டுளேம். இத்தகையாருள் பலர் மேனாட்டுக் கலைகளிற் கணக்கற வோதினுமாவார். ஷேக்ஸ்பியர், ட்ரைடன் முதலிய மேனாட்டுக் கவிகளின் வர்ணனைகளே மெச்சிக்கொள்ளும் இவர் தம் நாட்டுக் கவிகளிற் குறை கூறுவது தமிழ் செய்த தவக்குறைவேபோலும். காதலென வொன்றில்லையாயின் உலகமே காடுபோலாமென் பதைமட்டும் இவர்களுக்குக்கூறி வள்ளுவர் காதற்சிறப் பைப்பற்றிக் கூறுவனவற்றை நோக்குவாம்.

'ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணுரு முட்குமென் பீடு.' (109 : 8)

பகைவரும் அஞ்சுகின்ற என் வலிமை இவள் முகத்தின்முன் நிற்க வலியற்றது.

'இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.' (110 : 1)

இவள் கண்கள் இருவகையாக நோக்க வல்லன. ஒரு நோக்கினுல் எனக்குக் காதல் நோய் உண்டாக்குகின்றுள், மற்று நோக்கினுல் அக்காதல் நோய்க்கே மருந்து செய்கின்றுளாதலின்.

'கண்ணெதி கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.' (110 : 10)

காதல் கொள்ளும் ஸ்திரீ புருஷர் கண்கள் தாம் கருதியவற்றை உரைத்துக்கொள்கின்றன. அங்ஙனமாயின் அவர் தம் வாயாற் பேசவேண்டியது முண்டோ.

'உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணுள் குணம்.' (113 : 5)

என் காதலியின் குணங்களே யான் நினைத்தறியேன். காரணமென்னை? மறந்தவொன்றையன்றே நினைப்பது வழக்கம். அவள் குணங்களே ஒருபொழுது மறந்தறியேன். ஆதலின், நினைத்துமறியேன். இவை போல்வன ஆண்பாற் கூற்றுக்கள்.

'செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.' (116 : 1)

என்னைப் பிரிந்துபோவதில்லையெனும் காரியத்தை என்னிட முரைக்க. சிக்கிரம் வந்துவிடுவேன் என்று சொல்லவேண்டுமாயின் நீர் வரும்போது எவர் உயிரோ டிருப்பாரோ அவரிடம் சொல்லிச் செல்க. (யான் நீர் பிரியின் உயிர்விடுவேன் என்றவாறு.)

'வாராக்கால் துஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.' (118 : 9)

என் கண்கள் பெரிதும் துயருற்றன. அவை அவர் பிரியின் எப்போ வருவாரோ எனும் ஏங்கு நெஞ்சமொடு தூங்கா. அவர் வந்து உடனிருப்பினும் சிக்கிரம் பிரிந்து போவாரோ எனக் கலங்கித் துயிலா.

'நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும்.' (121 : 3)

எனக்குத் தும்மல் வருவதுபோலிருக்கிறது, ஆனு லும் தும்முகிறேனில்லை. என்னைப் பிரிந்திருக்கும் என் காதலர் என்னை நினைப்பவர்போல் நினையாமலேயிருப் பார்போலும்.

(அயலாரிலிருப்பவர் தம்மை நினைப்பின் தும்மல் வரு தலியற்கையென்பது சிலர் கொள்கை.)

'நனவென வொன்றில்லை யாயிற் கனவினுங்
காதலர் நீங்கலர் மன்.' (122 : 6)

நனவென்கின்ற வொன்றில்லையாயின் நித்திரையிலோ என் காதலன் என்னைப் பிரியாமல் உடனுறைவதாய்க் கனவு காண்கின்றேன்.

'காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.' (123 : 5)

காலைக்கு நான் என்ன தீமை செய்தேன்? மாலை நே ரத்துக்கு நான் என்ன நன்மை செய்தேன்? (என் காத

லர் பிரிந்திருக்கும் இந்நாட்களின் மாலை நேரம் என்னை மிகவும் வருத்துகின்றனவே.)

'புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.' (126 : 9)

அவர் ஊருக்குப்போய் நான் தனியேயிருந்த நாட்களில் அவர் வந்தால் இனி அவரோடு பேசக்கூடாது என்றிருந்தேன். அவரைக் கண்டவுடனேயே என் நெஞ்சம் அவரோடு கலந்துகொண்டது. அவரோடு கோபித்துக்கொள்ள வேண்டுமெனச் சென்ற நானே அவரைத் தழுவிக்கொண்டேன்!

இவைபோல்வன பெண்பாற் கூற்றுக்கள்.

'உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.' (129 : 1)

நினைத்தலே மகிழ்ச்சி, காண்டலோ அதனிலும் மகிழ்ச்சி. இத்தன்மை காதலுக்கே யுரித்து, கள்ளுக் கிலது.

'அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகாதது.' (130 : 1)

அவர் என்னை விட்டுப் பிரிந்துபோகக் கருதினால் அவர் நெஞ்சம் அவர்க்கு உடன்படுகிறது. இது உனக்குத் தெரிந்திருந்தும், எனது நெஞ்சமே! நான் மறந்திருக்கவேண்டுமென்றால் நீ ஏன் எனக்கு உடன்படுகின்றாயில்லை?

'கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
கெட்டாங் கவர்பின் செலல்.' (130 : 3)

என் காதலர் என்னைப் பிரிந்தார். யானோ வறியளானேன். என் நெஞ்சமே நீயும் என்னைப்பிரிந்த காதலரையே நினைந்து அவர்பின் செல்கின்றாய். என்னோடு தரிப்பாயில்லை. கைகெட்டவர்க்கு எவருந் துணையாகாரென்பது உண்மையே போலும்.

ச. திருக்குறள் பொது.

திருக்குறளில் தலைமுதல் அடிவரையும் பதந்தோறும் குறள்தோறும் அத்தியாயந்தோறும் காணப்படும் அழகுகளை விரிப்பதெனின் இது இடமாகாது. எனவே இவ்வளவில் நிறுத்தப்பட்டது.

இத்துணைப் பெருமை வாய்ந்த இக்குறளையும் பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்றுக்கிக் காற்பது, களவழி நாற்பது எனும் சிறு நூல்களிலொன்றுய்க் கூறுகின்றனர். இங்ஙனம் கூறுதல் ஏட்டிலெழுத்தேயோ எழுதினவர் கைப்பிழையோ என்னென்றுரைக்க வியலுதில்லை. மேற்கணக்குக் கீழ்க்கணக்குகட்டுக் கொடுத்திருக்கும் சூத்திரங்களில் இக்கணக்குகளிற் சேர்ந்த நூல் செய்யுட்டொகைகள் ஐந்நூற்றுக்கு மேற்பட வில்லை. எனினும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களெனக் குறிக்கப்பட்ட நூல்களுள் மூப்பால் எனவும் ஒரு பெயர் காணப்படுகின்றது. திருக்குறளுக்கும் மூப்பால் என ஒரு பெயருண்டாதலின் அம்மூப்பாலே திருக்குறள் எனத் தீர்த்துவிட்டனர் போலும்.

திருக்குறளை யியற்றியவர் திருவள்ளுவர். இவர் ஜாதி, மதம், பிறப்பு, உடன்பிறந்தார் முதலியவற்றைப் பற்றிப் பற்பல கதைகள் தமிழுலகிலுலவுகின்றன. இவர் பகவன் என்னும் பிராமணைத்தமனுக்கு ஆதியென்னும் பறைப்பெண்டினிடம் பிறந்தவரென்றும் ஔவை, உப்பை, உறுவை, கபிலர், இடைக்காடர் முதலியவர் இவரின் உடன்பிறந்தாரெனவும் கதைகள் கூறும். திருக்குறளின் கடவுள் வாழ்த்துக் கூறுவான் எடுத்துக் கொண்ட வள்ளுவர் முதற் குறளிலேயே 'ஆதி பகவன்' எனக் குறித்திருப்பதை நோக்கி இவர் 'அன்னையும் பிதாவும்முன்னறிதெய்வம்' எனுங்கொள்கையுடையராதலின் தமதன்னை தந்தையரின் நாமங்களாகிய ஆதி, பகவன் எனும் பெயர்களை அக்குறளினிடத் தமைத்தனரெனக் கூறுவர். வடிவேலு செட்டியார் திருக்குறட் பதிப்பில் காட்டியிருக்கும் இக்கதையின் சுருக்கம் வருமாறு:—

பெருஞ்சாகரன் என்பான் திருவாரூர் புலைச்சியை மணந்து பகவன் என்பவனைப் பெற்று அவனுக்குச் சகல

கலைகளையும் பயிற்றினன். தவமுனியென்பவர் அருண் மங்கையை மணந்து ஒரு புத்திரியைப் பெற்றனர். அப் பெண் உறையூர்ப் பெரும் பறையன் வீட்டில் வளர்ந்து வந்தனள். சேரி, மண் மாரியால் அழிய அப்பெண் நீதி யையர் வீட்டில் வளர்ந்து வந்தாள். பகவன் என்பான் காசி யாத்திரைக்குச் செல்பவன் இடை வழியில் உறை யூர்ச் சமீபத்தில் சத்திரத்தில் தங்கிச் சமைத்துக்கொண் டிருக்க, அங்கு வந்த நீதியையர் வீட்டுப் பெண்ணைப் பறைச்சியென்றடித்துத் துரத்திவிட்டுப் பின்னர் தம் வழியேயேகிக் காசி தீர்த்தமாடித் திரும்புகையில் மறு படியும் அந்தச் சத்திரத்தில் வந்திறங்கி யிருந்தனர். அங்கு முன்போலவே நீதியையர் வீட்டிலிருந்த பெண் வந்தனள். இதற்குள் அவளும் தக்க பருவமடைந்த னள். அவளைக் கண்ட பகவனின் விருப்பப்படி இருவ ருக்கும் விவாகம் நிறைவேறியது. நிறைவேறிய சின் னாட்களில் அப்பெண்ணின் தலையில் ஓர் வடுவிருக்கக் கண்டு, அது யாதென வினவ, அது தாம் முன் அடித்த அடியின் தழும்பென வறிந்து அவள் பறைச்சியெனத் தேர்ந்து கவலையுற்று, இவள் 'ஆதி' யாள் என அவளை விட்டோடினராக, இவளும் அவரைப் பின்தொடர்வா ளாய்ச் சென்று பிரார்த்தித்தனள். அவள் தனக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்தவிடத்திலேயே விட்டு வரின் தம்முடன் இட்டுச் செல்வதாய்ப் பகவன் ஒப்புக் கொள்ள அங்ஙனமே இருவருமேகினர். அம்மார்க்கத் தில் ஔவை, உப்பை, அதிகமான், உருவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர் முதலிய எழுவர் மக்கள் பிறந்தனர். திருவள்ளுவர் பிறந்த இடம் மயிலாப்பூரி லிருந்த இலுப்பைத் தோப்பு. அத்தோப்பில் விடப் பட்ட வள்ளுவர் ஒரு வேளாளரால் வளர்க்கப்பட்டு வந்தனர். பின்னர்த் தொண்டைமண்டலத்தில் ஒரு வேளாளர் வீட்டில் வாசுகி என்னும் பெண்ணை மணந்து இல்லறம் நடாத்தினர். இவருடைய சீஷரில் முக்கிய மானவர் ஏலேல சிங்கர் என்பார். இவர் பொருட்டாய் வள்ளுவர் சில அற்புதங்களைச் செய்தார். வள்ளுவர் செய்துவந்த தொழில் நெசவு. இவர் தம் குறளை எழுதி அரங்கேற்றுதற் பொருட்டுச் சங்கத்துக்குக் கொண்டு

போக அங்கிருந்தபுலவர் பொற்றுமரை வாவியில் மிதந்து கொண்டிருப்பதும் தாங்கள் அமர்ந்திருப்பதுமாகிய சங்கப் பலகை இவர் குறள் ஏட்டுக்கு இடந்தருமேல் தாங்கள் அக்குறளே ஒப்புவோமெனக் கூற இவரும் தாமெழுதிய குறளை அப்பலகையின்மீது வைத்தனர். வைக்கவே பலகை இவ்வேட்டினளவாகச் சுருங்கி மற்றப் புலவரையெல்லாம் குளத்தினுள் விழும்படி செய்தது. அவரெல்லாம் தத்தளித்துக் கரையேறிக் குறளைப் பல வாறு புகழ்ந்தனர். அவர் அச்சமயம் பாடிய பாடல்களே 'திருவள்ளுவமாலை' என வழங்குகின்றது என்பர்.

பின்னர் திருவள்ளுவர் தம் மனைவி வாசுகியுடன் இல்லறம் நடத்தியிருந்தனர். வாசுகியம்மை கற்பிற் சிறந்தவராகவும் கொண்டானிற் பெரிய தெய்வமிலதெனுங் கொள்கையுடையசிறந்த பதிவிரதையாகவும் இருந்தனர். இவர் வள்ளுவர் காலகதியாகு முன்னரே காலகதியாயினர். அப்போது திருவள்ளுவர்,

'அடிசிற் கினியாளே யன்புடையாளே
படிசொற் றவறுத பாவா—யடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுஉம் பேதையே போதியோ
வென்றூங்கு மென்கணிரா'

எனும் வெண்பாவைப் பாடினர் என்பதே.

இக்கதை தற்காலத்தவரால் நம்பப்படுவதொன்றன்று. பெற்ற தாய் குழந்தைகளை அவ்வச்சமயத்தே கைவிட்டேகலும் அவையுடனுடன் தானே பேசுவது மாத்திரமேயன்றி அரிய பாடல்களைப் பாடுதலுமாகிய காரியங்கள் நம்பத்தக்கனவல்ல. மேலும் ஔவையார் தாமே தம்மை விறலியென்று கூறுகின்றார். கபிலர் தம்மை அந்தணர் எனக் கூறுகின்றனர். வள்ளுவர் வள்ளுவ மரபினர் என்பதை அவர் பெயரே வெளிப்படுத்துகின்றது. இவரெல்லாம் உடன் பிறந்தவரெனப் பாராட்டுவதும் ஒவ்வாது. வள்ளுவர் வேளாளர் எனக் கூறிக் கொள்வாருமுண்டு. அதற்கொப்பவே மேற்காட்டிய கதையில் அவர் வேளாளர் வீட்டில் வளர்ந்து வேளாளப் பெண்ணை மணமுடித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இதுவும் நியாயமாய்த் தோன்றவில்லை.

இவர் வள்ளுவர் மரபினிற் பிறந்து வளர்ந்த வள்ளுவரே என்பது மாத்திரம் தெளிவு. அக்காலத்தில் வள்ளுவரென ஒரு பிரிவினர் இருந்தனர் என்பது சங்கநூல்களில் வழங்கப்படும் நாஞ்சில் வள்ளுவன் முதலிய பெயர்களால் தெரிய வருகின்றது. செய்தி வள்ளுவன் என்பானுடைய பாடல் குறுந்தொகையில் 238–ம் பாடலாகக் காணப்படுகின்றது. திருவள்ளுவர் நெசவு தொழில் செய்து வந்தவர் என்பது 'நாவிலிழைநக்கி நூனெருடு மேழை யறிவேனே' என அவர் பாடியதாகக் காணப்படும் ஒரு வெண்பாவாலும் இவர் நெய்துகொண்டிருக்கும்போது கையிலிருந்த குழல் கீழேவிழ அதை எடுக்கும்படியாகத் தீபம் கொண்டுவரும்படி மனையாளுக்குக் கூறிய கதை சம்பந்தத்தினாலும் தெரியவருகின்றது. இவர் திருமயிலாப்பூரில் இருந்தவர் என்பதற்கு அங்கிருக்கும் நாயனார் ஆலயமே ஆதாரமாகின்றது. இவர் மதுரையிற் பிறந்து மயிலைக்குச் சென்றிருக்கலாம் எனச் செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ மு. இராகவய்யங்காரவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். (செந். 7: 5)

திருவள்ளுவர் எம்மதத்தினரென்று தெளிந்து கூறுதற் கியலவில்லை. இந்திரன், அந்தணர், வேதம் முதலியவற்றைப்பற்றி ஆங்காங்கே கூறுகின்றமையின் இவர் ஆரிய மதத்தினரென்பர் ஒரு சாரார். இவர் வைஷ்ணவரெனக் கூறிக்கொள்வார் ஸ்ரீ வைஷ்ணவர்கள். புத்த மார்க்கத்தினரெனவும் சமண சமயத்தினரெனவும் கூறுவாரு முளர். கிறிஸ்தவ சமயாச்சாரிகளாகிய சிற்சில பாதிரிகள் இவர் ஸ்ரீ கிறிஸ்துவின் போதனாசாரங்களையறிந்தே தமது குறளைக் கூறினரெனவும் கூறக் கேட்டுளேம். பகவத் கீதையின் சாரம் செறிந்ததென்பர் மற்றும் சிலர். எவ்வெம் மதத்தினர் இவரைத் தத்தம் மதத்திற் சேர்ந்தவரெனக் கூறவிரும்பினும் அதற்கெல்லாம் இவர் குறள் இடங்கொடுக்கின்றதென்பது முண்மை. ஆதலின் இவர் ஒரு சமயவாதியாயிருந்தனரெனக் கொள்வதைக் காட்டிலும் சர்வ சமயத்திற்கும் சார்பான புத்தி பூர்வ நல்லொழுக்கத்தோடு ஒட்டிய ஈஸ்வரவாதியாயிருந்தனரெனக் கொள்வதே பொருந்துவதாகின்றது.

5. அத்தியாயம்

பத்துப்பாட்டு

வெவ்வேறான பத்துப்பாடல்கள் ஒன்றுபத் தொகுக் கப்பட்டமையின் பத்துப்பாட்டெனப்பட்டது. பத் துப் பாட்டுகளும் அவற்றைப் பாடினோரும் அவற்றில் பாடப்பட்டோரும் அடியில் வருமாறு:—

பாட்டு	பாடினோர்	பாடப்பட்டோர்
1. திருமுருகாற்றுப்படை	நக்கீரர்	முருகன்.
2. பொருநராற்றுப்படை	முடத்தாமக்கண்ணியார்	சோழன்கரி காலன்.
3. சிறுபாணாற்றுப்படை	நத்தத்தனார்	ஏறுமாநாட்டு நல்லியக்கோடன்.
4. பெரும்பாணாற்றுப்படை	உருத்திரங்கண்ணனார்	தொண்டை மானிளந்திரையன்.
5. முல்லைப்பாட்டு	நப்பூதனார்	நெடுஞ்செழி யன்.
6. மதுரைக் காஞ்சி	மாங்குடி மருதன்	நெடுஞ்செழி யன்.
7. நெடுநல்வாடை	நக்கீரர்	நெடுஞ்செழி யன்.
8. குறிஞ்சிப் பாட்டு	கபிலர்	ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிக்க.
9. பட்டினப்பாலை	உருத்திரங்கண்ணனார்	சோழன்கரி காலன்.
10. மலைபடுகடாம்	பெருங்கௌசிகனார்	நன்னன்சேய் நன்னன்.

இவையே பத்துப்பாட்டு என்பது அடியில்வரும் பழைய வெண்பாவால் தெரியவரும்:

‘முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.’

இவற்றுள் நப்பூதனார் பாடிய முல்லைப் பாட்டுத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனையே பாடியதென்பது பலரால் ஒப்புக்கொள்ளப்படுவது. இப்பத்துப் பாடல்களும் கிட்டத்தட்ட ஒரே காலத்தி லெழுதப்பட்டனவாகும். இவை எழுதப்பட்ட அக்காலமும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டே. ஏனெனில்,

இவற்றுள் முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடையாகிய மூன்றும் தலையாலங்கானத்துப் பாண்டியனைக் குறித்து அவன் காலத்தே பாடப்பட்டனவாதலின் இவை ஒரே காலத்தனவாம். இவற்றுள் நெடுநல்வாடையைப் பாடிய நக்கீரரே திருமுருகாற்றுப் படையையும் பாடியுள்ளவராதலின் திருமுருகாற்றுப்படை முன்னைய மூன்றினோடும் ஒட்டிய அதே காலத்தில் எழுதப்பட்டதாதல் வேண்டும்.

மாங்குடிகிழார் எனும் புலவர் தலையாலங்கானத்துப் பாண்டியனை நேரிற் பாடிய புலவருள் ஒருவர் (புற. 24, 26, 372). இதே மாங்குடிகிழார் வாட்டாற்றெழினியாதனை நேரிற் பாடியுள்ளார். (புற 397). இவ்வெழினியாதனால் ஆதரிக்கப்பெற்ற புலவருள் ஒருவர் அரிசில் கிழாராவார் (புற. 230). வையாவிக்கோ பெரும்பேகன் தன் மனைவியாகிய கண்ணகியைத் துறந்த சமயம் அவனை அவளோடு கூட்டுவிக்கும்படி பாடிய புலவருள் அரிசில்கிழாரு மொருவர் (புற. 146). ஆதலில் அரிசில் கிழார் இப்பெரும்பேகன் காலத்தவர் என்றும் அதே சந்தர்ப்பமாய்ப் பெரும்பேகனிடம் சென்று பாடிய கபிலர் (புற. 143) பரணர் (புற. 144) முதலிய புலவர்கள் காலத்தவரென்றும் தெரியவருகின்றது. இவருள் பரணர் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியைப் பாடியவர் (புற. 4). உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி சோழன் கரிகாலனின் தந்தை (பொரு. 130). இப்பரணரே சேரன்செங்குட்டுவனைப்பாடி (பதிற். 5) உம்பற்காட்டு வருவாய் முதலியன பரிசிலாகப் பெற்றவர்.

எனவே சோழன்கரிகாலனைப்பாடிய பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும் மேற்கூறிய நான்கு பாட்டுகள் எழுதப்பட்ட காலத்திற்குச் சமீப காலத்தி

லேயே எழுதப்பட்டிருக்கவேண்டுமெனக் கொள்ளவேண்டும். அன்றியும் பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனாரே பெரும்பாணாற்றுப்படையையும் பாடியுள்ளாராதலின் அதுவும் அக்காலத்ததே. கபிலர், பரணர் காலத்தவரென்று முன்னரே பார்த்தோம். ஆதலின் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டும் அக்காலமுண்டாயதே. இனி எஞ்சியன சிறுபாணாற்றுப்படையும் மலைபடுகடாமுமாம். இவற்றுள்,

சிறுபாணாற்றுப்படையில்,

'குடபுலங் காவலர் மருமா னெனினுர்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே.' (சிறுபா. 47–50)

எனக் கூறப்பட்டுளவற்றிலிருந்து அது சேரன்செங்குட்டுவன் காலத்தது என நிதானிக்க இடமுண்டாகின்றதாதலின் இதுவும் முற்கூறிய காலத்ததேயாம்.

மலைபடுகடாத்தில் பாடப்பட்டவன் நன்னன். இந்த நன்னன் இளவச்சிரக்கோவின் மூதாதையாவான் (புற. 151). குமணன் கடையெழுவள்ளல்கள் இறந்த பிறகும் உயிரோடிருந்து அவ்வள்ளல்கள் ஒப்ப ஈகையிற் சிறந்து விளங்கினன் (158). இக்குமணனைப் பாடினோர் பெருஞ்சித்திரனாரும் (புற. 158, 63) பெருந்தலைச் சாத்தனாரும் (புற. 164, 165). கடையெழுவள்ளல்கள் கரிகாலன் காலத்தவர். சிறுபாணாற்றுப்படைத்தலைவனாகிய நல்லியக்கோடனும் கடையெழுவள்ளல்களையடுத்திருந்தவனாதலின் குமணன் காலமும் கிட்டத்தட்ட அதுவேயாகும். பெருந்தலைச்சாத்தனார் இளவிச்சிக்கோவைப் பாடியுள்ளார் (புற. 151). எனவே நல்லியக்கோடன், குமணன், விச்சிக்கோ முதலியவர் கிட்டத்தட்ட சமகாலத்தவர் எனத் தெரியவருகிறது. வச்சிரக்கோவின் தந்தையாகிய நன்னன் காலம் இதற்குச் சற்று முந்தியதாம். எனவே மலைபடுகடாம் சிறுபாணாற்றுப்படைக்குச் சமீப காலத்திலேயே எழுதப்பட்டதாம்.

இவ்விவரங்கள் 'பத்துப்பாட்டின் காலம்' என ஸ்ரீ T. A. இராமலிங்கம் செட்டியாரவர்கள் எழுதியுள்ள

வியாசத்தில் கூறப்பட்டுள்ளன. இவ்வாறுகப் பத்துப் பாடல்களும் ஒரே நூற்றாண்டில் எழுதப்பட்டனவெனக் கொள்ளுதற்கிடமுண்டாகிறது. அக்காலமும் சேரன் செங்குட்டுவன், சோழன்கரிகாலன், பாண்டியன் தலை யாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் ஆய மூன்று பெருந் தமிழ்வேந்தர் காலத்தை யொட்டியதாம். இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற் றாண்டெனக் கொண்டமையின் இப்பத்துப் பாடல்களும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும் அதனை முன்பின் ஒட்டியுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டுமென்பது உறுதியாகிறது.

1. திருமுருகாற்றுப்படை. குளித்து வந்து தன்னையுண் ணும்படி பிடித்து அடைத்து வைத்திருந்ததோர் பூதத் தினின்று விடுபடுமாறு நக்கீரர் முருகக்கடவுளை நினைந்து இப்பாடலைப்பாடி அக்கடவுளருளால் விடுபட்டனரென் பர். இப்பாட்டு 317 அடிகளையுடையது. முருகக் கட வுளையடைந்து வீடுபெற்றானொருவன் வீடுபேற்றை விரும் பிய மற்றொருவனை அக்கடவுளிடத்தே செலுத்திய பாவனையாய்ப் பாடப்பெற்றது. முருகன் அமர்ந்திருக் கும் விசேஷித்த படைவீடுகளாகிய திருப்பரங்குன்று, திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை ஆய ஆறிடங்களையும் சிறப் பித்துக் கூறுவது. முருகவேளிடத்தில் ஈடுபட்ட நெஞ் சினராய் நக்கீரர் கல்லுங் கசியப் பக்திரசம் பெருகியோடு மாறு பாடியுள்ள இச்செய்யுளினிடையே அக்கடவுளி னுடைய ஆறுமுகம், பன்னிரு கைகளின் செயல்கள் முதலியனவும், அந்தணர் முனிவர் முதலியவருடைய தோற்றம், ஒழுக்கம், இயல்பு முதலியனவும், அந்நாள் மக்களுடைய அணி, ஆடை விவர முதலியனவும், முரு கன் ஆடும் வேலன் அல்லது படிமத்தான் என்பவனது தோற்றமும், முருகனை வரவேற்கக் குறமகளிர் எடுத்த திருவிழாக் கொண்டாடுமுறையும், முருகனை ஏத்தி வழி படு முறையும், அவ்வழிபாட்டாலெய்தற்பாலனவாய பேறு முதலியனவும் ஆங்காங்கே விவரமாய் விரிக்கப் பட்டுள்ளன.

மகளிர் அலங்காரம்:—திருமு. 20–37.

தோழியர் கோதிய எண்ணெய் பூசின மயிரிலே சிவந்த காம்பையுடைய சிறு வெட்சிப்பூக்களை விடுபூவாகத்தூவி, அதற்கு நடுவே பசுந்தண்டினையுடைய குவளைமலரின் வெள்ளிதழ்களைக் கிள்ளியிட்டுச் சீதேவியென்னும் தலைக்கோலத்தையும் வலம்புரிச் சங்குபோன்ற மற்றொரு தலை நகையையும் தலையிலே அணிந்து, நெற்றியில் பொட்டிட்டுச் சுரும்பின் அங்காந்த வாய்போற் செய்யப்பட்ட தலையணியை நெற்றியின்மேல் வரும்படி அணிந்து, முற்றமுடிந்த கொண்டையிலே பெரிய செண்பகப்பூவைச் செருகி, அதற்குமேலே மருதம்பூவையிட்டுக் கழுநீர்ப்பூமாலையைக் கழுத்திலேயிட்டு, வளர்ந்த தமது காதுகளிலே பிண்டிமரத்தின் தளிர்களைமாட்டி, அழகிய ஆபரணங்களை மார்பிலணிந்து முதிர்ந்த சந்தன மரக்கட்டையையுரைத்த சந்தனத்தை மார்பில் பூசி, அந்த ஈரம் காய்வதன்முன் அதற்குமேல் வேங்கைப்பூவின் தாதினை அப்பி, விளாமரத்தினது சிறிய தளிரைக் கிள்ளி ஒருவர்மேலொருவர் தெறித்துக்கொள்வார்கள்.

முருகனது ஆறுமுகம் பன்னிரு கைகளின் தோற்றமும் அவற்றின் செயல்களும் திருமு. 91–117 அடிகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

துறவிகளின் தோற்றம்:—திருமு. 126–135.

மரவுரியை உடையாகச்செய்த உடையினர். அழகாலும் வடிவாலும் நிறத்தாலும் வலம்புரிச் சங்கினையொக்கும் நரை முடியினர். எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கில்லாமல் விளங்கும் மேனியர். அடிக்கடி விரதமிருந்து பட்டினி கிடப்பதால் தசையில்லாத மார்பின் எலும்புகளின் கோவை வெளிப்படத்தோன்றி உலவும் உடம்பினையுடையவர். எப்பொருளு நுகர்தற்கு நன்றுகிய பகற்பொழுதுகள் பல சேரக்கழிந்த வுணவினையுடையார். நெடுங்காலம் மனதில் தங்கக்கூடிய கோபத்தைப் போக்கிய மனத்தினர். பலவற்றையும் கற்ற பெரும் கல்விமான்களும் சிறிதும் அறியமாட்டாத இயல்பான

அறிவையுடையவர். பலவற்றையும் கற்றோர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையையுடையவர். ஆசையோடே கடியகினத்தையும் போக்கின அறிவினையுடையவர். தவத்தால் உடலுக்கு வருத்தம் இருப்பது உண்மை யெனினும் தங்கள் மனத்தினுல் வருத்தம் சிறிதும் அறி யப்படாத இயல்பினையுடையவர்.

2. பொருநராற்றுப்படை. சோழநாடாண்ட பேரரச ருள் சிறந்தவனுகிய கரிகாற்சோழனை முடத்தாமக்கண் ணியார் பாடியது. இது 248 அடிகளையுடையது. தன் பேரவாத்தீரக் கரிகாற்சோழனிடம் பரிசில் பெற்றுனேர் இரவலன் பரிசில் பெறக்கருதிய மற்றுமோர் பொருநனை அச்சோழனிடம் வழிபடுத்தியதாகப் பாடப்பெற்றது. இதனிடையே பாலையாழினது இசைச்சிறப்பு, கரி காற்சோழனது பிறப்பு, அரசுரிமை, வீரம், அவன் வெண்ணில் போர்க்களத்தில் சேரபாண்டியரை வென்ற விவரம், சோணுட்டுவளன், காவிரிப் பாய்ச்சலின் நெல் விளைவு முதலியன கண்கண்டாலென படிப்பார் அறிந்து கொள்ளுமாறு விவரிக்கப்பட்டுள்ளன. இப்பாட்டி னின்று கரிகாற்சோழனது கொடைப்பெருமையும் இனிது விளங்கும். அப்பாட்டில் வழங்கும் அடியில்வரும் வாசகங்கள் அக்காலத்தவர் நாகரீகத்தை யறிவிப்பன:-

'மயிர்குறை கருவி மாண்கடை யன்ன' (பொரு. 20.)

மயிர்வெட்டுகின்ற கத்திரிகையினுடைய மாட்சிமைப் பட்ட குழைச்சைப்போன்ற

'வேர்ப்பொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னர் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன வறுவை' (பொரு. 80–83.)

வேர்வையாலே நனைந்து சுறடுகள் உள்ளேயோடுதற் குக் காரணமாகிய தைத்தற்றொழிலை யுடையனவாகிய சிலையைப்போக்கி கண்ணிற் பார்வை இல்லது இழை போன வழியென்று குறித்துப் பார்க்கவராத மெல்லி யனவாய்ப் பூத்தொழில் முடிந்து பாம்பின் தோலை யொத்த ஆடையைக் கொடுத்து

கரிகாலன் வெண்ணில் போர்:—பொரு. 130–148.

'வென்ற வேலினையுடைய அழகிய தேரினையுடைய இளஞ்சேட்சென்னியினுடைய புதல்வன். முருகனது சீற்றம்போலும் சீற்றத்தையுடைய உட்குதல் பொருந்திய தலைவன். தாயுடைய வயிற்றிலேயிருந்து பிறக்கையிலேயே அரசவுரிமைபெற்றுப் பிறந்தவன். முன்பு தன் வலியறியாத பகைவர் பின்பு தன் வலியினையறிந்து ஏவின தொழிலைச் செய்ய, ஏவல் செய்யாத பகைவர் தேசம் மனக்கவற்சி பெருகத் தவழ்தலைக் கற்றநாள் தொடங்கிக் கூற்றுவனுடைய வலியிற் காட்டின் மிகுகின்ற வலியாலே கலித்து, ஏனையோர் நாட்டிற் சிறந்த நன்னுட்டைத் தோளிலே வைத்துக்கொண்டு நாடோறும் வளர்த்தல் காரணமாக, இனைய பருவத்தே கரிய பனங்குருத்தில் அலர்ந்த வலப்பக்கத்து ஓலையும், கரிய கொம்பினையுமுடைய வேம்பினுடைய வாளரத்தின் வாய்போலும் விளிம்பினையுடைய அழகிய தளிராற் செய்த மாலையும் நறிய மாலைகளில் மேலாதற்குக் காரணமான பெரிய தலையிலே ஏனையோர் சூடும் அடையாளப் பூக்களிற் சிறப்ப அவற்றைச் சூடிய சேரனும் பாண்டியனும் ஒருகளத்தே படும்படி வெண்ணில் என்கின்ற ஊரிடத்தே பொருத அச்சந்தோன்றுகின்ற வலியையுடைய முயற்சியையும் கண்ணுக்கு அழகு நிறைந்த ஆத்திமாலையினையுமுடைய கரிகாற்சோழன்'

'தூய
கொட்டைக் கரைய பட்டுடை' (பொரு. 154, 155)

தூயவாகிய திரளமுடிந்த முடிகளைக் கரையிலேயுடைய பட்டாலாகிய ஆடை.

'நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்' (பொரு. 240)

நுரையைத் தலையிலேயுடைய ஆரவாரத்தையுடைய நீர் குளத்திலும் கோட்டத்திலும் புகுந்தோறும்

'சுவைய
வேறுபல் லுருவின் விரகு தந்தீஇ' (பொரு. 107, 108)

'இனிமையுடையவாய் வெவ்வேறுகிய பல வடிவினையுடைய பண்ணியாரங் கொண்டுவந்து அவற்றைத் தின்னும்படி எங்களையிருத்தி'

'முகிழ்த்தகை
முரவை போகிய முரியா அரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பால்வறைக் கருனை காடியின் மிதப்ப
வயின்று.....' (பொரு. 112–116)

'முல்லையரும்பின் தன்மையையுடைய வரியற்ற முனை முரியாத அரிசி விரலென்னும்படி நெடுகின ஒன்றோடொன்று சேராத சோற்றையும் பாலைப் பொரித்தது ஞேடே கூடிய பொரிக்கறிகளையும் புளிக்கறியோடே நிரம்பச் சாப்பிட்டு'

சோழநாட்டின் பற்பல பாகங்களிலுள்ள விளைவுகள் காவிரிதீரத்தின் வளம் செழிப்பு முதலியன அறிய விரும்புவார் இப்பொருநராற்றுப் படையை வாசித்தறிக.

3. சிறுபாணற்றுப்படை. இது 269 அடிகளையுடையது. ஏறுமா நாட்டு நல்லியக்கோடன் பெருமையை விரிப்பது. வறுமையுற்று நல்லியக்கோடன் வள்ளன்மையால் தன் வறுமை நோய் தீர்ந்து வாழ்வடைந்தானொருவன், நல்குரவால் நைந்த பிரிதோர் இரவலனை அந்நல்லியக்கோடன்பால் சேறவிடுத்ததாக நல்லூர் நத்தத்தனார் பாடியது. இதனிடையே வடநாட்டிமையத்து விற்பொறித்த குடநாட்டரசினர் பெருமையும், கொற்கையையுடைய மதுரைப் பாண்டியன் உயர்வும், தன்னுள் சென்றவர் நீங்கா உறந்தைக்குரிய சோழர் சிறப்பும், கூறப்பட்டிருப்பதன்றியும் மயிலுக்குப் போர்வையளித்த ஆலியர் பெருமகன் பேகன், முல்லைக்குத் தேர் அளித்த பறம்பரசன் பாரி, நாடு, குதிரை முதலியன இரவலர்க் கீந்த காரி, ஆலின்கீழ் இறையவனுக்கு நீலக் கலிங்கம் நல்கிய ஆய், ஔவைக்கு நெல்லிக்கனியீந்த அதிகமான், இல்லறம் நடாத்துபவருக்குப் பல்பொருள் கொடுத்த நள்ளி, கூத்தர்க்கு நாடு கொடுத்த ஓரி, ஆகிய ஏழு வள்ளல்களையும் பிரஸ்தாபிப்பது. ஔவியர் குடியிற்

பிறந்த நல்லியக்கோடன் நாட்டு வளத்தையும் அவன் ஆதூரையும் சிறப்பித்து அவன் நாட்டிலுள்ள பாதவர் மலிந்த எயிற்பட்டினம், கேணிப் பூ வேலெனப் பூக்கும் வேலூர், அந்தணர் நிறைந்த ஆமூர் முதலியனவற்றின் பெருமையைக் கூறுவது.

சோநாடு:—சிறுபா. 41–47.

'கொழுவிய மீன் துணிய நடந்து செழித்த இதழுடைய செங்கழுநீர்ப் பூவைத் தின்ற பெரிய வாயையுடைய எருமை, பசிய மிளகுக்கொடி படர்ந்த பலாவின் நிழலிலே மஞ்சளினது மெல்லிய இலை தனது மயிரையுடைய முதுகைத் தடவ முற்றுத இளைய தேன் நாறமென்று அசையிட்டுக் காட்டு மல்லிகையாகிய படுக்கையிலே துயில்கொள்ளும் மேற்றிசைக்கண் ணுள்ள நாடு.'

வறுமையும் பசிவருத்தமும்:—சிறுபா. 130–140.

'விழியாத கண்ணையுடைய வளைந்த செவியினையுடைய குட்டி கறக்கப்படாத பாலினையுடைய முலையை யுண்ணுதலைத் தன் பசி மிகுதியாற் பொறுத்தலாற்றாது ஈன்றணிமையையுடைய நாய் கூப்பிடும் பொலிவழிந்ததும், கழிகள் ஆக்கையற்று விழுவதும், பழைய சுவரிடத்து எழுந்த திரண்ட கறையான் தின்றதும், நனைந்த புழுதி உட்பொய்யாகிய காளானைப் பூத்ததுமான சமையலறையில் ஒடுங்குதற்குக் காரணமாகிய பசியாலே வருந்திய நுடங்கும் நுண்ணிய இடையினையும் வளையணிந்த கையினையுமுடைய கிணைவனுடைய மகள் பெரிய நகத்தினால் கிள்ளிய குப்பையினின்ற வேளை உப்பின்றி வெந்து அதனை வறுமையுறுதலும் இயல்பென்றறியாது புறங்கூறுவார் காண்டற்கு நாணித் தலைவாசலை யடைத்து மிடியாற் கரிய பெரிய சுற்றத்தோடே கூடவிருந்து அடையத் தின்னும் அறிவு முதலியன அழிதற்குக் காரணமான பசி.'

உலக்கையும் அரிசியும்:—சிறுபா. 193, 194.

'இருங்கா ழுலக்கை யிருப்பு முகந்தேய்த்த
வவைப்பு மாணரிசி யமலை வெண்சோறு.'

கரிய வயிரத்தையுடைய உலக்கையினது பூணினையுடைய முகத்தைத் தேயப்பண்ணின குத்துதல் மாட்சிமைப்பட்ட அரிசியாலாக்கின கட்டியாகிய வெள்ளிய சோறு.

மெல்லிய வஸ்திரம்:—சிறுபா. 236.

காம்பு சொலித்தன்ன வறுவை. 'மூங்கில் ஆடையை யுரித்தாலொத்த மாசில்லாத உடை.'

நல்லியக்கோடனுடைய தன்மை 210–219 அடிகளிலும், அவனுடைய தேர் அமைவு 252–253 அடிகளிலும் கூறப்பட்டிருக்கின்றன.

4. பெரும்பாணாற்றுப்படை. இது 500 அடிகளையுடையது. தொண்டைமானிளந்திரையன்பாற் சென்று தன்மிடி தீர்ந்தானிரவலனொருவன் ஊணின்றி மெலிந்த தன் உடலைத் துளைமிகுந்த போர்வையால் மூடித் தன்னை யாதரிப்பாரைக் காணுமே யலைந்துதிரிதரும் பிறிதோர் இரவலனை எதிர்ப்பட்டு அம்மிடியோன் மூவேந்தரிற் சிறந்த சோழன் வம்சத்துதித்த தொண்டைமானிளந்திரையன்பாற் சென்று தன் மிடியைத் தீர்த்துக்கொள்ளுமாறு அவனை அத்திரையன்பாற் செலுத்தியதாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. தொண்டைநாடு செல்லும்வரை இடைநாட்டிலுள்ள பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம் முதலிய பல நிலங்களின் இயற்கை வனப்புகள்; அவற்றில் வதிவாரது, நாய்கொண்டு முயல்வேட்டையாடல், ஆவோம்பிக் கன்று காத்துப் பால் தயிர் விற்று நெல்லும் புல்லும் மாறுதல், கழனி விதைத்து நெல் அறுத்தல் முதலிய பல தொழில்கள்; கடற்கரைப் பட்டினத்தில் மேற்றிசைக் குதிரை முதலியன வந்திறங்கியிருக்கும் புறநாட்டு வர்த்தகச் சிறப்புகள்; அவ்வந்நிலங்களைக் கடந்து செல்லுங்கால் ஆங்காங்கே கிடைப்பனவாகிய உணவு வகைகள்; காஞ்சிபுரத்திலுள்ள தேரோடிக் குழிந்த தெருக்களின் சிறப்பு; திருமாலின் இருப்பிடமாகிய திருவெஃகாவின் மேன்மை முதலிய பல விவரங்களை இதை வாசித்தறியலாம்.

. உப்பு வண்டிகள் செல்லும் பெரும்பாதை:—பெரும்பா. 60–65.

• பரிய அழகினையும் வலியினையுமுடைய இறுகின தோளினையும் முறுக்குண்ட உடம்பினையும் நிரம்பிய மெய்வலியினையுமுடையோர், சிறிய துளையினையுடைய நுகத்தின்கண்ணே பெரிய கயிற்றாலே எருதுகளை ஒரு வழிப்பட வரிசையாய்ப் பூட்டிக் கட்டின வண்டிகளை எருதுகள் திருகாமல் அச்சு முறியாமல் பக்கத்தே காத்துச் செல்ல, இடப்படும் பொருள்களுக்குச் சிறியவாக இடப்படு முண்வினது விலை சொல்லி இளைத்தாற் பூட்டு தற்குப் பல எருத்தையுமடித்துக்கொண்டு போம் உப்பு வாணிகர் ஊர்கள் தோறும் செல்லும் நெடிய வழி.

ஆயர் குழல் ஊதி நிறைமேய்த்தல்:—பெரும்பா. 169–182.

'செருப்பு விடாமற் கிடந்த வடுவழுந்தின வலியையுடைய அடியினையும், பசுக்களுக்கு வருத்தஞ் செய்யும் தடியை யூன்றின மரங்களை ஒடித்துக்கொடுக்கும் கோடரியாற் றழும்பிருந்த வலிய கையினையும், இரண்டு தலையினும் உறியினையுடைய காக்கள் மேலே யிருந்த தனால் உண்டாகிய தழும்பு மிக்க மயிரெழுந்த தோட்கட்டினையும், எல்லா மணமும் பொருந்தும் பசுக்கறந்த பாற்கையைத் தடவின மயிரையும், காட்டிடத்தனவாகிய உயர்கின்ற உச்சியினையுடைய கொம்புகளிலுள்ளவும் கொடிகளினுள்ளவுமாகிய பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலையினையும், ஒன்றுப்பொருந்திய உடையினையுமுடைய பாற்சோற்றையுண்கின்ற இடையன், கன்றுகள் பொருந்தின பசுத்திரளோடே காட்டிலே தங்கித் தீக்கடைகோலாலே அழகிய நுண்ணியதாய் விளங்கும் புகை முற்படப் பிறக்கும்படி கையாலே கடைந்துகொண்ட சிவந்த நெருப்பினையுடைய கடைக்கொள்ளியாற் றுளையிட்ட கரிய துளையினையுடைய குழலாலெழுப்பின மிகவுமினிய பாலையென்கின்ற பண்ணைத் தான் வெறுக்கில் குமிழினது உட்பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக்கட்டிய மரற்கயிறுகிய விரலாலே தெறித்து வாசிக்கும் நரம்பினையுடைய வில்லாகிய யாழொலிக்கும் குறிஞ்சியென்கின்ற பண்.'

மிளகுப்பொதி கழுதைகளின்மேல் ஏற்றிச் செல்லல் (80), வியாபாரப் பாதைகளில் ஆங்காங்கே சேனைகள் இருத்தல் (82), மகவீன்ற எயினி தன் குழந்தையைப் புலித்தோலில் வளர்த்துதல் (80), நிலத்தில் குழி தோண்டி உரலாக உபயோகித்தல் (96), கெல்லரிசியினுல் (பீர்) மதுபானம் செய்தல் (142), பொன்னைக் கல்லில் உரைத்து மாற்றுப் பார்த்தல் (220), ஆள் உயரத்தின் மேற்பட்ட ஆழமுடைய குளங்களிருத்தல் (274), வீட்டுச்சுவர்களுக்குச் சாந்து பூசுதல் (348), ஆவியைப்போன்ற மெல்லிய ஆடை (469) முதலியவற்றின் விவரங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. அன்றியும் பெரும்பாதைகளில் வியாபாரத்தின்பொருட்டுச் செல்வோர், உழவர் முதலியவர்களுடைய விவரங்கள் பரக்கக் கூறப்பட்டுள்ளன.

5. மூல்லைப்பாட்டு. இது 103 அடிகளையுடையது. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனர் மகனர் நப்பூதனர் பாடியது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனைப் பாடியதெனக் கருதப்படுகின்றது. போர்வயின் பிரிந்த தலைவன் குறித்தகாலம் திரும்பி வருமளவும் தலைவி ஆற்றியிருந்த திறனுரைப்பது. இதில் நன்மொழி கேட்டுப் போர்க்கெழு முறையானே சென்ற அரசன் போர்க்களத்தில் தங்கியிருந்த தன்மையும் அவன் பகைவரோடு பொருது வெற்றி வேந்தனைத் திரும்பிய விதமும் விவரிக்கப்பட்டுள்ளன.

போர்வேட்டுச் சென்ற அரசன் தன் படைகளுடன் கூடாரங்களில் அமர்ந்து இரவு நேரங்களைச் செலவிடும் தன்மை; ஆங்காங்கே பற்பல விளக்கங்கள் ஏற்றப்பட்டு ஒளி வீசுகின்ற சிறப்பு; போர் செய்யச் செல்லுமரசன் நற்சகுனச் சொற்கள் கேட்கும் விவரம்; அக்காலத்தவர் நேரத்தைக் கணக்கிட வழங்கிய நாழிகை வட்டிலின் விவரம் முதலியனவும் இப்பாட்டினிடையே கூறப்பட்டுள்ளன.

6. மதுரைக் காஞ்சி. இது 782 அடிகளையுடையது. இதைப் பாடினர் மாங்குடி மருதனர். பாடப்பட்டவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். பாடிய நோக்கம் நெடுஞ்செழியனை மறுமை

யின்பமெய்தற்கான வழியிலுய்த்தற்பொருட்டு. செழியன் நெடுநாளுலகாண்ட அரசமரபினுதித்தவன். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் முதலியவர் வழியில் தோன்றினவன். சாலியூர், வெள்ளிலை மூதூர் முதலியன கொண்டவன். பொருநர்க்குக் கன்றும் பிடியும் பொற்றுமரையும் தருபவன். சேர சோழரையும் குருநில மன்னரைவரையும் தலையாலங்கானத்துப் போரில் வென்று அவர் முரசைக் கைக்கொண்டவன். பரதவர் படையுடையோன். இவன் நகரியாய மதுரையோ ஆழ்கிடங்கு சூழ்ந்தது. மேகமூலாவு மாடமுடையது. மாந்தர் இடையறாது வழங்கும் அடையா வாயிலது. பல பாஷையினர் நாற்றிசையினின்றும் வந்து வாணிகம் செய்யும் கடைவீதியுடையது. யானை, தேர், புரவி, காலாட் படையினர் இடையறாது தெருக்களினூடலவும் பெருமையது. பற்பல வகையினவாய மோதகம், பணியாரம் விற்கும் கடைகளுடையது. எண்ணிறந்த வகையினரும் தொழிலினரும் நிறைந்திருக்கும் சிறப்பினையுடையது. அதன் தெருக்கள் ஆறுகிடந்தன்ன அகன்று நீண்டன. தெருக்கள் தோறும் விழாக்கொடிகள், சயக்கொடிகள் முதலிய நுடங்குவன. அவற்றில் மாலை வேளைகளில் பூமாலை, கலம்பம், வாசனைச் சுண்ணம், களிப்பாக்கு, வெற்றிலை, சங்குச் சுண்ணும்பு, நுகர்பொருட்கள் விற்பாரும், அந்திக் கடையில் ஆடையாதிகள் விற்பாரும் நெருங்கியிருப்பார். இத்துணை வளஞ்செறிந்தது மதுரை. இத்துணைப் பெருமையும் வீரமும் செல்வமும் பொருந்தியவன் நெடுஞ்செழியன். எனினும் இவன் தன் வாழ்வு அநித்திய மென்பதனையும் எனைச் செல்வங்கள் நிலையற்றனவென்பதையு மோர்ந்து தன்னைப்போல்வாரும் தன்னை மிக்காருமாய் இந்நகரிடைத் தொன்றுதொட்டு அரசு புரிந்தாரில் எவரும் இம்மையில் நில்லாராய் மறுமை சென்றனரென்பதை யுன்னித் தன்னிலைமையும் அற்றே என்பதனை யுணர்ந்து நற்கதியடையுமாறு தூண்டப்படுகின்றனன். பண்டைநாட் பாண்டியர் பெருமையையும் மதுரையின் அந்நாட் சிறப்பையும் அறிதற்கு இப்பாடல் மிகவும் சாதனமாயிருப்பது.

மரக்கலம், கடல் வியாபாரம்:—மதுரைக்கா. 75–83.

மேகம் படிந்த பெரிதாகிய மூன்று நீர்மையையுடைய அச்சம் நிலைபெற்ற கரிய கடலிடத்துக் கடிய காற்றாலே வளைகின்ற திரையைக் குறுக்கே பிளந்தோடும் படி பாய் விரிக்கப்பட்டு இனிய ஓசையுடைய முரசு முழங்காநிற்கப்; பொன் மிகுதற்குக் காரணமாகிய சீரிய சரக்குகளை நாட்டிலுள்ளார் நுகரும்படியாகக் கரையைச்சேர வாணிகம் வாய்த்து வந்து இழிதலைச் செய்யும் நெடிய கொடி பாய்மரத்தின் மேலே யாடும் இயல்பினையுடைய மரக்கலம்.

கொற்கையில் முத்துக்குளித்தல்:—மதுரைக்கா. 135–138.

'விளைந்து முதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கை.....'

சூல் முற்றி ஒளி முதிர்ந்த சீரிய முத்தினையும் விளங்குகின்ற சங்கினையுமுடைய பெரிய சங்கு குளிப்பாரிருப்பினையும் கள்ளாகிய உணவினையுடைத்தாகிய இழிந்த குடிகளையுடைய சிறார்களையுமுடைய நன்றாகிய கொற்கை.

யவனர் தேசக் குதிரை வரவு:—மதுரைக்கா. 321–323.

'விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவி.....'

சீரிய மரக்கலங்களைச் செலுத்தும் மரக்கல மீகாமர் அகன்ற இடத்தையுடைய யவனதேசத்தினின்றும் இவ்விடத்துண்டாகிய பேரணிகலங்களை ஆண்டுச் செலுத்துதற்குப் பலருங்கூடிச் சேரக்கொண்டுவந்த குதிரைகள்.

அந்தணர்:—மதுரைக்கா. 468–473.

அதர்வ வேதமொழிந்த முதன்மைப்பட்ட வேதங்களைத் தமக்குப் பொருள் தெரியும்படி யோதி, விழுமிய தலைமையோடு பொருந்தின யாகங்கள் முதலிய தொழில்களோடே சிலகாலம் பொருந்தி, நால்வகை நிலங்க

ஏமார்ந்த உலகத்தே ஒன்றுகிய பிரமந்தாங்களேயாய் உயர்ந்த நிலைமையுடைய தேவருலகத்தை இவ்வுலகிலே நின்று சேரும் தருமத்தின் வழி ஒருகாலமும் தப்பாத பல்லுயிர்கட்கு மன்புடைத்தாகிய நெஞ்சாலே ஜீவன் முத்தராயிருப்பாரிடத்தே சிலகாலம் பொருந்திநின்று ஆண்டுப் பெற்றவீட்டின்பத்தாலே இனிதாகத் தங்கும் மலையை உள்வெளியாக வாங்கி இருப்பிடமாக்கினாற் போன்ற பார்ப்பார்களிருப்பிடம்.

அமைச்சர் தன்மை:—மதுரைக்கா. 496–499.

'நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்கள்'

அரசனிடத்துள்ள நன்மையுந் தீமையும் நெஞ்சத்தாலே கண்டு, அத்தீங்குகளை யாராய்ந்து, அவற்றிலே யொழுகாமலடக்கிச் சுற்றத்திடத்துச் செல்லுமன்பும் எவ்வுயிர்க்கண்ணு நிகழுந் தருமமும் ஒருகாலமும் போகாமல், தம்மிடத்தே பரிகரித்துப் பழி தம்மிடத்து வாராமல் நீக்கி, அதனாலே எனையோரினும் உயர்ச்சியெய்திப் பரந்த புகழ் நிறைந்த விளங்குகின்ற மயிர்க்கட்டுக் கட்டித் தலைமையமைந்த காவிதிப் பட்டங்கட்டின அமைச்சர்.

நாகரிகத்தொழிலினர்:—மதுரைக்கா. 511–518.

'அறுத்த சங்கை வளை முதலியனவாகக் கடைவாரும், அழகிய மணிகளைத் துளையிடுவாரும், சுடுதலுற்ற நன்றுகிய பொன்னை விளங்கும் பணிகளாகப் பண்ணுந் தட்டாரும், பொன்னையுரைத்த உரையை அறுதியிடும் பொன் வாணிகரும், புடவைகளை விற்பாரும், செம்பு நிறுக்கப்பட்டதனை வாங்கிக்கொள்வாரும், கச்சுக்களை தம் தொழின் முற்றுப்பட முடிவாரும், பூக்களையும் சாந்தையும் நன்றுக ஆராய்ந்துவிற்பாரும், பல வகைப்பட்ட கூரிதாக வுணர்ந்த தொழில்களையும் ஒப்புக்காட்டிக் கூரிய அறிவினையுடைய சித்திரகாரிகளும்.'

பலகாரக் கடைகள்:—மதுரைக்கா. 624-627.

'பாகிலே சமைத்தலமைந்த நல்ல வரிகளையுடைய தேனிறலியொக்கும் மெல்லிய அடையினையும், பருப்புந் தேங்காயும் உள்ளே வைத்துக் கண்ட சருக்கரை கூட்டிப் பிடித்த வகுப்பமைந்த வெம்மை பொருந்தின அப்பங் களையும் இனிய பாகோடு சேர்த்துக் கரைத்த மாவினையு முடைய அப்பவாணிகர்.'

இப்பாட்டினிடையேகாணப்படும்நெல் விளைவு (110), மீன் படவு (116), உப்பு விளைவு (117), கரும்பு ஆலை (258), குழிவெட்டிப் பன்றி வீழ்த்தல் (294), அரத்தால் அறுத்த வளையல்கள் (316), பகற்கடைவீதி, அந்திக் கடைவீதி (365), நங்குரக்கல் (378), குதிரை பழக்கும் வட்டம் (390), ஏழாம்நாள் திருவிழாச் சிறப்பு (427), சிவப்புச் சேலை (433), சோறிடு சாலைகள் (535), மிரு கக்காட்சி சாலை (677), தங்கமழுத்திய கல் நகை (704), முதலியனவும் பிறவும் இற்றைக்கு இரண்டாயி ரம் வருடத்தின் முன்னரே தமிழ் மக்கள் அடைந்த நனி நாகரிகம் இத்தன்மைத்தென்றுணர்த்துவனவாம்.

7. நெடுநல்வாடை. இது 188 அடிகளையுடையது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது. கார்கால மழைபெய்து குளிர் மிக்கதோர் நள்ளிரவில் போர்மேற் சென்று பாசறையில் தங்கியிருக் கும் தன் கணவனின் பிரிவாற்றாமே வருந்தியிருந்த பாண்டியன் மனைவியைத் தேற்றற்பொருட்டு அவள் சிலதியர் அரசன் பாசறைத்தொழில் இன்னே முடிவ தாக எனக் கொற்றவையைப் பரவியதாகப் பாடப்பட் டது. இதனிடை விரிக்கப்பட்டுள்ள கார்கால வர் ணனை, தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலைமை, சிற்ப சாஸ்திரம் வல்லோர் அமைத்த அந்தர்ப்புர அமைப்பு, அரசியின் கட்டிலின் வனப்பு, செப்பம், போர்முனை யில் அமர்ந்திருக்கும் அரசன் செயல், புண்பட்ட வீரரை அவன்நேரிற்சென்று பார்த்து மகிழ்விக்கும் முறை முதலியன வாசிப்போர் மனதைப் பரவசப் படுத்து மியல்பின. நக்கீரரின் பாடல் வன்மையும்

அவர் இயற்கை வனப்புகளைக் கூறும் உண்மை யுரைகளும் வியக்கத்தக்கன.

இதன் முதல் எழுபது வரிகள் கார்காலத்தை வர்ணிப்பன. அதன் சுருக்கம் வருமாறு:—'மேகம் உலகெலாம் குளிரும்படி மழையைப் பெய்ய வெள்ளத்தை வெறுத்த வளைந்த கோலுடைய இடையர், எருமை ஆடு முதலியவற்றை மேட்டு நிலத்தில் மேயவிட்டுத் தம் உடம்பைக் குளிர் வருத்துகையினாலே பலருங்கூடிக் கையிலே கணப்புச் சட்டிகளை யுடையராய் பல் பறை கொட்டுவனபோல் நடுங்க, விலங்குகள் மேய்தலை மறக்க, குரங்குகள் குளிர்ச்சி மிக, மரத்திலே தங்கும் பட்சிகள் குளிர் காற்றுத் தாங்காமல் கீழேவீழ, பசுக்கள் குளிரின் மிகுதியால் உதைத்துத் தம்மிடம் பாலுண்ணவரும் கன்றுகளை ஏற்றுக்கொள்ள மறுக்க, முசுட்டையின் வெள்ளிய பூக்களும், பீர்க்கின் பொன்னிறப் பூக்களும் விரிய, புதிதாய் ஓடும் நீரில் மீன்கள் எதிர்த்துச் செல்ல, மழை சிறிது விட்டவளவில் கொக்குத்திரளும் நாரைகளும் அம்மீன்களைத் தின்ன, நெற்கதிர்கள் முற்றி வளைய, தென்னைமரங்களில் தேங்காய் முற்றித் தோன்ற, மதுரையின் ஆறு கிடந்தாற்போன்ற அகன்று நீண்ட தெருக்களில் மிலேச்சர் கள்ளுண்டு சிறு தூற்றலுக்கு அஞ்சாராய்த்திரிய, தாம் பூத்தட்டிலே யிட்டுவைத்த பிச்சியரும்புகள் மலருவதினாலேயே அது அந்திக்காலமென்றறிந்த பெண்கள், இருட்புத் தகளியிலே நெய்தோய்ந்த திரியைக் கொளுத்தி, நெல்லியுமலரையும் சிதறி, இல்லுறை தெய்வத்தை வணங்கி, மாலைக்காலத்தைக் கொண்டாட, இராப் பகல் தெரியாமல் மயங்கிச் சேவலும் பெடையுமாகிய கோழிகள் இரைதேடி யுண்ணமல் வீட்டுச் சுவர்ப் புறக்கடைகளிலே கடுத்த கால் ஆறும்படி மாறி மாறி இருக்க, மகளிர் அகிலையும் கண்ட சருக்கரையையும் புகைப்ப, சிவந்த ஆலவட்டம் சிலந்தியின் நூல் சூழ்ந்த மூலைக்கோலில் தூங்க, வாடைக்காற்று உட்பிரவேசிக்காமல் வீட்டுக் கதவுகள் தாழிட்டுக்கிடக்க, இளையோரும் முதியோரும் குவிந்த வாயையுடைய கரகத்திற் றண்ணீரைக் குடியாராய் நெருப்பின் வெம்மையை விரும்பக் கூதிர்காலமாய் நிலைபெற்றது.'

அரசியின் கட்டில் சிறப்பையும் அந்தர்ப்புரவர்ணனை முதலியவற்றையும் நூலிடத்தே நோக்கி வியக்க.

போர்க்களத்தமர்ந்திருக்கும் அரசன் மழை யிரவிலும் துயிலாளுய்ச் செய்யும் தொழில்:—நெடுநல். 176–187.

'வேப்பந்தாரைத் தலையிலே கட்டின வலிய காம்பினையுடைய வேலோடே முன்செல்கின்ற சேனபதி, புண்பட்டவீரரை அடைவே அடைவே காட்டப் பின்னுக மணிகளைத் தன்னிடத்தேயிட்ட பெருமையையுடைய தாளினையுடைய குசையோடே பக்கரை வாங்காத பாய்ந்து செல்லுஞ் செலவினையுடைய செருக்கின குதிரைகள், கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மேலே வீசும் துளிகளை யுதற இடத்தோளினின்றும் நழுவி வீழ்ந்த அழகினையுடைய ஒலியலை இடப்பக்கத்தே யணைத்துக்கொண்டு, வாளைத் தோளிலே கோத்த தறுகண்மையையுடைய வாளெடுப்பான் தோளிலே வைத்த வலக்கையையுடையனுய்ப் புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சிதோன்ற முகம் பொருந்தி நூலாலே சட்டத்தைக் கட்டின முத்தமாலையினையுடைய கொற்றக்குடை தவ்வெனுமோசைபட்டு அசைந்து பரக்கின்ற துளியைக் காக்க, நள்ளென்னுமோசையையுடைய நடுயாமத்தும் பள்ளிகொள்ளாளுய்ச் சில வீரரோடே புண்பட்டோரைப் பரிகரித்துத் திரிதலைச் செய்யுமரசன்.'

8. குறிஞ்சிப்பாட்டு. இது 261 அடிகளையுடையது. இதைப் பாடினர் கபிலர். பாடிய நோக்கம் ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்பொருட்டு. தோழியுடன் தினைப்புலங் காவலுக்கேகிய தலைவி அங்கே அருவிகுடைந்தும் மலர்பறித்தும் தழைகோத்துடுத்தும் விளையாடா நிற்க, தெய்வாதீனமாய் ஆண்டுச் சென்ற ஓர் விடலை அவளை அவள் தோழியுடன் எதிர்ப்பட்டு மெல்லென்ற நல்மொழி சில கூறவும் அவள் நாணமிக்குற்று வாளாவிருந்தனளாக அவ்வளவில் ஆண்டுத் திரிந்த யானையால் வெருண்டு நாண் துறந்து அவ்விளவலைக் கிட்ட, அவன் யானையைத் துரத்தி அவளைத் தோழியுடன் உடன்கொண்டேகி அவர் ஊர்ப்புறத்தேவிட்டு

விரைவில் அவளை மணமுடிக்க வரைவு கடாவுவதாய்ச் சொல்லியும் காலம் நீட்டித்தவழி அவள் மனம் வருந்தி உடல் மெலிந்து நைய உள் மர்மம் அறியாத அவள் ஈன்றதாய் மகள் ஏதோ பேய்க்கோட்பட்டாள் என ஐயுற்று நிமித்தம் பார்த்தும் பலியிட்டும் மகள் தன் வாட்டந் தவிர்ந்திலளாகவே ஆற்றக்கவன்றுழித் தோழி நிகழ்ந்த காரியத்தைத் தாய்க்குரைத்த பாவனையாய்ப் பாடப்பெற்றது. அகத்திணை இலக்கணத்திற்கு இஃதோர் சிறந்த சிற்றிலக்கியம்போலும் கபிலர் குறிஞ்சி பாடுதலில் வல்லார் என்பது அவர் பாடிய பிறபாடல்களிலிருந்து தெற்றெனவிளங்கும். அவற்றை ஐங்குறு நூறு, கலித்தொகை முதலிய பிற சங்க நூல்களிற் கண்டுகொள்க.

9. பட்டினப்பாலை. இது 301 அடிகளையுடையது. இதைப் பாடினோர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். பாடப்பட்டவன் கரிகாற்சோழன். இதிற் காவிரிப்பூம் பட்டினம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. கரிகாலன் தன்னைச் சிறை செய்தாரைத் தப்பிப்போய் அவரை வென்று தன்னுரிமையைப் பெற்று அவ்வளவில் அமையாமே மண்ணாசை மிக்குமீதிப் பிற நாடுகளின்மேற் சென்று பகையரசரை வென்று அவர் நாடுகளையழித்து அம்பலங்களைப் பாழ்படுத்துத் தன் நாட்டிலுள்ளார் என்றும் ஏதும் குறையின்றி இனிது வாழக் குளந்தொட்டு நாடு திருத்திப் பலர்க்குப் பல் வேறு சிறப்புக்களைச் செய்தவன். அவன் பட்டினமோ காவிரி கடலொடு கலக்கும் இடத்ததாய்ப் பல்வளஞ் செறிந்தது. மீன் பறிக்கும் செம்படவர், அறவொழுக்கம் தப்பாமே எவர் மாட்டும் அன்புடன் ஒழுகும் நேர்மையாளராம் வேளாளர், வேதமோதும் அந்தணர், வர்த்தகர் மற்றும் எண்ணிறந்த தொழிலாளர் நிறைந்தது. எண்ணுவோர் எண்ணுவன வெல்லாம் எண்ணியபோதே கொள்ளுமாறு தரை கடல் இருமார்க்கங்களிலும் வந்துள்ள சரக்குகள் நிறைந்த கடைவீதியுடையது. பண்டசாலைகளையுடைய கடற்கரை வீதியிலோ ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகள் சோழன் புலிமுத்திரை பொறிக்கப்பட்டு மலையெனக் குவிந்திருக்கும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த காவிரிப்

பூம்பட்டினத்தையே தனக்குப் பரிசிலாகப் பெறினும் தன் காதலியை விட்டுப் பிரிதற்கு ஒருப்படானாய் அவளைப் பிரிந்துபோம் கானம் கரிகாலன் பகைவர்மேல் ஏவிய வேலினும் கொடிதாயும் அவளுடனிருத்தல் கரிகாலன் செங்கோலினும் குளிர்ச்சியாயு மிருந்ததெனக் கூறும் பொருள் முடிவுகொண்டது. அந்நாட் சரித விவரம் அரசாட்சி உயர்வு முதலியன ஆங்காங்கே கூறப் பட்டுள்ளன.

பரதவர் தன்மை:—பட்டின. 80–103.

'பரதவர், பூர்ண சந்திரிகை நாளில் கடலில் மீன் பிடிக்கப் போகாமல் பசிய தழையினையுடைய கரிய நிறத்தையுடைய தம் மகளிரோடேகூடி நெடிய தூண்டிலிற் காம்புகள் சார்த்திவைத்த குறிய இறப்பினையுடைய குடியிருப்பு நடுவில் வலைகிடந்துலரும் மணலையுடைய முற்றம் சேர்ந்த தமது மனையில் சினைச் சுறுமீனின் கொம்பை நட்டு அதனிடத்தே யேற்றிய வலிய தெய்வங் காரணமாக விழுதையுடைய தாழையின் அடியில் நின்ற வெண்டாளிப்பூவினுற் செய்த மாலையினையுடைய ராய்த் தாழை மலரைச் சூடியும் பனங் கள்ளுண்டும் நெற்கள்ளையுண்டு விளையாடியும் காவிரி கடலொடு கலக்கு மிடத்துப் புகாரிடத்தில் கூடலாடியும் உப்புப்போக நீரிலே குளித்தும் ஞெண்டுகளையாட்டியும் பரக்கின்ற திரையிலே விளையாடியும் பாவைகளைப் பண்ணியும் பகற் பொழுதெல்லாம் விளையாடுவார்.'

அக்கால வீடுகள்:—பட்டின. 143–145.

'கொடுந்திண்ணைப் பலிறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்து'

நெருங்கின படிகளையுடைய நெடிய ஏணிகள் சார்த்தின சுற்றுத் திண்ணையினையும் பல கட்டுக்களையும் சிறு வாசலையும் பெரிய வாசலையும் பெரிய இடைகழிகளையு முடைய மேகம் செறியும் உயர்ந்த மாடங்கள். காற்றுட் பிரவேசித்தற்பொருட்டு இவற்றில் ஜன்னல்கள் பல இடப்பட்டிருக்கும் (157).

இப்பாட்டினிடையே கூறப்பட்டிருப்பனவாகிய நெருங்கிய ஊர்களையுடைய சோழநாடு (28), உப்பை விற்று நெல்லையேற்றி வந்த படகுகள் (30), புலியுருச் செதுக்கப்பட்ட கதவுகள் (40), சமண பௌத்தப் பள்ளிகள் (53), நட்ட கல்லில் தெய்வம்வணங்கல் (73), கடற்கரைப் பரதவர் நெடுந்தெரு (119), எண்ணிறந்த இறக்குமதி ஏற்றுமதிச் சரக்குகளின் குவியல், அவற்றைக் காவல் செய்தல், புலிப்பொறி பொறித்தல், சுங்கம் கோடல் (120–137), கோவிற் கொடி (160), பண்ட சாலைக்கொடி (167), பண்டிதக்கொடி (171), மரக்கலப் பாய்மரக் கொடி (175), கள் விற்குமிடக் கொடி (180), கடைத்தெருப் பொருள் விவரம் (185–190), வேளாளர், அந்தணர், வணிகர் இயல்புகள் (196–212), பல பாஷை பேசுநர் கூட்டம் (216), கரிகாலனுற் சிறை செய்யப் பட்ட பெண்டிர் ஆலயங்களில் தொண்டு செய்யும் வழக்கம் (246), கந்து பூசை (249), எதிர்த்தவர் நிலங்களைப் பாழ்படுத்தல் (255–265), கரிகாலன் தன் நாட்டின் வளத்தின் பொருட்டுக் குளம் வெட்டல் முதலியன செய்தமை (985), முதலிய பல விவரங்கள் அறியத்தக்கன.

10. மலைபடுகடாம். இது 583 அடிகளையுடையது. இதைப் பாடினர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனர். பாடப்பட்டான் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் மகன் நன்னன். கூத்தரை நன்னன்பாற் செல்லத் தூண்டுதலின் கூத்தராற்றுப்படை எனவும் வழங்கும். இதனிடை நன்னனின் ஊரை அடைதற்குரிய வழிகளின் நன்மை தீமையினதளவும் இடையிற் றங்கும் இடங்களும் அவ்வந் நாட்டில் விளைகின்ற உணவுப் பொருட்களும் பிறவும், மலைகளின் தன்மையும், சோலைகளின் தன்மையும், நன்னனது ஈகையின் வன்மையும், அவன் சுற்றத்தார் ஒழுக்கம், நவிர மலையிலெழுந்தருளியிருக்கும் காரியுண்டிக் கடவுளியல்பு, குடியினர் தோற்றம், ஊரின் தன்மை, முதலியனவும் விவரிக்கப்பட்டுள்ளன. இச்செய்யுளில் பற்பல நிலங்களில் வதியும் மாக்களினியல்பும் அவர் விருந்தினரையுபசரிக்கும் முறையும் இனிது விளக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய பத்துப் பாடல்களும் தற்காலச் செய்யுட் போக்குகளின் மிக மாறுபட்டு மனோபாவனையாகிய கற்பனை முதலியன வில்லாதனவாய்க் கண்டவற்றைக் கண்டவாறே கூறுமியல்பின. அந்நாள் இலக்கணங்களுக்கு இலக்கியமாய் விளங்கியன. நெடுநாள் முன்னரே இதற்கு எழுதப்பட்ட உரைகள் பல விருந்தனபோலும். எல்லாவற்றினும் சிறந்த உரையாக நமக்கு வந்தெட்டியுள்ளது நச்சினார்கினியருரையே. நச்சினார்கினியர் விவரம் பின்னர்க் கூறப்படும்.

6. அத்தியாயம்

எட்டுத்தொகை

கடைச் சங்கத்தில் அரங்கேறியனவாகக் கூறப்படுவனவற்றுள் அடங்கியன எட்டுத்தொகை நூல்களாம்: எட்டுத் தொகைகளாவன:—

புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்பனவாம்.

'நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை' என்பது பழையபாடல்.

1. புறப்பொருள் தொகைகள்.

இவற்றுள் புறநானூறு, பதிற்றுப்பத்து எனும் இரு தொகைகளும் புறப்பொருளுக்கு இலக்கியமாவன. ஏனைய ஆறு தொகைகளும் அகப்பொருள் துறைபற்றி வருவன.

புறநானூறு. இது கடவுள் வாழ்த்து உள்பட 400 பாடல்களையுடையது. இப்பாடல்களைப் பாடினோர் நூற்றுபதின்மரின் மிக்கார். இவரெல்லாம் ஏக காலத்தவரல்லர். புறநானூறு பாடிய புலவர்களுள் பெரும்பாலார் கடைச்சங்க காலத்தவராவார். சிற்சிலர் கடைச்சங்க காலத்தின் முன்னரும் சிலர் வெகுநாட் பின்னரும் இருந்தவராகக் கொள்ளுதற்கிடமுண்டு. ஆதலின் இப்புறநானூறு கடைச்சங்க காலத்திலேயே தொகுக்கப்பட்டதெனும் கொள்கை ஒவ்வாததாகின்றது. கடைச்சங்கம் அழிந்த பிற்காலத்திலிருந்த தமிழபிமானி யொருவரால் இது தொகுக்கப்பட்டதெனக் கூறுதலே பொருந்தும். புறநானூறு பாடிய புலவரிற் சிலர் வெகுநாள் முற்பட்டவராதல் வேண்டும். முரஞ்சியூர் முடிநாகராயர், வான்மீகியார் முதலியோர் தலைச்சங்க காலத்திலேயே இருந்தவரெனக் கூறப்பட்டவர். முரஞ்சியூர் முடிநாகராயராற் பாடப்பட்ட பெருஞ்சோறுதியன் சேரலாதன்

பாரதகாலத்திருந்த சேரனைத் தெரிகின்றது. எனவே இவர் காலம் கடைச்சங்க காலத்துக்குப் பன்னூறாண்டு கட்கு முற்பட்டதாதல்வேண்டும். பொய்கையார் எனும் புலவர் கடைச்சங்க காலத்திற்குப் பிற்பட்டவராவார். இவர் சோழன் செங்கணானைப் பாடியவர். இச்சோழன் கடைச்சங்ககாலத்திற்குப் பிற்பட்டவனுவான். இவற்றை நோக்குமிடத்துப் புறநானூறு தொகுக்கப்பட்ட காலம் பிற்காலமென்பதும் புறநானூற்றில் காணப்படும் பாடல் கள் தலைச்சங்ககாலம் முதலிருந்த பல புலவராற் பாடப் பட்ட புறப்பொருட் சம்பந்தமான பாடல்களின் தொகையேயென்பதும் வெளியாகின்றது.

அன்றியும் புறநானூற்றில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி[1] முதலிய பதினைந்து பாண்டிய ரைப் பாடிய பாடல்களும்; கரிகாற் பெருவளத்தான் முதலிய பதினெண் சோழரைப் பாடிய பாடல்களும்; சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் முதலிய பதினெண் சேரமன்னரைப் பாடிய பாடல்களும் காணப் படுகின்றன. இத்தனை மூவேந்தர் பல நூற்றாண்டுக ளாகத் தமிழ் நாட்டைப் புரந்தவராதல் வேண்டும். எனவே இப்பாடல்களும் பல நூற்றாண்டுகளாகப் பாடப் பட்டு, இங்குமங்கும் ஏடுகளில் எழுதப்பட்டுக் கிடந்த வற்றைப் பிற்காலத்தார் தொகுத்துப் புறநானூறு எனும் நாமம் சூட்டி உலகுக்களித்தனர்போலும்.

புறநானூறு கடைச்சங்க காலத்திலேயே தொகுக் கப்பட்டதென்பதை வற்புறுத்திக் கூறும் பண்டை வழக்குமில்லை. இறையனாரகப்பொருளுரையிற் கண்ட கடைச்சங்க வரலாற்றில் புறநானூறு எனும் பெயர் தானும் காணப்படவில்லை. நெடுந்தொகை (அகநானூறு) தொகுத்தார் இப் புறநானூற்றையும் தொகுக்காமல் விட் டிருப்பாரோ எனக் கேள்வி யெழலாம். அகநானூறு தொகுத்த காரணத்தினாலேயே புறநானூறும் தொகுக் கப்பட்டிருக்கவேண்டுமெனக் கொள்வது நியாயமாகாது. மேலும் அக்காலத்தவர் அகப்பொருளையே பெரிதும் போற்றினராகவேண்டும். என்னை? பொருளிலக்கணம்

[1] இவனே பல சாஸனங்களில் கூறப்பட்டவன்.

பெற்றிலேமெனக் கவன்ற பாண்டியன் அகப்பொருள் விளக்கணம் கிடைத்தமாத்திரமே திருப்தியுற்றதாக இறையனாகப்பொருளுரை கூறுகின்றது. அகப்பொருள் கிடைத்தபின் புறப்பொருள் கிடைக்குமாறு அவன் கவலைகொண்டதாகவாவது அக்கவலையை மாற்ற ஒரு புறப்பொருள் எழுதப்பட்டதாகவாவது நமக்குத் தெரியவில்லை. இதுவும் புறநானூறு பிற்காலத்தவரால் தொகுக்கப்பட்டதென்பதைக் காட்டுதற்கு ஒருவாறு சான்றாகும்.

புறநானூறு பாடிய புலவர் நூற்றுமுப்பதுபேராவர். பாடல்கள் நாலு அடிமுதல் நாற்பது அடிவரையுள்ளவை. தமிழ்நாட்டுப் பூர்வகாலச் சரித்தங்களையறிதற்கு இந்நூல் இன்றியமையாதது.

இந்நூலிடை:—

அரசர் தம்மைப்பாடிவரும் பாணர்க்குப் பொற்றாமரை யளித்தல் (69); பெண்கள் மாங்கல்ய சூத்திரம் அணிதல் (127); மாப்பிள்ளை வீட்டார் பெண்பேசிச் செல்லும் வழக்கம் (200); இறந்தவரைத் தாழியில் கவித்தல் (228); நடுகல்லுக்குக் கல்வார்த்தல், பிண்டம் படைத்தல் (232–34); கணவனிறந்தபோது மனைவியர் ஆபரணங்களைக் கழித்தல் (238); கைம்மை விரதம், உணவு சுருக்குதல், உடன்கட்டை ஏறுதல், மயிர் களைதல் (245, 246, 248, 250); சாணத்தால் வீடு மெழுகுதல் (249); விருந்தினரை யுபசரித்தல் (10); வேட்டுவன் நாயால் வேட்டையாடிக் கொணரும் மான் இறைச்சிக்கும், இடைச்சி மீடாவில் கொண்டுவரும் தயிருக்கு மாறாக உழவர் மகள் நெல்லைக் கொடுத்தல் (33); ஒவ்வோர் அரசனும் ஒரு முத்திரையை யுபயோகித்தல் (99); கறிகளைத் தாளித்து உண்டல் (10); கடலில் மரக்கலம் செலுத்துதல் (13); முதலிய அக்கால வழக்கங்கள்;

இரும்பினாற் செய்த அங்குசம், வேல், குந்தாலி (13, 14), கோடரி, கலப்பை (19–23) அரம் (36), முதலிய கருவிகள்; கோடிவரை எண்ணுதல் (18); பனிநுங்கின் நீர், கரும்பின் சாறு, தெங்கின் நீர் அருந்துதல் (24); ஆகாயத்தின்கண் பாகனாற் செலுத்தப்படாமற்செல்லும்

விமானம் (27); கூம்பையும் பாயையுமுடைய பெரிய மரக்கலம் (30); குயவர் திகிரியில் வைத்து மட்கலம் வனைதல் (31); பாலில் வரகரிசையைச் சமைத்துத் தேனோடு கலந்து முயலின் கொழுமாமிசத்தோடுண்டல் (34); உப்புவிற்பார் (84); வண்டிகள், வண்டி அச்சு, சேம அச்சு (90-102); பருத்தி நூற்கும் பெண்டிர் (125); கொல்லன் உலை, அடைகல், கூடம் (170); வெளுத்த துணியை விரித்துடுத்தல் (279); போர்த் துவக்கத்தில் நாலு திக்கும் பறைசாற்றிச் சேனைவீரரைக் கூட்டுதல் (284); வீரர்க்கு நிலம் கொடுத்தல் (285); வானசாஸ்திரம், ஜோதிடம் முதலியன (229); இறந்தவரைச் சுடுதல் (231); ஆட்டிறைச்சியை நெய்யில் பொரித்தல் (261); பாம்புச் சட்டைபோலும் துகில் (397); வாழை இலையில் அமுதுண்ணல் (168); புகைபோல் மெல்லிய ஆடை (398) முதலிய அக்காலத்தவர் நாகரீகத்தின் பெருமைகள்;

நான்கு வேதங்கள் (2); சிவபிரான் (3, 55;) வருணன் திருவிழா (9); முருகன் (16, 23); களவேள்வி வேட்டல் (26); ஆன்முலை யறுத்தோர், கருச் சிதைத்தோர், அந்தணர்ப் பிழைத்தோர், கொடும்பாபிகள்; செய்ந்நன்றி மறந்தோர் (34); திருமால், முருகன், மாயோன் (56, 57, 195), இம்மை, மறுமை, இப்பிறப்பு, மறுபிறப்பு (134); மழை பெய்தற்கும் ஓய்தற்கும் பலிதூவுதல் (143); பிராமண புத்த மார்க்கங்கள் (166); கண்ணபிரான் (174); விதி (176, 192); உலகம் நான்முகன் படைப்பு (194); தீமையின் நீங்கி நன்மை செய்தல் வீடுபேற்றுவழி (195); நடுகல்லைத் தொழுதல் (306); இந்திரலோகத்தார் இறந்த வீரரை எதிர்கொள்ளுதல் (247); ஒருவர்மேல் தெய்வம் ஏறி ஆடுதல் (259) தலைவிரித்து எதிர் வருதல் துர்ச்சகுனம் (260); நடுகல் விவரம் (264, 265); ஈகையே மனிதனைச் சிறந்தவனாக்கும் (189); வீட்டின்பம் விரும்பியும் நன்மைசெய்தல் (194); முதலிய அக்காலத்தவர் வணக்கம் கொள்கை முதலியவற்றைக் காட்டுங் குறிப்புகள் அறியத்தக்கன.

இத்தொகையிற் பல அருமையான பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுட் சில வருமாறு:—

ஞானிகள் கூற்று:—192.

'எமக்கு எல்லாம் ஊரே. எல்லாரும் சுற்றத்தாரே. வறுமையும் செல்வமும் தாமாகவே வருமல்லாது பிறரால் வருவனவல்ல. துன்பமும் துன்பந் தவிர்தலும் அப்படியே தாமாகவே நேர்வன. சாதலும் புதிதன்று. கருவில் தோன்றிய நாளே தொடங்கியுள்ளது. வாழ்தலே இன்பமென்று சந்தோஷிப்பதுமில்லை. தாழ்தல் வந்தால் அது துன்பமென்று துக்கிப்பதுமில்லை. மழை பெய்யப் பெருகியோடும் ஆற்றுநீரில் செல்லும் மிதப்பு அந்நீர் செல்லும் வழியே செல்வதுபோல அரிய உயிர் ஊழின்வழியே செல்லும் இயல்பினையுடையதென்பதைக் கற்றறிந்துள்ளேம். ஆதலால் நன்மையில் மிக்கவரை மதிப்பதுமில்லை. சிறியோரைப் பழித்தல் அம்மதித் தலைக் காட்டினுமில்லை.'

அரசனுக்குக் கூறிய ஆப்தமொழி:—35: 14-35.

'நின்னிடம் நியாயம்கேட்க வருபவர்க்கு எக்காலமும் எளிதில் இடங்கொடுக்க. உனது குடை வெயிலை மறைப்பதற்கு ஏற்பட்டதன்று. அது வருத்தமுற்ற குடிகளுக்கு இன்பமூட்டும் காரணத்தாலுண்டாயது. நீ போரின்கண் பகைவரைக் கொன்று பெற்ற வெற்றி உன் குடிகள் உழுகின்ற கலப்பை நிலத்தில் ஆழப் பதிவதினால் விளைந்த நெல்லின் பயன். மழை பெய்யுங்காலத்துப் பெய்யாது போயினும் விளைவு குறையினும் குடிகள் தொழிலிலே இயல்பில்லாதவைகள் தோன்றினும் அவற்றுக்குக் காரணம் நீயே என உலகத்தார் உன்னைக் குறை கூறுவார். ஆதலால் நீ குறை கூறுவாரது வார்த்தைக்குச் செவிகொடாது ஏரைப் பாதுகாக்கும் வேளாளரைப் பாதுகாத்து அதன்மூலமாய் மற்றக் குடிகளையும் பாதுகாக்கக் கடவாய். அங்ஙனமாயின் நின்பகைவரும் நினக்குக் கீழடங்குவார்.'

இந்நூலிற் காணப்படும் புலம்பல்கள் எவர் மனத்தையும் இளக்கவல்லன.

ஒல்லையூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்தபோது நல்லாதனூர் புலம்பியது:—புறம். 242: 'ஒல்லையூர்ச்

சாத்தன் இறந்தான். இனிமேல் இளைய வீரர் முல்லைப் பூச் சூடார். வளையணிந்த இளையபெண்கள் பூப்பறியார். பாணன் தன் யாழினது கோட்டில் பூச்சூடான். பாணிச்சி சூடாள். அங்ஙனமாகவும் இந்த ஒல்லையூரில் முல்லைப்பூவே! நீ பூக்கக்கடவையோ.'

மனையாளிறந்தபோது புலம்பியது:—புறம். 245.

'யானுற்ற துயரம் பெரிது. எனினும் அது தாங்காத் துயரமாகவில்லை. ஏனெனில் அத் துயரம் இன்னும் என் உயிரை மாய்க்கவில்லை. இளமைபொருந்திய என் மனையாளோ போயினள். யானும் அவளை ஊர்ப்புறத்தே எடுத்துச் சென்று வெட்டவெளியில் சிறிய விறகை அடுக்கித் தீமூட்டி அதிலே அவளைக் கிடத்தித் தகனித்தேன். அவள் மறைந்தாள். யானோ இன்னும் உயிர் தாங்கி யிருக்கின்றேன். இவ்வுலகியற்கை யிருந்தவா றென்னே!'

வேள்பாரியோடு நெருங்கி அவனுடன் அவன் பறம்பில் பன்னெடுநாள் தங்கிய கபிலர் பாரி போரில் மடிந்த போது, அவன் மகளிரை உடன்கொண்டு செல்வார் பாரியின் பறம்பு நோக்கிக் கூறியது (புறம். 113).

'பறம்பே! பாரி உயிருடனிருக்கையில் நீ என்னுடன் நட்புச்செய்து யான் விரும்பிய துவையையும் ஊனையு முடைய சோற்றைத் தந்து என்னைப் பாதுகாத்தாய். இப்போதோ பாரி இறந்தனன். யானோ கலங்கிச் செயலற்றேன். என் கண்கள் நீர் வார்க்கின்றன. பறம்பே! இதோ நான் உன்னை வாழ்த்திப் பிரிகின்றேன். பாரியின் மக்களைக் கொள்வாருண்டோவெனப் பிறரை நாடிச் செல்கின்றேன்.'

பாரி இறந்த துக்கத்தைச் சகிக்கலாற்றாராய் வடக்கிருந்து உயிர்நீத்த கபிலர் பாடியது (புறம். 236).

'முழவுபோலும் பலாப்பழங்களையுடைய பறம்பு மலையையுடையோய்! நீ எனக்கு உதவிசெய்திருந்த யாண்டுகளும் பல. நீ என்னோடு நட்பாயிருந்த அக்காலத்திலும் நீ என்னை வெறுத்திருந்தாய் எனவே கருதுகின்றேன். காரணம் என்ன? நாம் கொண்டிருந்த நட்பு உண்மையுடையதாயின் நீயும் என்னை உடன்

கொண்டேகி யிருப்பாய். இப்போதோ நீ என்னைத் தனிவிட்டு, இங்கே இருக்கவெனச் சொல்லி எகிவிட்டாய். நான் உனக்குப் பொருந்தினேனல்லன்போலும். எனினும் இப்பிறப்பினும் நீயும் யானும்கூடி இன்புற்றிருந்தவாறுபோல மறுபிறப்பினும் இடைவிடாத காட்சியினையுடைய நின்னொடு கூடி வாழுமாறு விதியே துணைசெய்வதாக. யான் உயிர்விடுவேன்.'

அதியமான் நெடுமானஞ்சி இறந்தகாலத்து ஔவையார் மனமுருகிப் பாடிய புறம். 235-வது பாடல் மிகவும் அருமையானது.

அக்கால மகளிர்தம் வீரத்தைக் காட்டும் பாடல்களும் சிற்சில இத்தொகையில் காணப்படுகின்றன (புறம். 278).

வயது முதிர்ந்தாள் ஓர் கிழவி தன் மகன் போர்முகத்தில் வீரம்குன்றிப் பின்னிட்டோடினன் எனக் கூறக்கேட்டவளவில் 'என் மகன் பின்னிட்டோடியது உண்மையாயின் அவனுக்குப் பாலூட்டிய என் முலைகளை யறுத்திடுவேன்' எனக் கூறிக் கையில் வாள் எடுத்துக் கொண்டு போர்க்களம் சென்று அங்கு மடிந்துகிடந்த பிணக்குவியல்களைத் துழாவிப் பார்த்து அங்கே தன் மகன் இரு துண்டமாய் வெட்டுண்டு கிடத்தலைக்கண்டு அவனைப் பெற்றபோ தடைந்த மகிழ்ச்சியினும் பெரு மகிழ்ச்சி யடைந்தனள்.

புறம். 279:—'என் எண்ணம்தானென்ன! இவள் தைரியம் இருந்தவாறென்னே! முன்னுள் நடந்த போரில் இவள் தந்தை இறந்தனன். சின்னுள் முன் நடந்த போரில் இவள் கணவன் பட்டான். அப்படியிருந்தும் இப்போது போர்முரசு கேட்ட மாத்திரம் இவள் தன்னுடைய ஒரே மகனை அருகழைத்து அவன் கையில் வேலைக்கொடுத்து வெள்ளைவஸ்திரம் உடுத்தி அவன் தலைக்கு எண்ணெய் பூசிக் கோதி அவனைப் போர்முகம் நோக்கி செலுத்துகின்றாள். இது வியப்பே!'

புறம். 312:—'மகனைப் பெற்று வளர்த்தல் எனது கடமை. அவனை நல்லவனாய் வளர்த்தல் தந்தையின் கடமை அவனுக்குவேண்டிய வேல் முதலிய போர்க்

கருவி செய்துகொடுத்தல் கொல்லனின் கடமை. அவனுக்கு நல்ல நிலைமையைக் கொடுத்தல் அரசனின் கடமை. போரில் யானைகளைக் கொன்றுவருதல் என் மகனின் கடமை.'

இங்ஙனமாய பாடல்கள் மிகப் பல.

பதிற்றுப்பத்து. இத்தொகை பத்து வெவ்வேறான அகவற்பாக்கள் சேர்ந்த பத்துத் தொகைகளையுடையது. எனவே இதன் பாடல்களின் தொகை நூறாகும். இவற்றுள் தற்காலம் கிடைத்தன முதற்பத்தும் இறுதிப்பத்தும் நீங்கிய இடைநின்ற எட்டுப் பத்துக்களே.

இவை சேரமன்னர் பெருமைகளை விரிப்பன. தம்மைப் பாடிய புலவருக்குச் சேரமன்னர் கொடுத்த கொடைகளின்னின்னவென்பதும் ஆங்காங்கே குறிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வோர் பத்தின் இறுதியிலும் பதிகச்செய்யுள் ஒன்று காணப்படுகின்றது. பத்துப் பாடலையும் பாடிய புலவரே இப்பதிகங்களையும் பாடினர் எனக் கொள்ள இடமில்லை. பதிற்றுப்பத்துப் பாடப்பட்ட சின்னாட்களுக்குள்ளிருந்த வேறு புலவர் இப்பதிகங்களையும் பாடிப் பதிற்றுப்பத்துடன் இசைத்தனர்போலும். இந்நூலைத் தொகுத்தார், தொகுப்பித்தார் யாவரென்பதும் விளங்கவில்லை.

இந்நூலில் அக்கால வழக்க பழக்கங்கள், நாகரீகம், தமிழ் மக்கள் பெருமை, சேரர் வன்மை முதலிய விவரங்கள் மிகுதியும் காணப்படுகின்றன. அன்றியும் தற்காலம் வழக்காறற்றுப்போன சொன்முடிவுகள் பல இதனுள்ளுண்டு. வடமொழிப் பிரயோகம் மிகவும் சுருக்கமே. எண்பது பாடல்களிலும் வழங்கும் வடமொழிப் பதங்களின் தொகை பன்னிரண்டேயென்பர்.

இரண்டாம்பத்து. ஐம்பத்தெட்டியாண்டு அரசுவீற்றிருந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடி உம்பற்காட்டு ஐஞ்ஞூற்றார் பிரமதாயமும் முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டுள் வருவதனிற் பாகமும் பரிசிலாகப் பெற்றனர்.

மூன்றாம்பத்து. இருபத்தையாண்டு அரசு வீற்றிருந்த இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப்

பாலைக்கௌதமனார் பாடிச் சுவர்க்கம் புகவேண்டிப் பெருவேள்விவேட்கப் பொருள் பெற்றுத் தன் மனையாளோடும் சுவர்க்கம் எய்தினர்.

நான்காம்பத்து. இருபத்தையாண்டு அரசு வீற்றிருந்த களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடி நாற்பது நூறாயிரம் பொன்னும் அரசாட்சியிற் பாகமும் பெற்றனர்.

ஐந்தாம்பத்து. ஐம்பத்தையாண்டு அரசு வீற்றிருந்த கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடி உம்பற்காட்டு வரியையும் அரசன் மகன் குட்டுவன் சேரலையும் பெற்றனர்.

ஆறாம்பத்து. முப்பத்தெட்டியாண்டு அரசு வீற்றிருந்த ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் எனும் பெண்புலவர் பாடிக் கலனணிவதற்கு ஒன்பது காப்பொன்னும் நூறாயிரங் காணமும் பெற்றனர்.

ஏழாம்பத்து. இருபத்தையாண்டு அரசு வீற்றிருந்த செல்வக்கடுங்கோவாழியாதனைக் கபிலர் பாடி நூறாயிரங் காணமும் நன்றுவென்னுங் குன்றேறி நின்று கண்ட நாடுகளும் பெற்றனர்.

எட்டாம்பத்து. பதினேழியாண்டு அரசு வீற்றிருந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில்கிழார் பாடி ஒன்பது நூறாயிரங் காணம் அரசுகட்டில் பெறமறுத்து அமைச்சுப் பூண்டார்.

ஒன்பதாம்பத்து. பதினாறாண்டு அரசு வீற்றிருந்த குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்க்கிழார் பாடி முப்பத்தீராயிரம் காணமும் பிறசிறப்புக்களும் பெற்றனர்.

மேற்காட்டிய சேரமன்னர் பலரும் ஒருவர் பின் னொருவராகவும் ஏக காலத்திலும் சேரநாட்டை யாண்டவரென்பதும் அவரெல்லாம் உறவினரேயென்பதும் அவர் சேரநாட்டில் ஆண்டிருந்த காலம் கி. பி. இரண்டாம் மூன்றும் நூற்றாண்டுகள் என்பதும் பதிற்றுப்பத்

தில் இடையிடையே காணப்படும் சரித்தக் குறிப்புகளா லும் பிறகாரணங்களாலும் தெரியவருகின்றன.

பதிற்றுப்பத்தில் காணபபடும் 'நூலாக்கலிங்கம் வால ரைக் கொளீஇ' (12 : 21) (பட்டுநூலாடை இடுப்பில் உடுத்து), ஆட்டுவாணிகர் அடைகுறட்டில் வைத்துக் கொத்திய இறைச்சி (21: 10), 'சோறு வேறென்னு ஊன் துவை யடிசில் (45: 13), புல்வேய்ந்த வீடுகள் (15: 13), கட்கொடி நுடங்கும் ஆவணம் (68: 10), அந்தணர் மொழியொழுகல் (24: 6), பிறர்க்கெனவாழ்தல் (39: 1), உடம்பில் பட்ட காயங்களை நெடிய வெள்ளரியால் தைத்து ஆற்றுதல் (42: 3), இறந்த மன்னரைத் தாழி யில் சேமித்து வன்னி மரத்தடியில் புதைத்தல் (44: 23), பெதும்பைப் பருவத்துப் பெண்டிர் கையில் பல வளை யல்களைப் போட்டுக்கொள்ளுதல் (51: 11), கணவனைப் பிரிந்த பெண்கள் அவன் திரும்பவரும் நாட்களை எண்ணு தற்குச் சுவரில் குறியிடுதல் (68: 17), வாள்மழுங்கும் படி நெல் அரிதல் (19: 20), கரும்பாலை (19: 21), இடை யர் முல்லைமாலை சூடுதல் (211: 20), தயிர் கடைதல் (26: 3), கடலில் முத்தும் பவளமும் குளித்தல் (30: 7), கடல் தாண்டிவரும் பெருமரக்கலங்களையுடைய வாணி கர் (76: 4), மலைகளையும் மதில்களையும் இயற்கையரண்க ளாகவும் அமைப்பு அரண்களாகவும் காப்புச்செய்தல் (16: 1), மதில் வாயிலில் கணமரம் (16: 3), கோட்டை யும் அதில் அமைக்கப்படும் காவல் அமைப்புகளும் (53: 6–9; 15), உண்ணாவிரதம், திருமால் கோவில் (31: 6, 7), புலித்தோல் உறையுள் எஃகாயுதம் வைத்தல் (19: 4), போர்முரசம் (51: 33), தண்டாயுதம் (54: 14), கொடி முன்செலப் போர்புரிதல் (67: 5), பசும் பொன்னிடை வயிரம் அழுத்தி நகைசெய்தல் (16: 151) முதலிய பல தொடர்கள் அக்காலத் தமிழ்மக்கள் நாகரிகம் முதலிய வற்றின் பெருமையைக் காட்டுவன.

2. அகப்பொருள் தொகைகள் ஆறு. அவையாவன:—

அகநானூறு என வழங்கும் நெடுந்தொகை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை என் பனவாம்.

அகநானூறு. அகச்சுவைப் பொருளனவாய்ச் சங்கப் புலவர் பாடிய தனிச் செய்யுட்களில் அகவற்பாக்களான வற்றைப் பிரித்தெடுத்துப் பன்னிரண்டு அடியின் மேற் பட்ட பாக்களே நெடுந்தொகையெனும் பெயரால் தொகுத்தனர். இதுவே அகநானூறெனவும் படும். இத்தொகையைத் தொகுத்த புலவர் மதுரை உப்பூரி கிழான் மகனுவான் உருத்திரசன்மன். தொகுப்பித் தான் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.

அகநானூறு கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு பாடல்களையுடையது. இவற்றுள் முதல் நூற்றிருபது பாக்கள் களிற்றியானை நிரையெனவும், நூற்றிருபத் தொன்று முதல் முந்நூறு முடிய மணிமிடை பவள மெனவும், முந்நூற்றொன்று முதல் நானூறு முடிய நித் திலக்கோவையெனவும் வழங்கப்பெறும். இவை பாடின புலவர் நூற்று நாற்பத்தைவர்.

இதன் நானூறு பாடல்களுள் இருநூறு பாடல்கள் பாலைத்திணையைச் சேர்ந்தன. குறிஞ்சித்திணைக்குரியன எண்பது பாடல்கள். எஞ்சிய முல்லை, மருதம், நெய்தல் ஒவ்வொன்றும் தனித்தனி நாற்பது செய்யுட்களையுடை யன. இது அகநானூற்றின் இறுதியில் வழங்கும்

> 'ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை யோதாது
> நின்றவற்றி னொன்கு நெறிமுல்லை—யன்றியே
> யாரு மருத மணிநெய்த லீயிரண்டு
> கூறு தவைகுறிஞ்சிக் கூற்று'

எனும் வெண்பாவால் தெரிகின்றது.

இதன்பொருள்: 'ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது எனும் எண்களையுடைய பாடல்கள் எல்லாம் பாலைத்திணையைச் சேர்ந்தன. நான்கு எனும் எண்ணை யுடையன முல்லைத்திணையாம். ஆறு எனும் எண்ணை யுடையன மருதத்திணை. பத்து எனும் எண்ணையுடை யன நெய்தற்றிணை. ஒழிந்த இரண்டு, எட்டு எனும் எண்களையுடையன குறிஞ்சித்திணையாம்' என்பது.

நற்றிணை. இது மேல் அகநானூற்றில் கூறியனபோல் ஒன்பது அடிமுதல் பன்னிரண்டு அடிவரையுள்ள பாக்

களையுடையது. இதனைத் தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி. நற்றிணை கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு செய்யுட்களையுடையது. இவற்றைப் பாடிய புலவர் நூற்றெழுபத்தைவர்.

நற்றிணை நானூறு செய்யுட்களில் ஒரு செய்யுள்மாத்திரம் கிடைத்திலது. கிடைத்த முந்நூற்றுத்தொண்ணூற்றொன்பது செய்யுட்களில் முல்லைத்திணைக்குரியன இருபத்தெட்டு செய்யுட்கள். மருதத்திணைக்குரியன முப்பத்திரண்டு செய்யுட்கள். பாலைத்திணைக்குரியன நூற்றேழு செய்யுட்கள். நெய்தல் திணைக்குரியன நூற்று மூன்று செய்யுட்கள். குறிஞ்சித்திணைக்குரியன நூற்றிருபத்தொன்பது செய்யுட்கள்.

குறுந்தொகை. நாலடி முதல் எட்டு அடி வரையுள்ள பாக்களையுடையது. இதனைத் தொகுப்பித்தான் பூரிக்கோ. பாடிய புலவர் இருநூற்றைவர். கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூற்றொரு செய்யுட்களையுடையது.

குறுந்தொகைச் செய்யுட்கள் நானூற்றொன்றில் முல்லைத் திணைக்குரியன நாற்பத்தைந்து. மருதத்திற்குரியன நாற்பத்தாறு. பாலைக்குரியன தொண்ணூற்று நான்கு. நெய்தலுக்குரியன எழுபது. குறிஞ்சிக்குரியன நூற்று நாற்பத்தாறும்.

இம்மூன்று தொகைகளின் ஆயிரத்திருநூறு செய்யுட்களில் பாலைத்திணைக்குரியன நானூற்றொன்று. குறிஞ்சிக்கு மூந்நூற்றைம்பத்தைந்து. நெய்தலுக்கு இருநூற்றுப்பதின்மூன்று. எஞ்சிய முல்லை மருதம் இரண்டும் முறையே நூற்றுப்பதின்மூன்றும் நூற்றுப்பதினெட்டு முடையன.

இதனையுற்று நோக்குமிடத்து அகத்திணை யொழுக்கங்களில் குறிஞ்சி பாலை எனும் இருதிணைகளுக்குமுரிய உரிப்பொருட்களாகிய கூடல், பிரிதல் ஆய இரண்டனையுமே புலவர் விசேஷித்துப் பாராட்டி வந்தனரென்பது ஒருவாறு தெரியவருகின்றது. இவற்றில் வழங்கும் பாடல்கள் மிகவும் அருமையானவை.

கார்காலம் வருவதாய்ச் சொல்லிப் பிரிந்த தலைமகன் வந்திலனாகத் தலைமகள் ஏக்கமுற்றுத் தன் தோழிக்குக் கூறுவாள். (அகம். 235.)

மேகம் திரண்டு கடல் நீரை முகந்து இடைவிடாமல் மழைபொழிந்து தோன்றி, முசுண்டை முதலிய கார்கால மலர்கள் புதர்களில் மலர்ந்தன. குளிர்ச்சி பொருந்திய வாடைக்காற்றும் மாலைக்காலமும் என்னைக் கொல்லா நின்றன. என் உடலை வருத்துகின்றன. அவர் பிரி வாற்றுமையினால் என் தேகம் பசப்புற்றது. இதனைக் கண்ட அயலார் அலர் தூற்றினார்கள். அங்ஙனமாகவும், இவள் என் செய்வாள், இருக்கின்றனளோ, இறந்து பட்டனளோ வெனவும் கருதாராய் என் காதலர் இன்னும் வந்திலர். என்னை முற்றும் மறந்தனர்போலும். இடையிடையே நினைந்தாரெனினும் தாம் மேற்கொண்ட தொழிலிற் கருத்துடையராதலின் உடன்தானே மறந்தனர்போலும். யான் என் செய்கோ!

கார்காலம் வருவதாய்க் கூறிச் சென்ற தன் காதலன் கார்காலம் வந்தும் தான் வராதிருக்கச் சகியாமே தலைமகள் புலம்ப, அவள் நிலைமையைக் கண்ட தோழி தலைமகட்கு கூறுவாள்:—

'நீற வறந்த நிரம்பா நீளிடைத்
துகில்விரித் தன்ன வெயிலவி ருருப்பி
னஞ்சுவரப் பனிக்கும் வெஞ்சுர மிறந்தோர்
தாம்வரத் தெளித்த பருவங் காண்வர
விதுவோ வென்றிசின் மடந்தை மதியின்று
மறந்துகடன் முகந்த கமஞ்சூன் மாமழை
பொறுத்தல் செல்லா திறுத்த வண்பெயல்
காரென் றயர்ந்த வுள்ளமொடு தேர்வில
பிடவுங் கொன்றையுங் கோடலு
மடவ வாகலின் மலர்ந்தன பலவே'...நற்றிணை. 99.

'மடந்தையே இஃதென் பேதைமை! இது கார்கால மாகுமா? வெயிலெரிக்கின்ற காட்டினிடத்தே சென்ற காதலர் திரும்பிவருவதாகச் சொன்ன காலம் இது வன்று. மேகம் அறிவு கெட்டுக் கடல் நீரை முகந்து

சூல் கொண்டது. அதனைத் தாங்கமாட்டாமே மழையையும் பொழிந்தது. பிடவு, கொன்றை, காந்தள் முதலிய அறிவில்லாத தாவர வர்க்கங்கள். அவைகள் இம்மேகம் அறிவுகெட்டு மழை பொழிந்ததை யறியாமே இதுவே கார்காலமென நினைத்து மலர்ந்துவிட்டன. அறிவுடையவளாகிய நீ அவை மலர்ந்தமை நோக்கி இதுவே கார்காலமெனக் கருதுவது பேதைமையாகும். ஆதலின் காதலர் குறித்த காலம் வந்திலரே என வருந்துதலை யொழிப்பாயாக.' என்பது.

களவொழுக்கத்தின் இறுதியில் தலைமகளை வரைந்து கொள்ள வந்த தலைமகனைக் கண்ட தோழி அவன் வரவைத் தலைமகட்குரைப்பது. (நற். 22.)

தோழீ! தினைப்பயிரில் முதலில் முற்றிய கதிர்களைக் கொய்துகொண்ட மந்தி கடுவனொடு மலையிலேறித் தன் கையினால் கதிரைக் கசக்கித் தினையைத் தன் கவுள் நிறைய வுண்டு மழை பெய்தலினாலே முழுவதும் நனைந்து தைமாதப் பிறப்பில் நோன்புடையார் நீராடி நோன்பு முற்றியிருந்து உண்ணுதல்போல் தோன்றும் மலையுடைய நாட்டன் குளம் வற்றி நெல் பயிர் வாடிய காலத்து நடுயாமத்து மழைபோல் வந்தனன். இனி விரைவிலே மணம்புரிந்து நெடுங்காலம் வாழ்வாயாக என்பது.

கடுவனொடு மலையிலேறிக் கதிரைக் கசக்கியுண்ணும் மந்தி என்றதில் கணவனொடு அவன் மனையில் இல்லறம் நிகழ்த்தி இன்பம் துய்க்கும் தலைவியைக் குறித்த உள்ளுறை யுவமம் இனிமை பயப்பதாம்.

காதலனைக் கண்ணில் காணக்கூடியதாயிருப்பின் ஒரு கால் ஆற்றுவேன். அவர் என் கண்களுக்கும் எட்டாமல் வினைவயத்தராய்ச் சென்றிருக்கின்றனரே என வருந்தியது. (குறுந். 60.)

உயர்ந்த மலையிடத்துப் பெரிய தேன் கூட்டைக் கண்டு இருகையும் உதவாத முடவன் சிறிய உடையை வளைத்துக் கீழிடத்திருந்து அதிற் காணப்படும் தேன்

கூட்டின் நிழலைக் கவ்வியும் நக்கியும் மகிழ்ந்தாற்போலக் காதலர் அளித்தலும் செய்யார், விருப்பமுங்கொள்ளா ரெனினும் பலமுறை காணுதலும் உள்ளத்துக்கு இனிய தாகும்' என்றவாறு.

காதலனைப் பிரிந்திருந்தாள் ஓர் தலைமகள் இரவில் தன் காதலனைக் கனவில் கண்ட சமயத்துச் சேவல் கூவ விழித்துச் சேவலைக் கடிந்து கூறுவதுபோற் கூறப்படும் செய்யுள்:

'குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவ
னள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே நெடுநீர்
யாண ரூரன் றண்ஞெடு
வதிந்தவெம் மின்றுயி லெடுப்பி யோயே.' குறுந். 107.

'செங்காந்தள் மலர்போலும் உச்சிக்கொண்டையை யுடைய சேவலே! நீ அழிவாயாக. எம்மனையகத்து எலி களைப் பிடிக்கும் கடுவன்பூனைக்கு நீயும் இரையாகி யொழிவாயாக. என் இனிமையான துயிலைக் கெடுத்து என்னை எழுப்பிவிட்டனையே!' என்றவாறு. இவை போல் வன செய்யுட்கள் அனந்தம். அவற்றின் இனிமையை நூலின்கண் நோக்கி மகிழ்க.

பரிபாடல். பரிபாட்டுக்களாலாயது பரிபாடல். 'அஃ தாவது ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பல வெண் பாவுமாகிப் பல உறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது.' அன்றியும் 'பரிபாடல் வெண்பாவுறுப்பாக இன்னபா வென்பதுணராமைப் பொதுப்பட நிற்றற்கும் உரித்து.' பரிபாடலினிலக்கணம் தொல். செய்யுள் 120 முதல் 123 வரையுள்ள சூத்திரங் களைப் படித்துணர்க.

பரிபாடல்கள் அகச்சுவைப் பொருளன. கடைச்சங் கப் புலவராற் பாடப்பட்ட பரிபாடல்களின் தொகை எழுபது என்பது இறையனாரகப்பொருளுரையால் தெரியவருகின்றது. இவற்றுள் திருமாலுக்கு எட்டும்,

முருகவேளுக்கு முப்பத்தொன்றும், காடுகிழாளுக்கு ஒன்றும், வையையாற்றுக்கு இருபத்தாறும் மதுரைக்கு நான்கும் உரியன. இதனை

> 'திருமாற் கிருநான்கு செவ்வேட்கு மூப்பத்
> தொருபாட்டுக் காடுகாட் கொன்று—மருவினிய
> வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
> செய்யபரி பாடற் றிறம்'

எனும் பரிபாடல் முகவுரையில் மகாமகோபாத்தியாயர் வர்கள் எடுத்துக் காட்டியுள்ள பழைய வெண்பாவால் அறியலாம்.

கடைச்சங்கப் புலவர் பாடிய பரிபாடல் எழுபதெனினும் தற்காலம் நமக்கெட்டியுள்ள மூழுப் பாடல்கள் இருபத்து நான்கே. இவற்றுள் திருமாலுக்குரியன ஏழு. முருகக்கடவுளுக் குரியன எட்டு. வையைக் குரியன ஒன்பது.

ஐங்குறுநூறு. எட்டுத் தொகை நூல்களில் ஐந்திணையொழுக்கங்களை வெவ்வேறுகப் பிரித்துக்கூறுவன ஐங்குறுநூறும் கலித்தொகையுமே. ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்து நீங்கலாக ஐந்நூறுபாடல்களையுடையது. நூல் முழுவதும் ஐந்திணையைக் குறிக்கும் ஐந்து பிரிவுகளாகப் பாடப்பட்டுளது. ஒவ்வோர் திணைக்குப் பத்துப் பிரிவுண்டு. ஒவ்வோர் பிரிவும் பத்துப் பாடல்கள் கொண்டது. செய்யுட்கள் மூன்று அடிமுதல் ஆறு அடி வரையுள்ளன.

ஐங்குறுநூற்றில் மருதத்திணை நூறு பாடல்களையும் பாடியவர் அம்போகியார். நெய்தல்திணை பாடியவர் அம்மூவனார். குறிஞ்சி பாடியவர் கபிலர். பாலைத் திணை பாடியவர் ஓதலாந்தையார். முல்லைத்திணை பாடியவர் பேயனார். இஃது

> 'மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
> கருதுங் குறிஞ்சி கபிலன்—கருதிய
> பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
> நூலையோ தைங்குறு நூறு'

எனும் வெண்பாவால் தெரிகின்றது.

ஐங்குறுநூறு தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தார் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறையார்.

இந்நூலிடை அவ்வந்நிலத்துக்குரிய கருப்பொருட்களே அழகுபெற வர்ணித்திருக்கும் திறம் வியக்கத் தக்கது.

கலித்தொகை. அகத்திணை ஐந்திணையும் தனித்தனி கூறும் தொகைநூல். இது கலிப்பாக்களாலாக்கப்பட்டமையின் கலித்தொகையெனப்பட்டது. இதிற் காணப்படும் செய்யுட்கள் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் முதலிய உறுப்புக்களானமைந்த ஒத்தாழிசைக் கலிப்பாக்களாம். கலித்தொகையுள் கடவுள் வாழ்த்து நீங்கலாக நூற்றுநாற்பத்தொன்பது செய்யுட்கள் உள்ளன. இவற்றுள் பாலைத்திணைக்குரியன முப்பத்தைந்து. குறிஞ்சித்திணைக்குரியன இருபத்தொன்பது. நெய்தற்குரியன முப்பத்துமூன்று. மருதத்திற்குரியன முப்பத்தைந்து. முல்லைக்குரியன பதினேழு.

பாலைத்திணையைப் பாடினோர் பெருங்கடுங்கோன். குறிஞ்சித்திணையைப் பாடினோர் கபிலர். மருதத்திணையைப் பாடினோர் மருதனிளநாகனார். முல்லைத்திணையைப் பாடினோர் சோழனல்லுருத்திரன். நெய்தல் திணையைப் பாடினோர் நல்லந்துவனார். இதனை மகாமகோபாத்தியாயர் ஸ்ரீ சுவாமிநாதய்யரவர்கள் பரிபாடல் பாடினோர் வரலாற்றில் வெளியிட்டிருக்கும்

> 'பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்
> மருதனிள நாகன் மருத—மருஞ்சோழ
> னல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
> கல்விவலார் கண்ட கலி'

எனும் வெண்பாவினால் அறியலாம். கலித்தொகையைத் தொகுத்தார் நல்லந்துவனார் என்பது கலித்தொகையிற்றில் காணப்படும் வாசகத்தாலும் 'நல்லந்துவனார் கலித்தொகை' என வழங்கும் வழக்கச் சொல்லாலும் தெரியவருகின்றது. கலித்தொகை மிகவும் சிறந்ததோர் நூலென்பது 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' 'கல்விவலார் கண்ட கலி' எனும் அடைமொழித் தொடர்களால் தெரியவரும்.

கலித்தொகையில் ஐந்திணை நிலத்திற்குமுரிய ஒழுக்க வேறுபாடுகளின் நயம், அவ்வந்நிலத்தின் இயற்கை, நில மாக்களின் வழக்க பழக்கங்கள் முதலியன பொதிந்துள்ளன. இந்நூலை வாசிக்கப் புகுந்தார் செய்யுள்தோறும் இன்பமடைதல் திண்ணம். இதிலடங்கியுள்ள உவமானங்கள் உலக நீதிகள் முதலியன மிகவும் அருமையானவை.

'நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின்.' கலி. 8: 1–3.

'நடுவு நிலைமையைக் கைவிட்ட அமைச்சன் கூறியது கேட்டுக் கொடுந்தொழில் புரிந்த அரசனது கொடுங் கோல் சுடுவதுபோல் சூரியன் சுடுகையினாலே.'

'செம்மையி னிகந்தொரீஇப் பொருள்செய்வார்க் கப்பொருள்
இம்மையு மறுமையும் பகையாவ தறியாயே.' கலி. 14: 14–15.

'பொருள்தேடும் முறைமையினீங்கிப் பொருள்தேடு வார்க்கு அப்பொருள்தான் அவரை நீங்கி இம்மையிலும் மறுமையிலும் பகையாவதறியாயோ.'

'உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கான் முகனும்வே ருகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை.' கலி. 22: 1–3.

'தாம் கடன்வாங்கும்போது முகமலர்ந்து இரந்து வழிபாடு சொல்லி வாங்குதலும் அக்கடனை மீண்டு கொடுக்குங்கால் முகங்கோணலும் முற்காலத்தும் இவ் வுலகத்தியல்பு.'

'குன்றக னன்னுடன் வாய்மையிற் பொய்தோன்றிற்
றிங்களுட் டோன்றி யற்று.
. . . . . மலைநாட
னீரத்து ளின்னவை தோன்றி னிழற்கயத்து
ணீருட் குவளைவெந் தற்று.' கலி. 41: 23–24, 30, 31.

'குன்றுகள் நிறைந்த நன்னுடன் கூறிய மொழியில் பொய் தோன்றுமாயின் சந்திரனிடத்தே தீ தோன்றிய தன்மையாகும்.'

'மலைநாட்டன் அருவிடத்தே கொடியவை தோன்று மாயின் நிழலையுடைய குளத்துள் நீரினின்ற குவளை வெந்த தன்மையாகும்.'

இவைபோல்வன உலக நீதிகள், உவமான உவமேயங் கள் எண்ணிறந்தன இந்நூலில் நிறைந்துள்ளன.

'வல்லோ துறப்பாயேல் வகைவாடு மிவளென
வொல்லாங்கியா மிரப்பவு முணர்ந்தீயா யாயினை
செல்லுநீ ஞாற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப்
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன.' கலி. 3: 10–13.

தலைவியைப் பிரிந்துசெல்லும் தலைமகன் செல்லா திருக்குமாறு தோழி பல சொல்லியும் அவன் போதற்கே துணிய இனி அவனைத் தடுப்பன யாவையெனக் கூறியது.

நீ இவளைப் பிரிந்து செல்லுகையினாலே அழகுபெற்ற இவள் உறுப்புக்கள் வாடுமென நான் பலவாறு கூறியும் நீ கேளாயாய்ச் செல்லுதற்கே துணிந்தனை. இனி நீ செல்லும் மார்க்கத்தில் தமக்குப் பற்றுக்கோடாய்க் கொண்டு சுற்றியிருந்த மரம் சூரிய வெப்பத்தால் கரிய அதனை விட்டுக் கீழே விழுந்து தவிக்கும் இளங்கொடி களைக் கண்டேனும் செல்லாது திரும்புவை.

'நகுவனபோ னந்தின கொம்பு; நைந்துள்ளி நொந்து,
யுகுவது போலுமென் னெஞ்சு; எள்ளித்
தொகுபுட னுவெ போலுமயில்; கையி
லுகுவன போலும் வளை; என்கண்போ
லிகுபறல் வாரும் பருவத்தும் வாரார்
மிகுவது போலுமிந் நோய்;' கலி. 33: 16-21.

இது தலைவனைப் பிரிந்தகாலத்துத் தலைவியின் நிலைமை கூறுவது.

'பிரிந்த மகளிரை நகுதற்கு நங் காலம் வருகின்ற தில்லையேயென்று நொந்திருந்து அது வந்தபின்னர் நம் வருத்தங் கண்டு சிரிப்பனபோலக் கொம்புகள் பூ மிக் கன; அதனைக்கண்டு என் நெஞ்சம் வருந்தித் தலைவரை நினைந்து அழிவதுபோலே இராநிற்கும்; மயில்கள் நம்மை இகழ்ந்து காலமன்றியுஞ் சேரத் திரண்டு ஆடுவனபோலே

இராநிற்கும்; நங்கையில் வளைகள் நாங் காப்பவுங் கழல் வனபோலே இராநிற்கும்; என் கண்போலே அறுதியை யுடைய நீர் இற்று ஒழுகும் இளவேனிற்காலத்துந் தலை வர் வாரார்; ஆதலால் இந்நோய் இனி இந்நிலையினும் மிகுவதுபோல இராநிற்கும்.'

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் தோழியை வாயில் வேண்ட அவள் வாயினேர்வாள் நெருங்கிக் கூறியது:—

'மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடு மன்னந்தன்
னணிமிகு சேவலை யகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கியம் மடப்பெடை
மதிநிழ னீருட்கண் டதுவென வுவந்தோடித்
துன்னத்தன் னெதிர்வரூஉந் துணைகண்டு மிகநாணிப்
பன்மல ரிடைப்புகூஉம் பழனஞ்சே ரூரகேள்;' கலி. 70: 1–6.

'பல மணிகள்போலும் நிறங்களையுடையவாகிய மலர் களையுடைய பொய்கையிலே சேவலோடு மகிழ்ந்து விளை யாடும் அன்னப்பெடை தனது அழகுமிக்க சேவலன் னத்தை அகன்ற தாமரையிலை மறைத்ததாக அதனைக் காணுமற் கதுமெனக் கலங்கி அந்த அறியாமையை யுடைய பெடை மதியினுடைய நிழலை நீருக்குள்ளே கண்டு அச்சேவலென்று உவந்து ஓடிச்சென்று தனக்கு எதிரே வருகின்ற சேவலைக் கண்டு மிகவும் நாணிப் பல பூக்களின் செறிவுக்குட்புக்கு ஒளித்திருக்கும் பழன நிலஞ் சூழ்ந்த ஊரனே! யான் கூறுகின்றதனைக் கேள்.'

முல்லைக் கலியுட் காணப்படும் செய்யுட்கள் பல அக் கால ஆயர் முறைமைகளைத் தெரிவிப்பன. கொல்லுஞ் சினத்தினையுடைய எருதின் கொம்புகளைச் சீவி அதை அவிழ்த்துவிட அவ்வெருதைப் பிடித்து அடக்கிக் கொண்டுவருவோனுக்கே தன் மகளை மணஞ்செய்து கொடுப்பதாகக் கூறுதலும் அங்ஙனமே ஆயர்குல வாலி பர் ஏறு தழுவிக்கொணர்ந்து ஆயச் சிறுமிகளை மணத் தலுமாய பல வழக்கங்கள் வெளியாம்.

ஆயர் குலத்துக்கும் களவொழுக்கமும் அதன்பின் னர் கற்பொழுக்கமும் உண்டென்பதற்குப் பல சான்று கள் உள.

'தோழிநாங், காணுமையுண்ட கடுங்கள்ளே மெய்கூர
நாணுது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாங் கண்டாய்நம்
புல்லினத்தாய மகன்சூடி வந்ததோர்
முல்லே யொருகாழுங் கண்ணியு மெல்லியால்
கூந்தலுட் பெய்து முடித்தேன்மற் றேழியாய்
வெண்ணெ யுரைஇ விரித்த கதுப்போடே
யன்னேயு மத்தனு மில்லரா யாய்நாண
வன்னேமுன் வீழ்ந்தன்றப் பூ.' கலி. 115: 1–9.

'மெல்லிய இயல்பினேயுடையாய்! நம் யாட்டினத்தை யுடைய ஆயர்மகன் சூடி வந்ததொரு முல்லேத்தொடையினேயும் அதனுற் செய்ததோர் கண்ணியையுங் கூந்தலிலேயிட்டு மிகவும் முடித்தேன்; அப்பூச் செவிலித்தாய் வெண்ணெய் தேய்க்க விரித்த மயிரோடே நற்ருயுந் தந்தை முதலியோரும் இவ்விடத்தே யிராநிற்க நற்ருயுங்கெட்டு நாணும்படியாகச் செவிலிமுன்னே வீழ்ந்தது; ஆகையினுலே தோழீ! பிறர் காணுமையுண்ட கள்ளின் களிப்பு மெய்யிடத்தே தோன்றி மிகுகையினுலே பின்னே நாணுமற்சென்று பிறர் நடுங்கும்படி அக்கடுங்கள்ளேத் தாமுண்டபடியை உரைத்தாற்போலே நம் களவொழுக்கமும் வெளியாய்விட்டது காணென்ருள்.'

7. அத்தியாயம்

சிலப்பதிகாரம், மணிமேகலை

தமிழ் இலக்கியப் பரப்பினுள் ஐம்பெருங் காப்பியங்கள் எனும் பெயரான் அழைக்கப்படுவன சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதியெனும் நூல்களாம். இவற்றுள் மகாமகோபாத்யாயர் ஸ்ரீ. உ. வே. சாமிநாதய்யரவர்களின் அரும் பெரு முயற்சியின் பயனுய் முழுவதும் அச்சேறித் தமிழ்நாட்டில் பயிலக்கிடந்தன முதல் மூன்று நூல்களுமாம். இவற்றுள் சீவகசிந்தாமணி பிற்கால நூலாதலின் கடைச்சங்க நூல்களை யாராயும் இப்பகுதியில் சிலப்பதிகாரம் மணிமேகலையெனும் இருநூல்களுமே எடுத்தாளப்படும்.

சிலப்பதிகாரம் மணிமேகலை யிருநூல்களும் சரித்திர வாராய்ச்சிக்கு இன்றியமையாதன வென்பதனை முன்னரே மூன்றும் அத்தியாயத்தில் வெளியிட்டாம். இந்நூல்களின் ஆதாரமின்றேல் கடைச்சங்ககாலம் இதுவேயெனத் துணிதலும் கஷ்டசாத்தியமாய்விடும். இவ்விருநூல்களும் கரிகால் சோழன், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் முதலிய பிரபலமான தமிழ் வேந்தர் ஆண்டிருந்த காலநிகழ்ச்சிகளைக் கூறும் காப்பியங்களாதலினலும் இவற்றை எழுதினோரும் அதே காலத்தவராதலினலும் இந்நூல்கள் நமக்கு எத்துணைப் பேருதவியா யிருக்கின்றனவென்பது கூறுதே யமையும்.

சிலப்பதிகாரம். இதிற் கூறப்பட்டுள்ள சரிதம் சாதாரண பாமர ஜனங்களும் நன்றறிந்த தொன்றுதலின் அதனை ஈண்டு கூறுதல் அவசியமின்றென விலக்கப்பட்டது. கோவலன், கண்ணகி எனும் நாடகம் தற்காலத் தமிழ்நாடெங்கும் நாடக சாலைகளில் பன்முறை நடிக்கப்பட்டு வருகின்றது.

பதிகச் செய்யுள் நீங்கலாக புகார் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் எனச் சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள்:

புகார் காண்டம்:—

மங்கலவாழ்த்துப்பாடல், கடலாடு காதை,
மணியற்பம்படுத்த காதை, கானல் வரி,
அரங்கேற்று காதை, வேனிற் காதை,
அந்திமாலை சிறப்புச்செய் கனாத்திற முரைத்த காதை,
காதை, நாடுகாண் காதை
இந்திரவிழவூரெடுத்த காதை,

எனப் பத்துப் பிரிவுகளை யுடையது. இவற்றுள் கோவலன் கண்ணகி யிருவருடையவும் பிறப்பிடமாகிய காவிரிப்பூம் பட்டினத்தில் அவ்விருவருக்கும் நிகழ்ந்த காரியங்கள் கூறப்பட்டுள்ளன. அவர்கள் மணம், கோவலன் மாதவியின்பாற் சேறல், செல்வங்களை யிழத்தல், மாதவிக்கும் கோவலனுக்கும் ஊடல் பிறத்தல், கோவலன் கண்ணகியை மறுபடி சேர்ந்து தன் குலத்தொழிலாகிய வியாபாரத்தின் பொருட்டு மூலதனப் பொருளாகக் கண்ணகியின் சிலம்பைக் கைக்கொண்டு இருவரும் மதுரை நோக்கிப் புறப்படல் வரையுள்ள பாகம் கூறப்பட்டுள்ளது.

மதுரைக் காண்டம்:—

காடுகாண் காதை, துன்ப மாலை,
வேட்டுவ வரி, ஊர்சூழ் வரி,
புறஞ்சேரியிறுத்த காதை, வழக்குரை காதை,
ஊர்காண் காதை, வஞ்சின மாலை,
அடைக்கலக் காதை, அழற்படு காதை,
கொலைக்களக் காதை, கட்டுரை காதை,
ஆய்ச்சியர் குரவை.

எனப் பதின்மூன்று பிரிவுகளையுடையது.

இதில், கோவலன் கண்ணகியை மதுரைப்புறத்துச் சேரிவரையும் இட்டுவந்து அங்கே மாதரியெனும் ஆய்ச்

சியினிடம் அடைக்கலமாக வைத்துவிட்டுக் கண்ணகியின் சிலம்பைக் கைக்கொண்டு மதுரைக்கேகி அங்கே பொற்கொல்லன் சதியால் கொலையுண்டது கேட்டுக் கண்ணகி தன் மற்றொரு சிலம்பொடு அரசவைக்கேகித் தன் கணவன் கள்வன் அல்லவென்று காட்டவே அரசன் உயிர்விட்டனனாக இவள் மதுரையை யெரியூட்டிக் குடதிசை மலைக்கேகிப் பதினான்காம் நாள் தன் கணவனைக் கூட இருவரும் சுவர்க்கம் எகியவரை கூறப்பட்டுளது.

வஞ்சிக் காண்டம்:—

குன்றக் குரவை, நடுகற் காதை,
காட்சிக் காதை, வாழ்த்துக் காதை,
கால்கோட் காதை, வரந்தரு காதை,
நீர்ப்படைக் காதை,

என ஏழு பிரிவுகளையுடையது.

மேல்திசை மலையில் தன் கணவனோடு சுவர்க்கமேகிய கண்ணகியைக் கண்டிருந்த குறவர் ஆங்கு வந்த தம் அரசனாகிய செங்குட்டுவனிடம் தாம்கண்ட காட்சியைக் கூறச் செங்குட்டுவன் கண்ணகியைப் பத்தினி தெய்வமாகப் பிரதிஷ்டிப்பிக்கும் பொருட்டுக் கற்கொணரு மாறு இமயமலைக்குச் சென்றவன் இடையில் பல ஆரிய மன்னரை ஜெயித்துச் சிறைபிடித்து இறுதியில் இமயத்திலிருந்து கற்கொணர்ந்து, பத்தினி தேவிக்குக் கோவில்கட்டி, பிறநாட்டு வேந்தரையும் வரவழைத்துத் திருவிழாக் கொண்டாடினன். ஆண்டு வந்திருந்த இலங்கைக் கயவாகுமன்னர் முதலியவரும் தத்தம் நாடுகளில் பத்தினி தேவியைப் பிரதிஷ்டிக்கத் தீர்மானித்துச் சென்றனர் எனச் சரிதமுற்றும்.

புகார் காண்டத்தின் ஐந்தாவது பிரிவதாகிய இந்திர விழவூரெடுத்த காதை அந்நாள் விவரங்கள் அறிய விரும்புவார்க்கு இன்றியமையாதது. அதனிடைக் காவிரிப்பூம்பட்டினப் பெருமையும் அந்நகரின் செல்வச் செழிப்பும் வதியும் பற்பல மாக்களின் பிரிவுகளும், கடை

வீதி முதலியவற்றின் வர்ணனைகளும், அரசர் பெருமை யும் ஆய பற்பல காரியங்கள் பரக்கக் கூறப்பட்டுள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்தில் மரக்கலம் தரும் செல்வப் பொருட்டால் தாம் பிறந்த நிலத்தைவிட்டுப் போந்த பரதேசிகள் பலரும் வந்து அலைவாய்க்கரையில் குடியிருந்தனர். (5 : 11–12.) 'பட்டு நூலினும், எலி மயிரானும், பருத்திநூலானும் (5 : 16–17) நுண்ணிய தொழில்களை ஊசியாற் பிணிக்கும் பட்டுச் சாலியரிருந்தனர்.' அந்நாட்டரசனுகிய கரிகாலன் தமிழ்நாட்டெல்லையுள் தன்னெடு எதிர்த்துப் போர்செயும் அரசரின்மையின் வடதிசை மன்னரைப் பொருதற்கு அத்திசை நோக்கிப் படையெடுத்தேகி இமயமலையில் தன் புலி முத்திரையைப் பொறித்துத் திரும்பினன். (5 : 81–99.) தேசகாரியங்களை நிர்வகிப்பதற்கு அங்கே ஐம்பெருங் குழுவினரிருந்தனர். (5 : 157.)

இந்திர விழவுமுடியும் இருபத்தொன்பதாநாளில் கோவலனும் மாதவியும் கடற்கரை மணலில் அமர்ந்து யாழ் கைக்கொண்டு பாடிய பாடல்களினுல் ஒருவரோடொருவர் ஊடிப்பிரிந்தனர் எனும் கதை பிரசித்தம். அப்பாடல்கள் மிகச்சிறந்தன. அவற்றிற் சில வருமாறு:—

'வலைவாழ்நர் சேரி வலையுணங்கு முன்றின் மலர்கை யேந்தி
விலைமீ னுணங்கற் பொருட்டாக வேண்டுருவங் கொண்டு வேறூர்
கொலைவே னெடுங்கட் கொடுங்கூற்றம் வாழ்வ
தலைநீர்த்தண் கான லறியே னறிவனே லடையேன் மன்னே.'

கானல் வரி. 10.

பொருள்:—கடலில் மீன்பிடித்துயிர்வாழும் பரதர் சேரியில் வலைகாயும் முற்றங்களில் காயும் மீனைக் காப்பதற்காகக் கையில் மலர்களைப் பிடித்துக் கூற்றமாகிய யமன் தான்வேண்டும் பெண்ணுருக்கொண்டு வாழ்தலையான் இதுகாறும் அறிந்திலேன். அறிந்தேனுயின் இக் கானலில் வந்திரேன். (எ—று).

'பொழிறகு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதற் றிருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுருவ வில்லிணையே
யெழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே.'

கானல். 14

'கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் னேய
ருடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் னீயு
மிடல்புக் கடங்காத வெம்மூலையோ பார
மிடர்புக் குகுமின் னிடையிழவல் கண்டாய்.' கானல். 17.

'புன்னை நீழற் புலவத் திரைவா
யன்ன நடப்ப நடப்பாள் செங்க
ணன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றங் கூற்றம்.' கானல். 21.

'புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோற்
றுன்ப முழவாய் துயிலப் பெறுதியா
லின்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள்
வன்கண்ணர் கானல் வரக்கண் டறிதியோ.' கானல். 33.

பொருள்:—நான் துன்பமடைந்து துயிலின்றி வாடும் இம்மாலை நேரத்தில் யாதும் கவலையின்றிக் கண்மூடி யுறங்கும் நெய்தல் மலரே! நீ காணும் கனவில் என் காதலர் இக்கானலில் வரக்கண்டால் அதனை உடனே எனக் குரை. (எ–று).

'நன்னித் திலத்தின் பூணணிந்து நலஞ்சார் பவளக் கலையுடுத்துச்
செந்நெற் பழனக் கழனிதொறுந் திரையு லாவு கடற்சேர்ப்ப
புன்னைப் பொதும்பா மகரத்திண் கொடியோ னெய்த புதுப்புண்க
ளென்னைக் காண வகைமறைத்தா லன்னை காணி னென்செய்கோ.'

கானல். 37.

ஆய்ச்சியர் குரவையுள் ஆயர் மகளிர் மாயவனை முன்னிலைப்படுத்திப் பாடும் பாடல்கள் வியக்கத்தக்கன:—

'வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றூற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே.'

'அறுபொறி வினனென்றே யமரர்கணந் தொழுதேத்த
வுறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
யுண்டவாய் களவினு னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே'

'திரண்டமரர் தொழுதேத்துந் திருமானின் செங்கமல
விரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே.'

ஆய்ச்சியர் குரவை : முன்னிலைப்பரவல்.

ஆய்ச்சியர் குரவையுள் கொளுச்சொல் என வழங்கும் பதினொரு வரிகளிலும் அக்கால ஆயர்குல மகளிரைப் பெண்கொள்ள வரும் ஆயர்வாலிபர் செய்யத்தக்க வீரச்செயல்கள் யாவையெனக் கூறப்பட்டுள்ளன.

கோவலன் கொலையுண்டது கேட்ட கண்ணகியின் நிலைமை:—

'பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வழுதாடன் கேள்வனை
யெங்கணஅ வென்னு வினைந்தேங்கி மாழ்குவாள்'

'இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போன்
மன்பதை யலர்தூற்ற மன்னவன் றவறிழைப்ப
வன்பனை யிழந்தேன்யா னவலங்கொண் டழிவலோ'

'நறைமலி வியன்மார்பி னண்பனை யிழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போன்
மறனெடு திரியுங்கோன் மன்னவன் றவறிழைப்ப
வறனெனு மடவோயா னவலங்கொண் டழிவலோ'

'தம்முறு பெருங்கணவன் றழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போற்
செம்மையி னிகந்தகோற் றென்னவன் றவறிழைப்ப
விம்மையு மிசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ.'

துன்பமாலை.

கண்ணகியின் நிலைமையைக் கண்ட மதுரைமாக்கள்,

'மல்லன் மதுரையா ரெல்லாருந் தாமயங்கிக்
கலையாத தன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொன்
மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்
றென்னவன் கொற்றஞ் சிதைந்த திதுவென்கொன்
மண்குளிரச் செய்யு மறவே னெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கொல்
செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொ
லையரி யுண்க ணழுதேங்கி யரற்றுவா
டெய்வமுற் றுள்போலுந் தகைய ளிதுவென்கோ.'

ஊர்சூழ்வரி : 16–26

எனக்கூறி வாடினர்.

மதுரையைத் தீயூட்டும் கண்ணகி,

'பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று' . . . .

வஞ்சினமாலை. 53–55.

தீயை ஏவினள்.

'மஞ்சுசூழ்சோலை மலைகாண்குவமெனப் பைந்தொடி யாயமொடு' செங்குட்டுவன் சென்றபோது மலைக்கண் வதிந்த குறவர் அவனுக்குக் காணிக்கையாகப் படைத்த பொருட்களின்னின்னவெனக் (காட்சிக்காதை, 37–54) கூறப்பட்டிருக்கின்றன. இவைகள் மேனாட்டு மலைவளத்தை நன்கு விளக்குவனவாம்.

கால்கோட் காதையில் சேரன் செங்குட்டுவனின் வீரமும் பெருமையும் விளக்கப்பட்டிருக்கின்றன.

நீர்ப்படைக் காதையுள் மாடலனுகிய அந்தணன் செங்குட்டுவனோடுரையாடிக் காரியங்களைக் கூறிய பின்னர் செங்குட்டுவன் நீலன் மூலமாய்த் தமிழ் வேந்தரிருவரும் தன்னை இகழ்ந்து கூறியது கேட்டுப் பொருளைப் போர்க்கெழ அங்கே மாடலமறையவன் கூறும் முதுமொழிகள் (நாடு காண் காதை, 112–186) மிகவும் பாராட்டத்தக்கன. செங்குட்டுவன் பத்தினிதேவியைப்

பிரதிஷ்டிப்பித்து பூசை நடத்திய முதற்றினத்தில் அவனுடன் அவனால் சிறைமீட்கப்பெற்று நின்ற 'ஆரிய மன்னரும், பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும், குடகக்கோங்கரும், மாளுவவேந்தரும், கடல் சூழிலங் கைக் கயவாகுவேந்தனும்' இருந்தனர். (வரந்தரு காதை, 157–161).

இம்மன்னரும் தத்தம் நாடுகளில் பத்தினிதேவி யைப் பிரதிஷ்டை செய்து வணங்கில் அவர்க்கும் அவள் வரந்தருவாளென அசரீரிவாக்குப்பெற்றுத் தத்தம் பதி களுக்கேகிக் கண்ணகிக்குக் கோவில் அமைத்து அவளைத் தெய்வமாய் வணங்கிவந்தனர். இவ்வுண்மை பதிகத்தோ டொட்டியுள்ள உரைபெறுகட்டுரையானும் இனிது விளங்கும்.

சிலப்பதிகாரத்திற் கண்டுள்ள நிகழ்ச்சிகள் யாவும் சோழ பாண்டிய சேரநாடுகளில் முறையே நிகழ்ந்தன.

கோவலன் கண்ணகி சோழநாட்டிலிருந்து வெளியே றும்வரை அந்நாட்டை யாண்டிருந்தவன் சோழன் கரி காலன் என்பது 'செருமிகுசினவேற் செம்பியனொரு தனியாழியுருட்டுவோனெனவே' எனும் மங்கல வாழ்த் துப் பாடல் இறுதி ஈரடிகளுக்கும் 'எழாண்டியற்றியோ ரீராறாண்டிற் சூழ்கழன் மன்னற்குக் காட்டல்வேண்டி' எனும் (10–11 அரங்கேற்றுகாதை) அடியார்க்கு நல் லார் கூறும் உரையால் தெரியவரும்.

பாண்டிய நாட்டில் அக்காலமாண்டிருந்த பாண் டியன் கோவலனைக் கொலைப்படுத்தியவனுகிய அரசுகட் டிலிற் றுஞ்சிய பாண்டியனெடுஞ்செழியன் என்பது மது ரைக்காண்ட இறுதியில் வழங்கும் கட்டுரையால் தெரிய வரும். சேரநாட்டில் அக்காலத்திலிருந்தவனும் பத் தினிதேவியைப் பிரதிஷ்டிப்பித்தவனுமாகிய மன்னன் சேரன் செங்குட்டுவன் என்பது வரந்தருகாதையாலும் (178 அடி) பிறவாற்றாலும் இனிது விளங்கும்.

தமிழ்மொழியில் முதல் முதல் எழுதப்பட்ட காப்பி யம் இதுவே. இதற்கு முன்னுள்ளன யாவும் வெவ்வேறு பொருளைத் 'தருவனவாய்ப் பற்பல புலவராற் பாடப் பட்ட தனிச் செய்யுட்களே. பொருணிலைத்தொடரென வழங்கு மிதுவே தமிழ்மொழியில் முதல் முதல் எழுதப்

பட்ட பெருங்காப்பியமாகும். இது வாசகமும் செய்யுளும் கவிகளுமடங்கி அக்காலத்து நாடக ரூபமாயியற்றப்பட்டதோர் நாடக நூலுமாகும். நாடக உறுப்புக்கள் பல இதினிடை ஆங்காங்கே விரிவாகவும் குறிப்பாகவும் காட்டப்பட்டிருக்கின்றன.

சிலப்பதிகாரம் செய்தார் இளங்கோவடிகள். இவர் சேர அரச வம்சத்தினர். சேரன் செங்குட்டுவனின் உடன் பிறந்தார். இவர் தமக்குரித்தான அரச செல்வத்தைத் தம் இளம் பருவத்தே வெறுத்துத் துறவியாக வகித்து வந்தவர். இவர் சேரமரபினரேயாயினும் பிற அரசரையும் இவருடைய நாடு, நகரம், செல்வம் முதலியவற்றையும் விவரிக்குங் காலத்துச் சமநிலையாகவும் ஒருசிறிதும் மனத்துவேஷமின்றியும் எடுத்துக் கூறுகின்றார். இவர் துறவியேயாயினும் உலககாரியங்களைத் தெற்றென அறிந்தவரென்பது இவர் பாடல்களால் இனிது விளங்கும். சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட சம்பவங்கள் இவர் காலத்து நிகழ்ந்தனவேயாகும். வஞ்சிக்காண்டத்திற் கூறப்படும் காரியங்கள் பலவும் இவர் நேராகவே பார்த்து எழுதியனவாகும். பிறகாரியங்களை இவர் உடன் புலவராகிய சீத்தலைச் சாத்தனார் வாயிலாகவும் மாடல மறையோன் முதலிய பிறவாயில்களானும் கேட்டும் தாமேகாவிரிப்பூம்பட்டினம், மதுரைமுதலிய இடங்களுக்குச் சென்று பலர் மூலமாய்க்கேட்டும் பல காரியங்களை நேரிற்கண்டும் எழுதியதாகும்.

மணிமேகலை சிலப்பதிகாரத்தினோடு சமகாலத்திலே யெழுதப்பட்ட பிறிதோர் பெருங்காப்பியம் மணிமேகலையாகும். இரண்டினும் கூறப்பட்டுள்ள சரிதங்களையும் ஒரே காப்பியமாக இளங்கோவடிகள் பாடவிருந்ததாகவும் அதற்கிடையில் மணிமேகலைத் துறவு எனும் பெயரால் சாத்தனார் மணிமேகலையைப் பாடிவிட்டமையின் அவர் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டுள்ளதோடு நிறுத்தி இருகாப்பியங்களும் உலகில் நிலவுக எனக் கூறிவிட்டதாகவும் தெரிகின்றது.

கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். தானிய வர்த்தகர். இவர் சங்கத்திற்கு அரங்கேற்ற வரும் புலவர்களுடைய பாடல்களைக்

கேட்டுத் தம் அபிப்பிராயங்களை வெளியிடுபவரென்றும் தெரியவருகின்றது. தவறான பாடல்களைத் தாம் கேட்க நேரிடின் தமது கையிலிருந்த ஒரு சலாகையால் தமது தலையில் மோதிக்கொள்வாராம். இதனால் இவருடைய தலையிலிருந்த புண் ஆறுமலே யிருந்தபடியால் இவருக்குச் சீத்தலைச்சாத்தனர் எனும் பெயர் வழங்குவதாயிற்று. இவர் சேரர் மாளிகையில் சமஸ்தான வித்துவானுயிருந்தவரோ எனும் சந்தேகமும் சிலருக்குண்டு. சேரன் செங்குட்டுவன் மலைவளங் காணச் சென்றிருந்த சமையத்தில் மலைக்குறவர் மூலமாய்க் கண்ணகியின் காரியத்தைக் கேட்டுத் திகைத்து நிற்கச் சாத்தனர் அவளுடைய வரலாறுகளை ஆதியோடந்தமாய்த் தாம் கண்டறிந்திருப்பதாக அதனை எடுத்துக் கூறியிருக்கின்றனர். (சிலப்பதிகாரம், கட்டுரைகாதை 65 வது வரிமுதல் பார்க்க.)

மணிமேகலைக் கதைச் சுருக்கம். கோவலன் கண்ணகியிருவருக்கும் நடந்த துன்பங்களைக் கேட்ட மாதவி தான் துயராற்றுதவளாகி அறவணவடிகளின் உபதேசத்தைக் கேட்டுத் துறவு பூண்டனள். அது கண்ட அவள் மகளாகிய மணிமேகலையும் தன் தாய் தந்தையராகிய கோவலன் கண்ணகியர் அடைந்த துயரம் பொருளாய்த் துறவுபூண்டாள். ஒருநாள் மணிமேகலை மாலை தொடுத்தற்குப் பூ வெடுப்பாள் சுதமதியென்பாளுடன் உவவனத்திற்கேகிய விடத்து இவள்மீது காம பரவசத்தனுயிருந்த அரசன் குமாரனுகிய உதயகுமாரன் இவளைக் கைவசப்படுத்தும்படி அவ்வனத்தற்கு வந்தனன். அவன் வரவை யுணர்ந்த மணிமேகலை அவ்வனத்திருந்த ஒரு பளிக்கறையுள் புக்கொளித்தனள். அவளைக் காணுது தயங்கிய உதயகுமாரனும் இவளை எப்படியும் பின்னரேனும் பெறலாம் எனத் தன்னைத் தேற்றிக்கொண்டு வந்த வழியே திரும்பினன். இதற்கிடையில் கோவலனின் குலதெய்வமாகிய மணிமேகலா தெய்வம் அங்கு தோன்றி மணிமேகலையை யெடுத்துச்சென்று மணிபல்லவம் என்னும் தீவில் வைத்துவிட்டுத் தான் அவளைத் தூக்கிப் போன விவரத்தையும் அவள் மறுபடியும் ஏழாம்நாள் காவிரிப்பூம்பட்டினம் திரும்பி வருவாளென்பதையும்

சுதமதியின்மூலமாய் மாதவிக்குக் கூறியனுப்பியது. மணிபல்லவத்தில் விடப்பட்ட மணிமேகலை அங்கு தனியே யிலந்து திரிந்தவள் அங்கிருந்த புத்த பீடிகையைக் கண்டு தரிசித்துத் தன் பழம் பிறப்பின் வரலாறுகளை யறிந்து வாட்டம் தவிர்ந்திருந்தனள். அச்சமயம் மணிமேகலா தெய்வம் வந்து தோன்றி வேற்றுருவைக் கொடுப்பதும் ஆகாய வழியே செல்விப்பதும் பசியைத் தொலைப்பதுமாகிய மூன்று மந்திரங்களை யவளுக்குபதேசித்துச் சென்றது. அப்பால் மணிபல்லவத்திலிருந்த கோமுகியென்னும் பொய்கையில் தீவதிலகை கூறியபடி தனக்குக் கிடைத்த எடுக்க எடுக்கக் குறையாத அன்னத்தைக் கொடுக்கவல்ல அக்ஷய பாத்திரத்தை யெடுத்துக் கொண்டு ஆகாயமார்க்கமாய்க் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்து மாதவி, சுதமதி முதலியோரையும் கூட்டிக்கொண்டு அறவணவடிக ளிடத்திற்கேகி அவரைத் தொழுது அவர் மூலமாக ஆபுத்திரனுடையவும் அக்ஷய பாத்திரத்தினுடையவும் வரலாறுகளை யுணர்ந்து காவிரி பாயும் நாட்டினர் பஞ்சத்தால் வாடுவதை யறிந்து காயசண்டிகையின் மூலமாய் ஆதிரையென்பவளின் கற்பு விசேடத்தைக் கேள்வியுற்று ஆதிரையினிடம் முதல் முதல் அக்ஷய பாத்திரத்தில் பிச்சை வாங்கிக் காயசண்டிகையின் தீராப் பசியையும் தீர்த்துப் பின்பு காவிரிப் பூம்பட்டினச் சக்கரவாளக் கோட்டத்தருகிருந்த உலகவறவியெனும் அம்பலம் புக்கு உண்ணவந்தோர் பசியையெல்லாம் நீக்கிக்கொண்டிருந்தனள். இவள் அங்கிருந்ததைக் கேள்வியுற்ற உதயகுமாரன் இவள்மீது மாறுகாதலுடையவனாய் மறுபடியும் இவளைக்கிட்ட இவள் காயசண்டிகைபோல் வேற்றுருவெடுத்து சம்பாபதியின் கோவிலினுள் புகுந்தனள். பின்னரும் அவ்வுருவுடனேயே அவ்வூர்ச் சிறைக் கோட்டத்தை அரசனுதவியால் அறக்கோட்டமாக்கிப் பசிப்பிணி தீர்த்துக்கொண்டிருக்க உதயகுமாரன் காயசண்டிகையினுருவோடிருப்பவள் மணிமேகலையோவென ஐயுற்று அவளிடம் வர அவள் அவனுக்கு உலகின் அநித்திய நிலைமையைக் கூறிப் போதித்தனள். அச்சமயம் தன் மனைவியாகிய காயசண்டிகையைத் தேடிவந்த காஞ்சனன் காயசண்டி

கையுருவாயிருந்த மணிமேகலையையே தன் மனையாளாக நினைந்து அவள் உதயகுமாரனிடம் பேசியதிலிருந்து அவள் மனம் வேறுபட்டாளென நினைந்துகொண்டான். இப்படியிருக்க உதயகுமாரன் இரவில் மறுபடியும் மணிமேகலையைப் பார்க்க வர அச்சமயம் அங்கே காத்திருந்த காஞ்சனன் அவனை வாளால் வெட்டி வீழ்த்தினன். பழம் பிறப்பிற் றனது கணவனுயிருந்த உதயகுமாரன் இங்ஙனம் மாய்ந்ததுகண்ட மணிமேகலை துக்கித்து நின்றனள். அப்போது அங்கு நின்ற ஒரு தெய்வம் மணிமேகலைக்கு இனி நேரிடவிருக்கும் காரியங்களை யுரைத்தது. தன் மகன் அடாது செய்து கொலையுண்டானெனக் கேள்வியுற்ற வரசன் அவன் பிணத்தைப் புறங்காடடைவித்து மணிமேகலையையும் சிறைப்படுத்தினன். அரசன் மனைவியோ புத்திர சோகமுற்று மணிமேகலைக்கு நன்மை செய்பவள்போல அவளை இம்சிக்க நினைத்து மாயமருந்தூட்டியும் பல தந்திரங்கள் செய்தும் சித்தியடையாளாய் இறுதியில் மணிமேகலையின் உண்மை நிலையறிந்து அவளிடம் அன்புகூருவாளாயினள். பின்பு மணிமேகலை அங்கிருந்து சாவக நாடடைந்து அந்நாட்டையாண்டிருந்த ஆபுத்திரனோடு மணிபல்லவத்திற்கேகி அங்கே தீவதிலகையின்மூலமாய்க் காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டதையும் மாதவியும் சுதமதியும் அறவணவடிகளோடு வஞ்சிநகர் சென்றதையுமறிந்து ஆகாயமார்க்கமாக வஞ்சிநகர் சென்றுள். சென்றவள் கண்ணகி கோட்டத்துக்குப் போய் அவளைத் தரிசித்துக் கண்ணகியின்பழைய விருத்தாந்தங்களை யறிந்துகொண்டு அந்நகரிலிருந்த பல சமயக்கணக்கரிடம் அவரவர் மதக்கோட்பாடுகளைக் கேட்டறிந்து இறுதியில் புத்த சமயமே சிறந்ததென உட்கொண்டு வஞ்சிநகரில் தவஞ்செய்துகொண்டிருந்த கோவலன் தந்தை மாசாத்துவனை வணங்கி அவன்மூலமாய் அறவணவடிகள், சுதமதி, மாதவி முதலியோர் காஞ்சிசென்ற விவரத்தையும், காஞ்சியின் பஞ்சக்கொடுமையையும் கேள்வியுற்று அங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சி நகரமெய்தி, அங்கே கோவில், பொய்கை முதலியன அரசனுற் கட்டுவிக்கச்செய்து மணிமேகலா தெய்வத்

திற்கு நித்திய பூஜை செய்வதற்கு ஒழுங்குசெய்து தானும் அங்கேயே யமர்ந்து மாந்தர் பசியைப் போக்கிக் கொண்டிருந்தனள். நாடு நல்மழை பெய்து செழிப் படைந்தபோது அறவணவடிகள் மாதவி சுதமதியரோ டும் அங்கு வந்து சேர அவரை வணங்கி நின்றனள். அவர் அவளுக்குத் தருமோபதேசஞ்செய்ய மணிமேகலை பிறவித்துன்பம் ஒழித்தற்பொருட்டு அவ்விடத்திலேயே நோற்றுக்கொண்டிருந்தாள்.

இத்துடன் மணிமேகலை கதை முற்றும்.

புத்தமார்க்கக் கோட்பாடுகளையும் அதன் பல விவ ரங்களையுமறிய விரும்புவோர்க்கு மணிமேகலை யாராய்ச்சி இன்றியமையாதது. புத்த சரித்திரம், பௌத்த சங் கம், பௌத்த தருமம் எனும் பௌத்தமத மும்மணிகளை மகாமகோபாத்தியாயர் ஸ்ரீ சாமிநாதய்யரவர்கள் இந் நூலுடன் வெளியிட்டிருக்கின்றனர்.

மணிமேகலை பதிகச் செய்யுள் நீங்கலாக விழாவறை காதை முதல் பவத்திற மறுகெனப் பாவைநோற்ற காதை ஈறாக முப்பது காதைகளையுடையது. சொன்ன யம், பொருணயம் செறிந்து விளங்குவது. அக்கால சரித் திர வுணர்ச்சிக்கு இன்றியமையாதது. எண்ணிறந்த நீதிகளையும் ஒழுக்கங்களையுங் கூறுவது. அக்கால வழக்க பழக்கங்கள் பலவற்றை இடையிடையே கூறிப்போவது.

இறந்தவர்களை கூமிக்குமிடத்தில் அதை அறிவிக் கும் கோட்டங்கள்[1] கட்டுமவழக்கமும், இறந்தவரைச் சுடுதலும், எறிந்துவிடுதலும், குழியில் புதைத்தலும், அறை கட்டி உள் வைத்து மூடுதலும், தாழியிற் கவித் தலுமாகிய வழக்கங்களும் அக்காலத்திலிருந்தனவென் பது அடியில் வரும் அடிகளால் விளங்கும்:—

> 'அருந்தவர்க் காயினு மரசர்க் காயினு
> மொருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினு
> நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
> யிறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
> குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
> சுடுமண் ணேங்கிய நெடு நிலைக் கோட்டம்'.....6:54–59

[1] கல்லறைகள்

'சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்'...6: 66-67.

அரசன் தன் நீதிகெட்டு அரசாளுவனேல் தேசம் பாழ்படுமென்னும் நீதியை மணிமேக்லா தெய்வம் உதய குமாரனுக்குக் கூறுவது:

'மன்னவன் மகனே,
கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியுங்
கோனிலை திரிந்திடின் மாரிவறங் கூரு
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணுள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின் றகும்'.....7: 7-12.

பசிக்கொடுமை நீக்குவோர் பெருமை:—

'ஆற்ற மாக்களரும்பசி கூர்வோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே.'11:93-96.

சாவக (Java) நாட்டுக்கும் பண்டைத் தமிழ்நாட்டிற் கும் போக்குவரவுண்டென்பது:—

'மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சாவக நன்னாட்டுத் தண்பெயன் மறுத்தலி
னானுயிர் மடிந்த தூரவோ யென்றலு
மமர்கோ ளுணையி னருந்துவோர்ப் பெறுது
குமரி மூத்தவென் பாத்திர மேந்தி
யங்கந் நாட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாக்களொடு மகிழ்வுட னேறிக்
கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்
மாலிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்
தங்கிய தொருநாட் டானுங் கிழிந்தன
னிழிந்தோ னேறின னென்றிதை யெடுத்து
வழங்குநீர் வங்கம் வல்லிருட் போதலும்'...14:73-84.

மணிமேகலை வஞ்சி நகரம் சென்ற காலத்து அங்கு ஆண்டிருந்தவன் சேரன் செங்குட்டுவனேயென்பது

அவன் கனகவிசயர் முதலியவரை வென்றவன் எனக் கூறப்படும் பல விவரங்களால் இனிது விளங்கும்.

'கங்கையம் பேர்யாற் றடைகரைத் தங்கி
வங்க நாவியி னதன்வடக் கிழிந்து
கனக விசயர் முதற்பல வேந்த
ரீனவரை வென்றவ ரம்பொன் முடிமிசைச்
சிமைய மோங்கிய விமைய மால்வரைத்
தெய்வக் கல்லுந் தன்றிரு முடிமிசைச்
செய்பொன் வாகையுஞ் சேர்த்திய சேரன்'...26: 84-90.

மாவண்கிள்ளியின் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டதென்பது பத்தொன்பதாவது இருபத்தாறாவது காதைகளில் கூறப்பட்ட விவரங்களால் அறியலாகும்.

---

8. அத்தியாயம்

கடைச்சங்க நூல்கள்

பதினெண்கீழ்க்கணக்கு

கடைச்சங்கத்தில் அரங்கேறிய நூல்களுள் பதினென் கீழ்க்கணக்குமடங்குமென்பர்.

‘ அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம் பதீரு
மிருத்துடன் றொடுப்பன மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையும் மவ்வகை யெண்பெறி
னெள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே.’

பன்னிரு பாட்டியல், 344.

‘ அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காகும்.’

பன்னிரு பாட்டியல், 346

முதலிய பன்னிரு பாட்டியற் சூத்திரங்களால் கீழ்க்கணக்கென்பது ஐம்பதிற் குறையாதும் ஐந்நூற்றின் மேற்படாதும் வெண்பாக்களினுலாகிய அறம்பொருளின்பங்களைப் பற்றிக் கூறும் நூல்களுக்கு வழங்கும் பெயரென வறியலாம். எனினும் ஐம்பதிற் சிறிது குறைந்து நாற்பது செய்யுட்களையுடைய நூல்களிற் சில வற்றையும் ஐந்நூற்றின் ஏறிய செய்யுட்களையுடைய நூலையும் முன்னோர் கீழ்க்கணக்கினுள் அடக்கிக் கூறியுள்ளார்.

கடைச்சங்கத்தில் அரங்கேறியனவாகப் பாராட்டப்படும் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டென்பது.

'நாலடி நான்மணி நானூற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க்கணக்கு'

எனும் வெண்பாவால் தெரியவருகின்றது. இவ்வெண் பாவின் ஈற்றடி யிரண்டும் பாடபேதமாய்ப் பலநூல்க ளில் பலவாறு வழங்குகின்றன.

'இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே
நன்னிலைய தாகுங் கணக்கு' எனவும்
'இன்னிலை சொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க்கணக்கு'

எனவும் வழங்குவதுமுண்டு. இச் செய்யுட்களில் கூறப்பட்ட பதினெட்டு நூல்களுள் கீழ்க்கணக்கு நூல்க ளென எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டன பன்னி ரண்டே. அவையாவன:—

1. நாலடியார்.
2. நான்மணிக்கடிகை.
3. இனியவை நாற்பது.
4. இன்ன நாற்பது.
5. கார் நாற்பது.
6. களவழி நாற்பது.
7. திரிகடுகம்.
8. ஆசாரக்கோவை.
9. பழமொழி.
10. சிறுபஞ்ச மூலம்.
11. முதுமொழிக்காஞ்சி.
12. ஏலாதி என்பனவே.

எஞ்சிய ஆறு நூல்களையும்பற்றிப் பல்வேறு அபிப் பிராயங்கள் உள்ளன. மேற்காட்டிய வெண்பாவில் அபிப்பிராய பேதங்கொள்ள இடங்கொடுக்கும் சொற் கள் 'ஐந்திணை முப்பால்.' 'இன்னிலைசொல்.' 'கைந்நிலை' என்பனவாம்.

கி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தாம் வெளி யிட்ட கலித்தொகைப் பதிப்புரையில் 'ஐந்திணை என்பது மாறன் பொறையனாரது ஐந்திணை ஐம்பதைக் குறிக்கு மென்றும், 'முப்பால் என்பது திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, பஞ்சமூலமாதிய போன்று நாலடி வெண்பாவானியன்று அக்காலத்திலே வழங்கிய மூன்று சிறு தரும நூல்களையென்றும், இன்னிலை சொல் லென்றது இன்னிலை, இன்சொல் என்னும் பெயரிய

இரண்டு நூல்களின் பெயரேயென்றும் உத்தேசிக்கின்றேன்' என்றும் கூறியிருக்கின்றனர்.

இவர்கள் அபிப்பிராயப்படி கீழ்க்கணக்கு நூல்கள் மேற்கூறிய பன்னிரண்டும்.

13. ஐந்திணை. 17. இன்னிலை.

14, 15 16 முன்று சிறு தரும நூல்கள். 18. இன்கோல் எனும் ஆறுமாம்.

மற்றொரு சாரார் 'ஐந்திணை' என்பது நால் நாற்பது என்பதுபோல் திணைப்பொருளைக் குறிக்கும் ஐந்து நூல்க ளென்றும் முப்பாலென்பது திருக்குறளேயென்றும் தக்க காரணங்காட்டிக் கூறுவார்.[1]

இவர்கள் அபிப்பிராயப்படி கீழ்க்கணக்கு நூல்கள் முதற்கூறிய பன்னிரண்டும்,

13. ஐந்திணை ஐம்பது.
14. திணைமாலை நூற்றைம்பது.
15. திணைமொழி ஐம்பது.
16. ஐந்திணை எழுபது.
17. திணைமாலை.
18. திருக்குறள் எனும் ஆறுமாம்.

மற்றையோர் 'நானூற்பதைந்திணை' எனும் தொட ரில் நாலெனும் பதம் நாற்பதோடு மாத்திரமல்ல, ஐந் திணையோடும் செல்லுமெனப் பொருள் கொள்வார். நான்கு ஐந்திணையாவன :

13. ஐந்திணை ஐம்பது.
14. ஐந்திணை எழுபது.
15. திணைமாலை நூற்றைம்பது.
16. திணைமொழி ஐம்பது.

எஞ்சிய இருநூல்களும் 17. முப்பாலாகிய திருக்குறள்.
18. இன்னிலை.

இவ்வபிப்பிராயமே தற்காலம் பெரும்பாலாரால் கொள்ளப்படுவது.

மேற்காட்டியுள்ள பதினெண் கீழ்க்கணக்கு நூல்க ளும் கடைச்சங்க காலத்திலேயே எழுதப்பட்டனவல்ல.

1 செந்தமிழ், 15: 5.

அவற்றிற் சில பன்னூருண்டுகட்குப் பின்னர் உண்டாயின. நாலடியார் எழுதப்பட்ட காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டாகும். களவழி நாற்பதின் காலமும் வெகு நாட் பிற்பட்டதே. இங்ஙனமிருப்பவும் கடைச்சங்க கால நூற்களே ஆராயும் இவ்வத்தியாயத்தில் இந்நூல்களோப் புகுத்தியது பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கடைச்சங்க காலத்திலுண்டாயினவெனும் உலகு வழக்குப் பற்றியும் பதினெண் கீழ்க்கணக்கினுள் குறிக்கப்பட்ட நூல்களிற் பெரும்பாலானவை கடைச்சங்க காலத்திற்றானே எழுதப்பட்ட காரணம் பற்றியுமேயாம்.

1. நாலடியார். இந்நூல் ஜைனமுனிவராற் பாடப்பட்டது. கடவுள் வாழ்த்து நீங்கலாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாவாகப் பாடிய நானூறு வெண்பாக்களே யுடையது. இது கிட்டத்தட்ட கி. பி. எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதென்பது பெரும்பாலார் கொள்கை. நாலடியார் 200, 296 வெண்பாக்களில் பெருமுத்தரையர் என ஒருவர் குறிக்கப்பட்டிருக்கின்றனர். பெருமுத்தரையர் காலம் எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலாகும்.[1] நாலடி நானூறு செய்யுட்களையும் பால் அதிகாரங்களையும் வகுத்து அதற்கு முதன் முதன் உரையும் எழுதினவர் பதுமனாரென்பவர்.

நாலடியார் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுளது. இவற்றுள் அறத்துப்பால் 'செல்வ நிலையாமை' முதல் 'தீவினையச்சம்' ஈறுகப்பதின்மூன்று அதிகாரங்களையுடையது. பொருட்பால் 'கல்வி' முதல் 'கற்புடை மகளிர்' ஈறுக இருபத்தாறு அதிகாரங்களையுடையது. காமத்துப்பால் 'காமநுதலியல்' எனும் ஒரே அதிகாரத்தையுடையது. ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பப்பத்து வெண்பா வீதம் மொத்தம் நானூறு வெண்பாக்களையுடையது. இந்நானூறு வெண்பாக்களும் ஒருவரால்லாக்கப்பட்டனவல்ல வாதலின் ஒருமுறை கூறப்பட்டதே மறுமுறையும் கூறப்படுவதுபோல் இடையிடையே காணப்படுவதுண்டு.

[1] செந்தமிழ், 10 : 4.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' எனும் வழக்கச் சொல்லினாலும் நாலடியாரும் குறளும் கூறுவோர் கூற்றுகளுக்கெல்லாம் ஆதாரமாய் வலியுறுத்தத் தக்கனவென்பது போதருதலால் நாலடியார் உலகில் எத்துணைப் பெருமதிப்பை யடைந்துளதென்பது தெரியவரும்.

இந்நூலில் காணப்படும் வெண்பாக்கள் மிகவும் அருமையானவை.

'நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்—ஓர்த்ததனை
உள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தாண் முட்டுமாங் கீழ்.' (7: 4.)

'அற்பர் செய்யும் நிந்தனையைக் குறித்துக் கோபிக்க மாட்டார் பெரியோர். கீழ்மக்களோ தம்மை வெகுமேலாக நினைத்திருப்பதனால் நிந்தனையைக் கேட்டமாத்திரத்தில் நம்மை இப்படிச் சொல்லலாமாவென்று மனம் பொறுமல் பலருக்குஞ் சொல்லி நிமிஷத்துக்கு நிமிஷம் கோபம் விஞ்சுவதனால் துள்ளித் தூணில் முட்டிக்கொள்வார்கள்' என்றவாறு.

'சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொல்—எக்காலும்
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
இந்திரனு வெண்ணி விடும்.' (35: 5.)

'மேலோர் எவ்வளவு செல்வத்திலும் வரம்பு கடந்து நடப்பதில்லை. கீழோரோ இருக்கிற தாழ்ந்த நிலைக்கு மேல் கிஞ்சித்துச் செல்வம்வந்தால் தம்மை மறந்து துர்மார்க்கஞ் செய்வார்கள்' என்றவாறு.

'அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மை யெஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார் வாய்ச்சொல்.' (18: 2.)

'எப்போதும் தரும வழிகளை யறிக; யமனை அஞ்சுக; பிறர் கூறும் கடுஞ்சொற்களைப் பொறுத்துக்கொள்க; வஞ்சனையை வெறுக்க; தீயார் சிநேகத்தைக் கைவிடுக; பெரியார் சொற்களைப் பெறுக.

2. நான்மணிக்கடிகை. இதனை எழுதினார் விளம்பி நாகனார். தமிழ்நாட்டுப் பழங்குடிகளுள் நாகர் வகுப்பினரைச் சேர்ந்தவர். ஒவ்வொரு வெண்பாவிலும் நன்னூன்கு பொருள் பொதிந்து பாடப்பட்ட நூற்றொரு வெண்பாக்களையுடையது. இவற்றுள் முதலிரண்டும் திருமால் சம்பந்தமான கடவுள் வணக்கம். இந்நூலில் உலகியற்கைகள் ஆங்காங்கே விளக்கி எவருக்கும் நன்கு விளங்குமாறு கூறப்பட்டுள்ளன. அன்றியும் மந்திரம் (12); அந்தணர் (34, 86, 90); ஊனுண்ணாமை (39, 60); உவாத்தி (44); நோய், வைத்தியன் (51, 76); குளம், குளத்தின் நீர்க்கால் (72, 82, 101) முதலியவற்றைப் பற்றி ஆங்காங்கே கூறப்பட்டிருக்கிறது.

3. இனியது நாற்பது. இதனை எழுதிய ஆசிரியர் மதுரைத்தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்.

இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட நாற்பத்தொரு வெண்பாக்களையுடையது. ஒவ்வோர் செய்யுளிலும் இனிய காரியங்கள் மூன்று பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நாலு இனிய காரியங்களைக் கூறும் வெண்பாக்களும் சிற்சில. இனியவை என இதிற் காட்டப்பட்டுள்ள காரியங்கள் நூற்றிருபத்தாறும்:—

இரந்துண்டாயினும் கற்றல் இனிது (2), கடன் கொண்டு உண்டு வாழாமை இனிது (11), நட்டாரைப் புறங்கூறாமல் வாழ்தல் இனிது (20), வருவா யறிந்து வழங்கல் இனிது (23), உயர்வுள்ளி யூக்கம் பிறத்தல் இனிது (30) முதலியன மிகவும் அரிய போதனைகளாம்.

4. இன்ன நாற்பது. இதன் நூலாசிரியர் கபிலர். இவர் வரலாறு முன்னரே கூறப்பட்டது.

இந்நூல் கடவுள் வாழ்த்துள்பட நாற்பத்தொரு வெண்பாக்களையுடையது. ஒவ்வொரு செய்யுளிலும் இனிமையில்லாதனவாய்த் துன்பந் தருவனவாய நான்கு காரியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இதிற் கூறப்பட்டுள்ள துன்பந்தரும் காரியங்கள் நூற்று அறுபத்து நான்கு.

மாற்றமறியாதுரை துன்பம் (8), உடம்பாடிலாத மனைவி தோளின்ஞ, இடனில் சிறியாரோ டியாத்த நட்

பின்னு, கடனுடையார் காணப்புகல் இன்னு (12), பெற்ற தாயைப் பாதுகாவாது விடல் துன்பந்தரும் (18), மூத்த விடத்துப் பிணியின்னு (22), தீமை செய்கின்றவர் அருகில் குடியிருத்தல் துன்பந்தரும் (25), பெரியாரோடு கொண்ட சிநேகத்தையிழத்தல் துன்பந்தரும் (27), பெரிய நகரிற் பொருளின்றிக் குடியிருத்தல் மனத் துன்பம்மாம் (37), சிறியவர்மீது கோபங்கொள்ளுதல் துன்பந்தரும் (38) முதலியன அருமையானவை.

5. கார் நாற்பது. ஆசிரியர் மதுரைக் கண்ணங்கூத்தனார். இந்நூல் நாற்பது வெண்பாக்களாலாயது. கார் காலத்துத் திரும்பி வருவதாகச் சொல்லி வினைவயிற் சென்ற தலைவன் திரும்புங்காலத்தை எதிர்பார்த்திருந்த தலைவி கார்காலம் வந்தவுடன் அவன் வரவை எதிர் நோக்கலும், தோழி அவளை ஆற்றுவித்தலும், வினை முடித்த தலைவன் தலைவியை நினைந்து கூறலும், பாகனை நுரைத்தலுமாகிய பல அகப்பொருட்டுறைகள் நிறைந்தது. கார்காலத்தின் இயற்கை வனப்புகள் பல ஆங்காங்கே அழகுபெற விரிக்கப்பட்டுள்ளன.

6. களவழி நாற்பது. இயற்றிய ஆசிரியர் பொய்கையார். இப்பொய்கையார் வைஷ்ணவ ஆழ்வார்களிலொருவராகிய பொய்கையாழ்வாரே எனச் சிலர் கூறுவர். எனினும் இப்பொய்கையார் வேறே, பொய்கையாழ்வார் வேறே என்பதே துணியக் கிடந்தது. இந்நூல் எழுதப்பட்ட காலம் கி. பி. ஆறும் நூற்றாண்டென ஊகிக்க இடமுண்டு.

சேரமான் கணைக்காலிரும்பொறையும் சோழன் செங்கணானும் கழுமல மெனுமிடத்தில் பொருதவிடத்துச் சேரமான் தோல்வியடைய அவனைச் செங்கணான் குடவாயிற் கோட்டத்துச் சிறை வைத்தானுக்குச் சேரமானின் உயிர் நண்பராகிய பொய்கையார் சோழன் செங்கணானின் வெற்றியைப்புகழ்ந்து இக்களவழி நாற்பதைப் பாடிப் பிரசங்கித்துத் தம் நண்பர் சேரமானைச் சிறைமீட்டனர்.

இதனிடை நால்வகைச் சேனைகளின் போர்த்திறமும், போரின் கோரமும், தோற்றமும் வாசிப்போர் துணுக்குறும்படி கூறப்பட்டுள்ளன.

'இணரிய ஞாட்பினு ளேற்றெழுந்த மைந்தர்
சுடரிலங் கெஃக மெறியச்சோர்ந் துக்க
குடர்கொண்டு வாங்குங் குறுநரி கந்திற்
றொடரொடு கோணாய்ப் புரையுமடர் பைம்பூட்
சேய்பொரு தட்ட களத்து.' (34.)

'செங்கட்சோழன் போர்செய்து கொன்ற போர்க் களத்தில் சரிந்து சிந்திய வீரர்களது குடர்களைக் கௌவிக்கொண்டு இழுக்கும் குறுநரிகள் கட்டுத் தறியில் கட்டப்பட்ட சங்கிலியோடு நின்ற கோணாய்களை யொக்கும்.'

7. ஐந்திணை ஐம்பது. நூலாசிரியர் மாறன் பொறையனார். இது அகப்பொருளுக்குரிய ஐந்திணைகளாகிய முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல்கட்குரிய இருத்தல், கூடல், ஊடல், பிரிதல், இரங்கலாய ஐந்து ஒழுக்கங்களையும் முறையே பப்பத்து வெண்பாக்களால் கூறும் ஐம்பது வெண்பாக்களை யுடையது.

இதில் ஆயர் குழலூதி நிரைமேய்த்தல் (7), கவலைக் குறியாகக் கவுள்மிசைக் கையூன்றல் (10), மகள் நோய்க்குத் தாய் வேலனைத் தந்து மறியறுத்து உதிரத்தைத் தூவி வெறியாடுதல் (20), போரின்கட் பட்ட வீரர் பெயர் பொறித்த கல்நட்டல் (35), முதலிய பலவகைப் பழக்கங்கள் கூறப்பட்டுள்ளன. 'கொல்லர் தெருவில் ஊசிவிற்றல்' எனும் பழமொழி 21 செய்யுளில் வழங்கப் பட்டிருக்கிறது.

இதில் அழகிய பாடல்கள் பல உள்ளன.

'சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி.' (38.)

'சுனையின்கண் உள்ள சிறிய நீரைப் பிணைக்கு உண்ண நிரம்பாது என்று எண்ணிப் பிணைமான் இனிதாக உண்ண வேண்டிக், கலையாகிய மா தனது கள்ளத்தினாலே பொய்யே உறுஞ்சும் சுரமென்று சொல்லுவர், நங்காதலர் தம் அகத்தினுற் போயின நெறி' என்ற வாறு.

'கொண்கன் பிரிந்த குளிர்பூம் பொழிலேக்கி
யுண்கண் சிவப்ப வழுதே ஞெளிமுகங்
கண்டன்னே யெவ்வம்யா தென்னக் கடல்வந்தென்
வண்டல் சிதைத்ததென் றேன்.' (44.)

'கணவன் பிரிந்த பூம்பொழிலே நோக்கிக் கண் சிவப்ப அழுத என்னுடைய முகத்தைக் கண்டு அன்னை நினக்கு வந்த துன்பம் யாது என்னைக் கடல்வந்து என்னுடைய விளையாட்டுச் சிற்றில்லைச் சிதைத்தது என்று சொன்னேன் என்றவாறு.'

8. திணைமொழியைம்பது. நூலாசிரியர் சாத்தந்தையார் மகனார் கணஞ்சேந்தனார்.

மேற்கூறிய ஐந்திணைக்கும் முறையே பப்பத்து வெண்பாக்களாகப் பாடிய ஐம்பது வெண்பாக்களை யுடையது.

9. ஐந்திணையெழுபது. நூலாசிரியர் மூவாதியார்.

அகப்பொருள் ஐந்திணைக்கும் முறையே பதினொரு பதினொரு வெண்பாக்களாகப் பாடப்பட்ட எழுபது வெண்பாக்களையுடையது.

10. திணைமாலை நூற்றைம்பது. நூலாசிரியர் கணிமேதாவியார். நூலாசிரியர் பெயரானே அவர் மிகச் சிறந்த புலவர் என்பது பெறப்படும்.

அகப்பொருள், குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் ஆய ஐந்திணைக்கும் முறையே முப்பத்தொன்று, முப்பத்தொன்று, முப்பது, முப்பத்தொன்று, முப்பது ஆக மொத்தம் நூற்றைம்பத்து மூன்று வெண்பாக்களடங்கியது.

பல நிலங்களின் இயற்கை அழுகுகள் செவ்வனே வருணிக்கப்பட்டுள்ளன.

'பொன்வாளாற் காடில் கருவரை போர்த்தாலு
மென்வாளா வென்றி யிலங்கெயிற்று—மென்வாள்போல்
வாளிழந்த கண்டோள் வனப்பிழந்த மெல்விரலு
நாளிழந்த வெண்மிக்கு நைந்து.' (99.)

வெயிலால் கரிந்து வாடிய மலைச் சரிவுகள் மலரிதழ்களால் மூடப்பட்டாலும் அதனால் பயனென்ன? நீயோ

வித்தினைப்பருவமன் றென்கின்றாய், என் மேனியும் கண்களும் ஒளியிழந்தன. நாட்களே யெண்ணி என் விரல்களும் தேய்ந்தன என்றவாறு.

11. முப்பால். இதனைத் திருக்குறளென்பர். இதன் விவரம் முன்னரே கூறப்பட்டது.

12. திரிகடுகம். இதன் நூலாசிரியர் நல்லாதனார்.

தற்சிறப்புப் பாயிரமாகிய கடவுள் வணக்கம் நீங்கிய நூறு வெண்பாக்களை யுடையது. கடவுள் வணக்கம் திருமாலைக் குறித்தது. திரிகடுகமென்பது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மனிதருடலுக்கு இன்றியமையாத மூன்று மருந்துகளைக் குறிக்கின்ற வைத்திய நூல்மொழி. இந்நூலாசிரியரே தமது முதல் வெண்பா ஈற்றடியில் 'திரிகடுகம் போலு மருந்து' எனக் குறித்திருக்கின்றார்.

ஒவ்வொரு வெண்பாவிலும் மனிதருடைய இம்மை, மறுமை வாழ்வுக்கு இன்றியமையாத மும்மூன்று காரியங்களைக் கூறிச் செல்கின்றார். வெண்பாக்களின் மூன்றாமடி ஈற்றுச் சீர் 'இம்மூன்றும்,' 'இம்மூவர்' எனத் தொகையைக் குறிப்பன.

13. ஆசாரக்கோவை. நூலாசிரியர் பெருவாயின் முள்ளியார். கடவுள் வாழ்த்து நீங்கிய நூறு வெண்பாக்களை யுடையது. இந்நூலில் காணப்படும் வெண்பாக்கள் சிந்தியல், நேரிசை, இன்னிசை, பஃறொடை முதலிய பலவகைப்பட்டன.

இதன் கடவுள் வணக்கம் சிவபிரானைக் குறித்தது. இந்நூல் வடமொழியிலுள்ள இத்தகையதோர் நூலின் மொழிபெயர்ப்பென்பர். இதன்கண் ஒவ்வொருவரும் தம்மாட்டும் பிறர்மாட்டும் நடந்துகொள்ளவேண்டிய கிரமங்களைப் பற்றிய பல ஆசாரங்கள் மிகவும் விவரமாய் உரைக்கப்பட்டுள்ளன. சுத்தம், ஒழுக்கம், மரியாதை முதலியன சம்பந்தமான தமிழ்நாட்டு ஆசாரங்களைக் கைக்கொண்டு நடக்க விரும்புவோர் இந்நூலை யோதியுணர்க.

இந்நூலிற் கூறப்பட்டுள்ள ஆசாரங்களெலாம் தற்கால ஒழுக்கங்களுக்கு முற்றும் ஒத்து வருவனவல்ல. கடியத் தக்கனவும் சிலவே.

காலை மாலை கடவுள் வணக்கம்:—

'நாளந்தி கோறின்று கண்கழீஇத் தெய்வத்தைத்
தானறியு மாற்றால் தொழுதெழுக. அல்கந்தி
நின்று தொழுதல் பழி.' (9)

காலையில் கோலால் பல்துடைத்துக் கண் கழுவித் தெய்வம் வணங்கிக் கருமம் தொடங்குக. மாலைப்பொழுதில் தெய்வத்தை நின்று தொழாமல் இருந்து தொழுக.

போஜனக் கிரமம்:—

'நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலஞ்செய்
துண்டாரே உண்டா ரெனப்படுவார், அல்லாதார்
உண்டார்போல் வாய்பூசிச் செல்வர்.' (18.)

சயனக் கிரமம்:—

'கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வந் தொழுது,
வடக்கொடு கோணம் தலைசெய்யார், மீக்கோள்
உடல்கொடுத்துச் சேர்தல் வழி.' (30.)

மீக்கோள் = போர்வை.

விருந்தினர்க்குச் செய்யும் உபசாரம்:—

'முறுவல் இனிதுரை கானீர் மனைபாய்
கிடக்கையோ டிவ்வைந்தும் என்ப தலைச்சென்றார்க்
கூணெடு செய்யும் சிறப்பு.' (54.)

புன்சிரிப்பு, இனியபேச்சு, கால்கழுவ நீர், இருக்க மனை, கிடக்கப் பாய், தரிக்க இடம் இவை விருந்தினர்க்குச் செய்யும் சிறப்புக்கள்.

பெரியாரிடமும் ஆசிரியரிடமும் ஒழுகும் முறைமை:—

'நகையொடு கொட்டாவி காறிப்புத் தும்மல்
இவையும் பெரியார்முன் செய்யாரே, செய்யின்
அசையாது நிற்கும் பழி.' (73.)
'நின்றக்கால் நிற்க, அடக்கத்தால் : என்றும்,
இருந்தக்கால் ஏவாமை ஏகார் : பெருந்தக்கார்,
சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக : மீட்டும்
வினவற்க சொல்லொழிந்தக் கால்.' (74.)

14. பழமொழி. இதை இயற்றியவர் முன்றுறையரையர் எனும் அரசர். இது கடவுள் வணக்கம் உட்பட நானூறு வெண்பாக்களை யுடையது. கடவுள் வணக்கம் அருகனைக் குறித்தது. ஒவ்வொரு வெண்பாவிலும் அவ்வப்பழமொழியால் விளங்கும் நீதி ஒழுக்கம் முதலியன கூறப்பட்டுள்ளது. கடைச்சங்க காலத்திலேயே தமிழ் மக்கள் அடைந்திருந்த தேர்ச்சிக்கு இந்நூலும் ஒரு ஆதாரமாகும். பழைய காலச்சரிதங்கள் ஆராய்வார்க்கு இப்பழமொழிகள் மிகவும் உபயோகமானவை. இந்நூலில் பூர்வநாட் சரித விவரங்கள் சில சில இடையிடையே காணலாம்.

இவ்வெண்பாக்களைப் பெரும் பிரிவுகளாகவும் அவற்றின் உட்பிரிவுகளாகவும் பாகுபாடு செய்து செல்வக்கேசவராய முதலியாரவர்கள் வெளியிட்டிருக்கின்றனர். இந்நூலில் வழங்கும் பழமொழிகள் பல இன்றளவும் தமிழுலகில் வழக்கிலிருந்து வருகின்றன.

15. சிறுபஞ்சமூலம். இதனை இயற்றியவர் காரியாசான். இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்கலாக நூற்று நாலு வெண்பாக்களை யுடையது. ஒவ்வொரு வெண்பாவிலும் மானிட வாழ்க்கைக் குறுதியாய ஐவைந்து பொருட்கள் கூறப்பட்டுள்ளன.

அறிவுடையார் ஒழுக்கம்:—

'நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்
தொல்லை யுயிர்க்கூற்றங் கோலாகி—யொல்லுமெனின்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றுக மானத்தா
ஞயி னழித லறிவு.' (57.)

'பிறர் செய்த நன்மையை வெளிப்படுத்தித் தீமையை மறந்து, பிறவுயிர்களுக் கிடையூறு நேரிட்டால் அவ்விடை யூற்றை யொழித்து ஊனறுகோலாகி, பிறர் பொருளை வஞ்சித்தலொழிந்து, மானத்தின் பொருட்டுச் சாதலே நன்மையென்றொருவன் ஆராய்வானுயின், அதுவே அவனுக்கறிவாவது என்பதாம்.'

16. இன்னிலை. இதனை இயற்றியவர் பொய்கையார். இந்நூலைத் தொகுத்தவர் 'மதுரையாசிரியர்' எனும் சிறப்புப் பெயர் பெற்ற மாறனர் அல்லது கல்லந்துவனராகவிருக்கலாம். கடவுள் வாழ்த்து பாரதம் பாடிய பெருந்தேவனர் பாடியது. அறப்பால் பத்தும், பொருட்பால் ஒன்பதும், இன்பப்பால் பன்னிரண்டும், வீட்டிலக்கப்பால் பூதினான்கும் ஆகிய நாற்பத்தைந்து வெண்பாக்களையுடையது.

'பொருள் விழைவார் பாற்ரு ருடனல னம்மை
யருள்விழைவா ரஃதே முழுவெவ்வம் பாய்நீ
லிருளிழையார் வீழ்வார்மேற் பாலாக்கா ராமா
றருளிழையார் தாமு மது.' (2)

கருத்து:—சரீர சுகத்தை விரும்புவோர் இவ்வுலகப் பொருளையும் இறைவனது அருளையும் அடையார். சிற்றின்பத்தை விரும்புவோரும் சிவகாருண்ணியத்தைச் செய்யாதாரும் பேரின்பத்தை அடையார்.

'திரைத்த விரிக்கிற் றிரைப்பிற வாய்போ
லுரைத்த வுரையதனைக் கேட்டு—முரைத்த
பயன்றவா செய்வார் சிலரேதந் நெஞ்சத்
தியன்றவா செய்வார் பலர்.' (5)

கருத்து:—இவ்வுலகத்தின்கண் ஆன்றோர் கூறிய அறவுரைப்படி நடக்கின்ற மாந்தர் சிலர். தமது மனம் போன போக்கில் நடக்கின்றவர் பலர்.

'ஒத்த வுரிமையளா வூட்டற் கினியளாக்
குற்ற மொருஉங் குணத்தளாக்—கற்றறிஞர்ப்
பேணுந் தகையளாக் கொண்கன் குறிப்பறிந்து
நாணுந் தகையாள் பெண்.' (32)

கருத்து:—வயது முதலியவற்றில் கணவனுக்கு ஒத்த உரிமையுடையவளும், இனிமையுடையவளும், குற்றமற்ற குணங்களுடையவளும், கற்றவரை யுபசரிக்கும் தன்மையுடையவளும், கணவனது நோக்கத்தை அறிந்து பணிந்து நடக்கும் குணமுடையவளுமான வளே இல்லறம் நடத்தத்தக்க பெண்ணாவாள்.

17. முதுமொழிக்காஞ்சி. நூலாசிரியர் மதுரை கூடலூர் கிழார். இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர் போலும். வேளாள வருணத்தினர். புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரென சிறப்பித்துக் கூறப்பெற்றவர்.

இந்நூல் குறட்டாழிசையாகிய நூறு அடிகளையுடையது. இந்நூறும் 'சிறந்த பத்து' முதல் 'தண்டாப்பத்து' ஈறாகப் பத்துப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

'நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.' (1 : 6.)

பொருள்.—அழகிலும் நாணம் சிறந்தது.

'கற்ற துடைமை காட்சியினறிப.' (2 : 4.)

பொருள்.—ஒருவன் கல்வியை அவன் அறிவினால் அறியலாம்.

'நிறையைச் செய்யாக் குறைவீனே பழியார்.' (3 : 5.)

'கொண்டுகெண் மாறல் கொடுமையிற் றுவ்வாது. (4 : 7.)

பொருள்.—நிநேகம் செய்தபின் நிநேகிதனுக்குத் தாக்ஷணியம் காட்டாமை கொடியது.

'ஈரமில் லாதது கேளாட் பன்று.' (5 : 3)

பொருள்.—மனத்தின்கண் அன்பில்லாதது சுற்றமுமன்று நட்புமன்று.

'நசையிற் பெரியதோர் நல்குர வில்லை.' (6 : 7.)

பொருள்:—ஆசையின் மிக்க வறுமையில்லை.

'கால மறியாதோன் கையுறல்பொய்.' (7 : 4)

பொருள்.—காலமறிந்து முயற்சி செய்யாதவன் சித்தியடையான்.

'உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது.' (8 : 2.)

பொருள்.—கலகப் பிரியருக்குச் சண்டை எளிது.

'சொற்செல் லாவழிச் சொலவுநல் கூர்ந்தன்று.' (9: 7.)

பொருள்.—தன்சொல் செல்லாவிடத்துச் சொல்லிய சொல் வறுமையுறும்.

'இன்பம் வேண்டுவோன் துன்பந் தண்டான்.' (10: 7.)

பொருள்.—இன்பத்தை விரும்பிய ஒருவன் துன்பத்தைத் துன்பமென்று கொள்ளான்.

18. ஏலாதி. நூலாசிரியர் கணிமேதையார். இந் நூல் கடவுள் வாழ்த்து, சிறப்புப்பாயிரம் நீங்கிய எண் பத்தொரு வெண்பாக்களை யுடையது. இது இல்லறம் துறவறமாகிய இருவகை யறங்களுக்கும் சாதனமாகிய நூல்களின் பொருட்களை யாராய்ந்து ஞானமாகிய வழி யைக் காட்டவேண்டிச் செய்யப்பட்டதாகும்.

ஏலாதியெனும் சொல் திரிகடுகம் என்பதுபோன்ற மற்றுமோர் வைத்திய நூற் சொல்லாகும். வெவ்வேறான ஆறுவகை மருந்துகள் சேர்ந்தது ஏலாதி யெனப்படும். ஏலாதிச் சூரணமென்பது உடலுக்குறுதி பயக்குமோர் அருமருந்து.

இந்நூலில் ஒவ்வொரு வெண்பாவிலும் பெரும்பாலும் அவ்வாறு காரியங்கள் உரைக்கப்படும்.

> 'பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
> மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான்–எய்யுரையான்
> கூந்தன்மயி லன்னாய் குழீஇயவான் விண்ணோர்க்கு
> வேந்தனு மில்வுலகம் விட்டு.' (33.)

'மயில்போற் கூந்தலுடையவளே! பொய்சொல்லான், ஒருவரையும் இகழான், தனக்குத் தீமை செய்தவரை யும் புறத்தில் அவமதித்துக் கூறான், ஒருவர்க்கு நேர்ந்த இடுக்கண் ஒழிப்பதற்கு நடந்த வுண்மையைச் சொல் லான், தன்பாலுள்ள பொருட்களையும் வாய்விட்டுச் சொல்லான், தன் சிநேகிதனிடத்தும் தன் வறுமைத் துன்பத்தைச் சொல்லான், இத்தன்மைகள் பொருந்தப் பெற்றவன் இந்த உலகத்தை நீக்குங் காலத்துச் சுவர்க் கத்தில் கூடியுள்ள தேவர்கட்கு அரசனுகிய இந்திரனு வான்.'

இத்தகைய அரும்பொருள்கள் செறிந்த பாடல்கள் பல இந்நூலில் விரவிக் கிடக்கின்றன. அவை விரிவஞ்சி விடப்பட்டன.

சங்ககால இலக்கிய சரித முற்றும்.

பொருள் அட்டவணை

(எண்கள் பக்கத்தைக் குறிப்பன)

அகத்தியம் 24, 33, 54.
அகத்தியர் 24, 33.
அகநானூறு 57, 65, 127, 128, 136, 137.
அகப்பொருள் 39.
அகுஸ்துராயன் 6, 80.
அங்கவியல் 94.
அசரம் 41.
அசோக எழுத்து 19.
அசோக சக்கரவர்த்தி 82.
அடியார்க்கு நல்லார் 10,88,155.
அதிகமான் 71, 112, 133.
அந்தணர் 35, 41, 44, 45, 118.
அப்பர் சுவாமிகள் 60.
அப்பவாணிகர் 81.
அமைச்சர் 77.
அமைச்சர் தன்மை 119.
அம்போகியார் 142.
அம்மூவனார் 69, 142.
அரசர் 36, 41, 44, 45.
அரசியல் 94.
அரிசில்கிழார் 67, 106, 135.
அருகப்பள்ளி 82.
அருகன் 174.
அறத்துப்பால் 92.
அறவணவடிகள் 157, 159.
அக்ஷயபாத்திரம் 158.
ஆசாரக்கோவை 164, 172.
ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 67, 135.
ஆதன் 62.
ஆதிரை 158.
ஆத்திமாலை 111.
ஆந்திரம் 53.
ஆபுத்திரன் 158, 159.
ஆமூர் 76, 113.
ஆயர் 38, 146.
ஆய் 76, 112.
ஆரிடம் 40.
ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் 62, 63, 65.
ஆரிய பாஷை 15.
ஆரிய மதம் 82.
ஆரியமன்னர் 155.
ஆரியம் 15.
ஆரியர் 4, 5, 30, 34, 35, 42.
ஆவி 73.
ஆழிவடிம்பலம்பநின்ற பாண்டியன் 25, 30, 117.
இடைச்சங்கம் 9, 25.
இந்திரன் 52.
இமயமலை 29,31,83, 150, 151.
இரணியமுட்டம் 125.
இராகவய்யங்கார் மு. 19, 56,87.
இராக்கதம் 41.
இராமலிங்கம் செட்டியார் T. A. 108.
இராமாயணம் 5.
இருங்கோவேள் 70.
இலக்கண விளக்கம் 18.

இலங்கை 13, 61, 64, 155.
இல்லறம் 45.
இல்லறவியல் 92.
இல்லுறைதெய்வம் 121.
இளங்கோவடிகள் 9, 63, 87, 88, 156.
இளஞ்செட்சென்னி 111.
இளஞ்சேரலிரும்பொறை 67, 135.
இளந்திருமாறன் 54.
இளம்பூரணர் 8, 87.
இளவச்சிரக்கோ 107.
இறையனாரகப்பொருள் 9, 23, 29, 54, 56, 65, 66, 84, 128, 141.
இனியவைநாற்பது 164, 168.
இன்சொல் 165.
இன்னாநாற்பது 164, 168.
இன்னிலை 165, 174.
ஈழம் 79.
உக்கிரப்பெருவழுதி 54, 62, 65, 87, 90, 137.
உதயகுமாரன் 157, 158, 159, 161.
உதியன் சேரலாதன் (பெருஞ் சோற்று) 29, 74, 128.
உத்தரமதுரை 54.
உப்புவண்டிகள் 115.
உப்புவாணிகர் 115.
உப்புவிலைப்பார் 130.
உப்பூரிகிழான் 137.
உருத்திரங்கண்ணனார் 105, 107, 114, 123.
உருத்திரசன்மன் 137.
உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னி 106.
உரையாசிரியர் 87.
உலகவறவி 158.
உழுதுண்பார் 37.
உழுவித்துண்பார் 37, 38.
உறந்தை 112.
உறையூர் 75.
எட்டுத்தொகை 127.
எயிற்பட்டினம் 113.
எவ்வி 76.
எழினி 74.
எறிச்சலூர் மலாடனார் 91.
ஏலாதி 164, 177.
ஏறுமாநாடு 76, 112.
ஏறைக்கோன் 76.
ஏனாதி 37.
ஐங்குறுநூறு 54, 127, 136, 142.
ஐந்திணை 164, 165.
ஐந்திணை எழுபது 165, 171.
ஐந்திணை ஐம்பது 165, 170.
ஐந்திரவியாகரணம் 25, 27.
ஐம்பெருங்காப்பியங்கள் 158.
ஐம்பெருங்குழுவினர் 77.
ஐயன் ஆரிதன் 11.
ஐயோனியர் 7.
ஒல்லையூர் 132.
ஒல்லையூர்கிழான் 131.
ஒற்றர் 77.
ஒதலாந்தையார் 142.
ஓரம்போகியார் 68, 69.
ஓரி 76, 112.
ஓவியர்குடி 112.
ஔவையார் 11, 71.
கடாரம் 79.
கடுங்கோன் 24.
கடைச்சங்கம் 23, 54, 55, 56, 58, 61, 65, 85, 127, 163, 166
கணஞ்சேந்தனார் 171.
கணிமேதாவியார் 171.
கணிமேதையார் 177.
கண்ணகி 61, 63, 64, 148, 149, 151, 153, 155, 157, 159.

கண்ணங்கூத்தனார் 169.
கண்ணபிரான் 130.
கந்தழி 52, 82.
கபாடபுரம் 7, 9, 24, 25.
கபிலர் 67, 68, 69, 105, 106, 107, 122, 132, 135, 142, 143, 168.
கயவாகு (கஜபாகு) 61, 64, 150, 155.
கரிகாற்சோழன் (கரிகாலன்) 62, 63, 73, 105-108, 110, 123-125, 128, 148, 151, 155.
கலித்தொகை 54, 127, 136, 143-147.
கல் தூண் 51.
கழுமலம் 73, 169.
களமர் 38
களவழிநாற்பது 264, 166, 169.
களவியல் 42.
கள்ளிக்கோட்டை 12.
கற்பியல் 42, 43.
கனகசபைப்பிள்ளை 3, 61, 62.
கனகவிசயர் 162.
கன்னடம் 16, 19, 20.
கன்னர் 81.
கன்னியாகுமரி 7.
கன்னியாறு 31, 32.
காக்கைப்பாடினியார் 135.
காஞ்சனன் 159.
காஞ்சிபுரம் 75, 114, 159.
காடுகிழான் 142.
காந்தர்வம் 41.
காப்பியக்குடி 33.
காப்பியாற்றுக் காப்பியனார் 67, 135.
காமத்துப்பால் 97.
காமன் 52.
காமன் கோட்டம் 82.
காயசண்டிகை 158, 159.
காய்சினவழுதி 24.
காரி 70.
காரிகிழார் 24, 32.
காரியாசான் 174.
காரியுண்டிக் கடவுள் 125.
கார்நாற்பது 164, 169.
கால்ட்வெல் ஆசிரியர் 3, 15, 17.
காவிதி 37.
காவிரிப்பூம்பட்டினம் 63, 75, 79, 123, 149, 150, 156, 158, 159, 162.
காளி வணக்கம் 82.
கிரந்தாக்ஷரம் 20.
கிருஷ்ணசாமி ஐயங்கார் S. 58, 61, 63, 65.
கிரேக்கர் 7.
கிரேக்கு 1, 6.
கிள்ளிவளவன் 62, 73.
குடநாட்டரசினர் 112.
குடவாயிற்கோட்டம் 169.
குண்டலகேசி 148.
குதிரை மலை 76.
குப்தர் 58.
குமட்டூர்க்கண்ணனார் 134.
குமணன் 107.
குமரி 6.
குமரிக்கோடு 7.
குமரியாறு 8, 9, 10, 11, 25.
குறிஞ்சிப்பாட்டு 68, 105, 122, 123.
குறுந்தொகை 27, 34, 127, 136, 138.
குன்றுதோறாடல் 108.
கூடலூர்கிழார் 143, 175.
கூத்தர் 38.
கைத்தொழில் 78.
கொங்கணர் 76.
கொல்லர் 81.

கொல்லிமலை.76.
கொற்கை 6, 63, 74, 75, 79, 80, 81, 112, 118.
கொற்றவை 52, 120.
கோசர் 73, 74.
கோடைமலை 76.
கோட்டைகள் 48.
கோபாலய்யர் (வேளாந்தை) 29.
கோபிநாதராயர் 54.
கோழுகி 158.
கோவலன் 63, 65, 148, 149, 151, 153, 157, 159.
சக்கரவாளக்கோட்டம் 158.
சங்கப்பலகை 103.
சங்கரையர் K. G. 60.
சமஸ்கிருதம் 1.
சமணமார்க்கம் 82.
சமுத்திரகுப்தன் 57.
சம்பாபதி 158.
சவரிராயர் (பண்டித) 3, 16.
சாத்தந்தையார் 171.
சாமிநாதய்யர் (மகா மகோபாத்தியாயர்) 143, 148, 160.
சாலியூர் 117.
சாவகம் 13, 161.
சாவகநாடு 159.
சிகண்டியார் 10.
சிரியா 6.
சிலப்பதிகாரம் 9, 58, 61, 88, 148, 156.
சிவபிரான் 130, 172.
சிறுகாக்கைப்பாடினியார் 11.
சிறுத்தொண்டநாயனார் 60.
சிறுபஞ்சமூலம் 164, 174.
சிறுபாணாற்றுப்படை 105, 107, 112, 113.
சிறுமேதாவியார் 54, 91.
சிற்பாசாரி 81.
சீத்தலைச்சாத்தனார் 69, 87, 88.
சீவக சிந்தாமணி 148.
சீனம் 13, 79.
சீனிவாசபிள்ளை 58.
சுங்கங்கொள்வோர் 80.
சுதமதி 157-160.
சுந்தரராமய்யர் க. 4.
சுவாமிக்கண்ணுப்பிள்ளை எல். டி. 58.
சுவாமிநாத தேசிகர் 17.
சூரிய சந்திரர் 52.
சூரியநாராயண சாஸ்திரிகள் 5, 8, 15.
செங்குட்டுவன் சேரன் 56, 57, 63, 64, 106-108, 135, 148, 150, 154-157, 161.
செங்கோட்டை 12.
செங்கோன்றரைச் செலவு 8.
செய்யாறு 12.
செல்வக்கடுங்கோவாழியாதன் 67, 70, 135.
செல்வக்கேசவராய முதலியார் 4, 15, 174.
சேரநாடு 75, 113.
சேரமன்னர் 62, 134.
சேரமான் கணைக்காலிரும்பொறை 169.
சேனாபதியர் 77.
சோழநாடு 75.
சோழநாட்டுக் கப்பல்கள் 7.
சோழமன்னர் 62.
சோழனல்லுத்திரன் 143.
சோழன் செங்கணான் 128, 169.
சோனகர் 80.
ஞானசம்பந்தர் 13, 60.
டெயிலர் பண்டிதர் 17.
தச்சர் 81.
தமிழ் 1, 16.
தமிழ் எழுத்துக்கள் 18, 22.
தமிழ் நாடு 7, 74.

தமிழ் மக்கள் 1.
தமிழ் மொழி 13.
தலைச்சங்கம் 9, 127.
தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் 62, 63, 72, 105, 106, 108, 116, 117, 120, 148, 155.
தன்மையெழுத்து 19.
தாமோதரம்பிள்ளை சி. வை. 17, 164.
திணைமாலை 165.
திணைமாலை நூற்றைம்பது 165.
திணைமொழி ஐம்பது 165, 171.
திராவிட பாஷை 16.
திராவிடர் 2, 3, 4, 5, 15, 21.
திரிகடுகம் 164, 172.
திருக்குறள் 65, 87, 89–90, 92, 93, 95–101, 165.
திருச்சீரலைவாய் 108.
திருநாவுக்கரசர் 13.
திருப்பதி 13.
திருப்பரங்குன்று 108.
திருமயிலாப்பூர் 104.
திருமால் 82, 114, 130, 141, 168, 172.
திருமுருகாற்றுப்படை 72, 105, 106, 108, 109.
திருவள்ளுவமாலை 65, 89–91.
திருவள்ளுவர் 88, 90, 101–104.
திருவாவி னன்குடி 108.
திருவெஃகா 114.
திருவேரகம் 108.
தீபஸ்தம்பம் 80.
தீவதிலகை 158, 159.
துராணியம் 15.
துராணியர் 4, 15.
துர்க்கை 52.
துளுவநாடு 73.
துறவறவியல் 93.
துறவிகளின் தோற்றம் 109.
தூதர் 77.
தெய்வம் 40.
தெலுங்கு 16, 19, 20.
தையற்காரர் 81.
தொண்டி 79, 80.
தொண்டைமான் 71.
தொண்டைநாடு 114.
தொண்டைமான் இளந்திரையன் 105, 114.
தொல்காப்பியம் 24, 32, 34, 52, 54.
தொல்காப்பியர் 24, 26, 27, 32, 33, 53.
நக்கீரர் 54, 55, 60, 69, 72, 86, 87, 105, 106, 108, 120.
நச்சினார்க்கினியர் 9.
நச்செள்ளையார் 67.
நடுகல் 82, 130.
நத்தத்தனார் 105, 112.
நந்தர் 57, 58, 74.
நப்பூதனார் 105, 106, 116.
நலங்கிள்ளி 62.
நல்லந்துவனார் 54, 175.
நல்லாதனார் 131, 172.
நல்லியக்கோடன் 76, 105, 107, 112, 114.
நவிரமலை 125.
நள்ளி 112.
நற்றிணை 54, 127, 136, 137, 138.
நன்மாறன் 62.
நன்னன் 73, 76, 105, 107, 128.
நன்னூல் 18.
நாகர் 66, 168.
நாஞ்சில் மலை 76.
நாஞ்சில் வள்ளுவன் 76.
நார்முடிச்சேரல் 67, 135.

நாலடியார் 164, 166, 167.
நான்மணிக்கடிகை 164, 168.
நிலந்தரு திருவிற்பாண்டியன் 24.
நீலகண்டனார் 55, 86.
நீலன் 154.
நெசவு 78.
நெடுநெல்வாடை 105 106, 120-122.
நெடுந்தொகை 54.
நெடும்பல்லியத்தனார் 24, 30.
நெட்டிமையார் 24, 29, 32.
நெல்லூர் 74.
பஃறுளியாறு 7, 10, 25.
பகவன் 102.
பட்டினப்பாலை 105-107, 120-122.
பட்டுசாலியர் 81.
பதிற்றுப்பத்து 54, 127, 134-136.
பதினெண் கீழ்க்கணக்கு 163, 166, 174.
பதுமனார் 166.
பத்தினி தெய்வம் 150, 155.
பத்துப்பாட்டு 105.
பயிர்த்தொழில் 78.
பரணர் 64, 68, 106, 107, 135.
பரதர் 151.
பரதவர் 38, 113, 117, 124, 125.
பரத்தையர் 38.
பரவர் 81.
பராஹி பாஷை 4.
பரிபாடல் 54, 127, 136, 141.
பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி 8, 25, 30, 32, 117, 128.
பல்யானைச் செல்கெழுகுட்டுவன் 134.
பழமுதிர் சோலை 108.
பழமொழி 164, 174.
பழவேற்காடு 12, 73, 74.
பறம்புமலை 76.
பனங்கள் 124.
பனம்பாரனார் 7, 24-26.
பனைநாடு 7.
பனைதுங்கு 129.
பன்னிருபாட்டியல் 163.
பாஹியான் 57.
பாடலிபுரம் 6, 57, 58.
பாணர் 81.
பாணினி 26.
பாண்டியநாடு 75.
பாண்டிய ராஜ்யம் 6.
பாண்டியன் மாகீர்த்தி 2
பாபிலோன் 5.
பாரதப்போர் 73.
பாரி 70, 73, 76, 112
பார்ப்பார் 51.
பாழியூர் 73.
பிட்டன் 76.
பிரகத்தன் 105, 122.
பிரமம் 40.
பிராசபத்தியம் 40.
பிராமி 19
புகார் காண்டம் 148.
புரோகிதர் 77, 81.
புலிமுத்திரை 123, 151
புல்லி 73.
புறப்பொருள் 46.
புறம் (புற நானூறு) 27, 127-134.
பூதஞ்சேந்தனார் 168.
பூரிக்கோ 138.
பெண்ணையாறு 70, 76.
பெயரெழுத்து 19.
பெரிப்ளஸ் 6, 80.
பெருங்கடுங்கோ 68, 143.
பெருங்குன்றூர்க்கிழார் 54, 67, 68, 135.
பெருங்கௌசிகனார் 105, 125.

பெருஞ்சாகரன் 101.
பெருஞ்சாத்தன் 131.
பெருஞ்சித்திரனார் 107.
பெருஞ்சேரலிரும்பொறை 62, 67, 135.
பெருநற்கிள்ளி 62.
பெருந்தேவனார் 68.
பெருமுத்தரையர் 166.
பெரும்பாணாற்றுப்படை 105, 107, 114.
பெருவாயின் முள்ளியார் 172.
பேகன் 76, 112.
பேயனார் 142.
பொதியின்மலை 29, 76.
பொதினி 73.
பொய்கையார் 169, 174.
பொய்கையாழ்வார் 164.
பொருட்பால் 94.
பொருநராற்றுப்படை 105, 106, 110, 111.
பொருளதிகாரம் 34.
போக்கியார் 91.
பௌத்தமார்க்கம் 82.
ப்ளினி 80.
மகதராஜ்யம் 6.
மகவன்ஸோ 5.
மகஸ்தனீஸ் 6.
மகளிர் அலங்காரம் 109.
மக்கட் பிரிவு 34.
மங்கோலிய வகுப்பு 3.
மட்கலம் வனைதல் 130.
மணிபல்லவம் 157–159.
மணிமலை 7.
மணிமேகலா தெய்வம் 157, 159, 161.
மணிமேகலை 88, 148, 159, 160, 161.
மதுரை 7, 9, 24, 59, 63, 75, 81, 117, 121, 149, 154, 156.
மதுரைக்காஞ்சி 9, 105, 106, 116–120.
மதுரைக்காண்டம் 149.
மத்தி 74.
மரக்கலம் 118.
மருதனிளநாகனார் 54 68, 143.
மலைபடுகடாம் 105, 107, 125.
மலையாளம் 16, 19, 20.
மறவர் 38.
மன்றல் 40.
மாங்குடிகிழார் 106.
மாங்குடி மருதன் 105, 116.
மாசாத்துவன் 159.
மாடலன் 154, 156.
மாதரி 149.
மாதவி 149, 151, 157–160.
மாந்தை 74.
மாமூலனார் 57, 69, 73.
மாயோன் 52.
மாவண்கிள்ளி 162.
மாஸுவவேந்தன் 155.
மாறவர்மன் 56.
மாறனார் 175.
மாறன்பொறையனார் 164, 170.
மாறன் வழுதி 138.
மிழலைக்கூற்றம் 76.
முசிறி 72, 79, 80.
முசிறியாசிரியர் 86.
முடத்தாமக்கண்ணியார் 105, 110.
முடத்திருமாறன் 54.
முடிவெழுத்து 19.
முத்துத்தம்பி பிள்ளை 11.
முத்தூர் 7, 10.
முத்தூற்றுக்கூற்றம் 76.
முப்பால் 164.
முரஞ்சியூர் முடிநாகராயர் 24, 27, 29.

முருகன் (முருகவேள்) 52, 82, 105, 108, 109, 130, 141.
முல்லைப்பாட்டு 105, 106, 116.
முல்லைமாலை 136.
முள்ளூர்மலை 70, 76.
முன்றுறையரையர் 174.
மூவாதியார் 171.
மோகூர் 74.
மோசிகீரனார் 91.
மோரியர் 57, 58.
யவனர் 7, 80.
யவனர்தேசம் 118.
யாப்பருங்கலவிருத்தி 18.
ரிச்சர்ட்ஸ்பண்டிதர் எப்.ஜே. 19.
ரைஸ் டேவிட்ஸ் 21.
ரோம நாணயம் 6, 81.
ரோம போர்ச்சேவகர் 80.
ரோம ராஜ்யம் 6, 80.
லத்தீன் 1.
லெமூரியா 3.
வஞ்சிக்காண்டம் 149, 150.
வஞ்சிநகர் 159, 161.
வடிவெழுத்து 19.
வடுகர் 57.
வட்டெழுத்து 20, 22.
வளையாபதி 148.
வறுமை 113.
வாசுகி 103.
வாட்டாற்றெழினியாதன் 106.
வாணிகர் 37, 41, 44, 45.
வாதாபி 60.
வால்மீகர் 5, 25.
வான்மீகியார் 127.
விஜயோ 6.
வியாபாரம் 79.
விவேகானந்த சுவாமிகள் 4.
வின்ஸென்ற் ஸ்மித் 7, 64.
வின்ஸ்லோ 17.
வெண்டேர்ச்செழியன் 24.
வெண்ணில் 73, 110.
வெண்ணில்போர் 111.
வெள்ளாறு 11.
வெள்ளிலைமூதூர் 117.
வெற்றிவேற்செழியன் 62, 63.
வேங்கடமலை 73, 76.
வேங்கடம் 8, 12.
வேட்டுவர் 38.
வேப்பந்தார் 122.
வேலன் 108.
வேலூர் 76, 113.
வேளாப்பார்ப்பான் 72.
வேளாளர் 37, 41, 44, 45.
வையாவிக்கோப் பெரும்பேகன் 106.
வையையாறு 142.
ஜிஞ்ஞோராயன் 6.
ஜைனமுனிவர் 166.
ஸ்ரீநிவாசய்யங்கார் 3, 16.
ஹீப்ரு 1.
ஹேக்கல் 3.
ஹையூன்தஸங் 57.
ஹீத்தியம் 15.
ஸெமிட்டிக் 15, 16.
ஸ்ட்ராபோ 80.

DIOCESAN PRESS, MADRAS—1931. B 2534.